வானதி
பதிப்பகம்

கம்பன் கண்ட சமரசம்

மு.மு. இஸ்மாயீல்

கம்பன் கண்ட சமரசம்

மு. மு. இஸ்மாயில்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு ஆகஸ்ட், 1985.

10-8-85 சென்னை ஏவி. எம் இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில், கம்பன் விழாவின்போது, வெளியிடப் பெற்றது.

திருநாவுக்கரசு தயாரிப்பு.

விலை : ரூ. 17-00

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை-600 014.

பதிப்புரை

கம்பன் என்ற மாபெரும் ஞானி வாழ்ந்த 9ஆம் நூற்றுண்டில், சைவ, சமணப் பூசல்கள் ஓரளவு மறைந்து போன போதிலும், சைவ, வைணவப் பூசல்கள் தலைவிரித்து ஆடியிருக்கின்றன.

ஒரே பரம்பொருளிடத்து அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்த, கவி உள்ளம் படைத்த, கம்பன் மனத்தை சமயப் பூசல்கள் பெரிதும் வருத்தியிருக்கின்றன. இந்தச் சூழலில், தான் படைத்த மாபெரும் காப்பியமான கம்ப ராமாயணத்தில் "பரம் பொருள் ஒன்றே. பரம்பொருளை அடைய பல்வேறு மதங்கள், பல்வேறு மார்க்கங் களைக்காட்டினுலும், கடைசியில் எல்லாம் ஒரே பரம் பொருளைத்தான் அடைகின்றன," என்பதனைச் சுட்டிக்காட்டி இருக்கிருன் "எப்படி நதிகள், பல திசைகளிலிருந்து பல்வேறு மார்க்கத்தில் புறப்பட்டு வந்தாலும், கடைசியில் கடலில் தான் வந்து சங்கமமாகின்றனவோ, அப்படியே பல்வேறு மதங்கள் இருந்தாலும், "அவை யாவும் கடலனைய கடவுளையே அடைகின்றன." என்பான் கம்பன். இதனை மக்களுக்கு வலியுறுத்திச் சொல்ல கம்பமா காப்பியத்தில் அவன் சமய சமரசம் கண்டிருப்பதை மதிப்பிற்குரிய நீதிபதி அவர்கள் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிருர்கள்.

கம்பன் இராமகாதையில், சமயப் பிணக்குகளையும், பூசல் களையும், வன்மையாகக் கண்டித்திருப்பதையெல்லாம் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

சமயப் பூசல்களாலும், வேற்றுமைகளாலும், ஒரு பயனு மில்லை என்பதனை உணர்த்தும் கம்பன் பாடல்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துக் காட்டி 'விடுதக்கன அவை' என

எச்சரித்து, பரம்பொருள் ஒன்றே, அனைவரும் இறை ஓர்மையில் இணையவேண்டும் என்பதை இந்நூலின் மூலம் வலியுறுத்திக் கூறுகிறார்கள். கம்பன் கண்ட சமரசப் பாடல்கள் நீதிபதியின் திறனாய்வினால் விளக்கம் பெறுகின்றன.

நீதிபதியின் விளக்கத்தால், மக்கள் மனத்தில் உள்ள சமயப் பூசல்களும் வேற்றுமைகளும் நிச்சயம் விலகும். இந்நூல் மக்களிடையே நிச்சயம் சமய் ஒற்றுமையையும், இறை ஓர்மையையும் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை உண்டு.

மக்களிடையே இறையுணர்வையும், இறை ஓர்மையையும், நல்லறிவையும், நல்லொழுக்கத்தையும் ஏற்படுத்த கம்பனைப் பயன்படுத்தி அற்புதமான இலக்கியக் கட்டுரைகள் அளித்த மதிப்பிற்குரிய நீதிபதி மு. மு. இஸ்மாயீல் அவர்களை எவ்வளவு போற்றினாலும் தகும்.

கம்பன் கண்ட சமரசம் என்ற இந்நூலில் இலக்கியக் கட்டுரை எழுதுவது எப்படி? என்ற கட்டுரையும் நாற்பேச்சுடையாள், ஓர் அடி, சான்றோர் வாக்கு, தெறித்த முத்துகள் ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றிருக்கின்றன.

இலக்கியம் என்ற சொல்லே இலட்சியம் அல்லது குறிக்கோள் என்பதைத்தான் குறிக்கும்.

தானும், பிறரும், அன்புடன் இன்பமாக வாழவேண்டும். வாழ்க்கை இன்பமயமானதாக அமைவதற்கு அழகும் அமைதியும் வேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமாயின் ஒவ்வொருவருக்கும் ஒரு கட்டுப்பாடு வேண்டும். தான் தோன்றியாக வாழ்வது பூசலிலும், முரண்பாட்டிலும் முடிந்து அழிவையே விளைவிக்கும்.

ஒழுக்கம், சீலம், பண்பு முதலியவற்றை ஆதிகாலம் தொட்டு எல்லோரும் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். இத்தகைய வாழ்வு அறவாழ்வு என்று கூறப்பட்டது. இத்தகைய அறவாழ்வின் கூறுகளோ, எண்ணிறந்தவை. ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து மரணிக்கும்வரை அது வாழ

வேண்டிய வழியை அறம் வகுக்கிறது. இந்த அறத்தின் தண்டவாளத்தில்தான் வாழ்க்கை என்ற வண்டி ஓட வேண்டும் என்பது அடிப்படை.

'இவற்றை எல்லாம் எடுத்து விளக்குவது இலக்கியமே, என்று தம் இலக்கியக் கட்டுரையில் நீதிபதி அவர்கள் எடுத்து விளக்கியிருக்கும் பாங்கு போற்றுதற்குரியது. இப்படி எண்ணற்ற சிந்தனைகள்.

நீதிபதியின் சிந்தனையில் தெளித்த இலக்கிய முத்துகளை எல்லாம் கோத்து, அழகிய மாலையாக்கி அற்புதமான நூலாகத் தந்துள்ளார்கள். அதனைத் தமிழ் நெஞ்சங்களில் சூட்டி மகிழும் பாக்கியத்தினை வானதி பதிப்பத்துக்கு அளித்த வளமான தமிழின் நீதி நாயகர் மதிப்பிற்குரிய உயர்திரு. மு. மு. இஸ்மாயீல் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி உரித்தாகுக.

அன்பன்
ஏ. திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்

கம்பன் புகழ் வாழ்க
கன்னித் தமிழ் வாழ்க!

தகவுரை

கல்விக்கடல், புலவர் S.K. இராமராசன்

(கம்பராமன்)

1. அம்பு விக்கண் பலமொழி உள்ளன;
அவற்றுள் மேன்மை தமிழ்மொழி எய்தவும்,
இம்பர் மாந்தர் ஒளியினைக் காணவும்,
இணையி லாத சமரசம் தேரவும்,
வெம்பு முள்ளங்கள் சாந்தி அடையவும்,
வேத உண்மைகள் சோதிபெற் றுய்யவும்,
கம்பன் என்றொரு மானுடன் வந்தனன்;
கலைகள் மேவும் இமயம் படைத்தனன்.

2. உலக வாழ் வருள் துன்பங்கள் நீங்கிட,
ஒப்பி லாதநல் லின்பங்கள் ஓங்கிட,
அலகி லாத கலைகள் சிறந்திட,
அன்பும் பண்பும் புவியில் நிறைந்திடப்,
புலவர் நெஞ்சம் களிப்பில் உயர்ந்திடப்,
புவியை எய்திட வானும் நயந்திட,
இலகு கம்பனும் மானுடன் வந்தனன்;
எழில் கொள் காவியக் கடலைப் படைத்தனன்,

3. வேந்தர் தங்கள் கடமை கணித்திட,
வேத மும்தனை மெல்லத் திருத்திட,
மாந்தர் யாவரும் தம்நிலை தேர்ந்திட,
வாத நோய்கள் முழுவதும் தீர்ந்திடச்,
சாந்த மாம்தரு வானை அளந்திடச்,
சத்தி யச்சுடர் எங்கும் நிரம்பிட,
ஏந்தல் கம்பனும் மானுடன் வந்தனன்;
இணையில் காவிய வானைப் படைத்தனன்.

வேறு

4. பனிபடும் வரையின் சிகரத்தை எய்திப்
பார்ப்பதும், களிப்பதும், எளிதே;
துனிதரும் அலைசேர் கடலினை யளந்து
சொல்வதும், மகிழ்தலும், எளிதே;
நனிவிரி வானின் அகலநீ ளத்தை
நாடலும், உவத்தலும், எளிதே;
புனிதமார் கம்பன் இதயத்தைக் கண்டு
புகுதலும் விளக்கலும் அரிதே.

5. பத்தியிற் சிறந்தோர் தங்களுக் கிறைவன்
பண்புடன் மென்மெல இறங்கிச்
சத்திய மாகத் தானுளிர் திறத்தைத்
தகவுடன் விளக்கிநன் கருள்வான்;
நித்திய ஞய கம்பனும் தனது
நீர்மையைச் சீர்மையை மேலாம்
உத்தமர்க் கருள்வான்; அவர்களே அன்னன்
ஒப்பிலாச் சோதியை உணர்வார்.

6. நீதியிற் சிறந்தோர் இறையருள் கண்டோர்;
நிகரிலா நெறிபிற ழாதோர்;
சாதியைக் கடந்து சமயத்தைக் கடந்து
தகவெனும் சிகரத்தி லிருப்போர்;
கோதிலா வுளத்தோர் தங்களைத் தேடிக்
கொண்டல் போல் அருட்கம்ப நாடன்
சோதியை விரிப்பான்; சத்தியம் பொழிவான்;
சோர்விலார் உண்மையை உணர்வார்.

7. உற்றநற் பதவி தனைத் துரும் பாக
உன்னு வோர்; இறைதிரு வருளே
பற்றெனக் கொள்வோர்; சத்தியம் ஒன்றே
பாரினில் உயர்வென உணர்வோர்;
சுற்றமாய் உலகைக் கருதுவோர்; தம்மைத்
துருவியங் குயர்கம்ப நாடன்
முற்றிய நண்பால் தன்னையே தருவான்:
முதிர்ந்தவர் யாவையும் உணர்வார்.

8. உலகமா கவிகள் தலையினால் வணங்க
ஒளிர்கின்ற கவிச் சக்ர வர்த்தி
இலகும் அக் குணங்கள் யாவையும் பெற்ற
இஸ்மாயீல் திருவுளந் தன்னுள்
குலவுநல் அன்பாற் புக்கனன்; அங்கே
கொண்ட லாய் அருள் மழை பொழிந்தான்;
அலகிலா நூல்கள் வெள்ளமாய்ப் பெருகி
அகிலத்தை வளப்படுத் தியவால்.

9. கங்கையைப் போலப் பொன்னியைப் போலக்
கவின்மிகு நயில்நதி போலத்
துங்கமாய்ப் பெருகு நூல்களில் படிந்தோர்
துன்பமாம் மாசுகள் நீங்கிப்
பொங்குநல் லின்பம் எய்துவார்; அதனைப்
புறம்விடுத் தகன்றிட மாட்டார்;
இங்கு குற் ருலத் தருவியில் தோய்ந்தோர்
எங்கனம் நீங்கிட நினைப்பார்?

10. செந்தமிழ்த் தாயின் இதயமாம் இந்நூல்
சீரிய பாற்கடல் அமுதோ?
நந்தலில் ஞானத் திருமகள் முடியில்
நகுகின்ற கிரீடத்தின் மணியோ?
சந்தமார் அன்பின் பெருந்தவப் பயனோ?
சால்பிற்கோர் எல்லையோ? என்று
சிந்தையில் நினைந்தேன்; இவையெலாம் அல்ல;
திருவருட் பயனெனத் தெளிந்தேன்.

11. புண்ணிய சமயம் எம்பிரா னடிக்குப்
புனைந்திடு நன்மலர்; அதனைக்
கண்ணிய மின்றிப் படைக்கல மாக்கிக்
கலகத்தைப் புரிந்தறி வின்றி
மண்ணுல கத்தை நரகமாக் குவதை
வன்புடன் எதிர்த்திடு கம்பன்
எண்ணமே விளக்கும் கட்டுரை மலரில்
இணையிலாச் சாந்தியைக் கண்டேன்.

12. வணங்குதற் குரிய சமயத்தை யந்தோ!
மாண்பிலார் உளச் செருக் கதனுல்
பிணங்குதற் குரிய போர்க்களம் ஆக்கும்
பெற்றியாற் புண்படு கம்பன்
குணங்களை உலக சமயத்தார் உணர்ந்தால்
கொடியபாம் பமிழ்தமீந் திடுமே;
கணங்கண மாகப் பிரிந்திடும் மாந்தர்
கருத்தினில் நண்புபொங் கிடுமால்.

13. செவ்விய ஒரு சொல் வேறுபா டுற்ருல்
சீரிய பாத்திர மாட்சி
வெவ்விய கனல் சார் மலரெனக் கருகும்;
மேவிய அழகனும் நற்சொல்
ஒவ்வுத லில்லா இடத்திருப் பதனுல்
ஒப்பிலாள் மாட்சிகுன் றியதைத்
திவ்வியமாக உணர்த்திய அறிவுத்
திறத்துக்குப் புலமைகள் வணங்கும்.

14. கலைமகள் பரதம் புரிந்திடத் தெறித்த
கவினுறு முத்துக்கள் யாவும்
விலையில தவையே; அவற்றினுள் சங்க
வித்தகர் புலமைகள் ஒளிரும்;
உலைவிலா முப்பால் அமுதினைச் சுரக்கும்
உமறுவின் நாநலம் சிறக்கும்;
தலைமைசால் காளி தாசன் ஓங்கிடுவான்;
தமிழ்க்கொரு சுரங்கமீ தம்மா!

15. வளஞ்செறி நீதித் துறையினி லிமய
மால் வரை யாகும் இஸ் மாயீல்
உளந்திக ழன்பால் தந்தஇத் திருநூல்
ஒப்பிலாப் பன்மணி நிரம்பும்
களஞ்சியம்; அன்புக் களஞ்சியம்; ஞானக்
களஞ்சியம்; இதனுளே புகுவோர்
விளங்குநல் லொளியைப் பெறுகுவார்; செல்வ
வேந்தராய் இனிதுவீற் றிருப்பார்.

16. மந்தர மலேயாய் மாறிஇஸ் மாயீல்
மாண்புறு கம்பனும் கடலேச்
சிந்தையால் ஆய்ந்து கடைந்தினி தளித்த
சீர்த்தஇந் நூலமு துண்டோர்;
சந்ததம் இளமை பெற்றுயர் வுறுவர்;
தகவுறு தேவராய்ச் சிறப்பர்;
செந்தமிழ் மொழியின் இதயத்தைக் காண்பார்;
சீரிய கற்பகம் ஆவார்.

பல்கலேக் கழகம்
குறிஞ்சி,
தஞ்சை,
15-7-85

அன்புடன்
S.K. இராமராசன் (கம்பராமன்)
பதிப்பாசிரியர்
பேரகராதித்துறை.

முகவுரை

இந்நூலும், என்னுடைய கட்டுரைகளின் தொகுப்பே ஆகும்.

கம்பன் கண்ட சமரசம் என்ற தலைப்பில் எழுதப் பெற்ற கட்டுரை தில்லித் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட, சுடர் 'தமிழ் இலக்கியத்தில் சமுதாய மறுமலர்ச்சி' மலர்க்காக எழுதப்பெற்றது.

இக்கட்டுரையின் தலைப்பே இந் நூலின்தலைப்பு ஆக அமைந்திருக்கிறது.

இரண்டாவது கட்டுரை ஆகிய, இலக்கியக் கட்டுரை எழுதுவது எப்படி, "பழனியப்பா பிரதர்ஸின்"—இலக்கியக் கட்டுரை எழுதுவது எப்படி?—3ஆம் தொகுதிக்காக எழுதப் பெற்றது.

இக்கட்டுரை சற்று நின்று, நிதானித்துப் படிக்க வேண்டியது. பேச்சால், எழுத்தால் பலர் வெளியிட்ட கருத்துகளுக்குச்சற்று வேறுபட்ட கருத்தை, இக் கட்டுரையில் எடுத்துக் காட்டி இருக்கிறேன்.

இக் கட்டுரையைப் படிப்பவர்கள் நான் எழுதியதை முழுமையாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அது அவர்களைச் சிந்திக்க வைக்கும் என்பதில் எனக்கு ஐயம் இல்லை.

மூன்றுவது கட்டுரை ஆகிய நாற்பேச்சுடையாள் என்பது, திரிசடை பற்றியது. இக்கட்டுரை இந்நூலுக்காகவே எழுதப் பெற்றது.

ஒரு பேச்சு உடைய சுமித்திரை, இரு பேச்சுடைய சத்துருக்கனன், மூன்று பேச்சுடைய தாரை, இவர்களைப் பற்றி முன்னரே எழுதி இருக்கிறேன். அவற்றின் தொடர்ச்சியே இது.

இறையருள் இயையுமேல், இம் முயற்சி மேலும் தொடரும்.

நான்காம் கட்டுரை ஓர்அடி, கலைமகள், 1983-ஆம் ஆண்டு தீபாவளி மலர்க்காக எழுதப் பெற்றது.

இதுவும் சற்று நின்று நிதானித்துப் படிக்க வேண்டியது ஆகும்.

ஒரு பாடலில் ஓர் அடியில் இருக்கும் பாட பேதங் களைக் குறிப்பிட்டு, எந்தப் பாடம் பொருத்தமாக அமையும் என்பதைச் சற்று விளக்கமாகவும் தக்க காரணங்களுடனும் கூறியுள்ளேன்.

இதுவும் வாசகர் சிந்தனைக்கு உரியதே.

ஐந்தாவது ஆகிய எண்ணு முறையது, சான்றோர் வாக்கு. இத் தலைப்பில் 1982- ஜனவரி 17, 18, 19 ஆகிய தினங்களில் சென்னை வானொலி நிலையத்தினின்றும் ஒலி பரப்பப் பெற்றவையே இவை.

வானொலி கேட்கும் வாசகர் அனைவர்க்கும் பொது வாக அமையுமாறு கம்பனின் சில பாடல்கள் எடுத்து விளக்கப் பெற்றிருக்கின்றன.

ஆறுவதாக, இதில் இடம் பெற்றிருப்பது தெறித்த முத்துகள் என்ற நீள் கட்டுரை.

இது இந்த நூலுக்காகவே எழுதப் பெற்றது.

எந்த குறிப்பிட்ட பாத்திரத்தைப் பற்றியோ, குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பற்றியோ, எழுதாமல் கம்பன்

காட்டி இருக்கும் சில பாடல்களை ஒவ்வொன்றாக எடுத்து நயம் விளக்கு முயற்சி தலைப்பட்டது இக் கட்டுரை.

இதுவும், இறையருள் கூடப்பெறின், தொடர்ந்து செய்யப்பட வேண்டிய முயற்சி.

தில்லித் தமிழ்ச் சங்கம், 'கலைமகள்' ஆசிரியர், பழநியப்பா பிரதர்ஸ், சென்னை வானொலி நிலையம், ஆகியோர்க்கு என் நன்றி.

வழக்கம் போல் இந் நூலையும் வெளியிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட வானதி ஏ. திருநாவுக்கரசு அவர்களுக்கும், இக் கட்டுரைகளை நான் சொல்ல, எழுதிக் கொடுத்ததோடன்றி, சங்க இலக்கிய மேற்கோள்கள் பலவற்றையும் எடுத்துக் கொடுத்தும், அச்சுப்பணியில் பிழை திருத்தும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்ட, மாம்பாக்கம் திரு. நாராயண சந்திரசேகரன் (ஆசிரியர், சிந்தாதிரிப்பேட்டை மேல் நிலைப்பள்ளி சென்னை-2) அவர்களுக்கும், மிக அழகாக இந்நூலை அச்சிட்டு உதவிய மாருதி அச்சகத்தார்க்கும் என் நன்றி உரித்தாகும்.

வழக்கம்போல், என்னைக் காணும் பொழுதெல்லாம், 'ஏதாவது நூல் எழுதுகிறீர்களா?' என என்னைக்கேட்டு, 'ஆம்' எனச் சொல்லின் 'அதனை எனக்கு அனுப்பிவைக்கவும்' எனச்சொல்லி, கேட்டு, வாங்கி, வலிய வாழ்த்துரை வழங்குவது போல் இந்நூலுக்கும் ஓர் தகவுரை வழங்கி இருக்கும், அன்புருவான 'கல்விக் கடல்,' திரு. இராமராசன் அவர்கட்கு எப்படி நன்றி சொல்லப் போகிறேன் நான்?

மயிலை
10-8-85

மு. மு. இஸ்மாயீல்

பொருளடக்கம்

			பக்கம்
1.	கம்பன் கண்ட சமரசம்	...	1
2.	இலக்கியக் கட்டுரை எழுதுவது எப்படி?	...	35
3.	நாற்பேச்சுடையாள்	...	59
4.	ஓர் அடி	...	81
5.	சான்ஞேர் வாக்கு	...	97
6.	தெறித்த முத்துகள்	...	107

1. கம்பன் கண்ட சமரசம்

சமரசம் என்ற சொல்

சமரசம் என்ற சொல்லுக்குச் சென்னைப் பல்கலைக் கழகம் பதிப்பித்திருக்கும் 'தமிழ் லெக்சிகன்' எனப்படும் பேரகராதியில் 'ஒற்றுமை' என்ற பொருள் காணப் பெறுகிறது. அந்தப் பொருளுக்கு ஆதாரமாக,

> சந்ததமும் எனது செயல் நினது செயல் யான் எனும்
> தன்மை நினை அன்றி இல்லாத்
> தன்மையால் வேறு அலேன்; வேதாந்த சித்தாந்த
> சமரச சுபாவம் இதுவே;
>
> (பரிபூரணானந்தம்—5)

என்ற தாயுமான சுவாமிகளுடைய பாடலைக் காணலாம். இந்தப் பாடற் பகுதியினுடைய உட்பொருளைக் காண வேண்டுவது அவசியமாகிறது. 'சந்ததமும்' என்ற சொல்லுக்கு 'எப்பொழுதும்' என்பது பொருள். எப்பொழுதும் இருக்கின்ற ஒரு நிலையைத் தாயுமான சுவாமிகள் இதில் எடுத்துக் காட்டுகிறார்.

இந்த நிலையினுடைய மூலம் ஒன்றாக இருப்பினும், இதனை இரு கூறாகப் பிரித்துக் காண்பிக்கிறார்.

ஒன்று: ''எனது செயல் நினது செயல்'' என்பது. இங்கே ''நினது'' என்று குறிப்பிடப் பெறுவது பரம் பொருள். அதனைத்தான் இந்தப் பாடற்பகுதியில் ''பரிபூரணானந்தம்'' என்று அவர் குறிப்பிடுகிறார்.

''பரிபூரணானந்தம்'' என்ற தலைப்பில் பத்து பாடல்கள் உள்ளன. இவை ''பரிபூரணானந்தமே!'' என்ற

விளியுடன் முடிவுபெறும். இந்த விளியின் அடிப்படையில் தான் ''நினது'' என்ற சொல் பரம் பொருளைக் குறிக்கிறது என்று காட்டப் பெற்றது.

எனவே, ''பரிபூரணானந்தமே! எனது செயல் நினது செயல்'' என்று தாயுமான சுவாமிகள் பாடுவாரே ஆனால், தன்னையும் பரம்பொருளையும் ஐக்கியப் படுத்தி விடுபவர் ஆகிறார். இது போலவே ''யான் எனும் தன்மை நினை அன்றி இல்லாத்தன்மையால் வேறு அலேன்'' என்றும் கூறிவிடுகிறார்.

தன்மைப் பொருள்

இரண்டு; இங்கு ''தன்மை'' எனும் சொல் இரண்டு இடங்களில் இடம் பெறுவதைக் காண்கிறோம்.

''தன்மை'' என்ற சொல்லுக்கு இயல்பு, குணம், பண்பு என்ற பொருள்கள் உண்டு. இவையன்றியும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்று நாம் ஆள்வதும் உண்டு. இங்கு ''தன்மை'' எனும் சொல் தான் எனும் கர்த்தாவைக் குறிக்கும். ஓர் அற்புதமான தத்துவக் கருத்தைத் தாயுமான சுவாமிகள் இங்கே வலியுறுத்தப் போந்த போதிலும், இதனுள் இலக்கிய நயம் இல்லாமற் போகவில்லை.

இரண்டிடங்களிலும் ஆளப் பெற்றிருக்கும் ''தன்மை'' என்ற சொல்லுக்கு இயல்பு குணம், பண்பு என்ற பொருளைக் கொடுத்தால் 'நான்' என்கிற இயல்பு நீ அன்றி வேறு ஆகாத இயல்பே ஆகிறபடியால், நான் உன்னின் வேறுபட்டவன் அல்லன் என்ற பொருள் கிடைக்கும்.

அதே சமயத்தில் முதலில் காணப்படும் ''தன்மை'' என்ற சொல்லுக்குத் தன்மை, முன்னிலை, படக்கை, என்ற

தொடரில் காணப்பெறும் பொருளைக் கொடுத்து இரண்டாவதாக இடம் பெற்றிருக்கும் ''தன்மை'' என்ற சொல்லுக்கு இயல்பு, குணம், பண்பு என்ற பொருளைக் கொடுத்தால், ''நான்'' என்னும் கர்த்தா ''நின்னைத் தவிர இல்லாத் தன்மையினுல் நான் உன்னையன்றி வேறு அலன்'' என்று ஆகும். இப்படிப் பார்க்கும் பொழுதும் தமக்கும் பரம்பொருட்கும் இடையே உள்ள ஐக்கியத்தைத்தான் தாயுமான சுவாமிகள் அறிவுறுத்து கிருர்.

இவற்றிலிருந்து ஒரு கேள்வி பிறக்கக்கூடும். ''நீயும் நானும் ஒன்றே'' என்ற நிலை ஏற்பட்ட பிறகு ''எனது செயல், நினது செயல்'' என்று பிரித்துக் கூறுவதன் அவசியம் என்ன என்பதே, அது.

''நீயும் நானும் ஒன்று'' என்று ஆகிவிட்டால் அந்த ஐக்கியத்தை உணர்வதற்கும், வெளிப்படுத்துவதற்கும் வேறு யாராவது ஒருவர் இருந்தால்தான் முடியும். அப்படி வேருன யாராவது இருந்தாலும் அவரும் பரம் பொருளுடன் ஐக்கியமாகி விடுபவரே. அப்படியானுல் இந்த ஐக்கியத்தை உணர்வதற்கும் வெளிப்படுத்து வதற்கும் எவருமே இருக்கமாட்டார்கள்.

இதனை உணர்த்துவதற்கும், வெளிப்படுத்துவதற்குமே 'நீ', 'நான்' என்ற வேற்றுமை தற்காலிகமாகவாவது இருந்தாக வேண்டும். இங்குதான் பரிபூரண சமாதியினு டைய உண்மைப் பொருள் விளங்கும்.

கண்டவர் விண்டிலர்

நம்மில் பலர் சமாதி நிலையில் இருக்கும் பலரைப் பார்த்திருக்கக் கூடும். அவர்களைச் சமாதி நிலையில் புகுமுன்னரும் பார்த்திருக்கலாம்; சமாதி நிலையில்

இருந்து வெளிப்பட்ட பின்னரும் பார்த்திருக்கலாம். சமாதி நிலையில் இருந்து அவர்கள் வெளிவராமலேயே இறுதி சமாதியிலே அடங்கி விட்டால், அதுவே அவர் களுடைய நிர்வாணம் அல்லது ஜீவன் முக்தி ஆகிவிடும். சமாதி நிலையில் இருந்த அவர்கள் தம் அனுபவத்தைப் பிறருக்கு விளக்க பூத உடலுடன் இருக்கமாட்டர்கள்.

மாறுக, சமாதி நிலையில் இருந்து வெளிவந்தவர்கள் தம்முடைய அனுபவத்தை ஒரளவு பிறருக்கு உணர்த்தவும் முடியும்.

இங்கும் கூட எந்த அளவிற்கு அவர்களால் உணர்த்த முடியும் என்பது ஐயப்பாட்டிற்கு உரியதே.

ஏனெனில் சமாதி நிலையில் பரிபூரண ஐக்கியம் உண்டாகி விடுமானுல், அந்த ஐக்கியத்தை உணர்வதற்கு அவர்களே தனித்து இல்லாததன் காரணமாக, சமாதி நிலை அனுபவத்தை அவர்களாலும் விளக்க முடியாது.

இங்கே சமாதி என்னும் பொழுதே "சும்மா இருத்தல்" அல்லது "செயலற்ற தன்மை" என்பதனையே குறிக்கிறோம்.

என்னுலாவது ஒன்று இல்லை; எல்லாம் உன் செயலே

இதற்கு மாறுகப் பரம்பொருளும் தானும் ஐக்கியம் என்ற ஞான உணர்வுடன் ஒருவன் செயல்படுவானே யானுல் அவனுடைய செயலே ஆண்டவன் செயலாக ஆகிவிடுகிறது. "சும்மா இருத்தலுக்கும்", "செயற்படு வதற்கும்" இடையே உள்ள இந்த வேற்றுமையை உணர்த்தி, இப்படிச் செயல்படுவதன் மூலம் தனக்கும் பரம்பொருக்கும் இடையே உள்ள ஐக்கியத்தை, செயலில்

ஈடுபடுவதனுல் வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகத் தான் ''எனது செயல் நினது செயல்'' என்று தாயுமான சுவாமிகள் பிரித்துக் கூறி இருக்கிருர்.

சமரச சுபாவம்

இந்த உணர்வுதான் வேதாந்த சித்தாந்த சமரசம் சுபாவம் என்றும் அவர் விளக்கிவிடுகிருர். உண்மையில் தன்மை என்ற சொல்லுக்கு இயல்பு, குணம், பண்பு என்று பொருள் உண்டு, என்று நாம் கண்டதைத் தான் சுபாவம் என்ற சொல்லால் குறிப்பிட்டுவிடுகிருர்.

இந்த சுபாவத்தை உணரும்பொழுது பிறப்பது பரிபூரண ஆனந்தம். இந்த ஆனந்தத்தை அனுபவிப்ப தற்கும், ஐக்கியத்திலிருந்து தற்காலிகமாகவேனும் விடு பட்டு ஜீவன் நின்ருல்தான் முடியும்.

சமரசம் காண்போம் இனி

தாயுமான சுவாமிகளின் இப் பாடற்பகுதியில் இருந்து சமரசம் என்ற சொல்லுக்கு வெறும் ஒற்றுமை என்பது மட்டும் பொருளன்று. வேதாந்த சித்தாந்தங் களின் ஒற்றுமை என்பதுதான் நேர்ப் பொருள் என்றும் தெரிகிருேம்.

தாயுமான சுவாமிகளோ, சுமார் முந்நூறு ஆண்டு கட்கு முன் வாழ்ந்தவர். அவர்க்குப் பின் வந்த இராமலிங்க அடிகளார் ''சமரச சுத்த சன்மார்க்கம்'' என்றே ஐயத்துக்கு இடனின்றிக் குறிப்பிட்டுவிட்டார்.

எனவே ''சமரசம்'' என்ற சொல்லைச் சமய சமரசம், வேதாந்த சித்தாந்தச் சமரசம் என்ற பொருளில்தான் இப்பொழுது நாம் உணர்ந்து கொள்கிருேம்.

இந்தக் கருத்தில் ''கம்பன் கண்ட சமரசம்'' என்பது பற்றி நாம் இப்பொழுது காணப் போகிறோம்.

பாட அமைந்த சூழல்

எந்த ஒரு கவிஞனும், ஞானியும் சமரசத்தைப் பற்றிப் பாடி இருப்பானேயானால், அவன் அப்படிப் பாடுவதற்குத் தூண்டுகோலாக இருந்தது யாது என்பதனை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஞானிகள் இவ்வாறு சமரசத்தைப் பற்றிப் பாடி இருப்பார்களேயானால் வேதாந்த சித்தாந்தக் கருத்துகளுக்கிடையே மோதல் ஒன்று உண்டாகி, அதன் காரணமாக, மக்களிடையே அன்புக்கும், அருளுக்கும், கருணைக்கும் மாறாகப் பூசலும், போரும், வெறியாட்டமுமே தலைதூக்கி இருந்திருக்க வேண்டும்.

அந்தச் சூழ்நிலையில் அமைதியை நிலைநிறுத்த ஏகப் பரம்பொருளின் அன்பையும், அருளையும், கருணையையும் வலியுறுத்த அவற்றிற்குத் தடையாக வேறுபட்ட வேதாந்தச் சித்தாந்தக் கருத்துகள் அமையக் கூடாது, என்ற உன்னத நோக்கத்துடன் அவர்கள் சமய சமரசத்தைத் தங்கள் பாடல்கள் மூலமாகவும், திருப்பணிகள் மூலமாகவும் பரப்பி இருக்கவேண்டும்.

ஞானி

உண்மையில் அமரத்துவம் பெற்ற எந்தக் கவிஞனும் ஒரு ஞானியே ஆவான். உலகைத் துறந்து வனத்திற்குச் சென்று தனியாக வாழும் ஒருவன்தான் ஞானி ஆவான் என்று சொல்வதற்கில்லை.

மக்களுக்கு மன்னனாக இருப்பவனும், மன்னன் ஆதரவில் வாழ்பவனும், மக்களில் ஒருவனாக இல்லறம் நடத்துபவனும் ஞானியாக இருக்க முடியும்.

நம் நாட்டு நூல்களின் கருத்துப்படி ஜனகனே இதற்கு ஏற்ற எடுத்துக்காட்டு ஆவான்.

கம்பன் ஞானியே

இந்தப் பின்னணியில் கம்பனின் காவியத்தை நோக்கும்பொழுது அவன் ஒரு தலைசிறந்த ஞானி ஆவான் என்பது தெளிவாகும். இவ்வாறு ஞானியின் நிலையில் நின்று காப்பியத்தின் ஊடே அவனைப் பேசத் தூண்டிய சூழ்நிலைகள் யாவை எனக் காண்பது அவசியம் ஆகும்.

வான்மீகத்தில் இல்லாதது

கம்பன் பாடிய காப்பியம் இராமகாதை. இராம காதையின் அடிப்படை வான்மீகி முனிவர் பாடிய இராமாயணம். அந்தக் கதையின் இன்றியமையாப் பகுதி ஆக சமயப்பூசல்களும், ஞானக் கருத்துகளும் அமையு மானால், அக்கதையின் அடி ஒற்றிப் பாட வந்த கம்பனும் வேறு வழியின்றி அவை பற்றிப் பாடினான் என்று சொல்ல முடியும். ஆனால் கதையின் இன்றியமையாப் பகுதியாக அமையாத ஒன்றைப்பற்றி அவன் பாடி இருப்பானேயானால் அது ஒரு குறிப்பிட்ட நோக்கத் திற்காகவே பாடப்பட்டதாக அமையும்.

சமயப் பூசல்களோ, வேதாந்த சித்தாந்த வேறு பாடுகளோ, வால்மீகியின் இராமகாதையின் பகுதிகளாக அமையவில்லை.

ஏன் சமரசம் பாடினான்?

எனவே இந்த நிலையில் சமய சமரசம் பற்றிக் கம்பன் பாடி இருப்பானேயானால் அவன் ஒரு குறிப்பிட்ட

நோக்கத்தோடுதான் அப்படிப் பாடி இருக்கவேண்டும் என்பது தெளிவாகும்.

இந்த நோக்கம் யாதாக இருக்கும் என்பதனைத் தெரிந்து கொள்வது கடினம் அன்று. அவன் வாழ்ந்த காலத்தையும், அக்காலத் தமிழகத்தையும் உற்று நோக்கினுல் கம்பனுடைய இந்த நோக்கத்தைக் கண்டு பிடித்துவிடலாம்.

கம்பன் வாழ்ந்த காலத்தைப் பற்றிய சர்ச்சை நீண்ட காலமாகவே இருந்து கொண்டிருக்கிறது.

அவன் கி.பி. 9ஆம் நூற்ருண்டைச் சேர்ந்தவன் என்பது ஒரு சாரார் துணிபு. கி.பி. 12ஆம் நூண்ருண்டைச் சேர்ந்தவன் என்பார் பிறிதொரு சாரார். இன்று அவன், கி.பி. 9ஆம் நூற்ருண்டில் வாழ்ந்தவன் என்பது தான் பெரும்பாலார் துணிபு.

கி.பி. 9ஆம் நூற்ருண்டில் சமயநிலே

இந்த கி.பி. 9ஆம் நூற்ருண்டிலும் அதற்குச் சற்று முன்னும் தமிழ் நாட்டின் சமயநிலே எப்படி இருந்தது என்பதைச் சற்று உற்று நோக்கினுல் நாம் இங்குக் குறிப்பிட்டுக் கொண்டிருக்கும் கம்பனுடைய நோக்கத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

சங்க காலத் தொடக்கத்திலேயே வைதீகச் சமயத் தொடர்பு தமிழ் நாட்டில் இருந்தது. பௌத்த சமண மதங்களும் அக் காலத்தில் தமிழ்நாட்டில் இடம் பெற்றிருந்தன. ஆனுல் அம் மதங்கள் தொடக்கத்தில் அருகிய நிலேயில் தமிழகத் தலேநகர்கள் சிலவற்றில் மாத்திரம் அரசர்களாலும், அரசு சார்ந்த சிலரராலும், பின்பற்றப் பெற்றன. இந்நிலே சற்று மாறிட, வெகு விரைவிலேயே

மக்கள் பலர் ஆதரவோடு மன்னர்கள் ஆதரவையும் வைதீக சமயங்கள் பெற்றன.

ஆழ்வார்; நாயன்மார் அருளிப்பாடுகள்

இந்தச் சூழ்நிலையில்தான் ஆழ்வார்கள் தோன்றி பண் கலந்த தமிழ்ப் பாடல்கள் மூலமாக வைணவத்தைப் பரப்பினர். சைவ சமயக் குரவர்கள் ஆன சம்பந்தரும் திருநாவுக்கரசரும் தமது திருநெறிய தமிழ்ப் பாடல் களால் சைவப் பயிர் வளர்த்தனர்.

சைவ, சமணப் பூசல் குறித்த குறிப்புகளைச் சம்பந்தர், அப்பர் பாடல்களில் ப்ரவலாகக் காணலாம். எனினும் இவர்களது பெரும்பணியினால் சைவம் தழைத்தது. தேவாரகாலம் 7—8ஆம் நூற்றாண்டென்பர்.

சைவ— வைணவப் பூசல்கள்

இந்நிலையில் கி.பி. 9ஆம் நூற்றாண்டில் சைவ சமணப் பூசல்கள் பேரளவில் மறைந்து போன போதிலும் சைவ, வைணப் பூசல்கள் ஓரளவு தலைதூக்கியே நின்றன.

இப் பூசல்கள் மிகப் பரவலாக இல்லாத போதிலும் அவை இருந்த இடத்து வெறியும், வேகமும் மிக்கிருந்தன என்று சொல்லத் தயங்க வேண்டியதின்று.

வருந்திய உளத்தன்

உலகம் தழீஇய கவி உள்ளம் படைத்திருந்த கம்பன் இவற்றைக் கண்டு வருந்தினான் என்று சொல்லவும் வேண்டுமோ? ஒரே பரம் பொருளிடத்து அசைக்க முடியாத, அழியாத, ஆணித்தரமான ஈடுபாடும், நம்பிக் கையும் பக்தியும் கொண்டிருந்த கம்பனுடைய நளினமான கவி உள்ளத்தை இவை பெரிதும் வருத்தின என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

சமரசம் வற்புறுத்த வேண்டியதே

இந்தச் சூழ்நிலையில்தான் தன் காப்பியத்தின் ஊடே பொருத்தமான இடங்களில் எல்லாம் ''பரம்பொருள் ஒன்றே'' என்பதனையும் பல்வேறு மதங்களும் அந்தப் பரம்பொருளை அடைய பல மார்க்கங்கள் காட்டுகின்றன என்றும் உடன்பாட்டு முறையில் வற்புறுத்துவதோடு, எதிர் மறையாகச் சமயப் பிணக்குகளையும், பூசல்களையும் அவன் வன்மையாகக் கண்டித்தும் இருக்கிறான்.

செயல்பாடு மேவிய இடங்கள்

இராமகாதை என்னும் தன்னுடைய காப்பியத்தில் இவன் இப்படிச் செயல்பட்டிருக்கும் சில இடங்களை இப்போது நாம் காணலாம்.

வாலி வதத்திற்குப் பிறகு சுக்கிரீவனுக்குப் பட்டாபிஷேகம் நடக்கிறது. கார்காலம் கடந்த உடன் சீதையைத் தேடுவதற்கு வேண்டிய வானரச் சேனையைத்திரட்டிக் கொண்டு வருவதாக இராமனுக்கு அவன் உறுதி அளிக்கிறான்.

ஆனால் மன்னனான மகிழ்ச்சியில் கேளிக்கைகளில் மூழ்கி தான் கொடுத்த வாக்குறுதியை மறந்துவிடுகிறான். இதனால் கோபம் கொண்ட இராமன் இலக்குவனைக் கிட்கிந்தை நகருக்கு அனுப்புகிறான்; தன் தவற்றை சுக்கிரீவன் உணர்ந்து கொண்ட பிறகு சீற்றம் தணிகிறான்.

இராமனிடம் சுக்கிரீவன் தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத் தூதுவர்களை அனுப்பிவிட்டதாகவும், வானர சேனைகள் பல திக்குகளிலிருந்து வந்து கொண்டிருப்பதாகவும் கூறுகிறான்.

அவ்வாறே மாபெரும் வானர சேனை திரண்டு வந்து நிற்கிறது. அந்த சேனையைக் காணுமாறு இராம இலக்கு

வரைச் சுக்கிரீவன் வேண்டிக் கொள்கிறான். அதன்படி அவர்கள் சேனையைக் கண்டதை "தானை காண் படலம்" என்ற தலைப்பில் கம்பன் பாடுவான்.

வில்லாளன் வியப்பு

அளவற்ற சேனையைக் கண்ட இராமன் அதுபற்றித் தன் வியப்பினை இலக்குவனிடத்து எடுத்துக் கூறுவதாகச் சில அற்புதமான பாடல்களைக் கவிச்சக்கரவர்த்தி பாடுகிறான்.

அளவற்றிருக்கும் வானர சேனைக்கு உவமானமாக அளவற்றிருக்கும் வேறு பலவற்றை இலக்குவற்கு இராமன் எடுத்துக்காட்டுவதாக கம்பன் பாடும் பாடலாவது :

"ஈசன் மேனியை, ஈர்-ஐந்து திசைகளை, ஈண்டு இவ்
ஆசு இல் சேனையை, ஐம்பெரும் பூதத்தை, அறிவை,
பேசும் பேச்சினை, சமயங்கள் பிணக்குறும் பிணக்கை
வாசமாலையாய்!—யாவரே முடிவு எண்ண வல்லார்."
(தானை காண் படலம் 36)

இவைகட்கு ஏது முடிவு?

இப் பாடலில் தன் முன்னே திரண்டு நிற்கும் வானர சேனையை உவமேயமாகவும் வேறு ஆறு கருத்துகளை உவமானமாகவும் எடுத்துக் காட்டுகிறான். அப்படி அவன் உவமானமாகக் காட்டும் ஆறும் பின்வருமாறு :

1. ஈசன் மேனி
2. பத்துத் திசைகள்
3. ஐம்பெரும் பூதம்
4. அறிவு

5. பேசும் பேச்சு

6. சமயங்கள் பிணக்குறும் பிணக்கு.

''வாசமாலையாய்'' என்பது இராமன் இலக்குவனை விளிப்பது.

உவமான உவமேயம் என நாம் கூறிவிட்ட போதிலும் உவமானத்தின் நிரலிலே உவமேயத்தையும் ''ஆசில் சேனையை'' என்று கூறுவதன் மூலம் சேர்த்து விடுகிறான்.

உவமைப் பொருத்தம்

இப்பொழுது நாம் நோக்க விரும்புவது எடுத்துக் கொண்ட ஆறு உவமானங்களின் பொருத்தமே.

முதலாவதாகக் கவிஞனால் எடுத்துக் கொள்ளப் பட்டிருப்பது

''ஈசன் மேனி''

ஈசற்கென்று ஒரு மேனி கிடையாது. இப் பிரபஞ்சமே அவன் மேனி; ஏனெனில் தன் படைப்புகளின் மூலமாகத் தான், அவன் தன் இருப்பை வெளிப்படுத்திக் கொள்கிறான்.

இப் பிரபஞ்சத்துக்கு எல்லை இல்லை, என்பது தெளிவு. எனவே ஈசன் மேனிக்கும் எல்லை இல்லை. உண்மையில் பார்க்கப்போனால் படைக்கப்பட்ட பொருளுக்கே எல்லை இல்லாதிருக்கும்போது படைத்தோற்கு எங்கு எல்லை இருக்க முடியும்?

இதனை வேறு வகையில் பொருள்கொள்வாரும் உளர். ஈசன், உருவத்திருமேனி கொள்வது அவன் சங்கற்பத்தின் படியே ஆகும்; அந்தச் சங்கற்பமோ எந்த வரையறைக்

குள்ளும் அடங்குவதன்று; எனவே, அந்தச் சங்கற்பத்தின் படி அவன் கொள்ளும் திருமேனிகளும் அளவில் அடங்கா தனவே.

இரண்டாவதாகக் கவிஞன் எடுத்துக் கொண்ட உவமானம் :

ஈரைந்து திசைகள்.

ஒரு திக்குக்கூட நம்மால் எல்லே வகுத்தல் இயலாது. ஆகவே பத்துத் திக்குகளுக்கும் எல்லே வகுப்பது ஏது? அவை அளவைக்கும் அப்பாற்பட்டவை என்பது தெளிவு.

மூன்ருவதாகச் சுட்டப் பெறுவது :

ஐம்பெரும் பூதம்.

திக்குகளைப் போலவே இவ்வைம்பெரும் பூதங்கள் ஒவ்வொன்றும் அளவிற்குள்ளும், கட்டுப்பாட்டிற்குள்ளும் அடங்காதது. ஆக இவ்வைம்பெரும் பூதங்களும் ஒரு சேர அளவிற்குள் அடங்காதவை எனச்சொல்வதில் யார்க்கும் ஐயம் இன்ரும்.

நான்காவது உவமானம்:

''அறிவு''

அறிவிற்கு எல்லே உண்டு என்று எவருமே சொல்ல மாட்டார்கள். மனிதன் தோன்றியகாலம் தொட்டு இன்றுவரை அறிவு வளர்ந்து கொண்டே வந்திருப்பதனை வரலாற்றின் வாயிலாய் அறிகிரேம்.

வளர் நிலை அறிவு

மேலும் காலம் கடக்கக் கடக்க இது வேகமாக வளர்வதனை உணர்கிரேம். நமக்குப் பின்னரும் இவ்வறிவு வளர்ந்து செல்லத்தான் போகிறது. எந்த ஒரு கட்டத்திலும் இந்த அறிவு மேலும் வளர வழியின்றித்

தன் உச்சக் கட்டத்தை எட்டிவிட்டது எனச் சொல்ல முடியாது.

அதற்கு மாருக முடிவற்ற தொடர்ந்த வளர்ச்சி உடையதாகவே அறிவு அமைந்திருக்கிறது. உண்மையில் பார்க்கப் போனுல் அறிவியலில் நேற்றைய, புதிதாகக் கண்டு பிடிக்கப் பெற்ற ஒன்று, இன்று தவருகி, அதற்குப் பதிலாகப் பிறிதொன்று கண்டுபிடிக்கப் பெற்றுவிடுகிறது.

ஆகவேதான் வள்ளுவனும் ''அறிதோறும் அறியாமை கண்டற்று'' என்று கூறிமுடிப்பான்.

பொதுவாகக் கூறப் பெற்றிருக்கும் இந்த அறிவு எத்துறை அறிவையும் குறிக்கக் கூடியது. அது அறிவியல் அறிவாகவும் இருக்கலாம்; இலக்கிய அறிவாகவும் இருக்கலாம்; புண்ரியல் அறிவாகவும் இருக்கலாம். எத்துறையும் அறிவிற்கு அப்பாற்பட்டது அன்று.

எனவே துறைவழிப் பார்க்கினும் வளர்ச்சியின் தொடர்வினே நோக்கினும் அறிவிற்கு எல்லே காண் கிலேம்.

ஐந்தாவதாகக் கவிஞன் காட்டும் உவமானம்:

''பேசும் பேச்சு''

இதனே விளக்கத் தேவை அற்ற அளவிற்கு இருக்கிருேம். எதனேயாவது ஒன்றனே ஒருவர் பேசினுல் அதனே ஆதரித்தோ, மறுத்தோ பிறர் பேச பேச்சு முடிவற்றுப் போய்க்கொண்டு இருக்கும்.

ஆருவது உவமானமாகக் கவிஞன் காட்டுவதுதான், நாம் இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கும் கருத்துக்கு நெருக்கமாய் அமைவது. அதாவது:

''சமயங்கள் பிணக்குறும் பிணக்கு''

சமயங்கள் பிணக்குறும் பிணக்கு என்ற சொல்லாட்சியை விளக்கத் தேவை இன்று. எனினும் ஒன்றை நோக்கத் தவறக்கூடாது. அதுதான் சமயங்களின் பிணக்கு எனக் கூறுமல் சமயங்கள் பிணக்குறும் பிணக்கு எனக் கூறி இருப்பது.

சமயங்களின் பிணக்கு எனக் கூறிவிட்டால் சமயங் கட்கிடையே பிணக்கு இருப்பது இயல்பே என்ற பொருளைக் கொடுத்து விடக்கூடும்.

ஆனல் கவிஞன் சொல்லாட்சியோ, பிணக்குக்கு இடமோ காரணமோ இல்லாவிடத்தும், செயற்கையாய் அமையும்—உண்டாக்கிக் கொள்ளும்—பிணக்கு எனப் பொருள்படும்.

பிணக்குறும் பிணக்கு

இக்கருத்தையே பின்னர் வந்த தாயுமான சுவாமிகள் எடுத்துக்காட்டி உள்ளார்,

"சமய கோடிகள் எலாம் எந்தெய்வம்
தந்தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து
எதிர் வழக்கிடவும் நின்றது எது?"

என்று கேட்பதன் மூலம்.

மேலும் ''பேதம் திகழ்கின்ற சமயமும் அனந்தம்'' என்றும் குறிப்பிடுகிருர்.

கம்பற்கு முன் வாழ்ந்த நம்மாழ்வார்,

''வணங்கும் துறைகள் பலப்பல ஆக்கி மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலப்பல ஆக்கி...''

(திவ்வியப் பிரபந்தம் 3675)

எனக்குறிப்பிடுகிருர்.

இங்கு நாம் கூர்ந்து நோக்கத்தக்கது யாது எனில், சமயப் பிணக்குகள் எந்த அளவில் கம்பனைப் பாதித்திருந்தால் அதனை அவன் இவ்விடத்துக் குறிப்பிடுவான் என்பதுதான்.

வானர சேனையின் முடிவற்ற பரப்பினை எடுத்துப் பேச வந்த கம்பன்,

ஈசன்மேனி, ஈரைந்து திக்குகள், ஐம்பெரும் பூதங்கள் ஆகிய மூன்றனையும் உவமானமாகக் குறிப்பிடுகிறான். இம்மூன்றும் இறைவனோடும், அவனுடைய படைப்புகளோடும் சேர்ந்தவை. அவனையும் அவன் படைப்புகளையும் நாம் தெரிந்துகொள்ள ஏதுவாக இருப்பது அறிவு.

அறிவு அளித்த அறிவனை அளத்தல் ஆமோ?

இவ்வறிவு இறைவனையும் அவன் படைப்புகளையும் பற்றிய அனைத்தையும் தெரிந்து கொள்ள உதவும் என முழுமையாகச் சொல்ல முடியாது. நாமே படைப்பினத்தைச் சேர்ந்து இருக்கிறோம். நமக்கு இறைவனால் அருளப்பட்ட அறிவைக் கொண்டு படைத்தவனையே முழுமையாகத் தெரிந்து கொள்ள முடியாது.

மன்னும் ஓர் இயலாமை உண்டு

எனினும் எவ்வளவு பெரிய சேனையாக இருந்தாலும் அதற்கும் ஓர் எண்ணிக்கை இருந்துதான் ஆகவேண்டும் என்பது போல, இவ்வறிவிற்கு அதனை அருளியவன் திறப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் முயற்சியில் இயலாமை வரும் கட்டம் ஒன்றும் உண்டு.

இந்த வகையில் முதல் மூன்று உவமானங்களினின்றும் நான்காவதாய இது சற்று வேறுபட்டுள்ளது.

ஆயினும், இவ்வறிவுதான் முதல் மூன்று உவமானங்களையும் பின்தொடர் இரண்டனையும் பிணைத்து நிற்பது.

பின் வரும் இரு உவமானங்களில் முதலாவது "பேசும் பேச்சு" பேச்சே அறிவின் அடிப்படையில் பிறப்பது. இவ்வகையில் அறிவு இதற்கு ஆதாரமாகிறது. இவ்வாறு வரிசைப் படுத்திய ஐந்து உவமானங்களின் பக்கத்தில் "சமயங்கள் பிணக்குறும் பிணக்கை" வைத்து அவையும் (பிணக்குகள்) எவரும் எண்ணி முடிவுகட்டவல்லன அல்ல என்று கவிஞன் குறிப்பிடுவானேயானால், இச் சமயப் பிணக்குகள் அவனுடைய உள்ளத்தை எந்த அளவிற்குப் பாதித்து இருக்கவேண்டும் என்பதனை நாம் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

சூலையின் திருக்கு

இதே கருத்தினைக் கம்பன் இரணியன் வதைப் படலத்தில் பிரகலாதன் வாயிலாகவும் வெளிப்படுத்துவான். "ஆசிரியர் சொன்னவற்றை நீ ஓதுவாயாக" என்று தன்னிடம் அறிவுரை கூறிய தந்தைக்குப் பிரகலாதன் அறிவுரை கூறுகிறான்.

இந்த அறிவுரையினூடு கம்பன் அற்புதமான வேதாந்தக் கருத்துகளை வெளிப்படுத்துவான்.

இக் கருத்துகளை வெளிப்படுத்தும் பாடல்களுள் ஒன்று :

'காலையின் நறுமலர் ஒன்றக் கட்டிய
மாலையின் மலர் புரை சமய வாதியர்
சூலையின் திருக்கு அலால், சொல்லுவோர்க்கு எலாம்
வேலையும் திரையும் போல் வேறுபாடு இலான்.'
(இரணியன் வதைப்படலம் 77)

(சூலுதல் - குடைதல்; திருக்கு - மாறுபாடு; வேலை - கடல்; திரை - அலை)

இப் பாடற்பொருளைப் புரிந்துகொள்வது எளிதே. ஆயினும் இதனுள் அடங்கி இருக்கும் கருத்தோ, மிக ஆழமானது. ஆளப் பெற்ற சொற்கள் எளியனவே. ஆனால் அவற்றின் மூலம் கம்பன் உணர்த்தும் கருத்தோ காலா காலமாக ஞானிகள் உணர்ந்து வெளிப்படுத்த முயன்று கொண்டிருக்கும் கருத்து.

ஒன்றக் கட்டிய மாலை

இப்பாடலின் திரண்ட பொருள்: ''காலையில் மலர்ந்த நறுமணம் வீசும் மலர்களை ஒருசேரத் தொகுத்துக் கட்டிய மாலையில் உள்ள மலர்களை ஒத்த பல்வேறு சமயங்களைச் சேர்ந்தவர்கள் துருவித் துருவி குதர்க்கம் பேசுவதே அன்றி பரம்பொருளானவன் எல்லோர்க்கும் கடலும் அலையும் போல வேறுபாடில்லாதவனே ஆவான்.''

காலை மலர்

இப் பாடலில் கூர்ந்து நோக்கத்தக்க அருமைகள் பல உள்ளன. ''காலையின் நறுமலர்'' என்ற சொல்ஆட்சியில் தன்னுடைய தாவர இயல் அறிவைக் கம்பன் காட்டிவிடுகிறான்.

மலர்களில் இருவகை உண்டு. பகலில் மலர்வன, இரவில் பூப்பன என்பன.

இரவில் மலரும் மலர்கள் பெரும்பாலும் வெண்ணிறத்தவாகவே இருக்கும். பகலில் மலரும் மலர்களோ பல்நிறத்தவையாக இருக்கும். இந்த வேற்றுமைக்கு அடிப்படையான காரணம் நம் எல்லோர்க்கும் தெரிந்ததே.

நம் வர்க்கத்தில் உள்ளது போலவே தாவர வகையிலும் ஆண், பெண் என இருபால் உண்டு. தேனீக்களும் வண்டுகளும் ஒருபாலைச் சேர்ந்த தாவரத்தில் உள்ள மகரந்தத் தாதுகளை எடுத்துச் சென்று மற்றொருபாலைச் சேர்ந்த தாவரத்தின் மலர்களில் சேர்ப்பித்து அவற்றைச் சூலுறுத்தி இனப்பெருக்கத்திற்குப் பெரிதும் உதவுகின்றன.

வண்டுகளையும், தேனீக்களையும் தம்மிடம் ஈர்ப்பதற்காகப் பகலில் மலரும் மலர்கள் பல்நிறத்தனவாக அமைகின்றன. இரவில் மலரும் மலர்கள் அங்ஙனம் பல்நிறத்தனவாக அமையுமானால், இருளில் அவை வண்டுகளின்-தேனீக்களின் கண்கட்குத் தெரியா; ஆகையால் வெண்ணிறத்தன ஆகின்றன.

இருவகை மலர்களும் நறுமணத்தனவே எனினும் இரவில் மலரும் மலர்களுக்கு மிகு மணம் அவசியமாகின்றது, நிறக் கவர்ச்சி இருளில் பயன்படுவது இல்லை ஆகலின்.

இந்தத் தாவரஇயல் உண்மையைத்தான் "காலையின் நறு மலர்" என்ற சொல் ஆட்சியின் மூலம் கம்பன் உணர்த்துகிறான்.

இத்தகு மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையையே "......ஒன்றக் கட்டிய மாலை" என்று அவன் குறிப்பிடுகிறான்.

பல்வேறு வண்ணம்; பல்வேறு சமயம்

காலையின் நறுமலர் என்ற சொல் ஆட்சியினால் பல வண்ண மலர்களால் கட்டப்பட்ட மாலை என்பதனை உணர்த்திவிடுகிறான். "ஒன்றக் கட்டிய" என்ற சொல் ஆட்சியினால் அம் மாலையில் பலவண்ண மலர்கள் நெருக்க

மாகவும், பொருத்தமாகவும். இடம் பெற்று அழகு கொழிக்கின்றன என்ற தனிப் பொருளைக் குறிப்பிட்டு விடுகிருன்.

இத்தகைய மாலையைப் பல்வேறு சமயங்கள் கொண்ட சமுதாயத்திற்கு உவமானம் ஆகக் கவிஞன் குறிப்பிடுகிருன்.

இப்படி இருக்கும் பொழுது சமயப் பிணக்கு எப்படி ஏற்படக் கூடும்? என்ற வினு எழத்தான் செய்யும். அதற்கும் அவன் விடை இறுத்துவிடுகிருன்.

திருக்கு

சமயவாதிகள் "சூலையின் திருக்கு" தான் இந்தப் பிணக்குகட்குச் காரணம் என்பது அவன் கருத்து. அவன் இப் பாடலில் ஆண்டிருக்கும் சூலை, திருக்கு எனும் இரு சொற்களில் இருந்தே அவன் இத்தகைய பிணக்குகளை எப்படிச் சாடுகிருன் என்பது தெளிவாகும். சூல் என்ற சொற்குக் குடைதல் என்பது பொருள். (சூல்+ஐ=சூலை தொழிற் பெயர்) தேவை இல்லாமல் துருவித் துருவி குடைந்து கொண்டிருப்பதனையே இது குறிக்கும்.

'திருக்கு' என்ற சொற்குப் பல் பொருள் இருப்பினும் 'மாறுபாடு' என்ற பொருளே இங்கு சிறக்கும்.

எனவே, "சூலையின் திருக்கு" என இணைத்துப் பார்க்கும் பொழுது அநாவசியமாக வேண்டுமென்றே துருவித் துருவிப் பார்த்து மாறுபாட்டைக் கண்டு பிடிக்கும் செயலையே குறிக்கும்.

வெறுக்கும் திருக்கு

கம்பனின் இச் சொல்ஆட்சியில் இருந்தே அவன் இச் செயலை—சமயப் பிணக்குகளை எந்த அளவிற்கு வெறுக்கிருன் என்பது தெளிவு ஆகும்.

வேறுபாடிலான்

இப்படி எதிர்மறையாகச் சமயப்பிணக்கை அவன் சாடுவதோடு அன்றி, உடன்பாட்டு முறையிலும் ஓர் அற்புதமான கடவுட் கொள்கையையும் இப் பாடலின் ஈற்றடியில் குறிப்பிட்டுவிடுகிறுன் :

"வேலையும் திரையும் போல் வேறுபாடு இலான்
(வேலா, வேலை—கடல்)

பரம்பொருள் கடலும் அதன் அலையும் போல் வேறுபாடு இலான் என்பதே அது.

கடற்கரையில் நின்று கொண்டு கடலிலிருந்து கிளம்பி, கரையை மோத வரும் அலைகளை நாம். அனைவரும் கண்டிருக்கிறேம்.

காற்றுல் எற்றுண்ட நீர்ப்பரப்பே அலையாகிறது. அது தோன்றும் போது ஒரு தனிக் கோலம் கொண்டு வேகத்துடன் ஓங்கி, உயர்ந்து விரைந்து வருகிறது. கரையைச் சாடிய பின் வேகம் குறைய, தாழ்ந்து, தவழ்ந்து மீட்டும் நீராகவே பின் வாங்கி வேகமாகச் சென்று கடலோடு கலந்துவிடுகிறது.

பரம்பொருளும் அவன் படைத்த பிரபஞ்சமும் இப் படித்தான். பரமனினின்று தோன்றிய பிரபஞ்சம் முடிவில் அவனேடு கலந்து ஒடுங்கிவிடுகின்றது.

பரமாத்மா—ஜீவாத்மா

வேதாந்த சித்தாந்தம் பேசுபவர்கள் பரமாத்மா, ஜீவாத்மா என்று பகுப்பர். இறைவன் பரமாத்மா, மனிதன் ஜீவாத்மா என்பது அவர்தம் கருத்து.

மனிதனுடைய வாழ்வின் இறுதியில் எந்தபரமாத்மா வினின்று இந்த ஜீவாத்மா தோன்றியதோ அதே பரமாத் மாவோடு இரண்டறக் கலந்துவிடுகிறது,

எதைப் போன்று?

கடலில் தோன்றிய அலை, கரைமோதிய பின் திரும்பவும் கடலோடு ஒன்றறக் கலப்பதுபோல.

இந்த மாபெரும் உண்மையை மிகச் சிறிய சொற்களான ஒரே தொடரில் கம்பன் உணர்த்திவிடுகிறான்.

திருக்கினைச் சாடியது ஏன்?

இப்படிச் சமயப் பிணக்குகளைப் பொதுவாகச் சாடியதோடு நில்லாமல், கவிஞன் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லும் போது அது அவனுடைய காலத்தில் மேலோங்கி நின்றது, என்று நாம் புரிந்து கொள்ளலாம்.

கவிஞன் கூற்றிலிருந்து பார்க்கும் பொழுது சைவ, வைணவப் பிணக்கு அவனுடைய காலத்தில் மிகுந்திருந்தது என்பது தெரிகிறது.

அடுத்த இடம்

தன்னால் சேகரிக்கப்பட்ட வானர சேனைக்கு நாற்றிசையிலும் சென்று சீதையைத் தேடுமாறு சுக்கிரீவன் ஆணை இடுகிறான்.

தென்திசை செல்லும் வானர வீரர்க்குச் சுக்கிரீவன் வழி சொல்கிறான். அப்படி வழி சொல்லும் பொழுது அருந்ததி மலையை வணங்கி, அப்பாற் செல்லுமாறு அவர்கட்கு அறிவுரை கூறுகிறான். இப்படி அவன் கூறும் அறிவுரையை,

"அரன் அதிகன்; உலகு அளந்த அரி அதிகன்''
என்று உரைக்கும் அறிவிலோர்க்குப்
பரகதி சென்று அடைவு அரிய பரிசே போல்
(நாட விட்ட படலம் 24)

என்ற பாடலில் காணலாம்.

எவன் அதிகன்?

பாடலின் தொடக்கமே இப்பொழுது நாம் ஆய்ந்து கொண்டிருக்கிற கருத்துக்கு அவசியமாகிறது. "அரன் அதிகன்; உலகளந்த அரி அதிகன் என்று உரைக்கும் அறிவிலோர்" என்று குறிப்பிடுகிறுன்.

அரன் என்பது செம்மேனிச் சிவனேயும், அரி என்பது திருநெடுமாலாம் அவனேயும் குறிக்கும். திருவிக்கிரம அவதாரத்தில் திருமால் உலகினே ஓரடியால் அளந்தான் என்பர். ஆதலால் அவன் 'உலகளந்த அரி' என்று இங்கு குறிக்கப் பெறுகிறுன்.

"அதிகன்" என்ற சொல் பெரியவன், உயர்ந்தவன், சிறந்தவன் என்று பொருள்படும். இங்கு சிவன்தான் சிறந்த கடவுள்; திருமால் தான்சிறந்த கடவுள், என்று பூசலிடும் சமயச் சழக்கர்களேக் குறிப்பிட்டு, அவர்களே அறிவிலோர் என்று கம்பன் தீர்ப்பளிக்கிறுன்.

அத்தீர்ப்போடு நில்லாமல் அத்தகையர் பரகதி அடைய மாட்டார்கள் என்ற தன்னுடைய முடிவையும் தெளிவாகத் தெரிவித்துவிடுகிறுன்.

இதிலிருந்து ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது. அதாவது, அவன் வாழ்ந்த காலத்தில் சைவ வைணவப் பூசல் மலிந்திருந்தது; இறைவனின் ஓர்மையை உணர்ந்திருந்த கம்பனே இது பெரிதும் பாதித்தது; அப் பாதிப்பின் எதிரொலியே இப்பாடலின் முதல் இரு அடிகளின் அமைவு.

ஒன்று என அறிகிலார் பரகதி பெறுகிலார்

அறிவின்மையால் இத்தகைய பூசலில் ஈடுபடுவோர்க்குப் பரகதி இல்லே என்பதும் கம்பனின் துணிவு.

இந்த முடிவின் அடிப்படை உண்மையை உணர்ந்து கொள்ளப் பெருத்த ஆராய்ச்சி ஒன்றும் தேவையில்லை. சிவனே பெரியவன் என்று ஒரு கட்சியாரும், திருமாலே பெரியவன் என்று பிறிதொரு சாராரும், வலியுறுத்திச் சொல்வார்களேயானுல், அவ்விரு வகையருமே பரம் பொருளின் உண்மைத் தன்மையை உணர்ந்து கொள்ளவில்லை என்பது தெளிவு.

எப்போது இவர்கள் இவ்வுண்மைத் தன்மையைத் தெரிந்து கொள்ளவில்லையோ, அப்பொழுதே அறிவிலர் ஆவார்கள் அன்றோ?

இவ்வாறு இறைத்தன்மையின் உண்மையை அறிந்து கொள்ளாதவர்க்குப் பரகதி இருக்க முடியாது என்பதில் ஐயம் இல்லை.

அரனும் அரியும் ஒன்றே

சைவ, வைணவப் பூசலைப்பற்றி இப்படிக் கூறிய கம்பன், சிவனும் திருமாலும் வெவ்வேருனவர் அல்லர்; ஒரே பரம்பொருளின் செயற் பண்பின் தன்மையைக் கொண்டு கொடுக்கப்பட்ட வெவ்வேறு பெயரினரே, என்பதனை நாசூக்காகப் பிறிதொரு பாடலில் எடுத்துக் காட்டுவான்.

பாலகாண்டம் ஆற்றுப் படலத்தில் காணப்படும்,

நீறு அணிந்த கடவுள் நிறத்த வான்
ஆறுஅணிந்து சென்று, ஆர்கலி மேய்ந்து, அகில்
சேறு அணிந்த முலைத்திரு மங்கை தன்
வீறு அணிந்தவன் மேனியின் மீண்டதே.

(ஆற்றுப்படலம் 2)

என்பதே அப் பாடல்.

இப்பாடலின் திரள் கருத்தாவது: "திருநீற்றை அணிந்த சிவபெருமானது வெண்மை நிறத்தை உடைய மேகங்கள், வானவழியை அழகு செய்துகொண்டு போய், கடல் நீரைப் பருகி, இலக்குமி தேவியைத் தனக்குப் பெருமையாகத் திருமார்பிலே அணிந்த திருமாலின் கரிய திருமேனிபோலத் திரும்பி வந்தன" என்பதாம்.

இயற்கை நிகழ்வு ஆன, மேகங்கள் கடல்நீர்பருகி பின்னர் திரும்புகின்றன என்பதனையே கம்பன் எடுத்துக்காட்டுகிருன்.

மேகங்கள் கறுத்திருப்பதனையும், வெளுத்திருப்பதனை யும் நாம் கண்டிருக்கிறோம். நீர் உண்மை, நீர் இன்மை இவற்றைக் கொண்டே கருமேகம், வெண்மேகம் என்று குறிப்பிடுகிறோம்.

கருமேகம்தான் மழைபொழிய வல்லது. வெளுத் திருக்கும் மேகத்தை வெண்மேகம் என்போம். அத்தகைய வெண்மேகத்தினுல் மழை வராது.

விஞ்ஞான ரீதியில் நாம் தெரிந்து கொண்டிருப்பது காய் கதிர்ச் செல்வனுல் கடல் நீர் ஆவியாக மாறி அதுவே மேகங்களாகத் திரண்டு மண்ணில் மழை பொழிய வல்லது என்பதே.

இந்த உண்மைக்குக் கவிஞன் ஓர் உருவகம் அளிக்கிருன். அதாவது நீரற்றுப் போன வெண்மேகம் கடலுக்குப்போய், கடல் நீரைப்பருகி (மழை பொழியக் கூடிய) கருமேகமாகத் திரும்புகிறது என்பதுதான்.

வெண்மேகம், கருமேகம் எனச் சொல்லி நிறுத்தி விடாமல் வெண்மேகத்தைச் சிவபெருமானுகவும், கரு மேகத்தைத் திருமால் ஆகவும் குறிப்பிடுகிருன்.

பூசிய வெண் பொடியினுல் சிவனது நிறம் வெண்மை என்பர். திருமாலின் நிறம் கருமை, நீலம், பசுமை என்பர்.

இந்நிற வேற்றுமை, கவிஞன் கைவண்ணம் காட்ட இங்கு உதவுகிறது. இதனைச் சொல்லும் பொழுது கவிஞன் ஓர் அற்புதமான நயத்தை இப் பாடலில் வைத்து விடுகிறுன்.

கம்பன் இப் பாடலில் கூறியுள்ள கருத்துப்படி, வெண் மேகம், கருமேகம் என நிலைத்த வேறுன இரு மேகங்கள் இல. இருப்பது ஒரே மேகம்தான். நீர் வறண்டிருக்கும் போது வெளுத்தும் நீர் உண்டிருக்கும் போது கறுத்தும் இருக்கும் என்பர்.

நீர் நிறைவினுல் அது நீலமேகமாகவோ, கருமேகமாக வோ ஆகிவிடுகிறது.

இந்தக் கூற்றிலிருந்து கவிஞன் நமக்கு உணர்த்தும் உண்மை யாது எனில் இரு வேறுபட்ட மேகங்கள் இல; ஒரே மேகம் நீரற்றும், நீர் நிறைந்தும் இரு வேறு நிறம் பெற்றுற்போல ஒரே பரம்பொருள் அழிவுத் தொழிலில் ஈடுபடும்போது சிவபெருமான் ஆகவும், காத்தல் தொழிலில் ஈடுபடும்பொழுது திருமாலாகவும் பெயர் பெறுகிறது என்பதே.

இங்கு வெண்மையோடு அழிவையும், நீர் பூத்த நீலத் தோடு காப்பையும் பொருத்திக் காட்டுவது வியந்து பாராட்டற்குரியது.

இறை ஓர்மை வலியுறுத்தல்

தன்னுடைய காப்பியம் முழுவதிலும் பொருத்தமான இடங்களில் எல்லாம் இறை ஓர்மையை அவன் வலியுறுத்தத் தவறுவது இல்லை,

எதிர்மறையாகச் சமயப் பிணக்குகளைச் சாடும் பொழுதே, உடன்பாட்டு முறையினும் இறை ஓர்மையை அவன் எடுத்துக் காட்டிக் கொண்டே போகிறான்.

காலமும் கணக்கும் நீத்த காரணன்

இலங்கையில் சீதையைத் தேடிக்கொண்டு செல்லும் அநுமன் இந்திரசித்து விடுத்த பிரம்மாத்திரத்துக்குக் கட்டுப்படுகிறான்; இந்திரசித்தினால் இழுத்துச் செல்லப் பெற்று இராவணன் முன் நிறுத்தப் பெறுகிறான். இராமன் யார் என்பதனை இராவணனுக்கு உணர்த்த முற்பட்ட அநுமன்,

மூலமும், நடுவும், ஈறும் இல்லது ஓர் மும் மைத்து ஆய
காலமும், கணக்கும், நீத்த காரணன்-கைவில் ஏந்தி,
சூலமும், திகிரி சங்கும், கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும், மலரும், வெள்ளிப் பொருப்பும் விட்டு
அயோத்தி வந்தான்.
(பிணி வீட்டு படலம் 80)

என்கிறான்.

இப் பாடலின் அருமை எண்ணி, எண்ணி வியக்கத் தக்கது. முதல் இரு அடிகளில் பரம்பொருளின் தன்மையை எல்லாச் சமயத்தினரும் ஏற்கும் வகையில் பொதுவாகக் குறிப்பிடுகிறான்.

இதில் பரம்பொருளைக் "காரணன்" என்ற சொல்லால் உணர்த்துகிறான். காரணன் என்ற சொல்லின் பொருட் செறிவு சிந்தித்துச் சிந்தித்து அநுபவிக்க உரியது.

அதாவது யாவற்றுக்கும் காரணன் அவனே. அவன் மூலம், நடு, ஈறு இல்லாதவன். மூலம், நடு, ஈறு என்பன காலத்தின் பண்புகளாய் அமைவன. வழக்கிலும்

''தொடக்கம், இடை, முடிவு'' என்று பேசுகிருேம் அல்லவா? இத்தகைய காலத்தைக் கடந்தவன் அவன். அது போலவே கணக்குக்கும் அப்பாற்பட்டவன் அவன்.

கணக்கு

இங்கு கம்பன் கூறும் ''கணக்கு'' யாது என்பதனைச் சிந்திப்பது சற்று அவசியம் ஆகிறது. ''கணக்கு'' என்ற சொற்கு எண்ணிக்கை, அளவு என்ற பல பொருள்கள் உள்ளன. ஆனுல் இங்கு கவிஞன் ஆண்டிருக்கும் ''காரணன்'' என்ற சொல்லுக்குப் பொருத்தமாகக் ''கணக்கு'' என்ற சொல்லுக்குக் பொருள் காண வேண்டும்.

காலத்தைக் கடந்தவன் என்று சொல்லும் பொழுது பரம்பொருளின் எந்தத் தன்மையை நமக்குக் கவிஞன் உணர்த்த விரும்புகிருனே, அதற்கு இயைந்த தன்மையையே கணக்கும் கடந்தவன் என்ற சொல்ஆட்சியின் மூலம் உணர்த்த விரும்புகிருன் என்று கொள்வது தர்க்க ரீதியாகக்கூட ஏற்புடையதாகும்.

''கர்த்தா'' என்று சொன்னவுடன் ''கர்த்தவ்யம்'' என்ற கருத்து உடன் வருவது போலவே ''காரணன்'' என்று சொல்லும் பொழுதே செய்கை, தொழில் எனும் பொருளதாய ''கரணம்'' என்ற கருத்தும் உடன் எழும்.

இந்தப் பொருள் பொருத்தத்தைப் பார்க்கலாம் : காரணன் - கணக்கு.

யாவற்றுக்கும் காரணன் ஆகப் பரம்பொருள் இருப்பதால் அவன் செய்யும் எந்தச் செயலுக்கும் அவன் வேறு யாருக்கும் பொறுப்புள்ளவனுக ஆவதில்லை. பரம்பொருள் செய்கைகள் அவன் சங்கற்பத்தினுல் அமைவனவே.

உயர்வற உயர்நலம் உடையவன்

பிறிதொருவர் ஆணைக்குட்பட்டோ, விருப்பத்திற்கு ஏற்பவோ அவரை மகிழ்விக்கக் கருதியோ அவன் செய்வ தில்லை. காரணம் என்னஎனில், அந்தப் பரம்பொருட்கு மேம்பட்ட ஒன்றோ, ஆணையிடும் ஒன்றோ இல்லையாகலின், அது தன் செயற்கு வேறு யார்க்கும் கணக்குக் காட்ட வேண்டிய அவசியம்இல்லை.

இப்பொருளின் பொருத்தம் திருக்குறள் பா ஒன்றனை யும் அதற்குப் பரிமேலழகர் வரைந்து உள்ள உரைக் குறிப்பையும் உற்று நோக்கத் தெளிவாகும்.

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்து ஒழுக லான்

(குறள் 1073)

"தம்மை நியமிப்பார் இன்மையின் கயவரும், தேவரும் தாம் விரும்புவனவற்றைச் செய்து ஒழுகுவர்."

தமக்குக் கட்டளை இடுபவர் இன்மையால் தேவர்கள் தாம் நினைத்ததைச் செய்தே தீர்வர் என்பதே இதன் பொருள் (பரிமேல் அழகர் உரை).

தேவர்களையே நியமிப்பார் எவரும் இலர் எனின், தேவதேவனும் பரம்பொருளை நியமிப்பார் எவரேனும் உளரோ? இலர் அன்றோ?

எனவே, நாம் காணும் இக்காரணன் "தன்னை நியமிப்பார் எவரும் இல்லாக்" காரணத்தால், தன் செயற்கு (சங்கற்பத்திற்கு) யாருக்கும் விளக்கம் தரும் கடப்பாடு, கட்டுப்பாடு இல்லாதவன் ஆகிறான். எனவே கணக்கும் நீத்த காரணன் என்ற தொடர்க்கு இவ்வாறு பொருள் கொள்வது தவறன்று. தவிரவும், "காரணன்" என்ற சொல்லின் பொருட் செறிவை உயர்த்திக் காட்டுவ

தாகவே அமையும். அதே சமயத்தில் கம்பன் 'நீத்த' என்ற சொல்லை ஆண்டிருக்கும் அருமையையும் நாம் நோக்கத் தவறக்கூடாது.

முதலிரு அடிகளில் இப்படிப் பொதுவாகக் கூறிய கவிஞன் பின்தொடர் இரு அடிகளில் இதே கருத்தினை வேருெரு கோணத்தில் காட்டுகிருன்.

ஒரு பரம்பொருளே

இராமன் பரம்பொருளின் அவதாரம் என்பதுதான் அவன் கொள்கை. ஆனுல் அதனைச் சொல்லும் பொழுது அவன் காலத்தும் அதன் முன்னரும் நெடுங்காலம் மக்கள் மனத்தில் அசையாமல் இடம் பெற்றுவிட்ட ஒன்றனையும் அவனுல் புறக்கணிக்க முடியவில்லை. அதற் காகத் தன் துணிபையும் துறக்க விரும்பவில்லை.

அக்காலத்து மக்கள் தேவர் மூவர் எனவும், முத் தொழிற்கு உரியர் எனவும், அம்மூவரில் காத்தல் தொழில் கைக்கொண்ட கரிய நிறமாலே இராமனுக அவதரித்தான் எனவும் உறுதியாக நம்பினர்.

இக் கருத்தை அடியோடு மறுக்காமல், உடன்பட்ட வனுகவே காட்டிக்கொண்டும், பரம்பொருளே (மூவர்க்கும் முதல்வன்) இராமனுகத் தோன்றி இருக்கிருன் என்ற தன் கொள்கையையும் நிறுவி விடுகிருன்.

அழித்தல் தொழில் மேவிய அரன், படைத்தல் தொழில் கைக்கொண்ட பிரமன், காத்தல் தொழில் கொண்ட விஷ்ணு ஆகிய மூவரும் தாம் ஏந்திய கலன் களான சூலம், திகிரிசங்கம், கரகம் இவற்றைத் துறந்து வாழிடங்களான கயிலையங்கிரி, ஆலிலை, தாமரை மலர் இவற்றை நீத்து ஒருருவினராய் இராமனுகி, அயோத்தி

வந்தார் (மூவரும் ஒருவரே ஆன காரணன் வந்தான்) என்று கூறுகின்றான்.

இவ்வாறு கூறிய போதிலும் ''அடிப்படைக் கொள் கையைத் தளர்த்தி விட்டோமோ?'' என்ற ஐயம் கம்பனி டத்தில் இருப்பதாகத் தெரிகிறது.

ஆகவேதான் காப்பியத்தில் பல இடங்களில், பலர் வாயிலாக, இராமன் இம் முத்தேவரில் எவரும் அல்லன்; அவர்கட்கும் அப்பாலைக்கு அப்பால் ஆன மூலப் பரம் பொருள் எனவே வெளிப்படையாகவே சொல்கிறான்.

''நேதி''

இங்குக் குறிப்பிட்டவாறு அநுமன் வாயிலாகக் கூறிய கம்பன் பிறிதோர் இடத்தில் அதே அநுமன் வாய் மொழியாகவே...

''தேவரும் பிறரும் அல்லன்; திசைக்களிறு அல்லன்; திக்கின்
காவலர் அல்லன்; ஈசன் கைலை அம்கிரியும் அல்லன்;
மூவரும் அல்லன்;..........''

(பிணி வீட்டு படலம் 77)

எனக் குறிப்பிடுகிறான்.

'அல்லன்' என எதிர்மறையாகக் குறிப்பிட்டதனை உடன்பாட்டு முறையில்,

"அனையவன் யார்? என, அறுதி ஆதியேல்,
முனைவரும், அமரரும், மூவர் தேவரும்,
எனையவர் எனையவர் யாவர், யாவையும்,
நினைவு அரும் இருவினை முடிக்க, நின்றுளோன்;''

(பிணி வீட்டு படலம் 75)

என்று குறிப்பிடுகிறான்.

மூவர் தேவராலும் நினைத்துப்பார்க்க முடியாத இருவினை முடிக்க இராமன் தோன்றி இருப்பானேயானால், அவன் நிச்சயமாக அம்முத்தேவரினும் மேம்பட்டவனாகவே இருக்கமுடியும்.

மூவா முதலன்;
மூவர்க்கும் முதலவன்

அநுமன் வாயிலாக இப்படிக் கூறிய கம்பன், நாடிய வீடணன் வாயிலாக, அவன் கும்ப கன்னனிடத்தில் கூறுவதாக...

"மூவர்க்கும் தலைவர் ஆனமூர்த்தியார், அறத்தை முற்றும்
காவற்குப் புகுந்து நின்றார், காகுத்த வேடம் காட்டி!"
(கும்பகருணன் வதைப்படலம் 150)

என அமைப்பான்.

காவற்குப் புகுந்த காகுத்தற் சார்ந்த அநுமன், வீடணன் வாயிலாக இப்படி அமைத்ததனில் அமைதி பெறாது, பகைத்த இருவர் வாயிலாகவும் பரம்பொருள் தன்மையை நிறுவுகிறான்.

எண்ணுறும் ஒருவனைக்
கண்ணுறக் காண்பான்

வில்லாளர் தம்மை எண்ணின் விரற்கு முன் நிற்கும் வீரன், விறலோன், திறலோன் ஆன இந்திரசித்து தான் செய் போரில் பிரம்மாத்திரம் உட்பட்ட பல் படைக் கலன்களும் பயனில ஆதல் கண்டு தன் தந்தை இடத்தில் கூறுவான்:

"ஐய அவ்விராமன்,

"மானிடன் அல்லன்; தொல்லை வானவன்
அல்லன்; மற்றும்
மேல்நிமிர் முனிவன் அல்லன்; வீடணன் மெய்யின்
சொன்ன
யான் எனது எண்ணல் தீர்ந்தார் எண்ணுறும் ஒருவன்
என்றே
.........சேகு அறத் தெரிந்தது அன்றே"
(மாயா சீதைப்படலம் 12)

கூற்றின் ஆற்றலை மாற்றும் திறலன்; வலித்தகை அரக்கன்; ஒன்னார் உயிர் கொள உளது என தான் நினைத்த வல்வாய் வெங்கண் சூலம் தானும், இராமனது உங்காரத்தால் பல்நூறுஉதிர் ஆகி உக்கது கண்டான்; விதிர்த்தான்; வீடணனர் சொல் நினைவுற்றான்.

"சிவனோ? அல்லன்; நான்முகன் அல்லன்; திருமாலாம்
அவனோ? அல்லன்; மெய்வரம் எல்லாம் அடுகின்றான்;
தவனோ என்னின், செய்து முடிக்கும் தரன் அல்லன்;
இவனோதான் அவ் வேத முதற்காரணன்?" என்றான்.
(இராவணன் வதைப்படலம் 134)

இவ்வாறெல்லாம் "மூவருக்கு எல்லாம் முதல்வனாய் ஞான முதற் கொழுந்தாகிய முதல்வன்" உண்மையை வகுத்தும் தொகுத்தும் கூறிய கம்பன், தன் முடிந்த கருத்தை மிகப் பொதுமையாகத் தன் காப்பியத்தின் முதற்படலத்திலேயே கூறிவிடுகிறான்.

கம்பனை ஓரளவில் பயின்றோர்க்கும் தெரிந்திருக்கும் பாடல்:

"கல்லிடைப் பிறந்து, போந்து, கடலிடைக் கலந்த நீத்தம்,
'எல்லையில் மறைகளாலும் இயம்ப அரும்
பொருள் ஈது' என்னத்

தொல்லையில் ஒன்றே ஆகி, துறை தொறும்,
பரந்த சூழ்ச்சிப்
பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும்போல்
பரந்தது அன்றே."
(ஆற்றுப்படலம் 19)

என்பதாகும்

நன்று பயவா வினை விடுதிரோ மற்று?

சமயப் பூசல்கள் பற்றிய தன் கண்டனத்தைப் பொதுவாகத் தெரிவித்த கவிஞன் பின்னர் அதனைக் குறிப்பாக எடுத்துக்காட்டி அத்தகு பூசல்கள், 'ஏதம் பெரிதும் பயப்பன' என உணர்த்தி, 'விடு தக்கன அவை' என எச்சரித்து, காலம் காலமாக மக்கள் கருத்தொடு தோய்ந்து விட்ட கருத்துகளின் பின்னணியில் விளக்கி, இறுதியில் இறைமை ஓர்மையை இவ்வாறாக நிலைநாட்டிவிடுகிறான்.

உண்மையில் கம்பனுடைய முடிந்த முடிபு, அறுதியான முடிபு, அவன் காப்பியத்தில் முதற் படலத்திலேயே இடம் பெற்றுவிட்டபடியால், அதன் பின் அவன் பாடிய அனைத்தும் அந்த உண்மையைப் பல்வேறு கோணங்களிலிருந்தும் வலியுறுத்துவனவாகவே அமைகின்றன.*

---

* இக்கட்டுரை தில்லித் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட சுடர்—''தமிழ் இலக்கியத்தில் சமுதாய மறுமலர்ச்சி மலர், 1983''ல் வெளியானது.

உ. இலக்கியக் கட்டுரை எழுதுவது எப்படி?

எளிதோ தானே வழிமுறை வகுத்தல்?

ஒரு கட்டுரை இலக்கியக் கட்டுரை என்று இனம் கண்டு கொள்வது இலகுவானது. ஆனல் ஓர் இலக்கியக் கட்டுரை எழுதுவது எப்படி என்று வழிமுறை வகுத்துக் கூறுவது இலகுவானது அன்று.

தனக்கென ஒரு பாணி

உண்மையில் எந்தக் கட்டுரை எழுதுவதிலும் ஒவ்வொருவரும் தமக்கே உரிய ஒரு பாணியை நிர்ண யித்துக் கொண்டிருப்பர்.

சிலருக்கு இந்தப் பாணி அவர்களுடைய சிந்தனையின் விளைவாக இருக்கக்கூடும். வேறு சிலருக்கு இந்தப் பாணி இன்னெருவருடைய பாணியைப் பின்பற்றுவதாக அமை யக்கூடும். அப்படிச் செய்யும் பொழுது கூட, கட்டுரை எழுதுபவர்க்குச் சுயமே சிந்திக்கும் ஆற்றல் இருக்குமா யின், அவருடைய பாணி, யாருடைய பாணியை அவர் பின் பற்ற முயன்ருரோ, அந்தப் பாணியாக, முழுமையாக அமைந்துவிடாது. எங்காவது ஓரிடத்திலோ, அல்லது ஏதோ ஒரு தன்மையிலோ, அவருடைய தனித் தன்மை இடம் பெறத்தான் செய்யும். ஆனல் அப்படிச் சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் அற்றவர்கள் வெறுமனே இன்னெரு வருடைய பாணியைப் பின்பற்றிக் கட்டுரை எழுதுவாரா யின், அந்தக் கட்டுரை சுவையற்றதாகத்தான் ஆகிவிடும்.

நியதி நிர்ணயித்தல் கூடுமோ?

ஆகவே ஓர் இலக்கியக் கட்டுரை எழுதுவது எப்படி என்று யாரும் ஒரு பொது நியதியை நிர்ணயித்துவிட முடியாது. கட்டுரையின் ஆசிரியர் தம்முடைய படைப் புக்கு எந்த வழியைப் பின்பற்றினார் என்பதைத்தான் அவர் சொல்ல முடியும்.

இலக்கியம் என்றால் என்ன?

இலக்கியக் கட்டுரை எழுதும் முறையைப் பற்றி ஆராய்வ தற்கு முன்னால் இலக்கியம் என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்வது மிகமிக அவசியமாகும்.

இலக்கியம் என்ற சொல்லே இலக்ஷியம் அல்லது குறிக்கோள் என்பதைத்தான் உணர்த்தும். அத்தகைய குறிக்கோளோ, தனி மனிதனுடையதாக இருப்பினும் சரி, ஒரு சமுதாயத்துடையதாக இருப்பினும் சரி, அது ஓர் உயர்ந்த குறிக்கோளாக இருக்க வேண்டும். காலமாறு பாட்டுக்கு ஏற்ப இந்த குறிக்கோள்கள் மாறுபடக்கூடும். எனினும் மாறுபடாத, நிரந்தரமான சில அம்சங்கள் எத்தகைய குறிக்கோளுக்கும் அடிப்படையானவை.

அறவாழ்வு எது?

தானும் பிறரும் அன்புடனும் இன்பமாக வாழ வேண்டும். வாழ்க்கை இன்பமயமானதாக அமைவதற்கு அழகும் அமைதியும் வேண்டும்; எல்லோரும் இன்புற்று இருக்க வேண்டுமாயின் ஒவ்வொருவருக்கும் ஒரு கட்டுப் பாடு வேண்டும்; தான்தோன்றியாக வாழ்வது பூசலிலும் முரண்பாட்டிலும் முடிந்து, அழிவையே விளைவிக்கும்; என்பன போன்றவையே இத்தகைய அடிப்படைகளில் சில.

இவற்றை நிலை நிறுத்துவதற்காகத்தான் ஒழுக்கம், சீலம், பண்பு முதலியவற்றை ஆதிகாலம் தொட்டு எல்லோரும் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள்.

இத்தகைய வாழ்வு அறவாழ்வு என்று கூறப்பட்டது. இத்தகைய அறவாழ்வின் கூறுகளோ எண்ணிறந்தவை. ஒரு குழந்தை சிசுவாகப் பிறந்ததிலிருந்து, வளர்ந்து, வாழ்ந்து, மரணிக்கும் வரையில் அது வாழவேண்டிய வழியை அறம் வகுக்கிறது.

இது தனி அறமாக இருப்பினும் சரி, பொது அறமாக இருப்பினும் சரி, இந்த அறத்தின் தண்டவாளத்தில்தான் வாழ்க்கை என்ற வண்டி ஓடவேண்டும் என்பது அடிப்படை.

அறநூல்—காப்பியம்

இவற்றை எல்லாம் எடுத்து விளக்குவது இலக்கியமே ஆகும். வெறும் சூத்திர முறையில் இந்த அறம் எடுத்துக் கூறப்படுமாயின் அது ஓர் அறநூலாக மாத்திரமே அமையும். இதற்கு மாறாகச் சில அல்லது பல பாத்திரங்களைப் படைத்து, அந்த பாத்திரங்கள் பல்வேறுபட்ட சூழ்நிலைகளில் எப்படி இயங்கின அல்லது இயங்கி இருக்க வேண்டும் என்று இந்த அறத்தை விளக்க முயல்வது இலக்கியமாகும்.

உள்ளன—நல்லன—இல்லன

இப்படி அமையும் இலக்கியம், பாத்திரங்கள், கதை நிகழ்ச்சிகள் ஆகியவை சம்பந்தப்பட்டவரை முழுக்க முழுக்க கற்பனையாக இருக்கக்கூடும்; அல்லது உண்மையாக நடந்த ஒரு நிகழ்ச்சியின் பின்னணியில் வரிக்கப்பட்டதாக இருக்கக்கூடும்,

எப்படி இருப்பினும் குறிக்கோள் உன்னதமான தாகையால் அதை அடிப்படையாகக் கொண்ட இலக்கிய மும் உயர்வு பெற்று விடுகிறது. இந்த உயர்வுக்குக் காரணமாக இலக்கிய கர்த்தாவினுடைய ஆழ்ந்த உலகியல் அறிவு, மனித இயற்கை பற்றிய முழுமையான ஞானம், சொற்களை அழகாகவும், பொருத்தமாகவும் பயிலும் திறம், அப்படிப் பயிலும் போதே சொல்லாட்சி யிலும், பொருட் செறிவிலும் ஒளி வீசும் பண்பு, இயற்கை யைக் கூர்ந்து நோக்கி அதிலிருந்து பெற்ற அனுபவம், முதலியவை அமையும்.

இலக்கியக் கட்டுரை இலக வேண்டிய முறை

ஓர் இலக்கியக் கட்டுரையும் கிட்டத்தட்ட இத்தகைய தாகவே இருக்கவேண்டும். முதன் முதலாக இந்தக் கட்டுரை மூலம் படிப்பவர்களுக்கு எதை உணர்த்த விரும்புகிறோம் என்பதை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

இலக்கியங்களின் பொதுத் தன்மை கட்டுரையின் கருப்பொருளாக இருக்கலாம்; அல்லது ஒரு குறிப்பிட்ட இலக்கியத்தின் ஓர் அம்சம் கட்டுரையின் கருப்பொருளாக இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட இலக்கியத்தின் அம்சம் கட்டுரையின் கருப்பொருளாக இருக்கும் பொழுது, கட்டுரை ஆசிரியர் பலவற்றைக் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். அந்த இலக்கியக் கர்த்தாவினுடைய குறிக்கோள் என்ன என்பதை எந்தக் கட்டத்திலும் மறந்துவிடக் கூடாது. அந்தக் குறிக்கோளை உணர்த்து வதற்கு என்ன என்ன உத்திகளை அவன் கையாளுகிறான் என்பதையும் மனத்தில் இருத்திக்கொள்ளவேண்டும்.

சொல்லழகு, பொருட்செறிவு, உவமை, இயற்கை வருணனை, மனித இயற்கையின் முரண்பாடுகள், நுண்ணிய

உணர்வுகள், நெகிழவைக்கும் நிகழ்ச்சிகள் முதலியவை இந்த உத்தியின் பாற்படும். இந்த உத்தியின் உயர்வுக்கு ஏற்ப இலக்கியத்தினுடைய அங்கம் சிறப்புப் பெறும்.

ஒரு பொருள்—ஒப்பில் பொருள்—உள்ளுறை

எனவே ஒரு குறிப்பிட்ட இலக்கியத்தின் ஓர் அம்சத்தைக் கட்டுரையின் கருப்பொருளாக எடுத்துக்கொள்ளும் போது இவை அனைத்தையும் விளக்குவதற்கு வாய்ப்பிருக்க வேண்டும். அப்படி விளக்கும் போது இலக்கிய கர்த்தாவினுடைய குறிக்கோளுக்கு ஓர் எள் பகவேனும் பங்கம் வராமல் பார்த்துக் கொள்வதோடு, அந்த இலக்கியத்தின் தரமோ, அதில் இடம்பெறும் பாத்திரங்களின் பண்போ, அவற்றைப் படைத்தவனுடைய நோக்கத்துக்கு மாறுபடாமல் இருக்குமாறும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

இலக்கிய கர்த்தாவினுடைய சொல்லாட்சியிலிருந்து புதிய பொருள்கள் ஒருவனுக்குத் தோன்றக்கூடும். அப்படித் தோன்றும் புதிய பொருள்களை இலக்கிய கர்த்தாவின் திறமையைப் பெருமைப் படுத்துகிறோம் என்ற எண்ணத்தில் விளக்கும்போது, அந்த இலக்கிய கர்த்தாவினுடைய நோக்கத்துக்கு ஊறு உண்டாகிவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

தேர்ந்து தெளிந்த உட்கிடை

ஆக கட்டுரையின் கருப்பொருள் என்பது முதலில் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்படவேண்டியது. இரண்டாவதாக, அந்தக் கருப்பொருளை அணுகும் முறையை நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். மூன்றாவதாக, இந்த முறையில், தான் எடுத்துக்கொண்ட கருப்பொருளைத் தெளிவாக விளக்குவதாக இருக்கவேண்டும். நான்காவதாக, இதற்

காகத் தேர்ந்தெடுக்கப்படும் சொல்லாட்சி அந்தக் கருப் பொருள் தன்மைக்கு இயைந்ததாக இருக்கவேண்டும். ஐந்தாவதாக, இத்தகைய கட்டுரைகளுக்கு அவற்றி னுடைய நோக்கத்தை விளக்கும் ஓர் ஆரம்பமும் முடிவும் தெளிவாக எடுத்துக்காட்டப் பெற வேணடும்.

இத்தகைய சிறப்பு அம்சங்கள் ஒரு கட்டுரையில் அமையுமானல் அந்தக் கட்டுரையே ஓர் இலக்கியமாக ஆகிவிடும்.

எடுத்துக்காட்டு

இப்பின்னணியில், கம்பனுடைய காப்பியத்தில், ஓர் அம்சத்தை எப்படி அணுகலாம் என்பதை இப்பொழுது பார்க்கலாம்.

இராமனுக்கு முடி சூட்டுவது என்று தசரதன் முடிவு செய்துவிட்டான்; இதை அறிந்த மந்தரை கைகேயியின் மனத்தைக் கலக்கி, இராமன் காடு செல்லவேண்டும் என்றும், பரதன் நாடாள வேண்டும் என்றும், தசரதனிட மிருந்து இரு வரங்களைக் கேட்கும்படிச் செய்து விடு கிருள்.

தசரதன் எவ்வளவோ மன்ருடிக் கேட்டுக் கொண்டும் கைகேயி பிடிவாதமாக இவ்விரு வரங்களையும் கேட்க, அவற்றைத் தந்து விட்டு, தசரதன் மயக்கமுற்று விழுந்து விடுகிருன்.

இந்த நிலையில் சுமந்திரனை அனுப்பி இராமனை அழைத்து வருமாறு கைகேயி சொல்கிருள். அப்படி வந்து, தன் முன் தோன்றிய இராமனிடத்து, அவனுக்கு மன்னன் இட்ட கட்டளை என்று கைகேயி கூறுவதாகக் கம்பன் பாடி இருக்கும் பாடல் எல்லோரும் அறிந்ததே,

"ஆழி சூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீ போய்
தாழ் இருஞ் சடைகள் தாங்கி, தாங்க அரும் தவம் மேற்கொண்டு,
பூழி வெங்கானம் நண்ணி, புண்ணியத் துறைகள் ஆடி,
ஏழ் இரண்டு ஆண்டின் வா" என்று இயம்பினன் அரசன், என்ருள்

(கைகேயி சூழ்வினைப் படலம் 111)

இந்தச் சொற்கள் கைகேயியின் வாயிலிருந்து வந்ததாகக் கம்பன், இந்தப் பாடலில் கூறுகிருன்.

இதற்கு அடுத்து, கவிக் கூற்ருக இரண்டு பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன. அவற்றில் முதலாவதாக அமைந்திருப்பது,

இப்பொழுது எம்மனோரால் இயம்புதற்கு எளிதே? யாரும்
செப்பரும் குணத்து இராமன் திருமுகச் செவ்வி நோக்கின்,
ஒப்பதே முன்பு பின்பு அவ்வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது, அலர்ந்த செந்தா மரையினை வென்றதம்மா!

(கைகேயி சூழ்வினைப் படலம் 112)

என்பது ஆகும்.

இப்பாடல் கட்டுரையின் கருப்பொருளாக அமைந்திருப்பதாக வைத்துக் கொள்ளலாம்.

அப்படியானல், இப்பாடலை எப்படி அணுகவேண்டும் என்பதைப் பார்க்கவேண்டும்.

அணுகு முறை

பாடலின் கருப்பொருள் தெளிவானது. கைகேயி சொன்னவற்றைக் கேட்ட இராமனுடைய முகம் எப்படி இருந்தது என்பதைக் கவிஞன் கூற முயல்கிருன்.

அது அலர்ந்த செந்தாமரையினை வென்றது என்று கூறுவதோடு அல்லாமல், அது அப்பொழுது அப்படி இருந்ததை, இப்பொழுது எந்தக் கவிஞனாலும் எப்படி எடுத்துக் கூறமுடியும் என்ற இயலாமையையும் தெரிவித்து விடுகிறான்.

பூத்த உவகை

இக் கட்டுரைக்குக் கருப்பொருள் ஆக இப் பாடலைப் பொருத்திக் கொள்வதில் பல குறிக்கோள்கள் அமைந்திருப்பினும், மிக முக்கியமான குறிக்கோள் தனக்கு வாக்களிக்கப்பட்ட அரசு தன் தம்பியாகிய பரதனுக்குக் கொடுக்கப்பட, தான் காடேக வேண்டும் என்று மன்னன் கட்டளை இட்டிருக்கிறான் என்று கைகேயி சொல்லக் கேட்ட இராமன் உள்ளத்தில், கடுகளவும் வருத்தமோ சினமோ இல்லாமல் மகிழ்ச்சியே பொங்கிற்று என்பது தான்.

விளக்க முயற்சிகள்

இந்தக் கருப்பொருளை விளக்க முயலும்போது கவிச் சக்கரவர்த்தியினுடைய திறமையையும் உடன் விளக்க முயல்கிறோம்.

இந்த அம்சத்தைப் பார்ப்பதற்கு முன்னால், ஒன்றை நன்றாக நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும். ஒரு கதையில் பல பாத்திரங்கள் இடம் பெறும் என்றாலும், எல்லாப் பாத்திரங்களும் ஒருவரை ஒருவர் சந்தித்து உரையாடினர் என்று சொல்லிவிட முடியாது.

அது போலவே, ஒரு கதையில் பல கட்டங்கள் வரும். பல நிகழ்ச்சிகள் இடம் பெறும். இவற்றில் எல்லாம் கதையில் வரும் எல்லாப் பாத்திரங்களும் இடம் பெற்றன என்று சொல்ல முடியாது.

அறிவித்தால் அன்றி அறிதல் ஆகுமோ?

கணவனும், மனைவியும் தங்களுக்கு இடையே இரகசிய மாகத் தங்கள் அறையில் பேசிக் கொண்டதை, மற்றவர் களால் கேட்க முடியாது. அவர்கள், தாங்கள் என்ன பேசிக் கொண்டோம் என்று பிறரிடம் சொல்கின்ற அளவுக்குத் தான் பிறருக்குத் தெரியும்.

அதுபோலவே, ஒரு கதாபாத்திரத்தின் ஒரு குறிப் பிட்ட செயலுக்கு முன்னல், அந்தப் பாத்திரத்தின் உள்ளத்தில் என்னென்ன உணர்ச்சிகள் உண்டாயின, அவ்வுணர்ச்சிகள் மாறுபட்டவையாகவோ, முரண் பாடானவை ஆகவோ இருந்தனவா, முடிவில் எந்த உணர்ச்சி மேலோங்கியது என்பது வேறு யாருக்கும் தெரியக்கூடியது அன்று.

எல்லாம் அவனே; இயக்குவோன் அவனே

ஆனல் கதாசிரியனுக்கோ எல்லாம் தெரியும்; பாத் திரங்கள் அனைத்துமே அவனல் படைக்கப்படுபவைதாம்; அவர்கள் மூலமாக அவன்தான் செயல்படுகிருன்; அவர் கள் உள்ளத்திலும் அவன்தான் உணர்ச்சிகளை எழுப்பு கிருன்.

எனவே கதையின் தொடக்கத்தில் இருந்து, முடிவு வரையில் எல்லாம் அவனுகவே இருக்கிருன். ஆகையால், அவனைமீறி யாரும் எதையும் சிந்திக்கவோ, எந்தச் செயலில் ஈடுபடவுமோ முடியாது.

இதனை நினைவில் இருத்திக் கொண்டு மேலே தொடர்வோம்.

இராமனிடத்தில் கைகேயி கூறியது எப்பொழுதோ நடந்தது. பன்னூறு ஆண்டுகளுக்குப் பின்னல் கம்பன்

அதைப் பாடுகிறுன். ஆகையால் கைகேயியினுடைய வாசகத்தைக் கேட்ட இராமனுடைய முகம் எப்படி இருந்தது என்பதைக் கம்பன் பார்த்திருக்க முடியாது.

ஆனுல் கம்பன்தான் அந்தக் கதையைச் சொல்கிற வன். ஆகையால் அவனின்றிக் கதையே கிடையாது.

(இராமாயணம் முதலில் வால்மீகியால் பாடப் பெற்றது; அந்தக் கதையைப் பின்னுல் கம்பன் தமிழில் பாடினுன் என்பதனுல், இந்த அடிப்படையில் வேறுபாடு உண்டாவதற்கு இடமில்லே. இராம காதையைக் கம்பன் தனியாக முதன் முதலாகவே பாடினுன் என்று வைத்துக் கொண்டு கருத்தினை விளக்கப்போவதிலும் தவறில்லே.)

சொற் கிடந்தவாறு

இங்கு நாம் காணும் பாடலில் சில சொற்கள் விளக்கத் துக்கு உரியவை. பாடலின் முதலடியில் 'இப்பொழுது' என்ற சொல் இடம் பெற்றிருக்கிறது. 'இப்பொழுது' என்ற சொல்லுக்குக் கம்பன் "இந்தப் பாட்டைப் பாடு கின்ற வேளே" என்று பொருள் கொடுப்பாரும் உளர். ஆனுல் அந்தப் பொருள் சிறக்காது என்பது தெளிவு.

இப்பொழுது, எப்பொழுது?

சில நிகழ்ச்சிகளேத் தொடர்ச்சியாகக் கூறிக் கொண்டு வரும்பொழுது, 'இப்பொழுது' என்ற சொல் ஆளப் பெறுமானுல், இதற்குச் சற்று முன்னுல் கூறப்பட்ட நிகழ்ச்சி முடிவடைந்த வேளே என்பதுதான் பொருள்.

ஆகையால் இந்தப் பாடலின் முதலடியில் இருக்கிற 'இப்பொழுது' என்ற சொல்லுக்கு கைகேயி இராமனிடத்தில் சொல்லி முடித்த வேளே என்றுதான் பொருள் கொள்ள வேண்டும்.

கதையைச் சொல்பவனாகிய கம்பன், இராமனிடம் கைகேயி பேசும்போது அங்கேயே இருப்பதனால் அந்தப் பேச்சு முடிந்தவுடன் எதைக் கண்டான் என்று கூறப் போந்தவன் இப்பொழுது என்று சொல்கிறான்.

காப்பியத்தைப் படிக்கின்ற நாம்கூட, இப்பொழுது என்ற சொல்லுக்கு இராமனிடத்தில் கைகேயி சொல்லி முடித்த உடன் என்பதுதான் பொருள் என உணர்வோம்.

அப்பொழுது எப்பொழுது?

பாடலின் நாலாவது அடியில் "அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா!" என்று கவிஞன் கூறுகிறான்.

அப்படி வென்றது இராமனது திருமுகச் செவ்வி. இந்த அடியிலே இடம் பெற்றிருக்கும் அப்பொழுது என்ற சொல்லை முதலடியில் இடம் பெற்றிருக்கும் இப்பொழுது என்ற சொல்லோடு இணைத்துப் பார்த்தால் பொருளற்ற தாகிவிடும்; சொல்லின் அமைப்பும் ஆட்சியும் அப்படிப் பார்க்கத் தூண்டினாலும், அப்படிப் பார்ப்பதனால் பொருள் சிறக்காது என்பர் சிலர்.

அத்தகையவர்களுடைய கருத்தில் "அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை" என்று சேர்த்துப் பார்க்க வேண்டும்.

மலர்ந்த செல்வி மாறிப் போகும்

எந்த மலரும் அலர்கின்ற பொழுதில் அழகிலும் வனப்பிலும் உச்சத்தில் இருக்கும். காலம் செல்லச் செல்ல அந்த அழகும் வனப்பும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து விடும். ஆகவே இராமனுடைய முகம் வென்றது, எதைத் தெரியுமா? 'அப்பொழுதுதான் அலர்ந்த செந்தாமரையினை', என்பது அவர்களுடைய விளக்கம்.

இறப்பு-நிகழ்வு-எதிர்வு

வேறு சிலர் நான்காம் அடியில் இடம் பெற்றிருக்கும் அப்பொழுது என்ற சொல்லே மூன்றும் அடியில் இடம் பெற்றிருக்கும் முன்பு, பின்பு என்ற சொற்களோடு ஒப்பு நோக்கி, நான்காம் அடியில் இடம் பெற்றிருக்கும் அப்பொழுது என்ற சொல்லுக்கு, முதலடியில் இடம் பெற் றிருக்கும் இப்பொழுது என்ற சொல்லின் பொருளேயே கொடுத்து, மூன்று கால கட்டங்களைக் கருத்தில் கொள் கிறுர்கள்.

முன்பு, இப்பொழுது, பின்பு, என்பவை தாம் அந்த மூன்று கால கட்டங்கள். அதாவது, கைகேயியின் வாசகத்தை இராமன் கேட்பதற்கு முன்பு, அந்த வாசகத்தை இராமன் கேட்ட பொழுது, அந்த வாசகத்தை இராமன் கேட்ட பின்பு.

இப்படிப் பொருள் கொள்பவர்களுக்குப் பெருமள வில் துணேயாக இருப்பது மூன்றும் அடியில் இடம் பெற்றிருக்கும் முன்பு, பின்பு என்ற சொற்கள்.

இந்தச் சொற்களே வைத்துக்கொண்டுதான் இந்தப் பாடலில் மூன்று கால கட்டங்களைக் கம்பன் குறிப்பிடுவதாகப் பொருள் கொள்கிறுர்கள்.

எது முன்? எது பின்? எதற்கு?

முன்பு, பின்பு என்று இரு காலகட்டங்கள் குறிப்பிடப் பெறுமாளுல் இரண்டுக்கும் இடையில் ஒரு கால கட்டம் இருந்தே ஆகவேண்டும். ஏனெனில் 'முன்பு' என்னும் போதே, எதற்கு முன்பு என்ற கேள்வியும், 'பின்பு' எனும் போதே எதற்குப் பின்பு என்ற கேள்வியும் இயற்கையாகவே தோன்றச் செய்யும்.

பிரித்துப் பொருள் காண்பர்

இந்தக் கேள்விகளுக்குப் பதில் இறுக்கும் வகையில் தான், நான்காம் அடியில் காணப்படும் 'அப்பொழுது' என்ற சொல் அவர்களுக்கு உதவுகிறது. இந்த 'அப்பொழுது' என்ற சொல்லே இவ்வாறு உபயோகிப்பதனுல், 'அப்பொழுது' என்ற சொல்லுக்கு அடுத்து வரும் 'அலர்ந்த' என்ற சொல்லிலிருந்து பிரித்தே பார்க்க வேண்டும்.

இப்படிப் பார்க்கும்போது, கம்பன் 'அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை' இராமனுடைய முகச் செவ்விக்கு ஒப்பு நோக்காமல் 'அலர்ந்த செந்தாமரையினையே' ஒப்பு நோக்கினுன் என்பது பொருளாகும்.

இப்படி மூன்று காலகட்டங்களைக் கொள்பவர்களுக்கு நான்காம் அடியில் இருக்கும் அப்பொழுது என்ற சொல் கைகேயியின் வாசகத்தை இராமன் உணரக் கேட்ட மாத்திரத்தையே குறிக்கும். அதாவது ஒரு மிகக் குறுகிய கால கட்டத்தையே அது குறிக்கும்.

வென்றது; மலர்ச்சி வென்றது

பாடலில் ஒப்பதே, வென்றது என்ற சொற்கள் இடம் பெற்றிருப்பதால் ஒத்த காலகட்டம் ஒன்று இருக்க வேண்டும்; வென்ற காலகட்டம் ஒன்று இருக்க வேண்டும் என்பது தெளிவு.

ஆனுல் கைகேயின் வாசகத்தைக் கேட்பதற்கு முன்பு அலர்ந்த செந்தாமரையினை ஒத்திருந்தது; மாருக, அந்த வாசகத்தைக் கேட்ட மாத்திரத்தில் இராமனின் திருமுகச் செவ்வி அலர்ந்த செந்தாமரையினை வென்று

விட்டது என்று பொருள் கொள்வதில் நயம் சிறக்கிறது என்பதில் ஐயமே இல்லை.

எனினும், கைகேயியின் வாசகத்தைக் கேட்ட பின்பு, இராமனுடைய திருமுகச் செவ்வி, மீண்டும், அலர்ந்த செந்தாமரையினை ஒத்ததாக ஆயிற்று, என்று இந்தப் பாடலில், இந்த இடத்தில், கம்பன் சொல்வது பொருத்தமா? என்ற கேள்வி பிறக்கவே செய்கிறது.

உடன் இருந்து கண்டான் உளன்

அப்படியானால், கம்பன் சம்பந்தப் பட்டவரையில், இந்த மூன்று கால கட்டங்களும் மிக விரைவாகச் செல்லுகின்ற கால கட்டங்கள். அவன் அங்கேயே இருப்பதால் கைகேயியைக் காணவந்தபோது இராமனுடைய முகம் எப்படி இருந்தது என்பதையும், கைகேயி இந்த உரையைச் சொன்னபொழுது இராமனுடைய முகம் எப்படி இருந்தது என்பதையும், அவள் சொல்லி முடித்த பிறகு அவன் முகம் எப்படி இருந்தது என்பதையும் அவன் கண்டவன் ஆகையால், மூன்று கால கட்டத்தையும் இந்த ஒரே பாடலில் அவன் எடுத்துக் காட்டிவிட்டான் என்று இவர்கள் சொல்லக் கூடும்

இத்தகைய கூற்றுக்கு ஆதாரமாகச் சுந்தர காண்டத்திலிருந்து ஒரு பாடலை இவர்கள் எடுத்துக் காட்டுவது உண்டு.

நினைவில் நின்றவை

அசோக வனத்தில் சிறையிருந்த சீதை, முந்தைய நிகழ்ச்சிகள் சிலவற்றை நினைவுக்குக் கொண்டு வருகிறாள். அப்படி நினைத்துக் கொண்டு வந்த காட்சிகளில் ஒன்று 'அரசை ஏற்றுக்கொள் என்றபோதும்' பின்னர் 'அரசைத்

துறந்து செல் என்றபோதும் இராமனுடைய முகம் எப்படி இருந்தது என்பதாகும். இதனைக் கம்பன்,

'மெய்த் திருப்பதம் மேவு' என்ற போதினும்,
'இத் திருத் துறந்து ஏகு' என்ற போதினும்,
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை,
ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்.

(காட்சிப் படலம் 20)

என்று பாடுவான்.

ஈண்டும் உளவால் இரு குறிப்புகளே

இந்தப் பாடலில் காணத்தக்கது இரண்டு குறிப்புகள்.

ஒன்று: 'அலர்ந்த செந்தாமரை' என்று முந்தின பாடலில் கம்பன் ஆண்டதற்குப் பதிலாக இங்கே 'சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை' என்ற சொற்களை ஆளுகிறான். இதன் தனித்தன்மை என்ன என்றால், இயற்கையில் நாம் காணும் செந்தாமரை அலர்ந்த அப்பொழுது அழகிலும், வனப்பிலும் உயர்ந்து நின்று, நேரம் செல்லச் செல்ல காய்ந்து உலர்ந்துவிடும்.

ஆனால், அலர்ந்த செந்தாமரை ஒன்று சித்திரத்தில் வரையப்படுமானால், அந்தச் செந்தாமரை, அந்தச் சித்திரம் இருக்கும்வரையில் மாறுபாடு இல்லாமல் ஒரே நிலையிலேயே இருக்கும்.

இச் சொற்களைக் கம்பன் இங்கே ஆண்டிருப்பதற்குக் காரணம் என்னவென்றால், இராமனுடைய மனம் என்றும் சமநிலையிலேயே இருந்தது என்ற உண்மைதான்.

மாறிலா மலர்ச்சியில்...

அலர்ந்த செந்தாமரையினை ஒத்த முகத்தினன் அவன். அந்த முகநிலை 'அரசினை ஏற்றுக் கொள்' என்று தசரதன் கேட்ட பொழுது, மகிழ்ச்சியால் புதிய ஒளியைப்

பெறவுமில்லை; அரசினைத் துறந்து 'காட்டுக்கு ஏகு' என்ற போது ஏமாற்றத்தினாலோ, வருத்தத்தினாலோ அந்த முக நிலை வெதும்பவோ, ஒளியில் குறையவோ இல்லை என்பது தான். அதாவது இரண்டு நிலையிலும் அவனுடைய திருமுகம் சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரையை ஒத்தே இருந்தது.

இரண்டாம் குறிப்பு

இந்தப் பாடலின் இரண்டாவது குறிப்பு: அது இரண்டு கால கட்டங்களையே எடுத்துக் காட்டுவதாகும். இராமனுக்கு முடிசூட்டவேண்டும் என்று தசரதன் முடிவு செய்த பிறகு இராமன் சீதையிடம் சென்றிருக்கிறான். ஆகையால் அவன் முகம் எப்படி இருந்தது என்பதை அவள் அப்பொழுது பார்த்திருக்கிறாள். பின்னர் கைகேயியின் வாசகத்தைக் கேட்ட பிறகு வனம் செல்வது என்று முடிவு செய்த இராமன் சீதையிடம் திரும்பவும் வருகிறான். அப் பொழுதும் அவன் முகத்தை சீதை பார்த்திருக்கிறாள். இந்த இரு காலகட்டத்திலும் இராமனுடைய முகம் எப்படி இருந்தது என்று, அசோகவனத்தில் இருந்த சீதை நினைத்துப் பார்ப்பதையே இந்தப் பாடல் குறிக்கிறது.

இந்த இரண்டு கட்டத்திலும் அலர்ந்த செந்தாமரையினை இராமனுடைய முகம் ஒத்திருந்ததாகச் சீதை எண்ணிப் பார்ப்பதை முன்னால் நாம் பார்த்த பாடலில் உள்ள "ஒப்பதே முன்பு பின்பு..." என்ற சொற்களோடு இவர்கள் பிணைத்துப் பார்த்துப் பொருள் கூறுகிறார்கள்.

இதில் இன்னொரு அம்சத்தையும் மறந்துவிடக் கூடாது. தசரதனுடைய கட்டளை என்று இராமனிடம் கைகேயி சொன்னபொழுது, அவனுடைய முகத்தைப் பார்ப்பதற்குச் சீதை அந்த இடத்தில் இல்லை; ஆகையால்

அது எப்படி இருந்தது என்பது அவளுக்குத் தெரியாது. ஆனால் அந்த முக நிலையை இருவர்தான் பார்த்திருக்க முடியும். ஒருத்தி கைகேயி. அவளுடைய மன நிலையில் இராமனுடைய முகத்தை எந்த உள்நோக்கோடு பார்த்திருப்பாள் என்பதை நாம் கற்பனை செய்து கொள்ளலாம். மற்றவனோ கம்பன். இராமனோ கம்பனுடைய காப்பியத் தலைவன்; நடையின் நின்று உயர் நாயகனின் கதையைத்தான் காப்பியமாகப் பாடுகிறான்.

விரை மலர்த் தாமரை வென்ற முகத்தினன்

எனவே, இராமனுடைய முகம் கைகேயியினுடைய வாசகத்தைக் கேட்டபோது, 'அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது' என்று அவனால்தான் சொல்ல முடியும். எப்பொழுதுமே, அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை ஒத்திருக்கும் முகம், புதியதோர் மகிழ்ச்சியை வெளிப்படுத்திற்று என்று சொல்ல வேண்டுமானால், அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை அந்த முகம் வென்றது என்றுதான் சொல்ல முடியும். அதைத்தான் கம்பன் இங்கே சொல்கிறான்.

மூன்று? இரண்டா?

ஆனால், நாம் கூர்ந்து நோக்கவேண்டுவது வேறொன்றும் இருக்கிறது. அதாவது, கம்பன் இந்தப் பாடலில் மூன்று கால கட்டங்களைக் குறிப்பிடுகிறானா? அல்லது இரண்டு கால கட்டங்களைத்தான் குறிப்பிடுகிறானா? என்பதுதான் அது. மூன்று கால கட்டங்களைக் குறிப்பிடுவதாகக் கொள்வதாகஇருந்தால், கைகேயியின் வாசகத்தைக் கேட்டதற்குப் பின்னால், இராமனுடைய முகம் அதனைக் கேட்பதற்கு முன் இருந்த நிலைக்கு மாறிற்று, என்று இந்தப் பாடலிலேயே சொல்ல வேண்டுவது அவசியமா? என்பது முதற் கேள்வி.

கைகேயியின் வாசகத்தைக் கேட்ட பிறகு, அவளுக்கு இராமன் என்ன பதில் சொன்னான் என்பதைக் கூறுவதற்கு முன்னால், கவிக் கூற்றாகக் கம்பன் இன்னொரு பாடலையும் பாடி இருக்கிறான்.

அதுதான்,

தெருள் உடைமனத்து மன்னன்
ஏவலின் திறம்ப அஞ்சி
இருள் உடை உலகம் தாங்கும்
இன்னலுக்கு இயைந்து நின்றான்.
உருள் உடைச் சகடம் பூண்ட,
உடையவன் உய்த்த கார் ஏறு
அருள் உடை ஒருவன் நீக்க,
அப்பிணி அவிழ்த்தது ஒத்தான்.
(கைகேயி சூழ்வினைப் படலம் 113)

என்பது.

இந்தப் பாடலுக்கு முன்னாலேயே இராமனுடைய முகம், மூன்றாவது கட்டத்தில் எப்படி இருந்தது என்று கவி எடுத்துக் காட்டவேண்டிய அவசியம் இல்லை, என்பதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

இது மன் ஓர் பெருங்குறை

இதையும் விட வேறொரு பெருங்குறை இருப்பதையும் காணலாம். கம்பனுடைய பாட்டில் மூன்று காலக் கட்டங்களிலும் இராமனுடைய முகம் எப்படி இருந்தது என்பது குறிப்பிடப் படுகிறது என்று கொண்டால், இரண்டாவது கால கட்டத்திலிருந்து மூன்றாவது கால கட்டத்துக்கு இராமனுடைய முகத்தோற்றம் வெகு விரைவாக மாறிவிட்டது என்று ஏற்படும்.

அதாவது 'அலர்ந்த செந்தாமரையினை வென்ற இராமனது முகத்தோற்றம், மின்னலைப் போலத் தோன்றி உடனேயே மறைந்து, அலர்ந்த செந்தாமரையினை ஒத்த நிலைக்கு வந்துவிட்டது' என்பதாகும்.

அப்படிக் கொள்வது இரண்டாவது கால கட்டத்தில் இராமனுடைய முகத்தோற்றம் கொண்டிருந்த பொலிவினைப் பெருத்த அளவில் குறைவு படுத்தியது ஆக ஆகும்.

அதாவது அலர்ந்த செந்தாமரையினை வென்றிருந்த இராமனுடைய முகத்தோற்றம் ஒரு கணம் தான் அப்படி இருந்தது, மறுகணத்தில் அது மாறி அலர்ந்த செந்தாமரையை ஒத்தாக ஆகிவிட்டது என்பதாம்.

இன்னொன்றையும் கருத்தில் கொண்டால், இக் குறை எவ்வளவு பெரிய குறை என்பது தெளிவாகும். முதற்கால கட்டத்திலிருந்து இரண்டாவது கால கட்டத்துக்கு இராமனுடைய முகத்தோற்றம் மாறினது, கைகேயியின் எதிரில், அவள் வாசகத்தைக் கேட்ட கணத்தில். இந்த மாற்றம் காப்பிய தலைவனான இராமனுக்குப் பெருமை சேர்க்கக் கூடியது.

அடுத்த கணத்திலேயே, கைகேயியின் முன்னாலேயே, இரண்டாவது கால கட்டத்திலிருந்து மூன்றாவது கால கட்டத்துக்கு இராமனுடைய முகத் தோற்றம் மாறிவிட்டதாக—அதாவது அலர்ந்த செந்தாமரையினை வென்ற நிலையிலிருந்து அலர்ந்த செந்தாமரையை ஒத்த நிலைக்கு மாறிவிட்டதாக—கொண்டால், இராமனுடைய பெருமை பெருத்த அளவில் குறைவுபடும்.

காப்பிய கர்த்தா நிச்சயமாகத் தன்னுடைய காப்பியத் தலைவனை இந்த நிலைக்கு உள்ளாக்க ஒருக்காலும் உடன் படான்.

மூன்ரே? அன்று—இரண்டே!

ஆகையால் கம்பனுடைய, முதலில் எடுத்துக்காட்டப் பட்ட பாடல், இரண்டு காலகட்டங்களேயே தான் குறிக் கின்றது என்று கொள்வதுதான் கவிஞனுடைய திறமைக் குச் சான்று பகரும். காப்பியத்தலைவனுடைய பண்புக்கும், பெருமைக்கும் உறுதி அளிக்கும். இலக்கியத்தின் நோக்கத் துக்கு ஊன்றுகோலாக நிற்கும்.

தன்னுடைய பாயிரத்திலேயே இராமனைக் கம்பன் "நடையின் நின்று உயர் நாயகன்" என்று குறிப்பிடு கிருன். அவனுடைய இந்தக் கூற்றுக்கு இந்த கவிக்கூற்றில் மூன்று கால கட்டங்களேக் (கம்பன்) குறிக்கிருன் என்று கொள்வது, ஊறு விளேப்பதாகும்.

இதனை வேருெரு கோணத்திலிருந்தும் அணுகலாம்.

கைகேயியின் வாசகத்தைக் கேட்ட இராமனின் முகத் தோற்றம் அலர்ந்த செந்தாமரையினை வென்ற தற்குக் காரணம் என்ன என்பதனை நம்மையே நாம் கேட்டுக் கொள்வோம்.

இராம்னிடம் கைகேயி சொன்ன வாசகங்கள் இரண்டு.

ஒன்று : பரதன் அரசாளவேண்டும் என்பது.

இரண்டு : இராமன் பதினுன்கு ஆண்டுகள் காட்டுக் குச் செல்ல வேண்டும் என்பது.

இந்த வரிசையிலேயே இராமனும் பதிலிறுக்கிருன்.

'மன்னவன் பணி அன்ருகின்
நும்பணி மறுப் பனே? என்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்றது அன்ரே?

என் இனி உறுதி அப்பால்?
இப்பணி தலைமேற் கொண்டேன்
மின் ஒளிர் கானம் இன்றே
போகின்றேன் விடையும் கொண்டேன்
(கைகேயி சூழ்வினைப் படலம் 114)

இந்தப் பதிலிலிருந்து அன்று அலர்ந்த செந்தாமரையினை இராமனுடைய முகத்தோற்றம் வென்றதற்கு இரண்டு காரணங்கள் அமைந்தன என்று சொல்ல முடியும்.

வென்றமை விளைத்த இரு காரணங்கள்

ஒன்று: தனக்குப் பதிலாக பரதன் அரசு ஏற்பது. பரதனைப்பற்றி இராமனுக்கு மிக உயர்ந்த எண்ணம் உண்டு. அதையே கவிஞனும் பிரதிபலிப்பான்.

பின்னல் இராமனே, பரதனைப்பற்றி

"எனைத்து உள மறை அவை இயம்பற்பாலன
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே"

என்றும்,

"சேண் உயர் தருமத்தின் தேவை, செம்மையின்
ஆணியை..................."

என்றும் கூறுவான்.

கோசலை,

"........மும்மையின்
நிறை குணத்தவன், நின்னினும் நல்லனல்"

என்று இராமனிடமே, பரதனைப்பற்றிக் கூறுகிறாள்.

குலமுறை கிளத்திய கோசிக மாமுனி,

"தள்ளரிய பெருநீதி தனி ஆறு புகமண்டும்
பள்ளம் எனும் தகையானை, பரதன் எனும் பெயரானை..."

என்று பாராட்டி உள்ளான்.

கவிஞனே கானகத்தில் இராமன் பரதனைத் தழுவிக் கொண்டதைக் கூறும் பொழுது,

''நியாயம் அத்தனைக்கும் ஓர் நிலையம் ஆயினான்
தயா முதல் அறத்தினைத் தழீஇயது என்னவே''

என்று பாடுவான்.

பண்புக்கு இலக்கணமாக இருக்க வேண்டிய காப்பியத் தலைவன், தனக்குப் பதிலாக இத்தனைச் சிறப்புகளுக்கு உரிய தன் தம்பியாகிய பரதன் அரசு ஏற்கப் போகிறான், என்று கேட்டமாத்திரத்தில், முகமலர்ச்சி மிகுதியாகக் கொள்வது பொருத்தமே ஆகும் அல்லவா?

அதுவும் அல்லாமல், தன் மகன் அரசேற்பதில் இராமன் மகிழ்ச்சியே கொள்கிறான் என்பது கைகேயியிக் கும் மகிழ்ச்சியை அளிக்கும் அல்லவா?

எனவே, இராமன் கைகேயியின் வாசகத்தைக் கேட்ட மாத்திரத்து மகிழ்ச்சி மிக்கவனாக ஆனதற்கு இதுவே காரணமாகும்.

இரண்டாவது காரணம் ஆகக் கூறுபவர்கள், இலக்கிய அடிப்படையில் அல்லாமல், இதிகாச அடிப்படையில், ''இராவண வதம்'' என்ற அவதார நோக்கு நிறைவேறுவதற்கு உதவியாக வனத் துக்குச் செல்லும் இந்த வாய்ப்புக் கிட்டியது என்று இராமன் மகிழ்ச்சி அடைந்ததாகச் சொல்வார்கள்.

இதைவிட முந்தைய காரணம் சிறப்பது தெளிவு.

இங்கேதான் மற்றொரு கோணம் என்று முன்னர்க் கூறப்பட்டதின் குறிப்பை உணர்ந்து கொள்ளலாம்.

கம்பன் மூன்று கால கட்டங்களை ''இப்பொழுது...'' என்று தொடங்கும் நாம் கண்ட பாடலில் குறிக்கிறான் என்று கொள்வோமானால், கைகேயியினிடத்து இராமன்

பேசுவதற்கு முன்னால், அதுவும் "என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ?" என்று கூறி, இப்பணி தலைமேற் கொண்டேன்; மின்னொளிர் கானம் இன்றே போகின்றேன்; விடையும் கொண்டேன், என்று விடைபெற்றுக் கொள்வதற்கு முன்னதாகவே, இராமனுடைய முகத்தோற்றம் இரண்டாவது கால கட்டத்திலிருந்து மூன்றாவது கால கட்டத்திற்கு மாறி விட்டது என்றாகும்.

இப்படியானால் கம்பனுக்கோ, இராமனுக்கோ, காப்பியத்துக்கோ, காப்பியத்தின் இலட்சியத்துக்கோ பெருமை சேராது.

எனவே கம்பன் இப்பாடலில் இரண்டு கால கட்டங்களைப்பற்றி மட்டுமே பேசுகிறான் என்று கொண்டு, பாடலை

"இப்பொழுது எம் அ(ன்)னோரால்
இயம்புதற்கு எளிதே யாரும்
செப்ப(அ)ரும் குணத்து இராமன்
திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு; பின்பு அவ்
வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தா
மரையினை வென்றது அம்மா"

என்று படிக்க வேண்டும்.

இப்படிப் படிக்கும் பொழுது இந்தப் பாடலில் கம்பன் எடுத்துக்காட்டும் இரண்டு கால கட்டங்களும், அசோக வனத்தில், சீதை இராமனுடைய முகத்தைப்பற்றி நினைக்கும், இரண்டு கால கட்டங்களும் முழுமையாக ஒத்திருக்க மாட்டா.

முதல் கால கட்டம் இரண்டுக்கும் பொது. இந்தப் பாடலில் கம்பன் குறிம்பிடும் இரண்டாவது கால கட்டமோ கைகேயி சொன்ன வாசகத்தைக் கேட்ட மாத்திரத்தில் இராமனுடைய முகத்தோற்றம் இருந்த நிலையைக் குறிப்பிடுவது.

சீதையின் நினைவாகக் குறிப்பிடப்படும் இரண்டாவது கால கட்டமோ, இராமன் காட்டிற்குச் செல்வது என்று முடிவு செய்துவிட்டநிலையில் இருந்த இராமனின் முகத் தோற்றத்தைக் காட்டும் காலகட்டம்.

இது மன் என் துணிபு

பிற கட்டுரை ஆசிரியர்கள் கருத்திலோ, முறையிலோ மாறுபடலாம்.

என் சம்பந்தப்பட்டவரையில் இலக்கியக் கட்டுரை ஒன்றை எழுதும்போது, ஆங்கிலத்தில் சொல்வது போல ஒரு SITUATION (அதாவது, சூழல்), ஒரு CHARACTER, (அதாவது, பாத்திரம்) என்பன போன்றவற்றில் ஒன்றைக் கருப் பொருளாகப் பொறுக்கி எடுத்துக் கொண்டு, அதை விமரிசிக்கும் பொழுதோ, அல்லது கவிஞனின் நயத்தை விளக்கும் பொழுதோ, காப் பியத்தின் கட்டுக் கோப்பு, கவிஞனின் லட்சியம், கவிஞனின் சொல்லாற்றல், நினைவாற்றல் போன்ற வற்றையும், காப்பியம் முழுவதையும் மனத்திற் கொண்டு, கூடுமான வரையில் கவிஞன் கூற்றில் முரண்பாடு இல்லை என்பதை விளக்க முயல்வதுதான் வழக்கம்.*

---

* பழனியப்பா பிரதர்ஸினுடைய "இலக்கியக் கட்டுரை எழுதுவது எப்படி?—3 ஆம் தொகுதி'க்காக எழுதப்பட்டது.

3. நாற்பேச்சுடையாள்

படைக்கும் ஆற்றலன்

ஒரு காப்பிய கர்த்தா, தன் படைப்பாற்றலைக் காப்பியத் தலைவன், காப்பியத் தலைவி, எதிர்த் தலைவன், எதிர்த் தலைவி ஆகியவர்களைப் படைப்பதில் மாத்திரம் காட்டுவதில்லை. உண்மையில் காப்பியத் தலைவனும் எதிர்த் தலைவனும் பெரும்பாலும் காப்பியத்தின் தொடக்கம் முதல் அதன் முடிவுவரை இடம் பெறுவர். எனவே அவர்கள் குணங்களை விரிவாகப் பல கோணங்களி லிருந்து படைத்துக் காட்டுவதற்குக் காப்பிய கர்த்தாவுக் குப் பேரளவில் வாய்ப்பு இருக்கிறது.

சிறிய படைப்பினும் பெரியதால் திறனே

எனவே காப்பியக் கர்த்தாவினுடைய பெருமையை இவர் களை மாத்திரம் எப்படி படைத்திருக்கிறுன் என்று பார்த்து, அம்மட்டில் அளவிட்டுவிடக் கூடாது. அவனுடைய பெருமை, உண்மையான ஆற்றல் (அல்லது) திறமை, காரணமாக அமையுமானல் அவன் படைக்கும் ஒவ்வொரு பாத்திரத்திலும் அது பெரிதாயினும் சரி, சிறிதாயினும் சரி, மலிந்து காணப்பட வேண்டும்.

ஒவ்வொரு சொல்லும் இசைக்கும் கல்லே

கம்பனுடைய படைப்பாற்றலோ அளவிடற்கரியது. அதிலிருந்து பிறக்கும் பெருமையும் அத்தகையதே. எனவே சுண்டிப் பார்க்கும் ஒவ்வொரு சொல்லிலிருந்தும் அவன் பெருமை ஒலிப்பதைக் காண்கிறேம்.

சிறியதும் சிறந்ததே சீர்சால் தன்மையால்

அவன் படைத்த சிறு பாத்திரங்களும் பெரும்பாத் திரங்களுக்குச் சிறிதும் சளைத்தவை அல்ல. ஒரு பாத்திரம் அவனுடைய காப்பியத்தில் ஒரே இடத்தில் வருவதாக இருப்பினும், அந்தப் பாத்திரத்தின் பேச்சாலும், பண்பாலும், உணர்ச்சி வெளிப்பாட்டினுலும் அதனை மறக்க முடியாததாகச் செய்பவன் கம்பன்.

துரிசடையாள் திரிசடையாள்

இத்தகைய சிறு பாத்திரங்கள் கம்பன் படைப்பில் பல உள.

இத்தகு சிறு பாத்திரங்களுள் ஒன்று திரிசடை. காப்பியத்தின் ஆறு காண்டங்களில் இறுதி இரு காண்டங் களில்மட்டுமே (சுந்தரகாண்டம், யுத்த காண்டம் ஆகிய வற்றில்) தான் இவளை நாம் சந்திக்கிறோம்.

இங்கும்கூட இவளை நாம் சந்திக்கும் இடங்கள் எண்ணிக்கையால் மிக்கவை அல்ல. அவள் பங்கு பெறுவது அளவில் பெரியதும் அன்று. ஆனுல் காப்பியத் தலைவிக்கு, அதாவது சீதைக்கு, அவளுடைய துயரம் நிறைந்த சூழ்நிலையில் உறுதுணையாகவும், உசாத் துணையாகவும், நம்பிக்கை ஊட்டுபவளாகவும் இருந்தவள் இவளே, என்று பார்க்குமிடத்து கதையில் இவளுடைய பங்கு உயர்ந்து செம்மாந்து நிற்கிறது.

அவளே கண்டீர்! அரும்பெறல் துணைவி

உண்மையில், திரிசடையினுடைய ஆறுதலும் ஊட்டிய நம்பிக்கை மொழிகளும் சீதைக்கு இல்லாமல் போயிருப் பின் பல கட்டங்களில் சீதை உயிருடன் இருந்திருப்பாளா என்ற ஐயமே நமக்கு எழும்.

திரிசடை வீடணன் மகள், அசோக வனத்தில் சிறை வைக்கப்பட்டு இருக்கும் சீதைக்குத் தோழியாக இராவணனுல் அவள் அமர்த்தப் படுகிருள்.

தக்க இன்ன; தகாத இன்ன

இராவணன் சீதையிடம் கொண்ட பொருந்தாக் காமத்தினுல் தீமை இழைத்தவன் ஆனபோதிலும் அவன் வேதங்களை அறிந்து உணர்ந்தவன்; மூஉலகங்களையும் வென்று ஆண்டவன்; சிவபெருமானிடம் பக்தி நிறைந்தவன்.

அத்தகையவனுடைய செயல்கள் எப்பொழுதுமே நீசத்தனம் உடையன ஆகவோ, தீயனவாகவோ இருந்தே தீரும் என்று சொல்லிவிட முடியாது.

மரபு அறிகை

அவனுல் சிறைகொள்ளப்பட்டவளோ, ஜனகமகாராசனுடைய புத்திரி. இராமனுடைய பத்தினி. தசரதச் சக்கரவர்த்தியினுடைய மருகி. அத்தகையவட்குத் துணையாக இருப்பவளும் அவளுடைய அந்தஸ்திற்குத் தகுந்தவளாகவே இருக்க வேண்டும். இதனை அறியாதவன் அல்லன் இராவணன்.

ஆகவேதான், தன் தம்பியாகிய வீடணனுடைய மகளையே சீதைக்குத் தோழியாக அமர்த்துகிருன்.

கொன்றன்ன இன்னு கூட்டிய நினைவுகள்

சுந்தர காண்டத்தில், காட்சிப்படலத்தில் முதன் முதலாகக் கம்பன் திரிசடையை நமக்கு அறிமுகப் படுத்துகிருன். அசோகவனத்தில், சிறை வைக்கப்பட்ட சீதை அரக்கியர் கூட்டத்திற்கிடையே துயரத்தில் ஆழ்ந்து

கிடக்கிருள். அந்நிலையில், பழைய நினைவுகள் வருவது யாவர்க்கும் இயல்பே. சீதையும் பழைய நினைவுகளால் மனம் வருந்துகிருள். இந்நிலையில் அவளைக் காத்துக் கொண்டிருந்த அரக்கியர் தூங்கிப் போய்விடுகிருர்கள். அப்பொழுது திரிசடையிடம் சீதை தனக்குத் தோன்றிய சில நன்னிமித்தங்களை எடுத்துக் கூறுகிருள்.

தாயினும் இனியள்; தனித்த பேரன்பினள்

இதனை எடுத்துக் காட்டும்

> ஆயிடை, திரிசடை என்னும் அன்பினல்
> தாயினும் இனியவள் தன்னை நோக்கினுள்,
> "தூய நீ கேட்டி, என் துணைவி ஆம்" என
> மேயது ஓர் கட்டுரை விளம்பல் மேயினுள்
>
> (காட்சிப் படலம் 31)

என்ற பாடலிலேயே, கம்பன் திரிசடையை அற்புதமான முறையில் அறிமுகப்படுத்திவிடுகின்றுன்.

"அன்பினல் தாயினும் இனியவள்" என்று தன் கூற்ருகவே அவளைக் குறிப்பிட்டுவிடுகிருன்.

சீதையோ "தூய (வளே)! நீ கேட்டி" என விளித்து, அவளே தன் விழுத்துணைத் துணைவி ஆவாள் என்றும் கூறுகிருள்.

நிமித்தமும், கனவும் நிகழ்த்த இருப்பன

சீதை தனக்குத் தோன்றிய நன்னிமித்தங்களைத் திரிசடையிடம் கூறுகிருள். அந்த நிமித்தங்கள் புருவமும், நாட்டமும், தோளும் துடித்தன என்பதாம்.

புருவமும், நாட்டமும், தோளும் வலந்துடித்த சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டி, "இப்பொழுது அவை இடந்துடிப்பதால், என்னை அஞ்சலென்று கூறத்தக்க

வகையில் இருப்பதால், அடுப்பது யாது?'' என வினவு கிருள்.

பருவரல் எவ்வம் களைதரு சொல்லினுள்

என்றலும், திரிசடை, 'இயைந்த சோபனம்!
நன்று இது! நன்று!' எஞ, நயந்த சிந்தை யாள்,
'உன் துணைக் கணவனை உறு'தல் உண்மையால்;
அன்றியும், கேட்டி! என்று, அறைதல் மேயினுள்:

(காட்சிப் படலம் 36)

திரிசடை சீதையிடம் தான் கண்ட நன்னிமித் தங்களும், நற்கனவும் பற்றிக் கூறினுள். அவற்றிலிருந்து இராவணனுக்கு அழிவு கிட்டிவிட்டது; இராமனை சீதை அடைவது உறுதி என்று தான் நம்பியதோடன்றிக் கூறவும் செய்கிருள்; சீதையையும் நம்ப வைக்கிருள்.

சொல்லப்போனுல், திரிசடையின் கூற்று இங்கே ஓர் பேருண்மையையே நிலைநாட்டி விடுவதோடு, அநுமனு டைய வருகையையும் முன்கூட்டியே அறிவித்து விடுகிறது.

ஏரார் இளங்கிளியே! இன்னும் துயிலுதியே!

தான் இத்தகைய கனவினைக் கண்டு கொண்டு இருக்கும்பொழுது சீதை எழுப்பிவிட்டதால் கனவு அரைகுறையானது எனவும் குறிப்பிடுகிருள்.

'பொன்மனை புக்க அப் பொரு இல் போதினில்,
என்னை நீ உணர்த்தினை; முடிந்தது இல்' என
'அன்னையே! அதன் குறைகாண்' என்று ஆயிழை
'இன்னமும் துயில்க' என இருகை கூப்பினுள்

(காட்சிப் படலம் 53)

அன்பினுல், தாயினும் இனியவள் என்று திரிசடை யைக் கவிஞன் குறிப்பட்டதை நாம் முன்னர்க்

கண்டோம். இப்பொழுதோ "என் துணைவி" என்று முன்னர் அவளைச் சொன்ன சீதையே, "அன்னையே" என விளிப்பதனைக் காண்கிறோம்.

அலங்காரம்; அகங்காரம்; அதிகாரம்;

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இராவணன் அலங்கார புருஷனாக அங்கே வந்து தன்னுடைய இச்சைக்கு இணங்குமாறு சீதையிடம் இறைஞ்சுகிறான். சீதையோ அவனுடைய பொருந்தா இச்சையைக் கடிந்து, அறத்தின் அடிப்படையிலும், இராமனின் வீரத்தின் அடிப்படையிலும், அவனுடைய அடாத ஆசையை விட்டு விடுமாறு அறிவுறுத்துகிறாள்.

இராவணனோ சீற்றம் கொண்டு சீதையை அச்சுறுத்திச் செல்கிறான். அப்படி அச்சுறுத்தியதில் சீதைக்குக் காவலாக இருந்த அரக்கியர்களுக்கு நயத்தாலோ, பயத்தாலோ, சீதையைத் தன் இச்சைக்கு இணக்க வேண்டும் என்று இட்ட கட்டளையும் சேரும்.

ஏவலில் திறம்ப அஞ்சினர் அரக்கியர்

இராவணன் இவ்வாறு அச்சுறுத்திச் சென்ற பிறகு அவன் கட்டளைப்படி சீதையை அதட்டத் தொடங்கினார்கள். அவர்களுடைய அதட்டலையும், அவளைச் சுற்றி அவர்கள் பரபரப்பாகப் பாய்ந்ததையும் கண்ட சீதை, தன் உறுதியில் இருந்து சற்றும் மாறாதவளாய்த் தனக்கு இந்த நிலை வந்து சேர்ந்ததே, என்று எண்ணிக் கண் கலங்கினாள். பெருகிய கண்ணீரால் கண்கள் குளமாயின. சிரிப்பவள் ஆனாள். அச் சிரிப்பு அவலத்தில் பிறந்தது.

செயல் அவிந்தனரே

இதனைக் கண்ட திரிசடை சீதையைத் தேற்றுகிறாள். அவளைப் பார்த்து,

....

"முன்னே சொன்னேன் கண்ட கனவின் முடிவு, அம்மா!
பின்னே, வாளா பேதுறுவீரேல் பிழை" என்றாள்.
"அன்னே நன்று" என்றாள்; அவர் எல்லாம் அவிவுற்றார்.
(காட்சிப் படலம் 158)

சீதையும் "அன்னே! நன்று!" என்று கூறுகிறாள். அச் சுறுத்திய அரக்கியரும் தங்கள் பரபரப்பை நிறுத்திக் கொண்டார்கள். அவர்களுடைய நிலையைக் கம்பன்,

அறிந்தார், அன்ன முச்சடை என்பாள் அது சொல்ல;
பிறிந்தார் சீற்றம்; மன்னனை அஞ்சிப் பிரிகில்லார்;
செறிந்தார் ஆய தீவினை அன்னார் தெறல் எண்ணார்;
நெறிந்து ஆர் ஓதிப் பேதையும் ஆவி நிலை நின்றாள்.
(காட்சிப் படலம் 159)

என்ற பாடலின் மூலம் விளக்குவான்.

நச்சுடையாரும், முச்சடையாளும்

முச்சடை என்று இப் பாடலில் பயின்றுள்ள சொல் திரிசடை என்ற வடசொல்லின் பெயர்ப்பே ஆகும்.

அவள் கூறியது கேட்ட அரக்கியர், சீற்றம் அடங்கினர் எனினும், இராவணனுக்கு அஞ்சி அங்கிருந்து பெயரார் ஆகி இருந்தனர்.

செறிந்த தீவினை உருவு (கள்) கொண்டாலன்ன அவர்கள், சீதைக்கு எவ்வித தீங்கு செய்யவும் எண்ணார் ஆயினர். இந்நிலையில் சீதையும் பதற்றம் நீங்கி, சிறிது ஆறுதல் பெற்றாள்.

தந்தை வடிவில் தகவிலி

அடுத்து திரிசடை பேச நாம் கேட்பது மாயா சனகப் படலத்தில். மகோதரனிடம், சீதையை அடையும் வழியை இராவணன் கேட்கிறான். அதற்கு மகோதரன் ஒரு

சூழ்ச்சியை அறிவுறுத்துகிருன். அதுதான், மருத்தன் என்னும் அரக்கனேச் சனகன்போல் உருவம் மாற்றிக் கட்டிக்கொணர்ந்து, சீதையின் முன் நிறுத்தி, அவன் மூல மாகவே இராவணனுக்கு இணங்குமாறு சீதையை வற்புறுத்துவது ஆகும்.

இந்த சூழ்ச்சியினைக் கேட்ட இராவணன் மகிழ்ந்து சீதையின் இருப்பிடம் செல்கிருன்.

நிலையில் தாழ்ந்தனன்; நிலத்தில் தாழ்ந்தனன்.

அங்கு அவளிடம் பலபடப் பேசியதோடு அமையாது, அவள் முன் நிலத்தில் விழுந்து வணங்கி, தன்னை ஏற்றுக் கொள்ளுமாறும் வேண்டிக்கொள்கிருன்.

கொடண்து விடாஅக் குணமிலி

சீதையும் வழக்கம்போல் இராவணனுக்கு அறிவுரை கூறுகிருள். அவள் கூறிய எவையும் இராவணனுடைய மனத்தில் ஏறவில்லை.

பழுது எண்ணும் சூழ்ச்சியான்

இராமனை வெல்வது மாத்திரம் அன்று; அயோத்திக்கும், மிதிலைக்கும் அரக்க வீரர்களை அனுப்பி இருப்பதாகவும் சொல்கிருன். குறிப்பாக,

'கொற்றவாள் அரக்கர் தம்மை, "அயோத்தியர் குலத்தை முற்றும்
பற்றி நீர் தருதிர்; அன்றேல், பசுந்தலை கொணர்திர்; பாரித்து
உற்றது ஒன்று இயற்றுவீர்" என்று உந்தினேன்; உந்தை மேலும்,
வெற்றியர் தம்மைச் செல்லச் சொல்லினென்; விரைவின்' என்ருன்,

(மாயா சனகப் படலம் 28)

அரியவும் உளவோ? அறமில் அரக்கற்கே

இதனைக் கேட்ட சீதை தன்னையே வஞ்சித்து, வன் சிறை வைத்த வன்கண் இராவணற்கு எந்த மாயையும் செயல் அரிதன்று என்று எண்ணிய போதிலும் உள்ளம் கைத்தாள்; கண்களில் கரை காணுவெள்ளம் பெருக்கினுள்.

அந்தச் சமயத்தில் மகோதரன் மருத்தனைச் சனகனுக உருமாற்றி, இராவணன் முன் கொணர்கிருன். அப்படிக் கொணரப்பட்ட சனகன் (மருத்தன்) இராவணனை வணங்குகிருன். இத்னைக் கண்ட சீதையின் நிலையை ''தாய் எரி வீழக்கண்ட பார்ப்பு எனத் தரிக்கிலாதாள்'' என எடுத்துக் காட்டுவான் கம்பன்.

வெந்துயரிடை வீழ்வாள்

தன் முன் நிறுத்தப் பெற்ற சனகனைக் கண்ட சீதை வாய்விட்டுப் பலவாருக அரற்றுகிருள்; தெய்வங்களை அழைக்கிருள்; மெய்ம்மை சிதைந்ததோ? என்கிருள்; வைவலோ உலகை என்கிருள்; வஞ்சமோ வலியது என்கிருள்.

அஃதன்றியும்

'எந்தையே! எந்தையே! இன்று என்பொருட்டு
உனக்கும் இக்கோள்
வந்ததே! என்னைப் பெற்று வாழ்ந்தவாறு இதுவோ?
மண்ணோர்
தந்தையே! தாயே! செய்த தருமமே! தவமே!' என்னும்;
வெந்துயர் வீங்கி, தீவீழ் விறகு என வெந்து, வீழ்ந்தாள்.
(மாயா சனகப் படலம் 34)

பனிவார் உண்கண் பைதல கலுழ

தவிர அயோத்தியில் இருக்கும் மற்றவர்க்கும் இராவணன் சொன்னவாறே முடிவு உண்டாகி விடுமாயின், அதன்பின் இராமனும் வாழமாட்டான்; இலக்குவனும் வாழான் என்றெல்லாம் எண்ணிப் பலவாறு புலம்பி அரற்றுகிறுள்.

சீதையினுடைய இந்த நிலையைக் கண்ட இராவணன் தனக்கு இணங்குமாறு மீண்டும் அவளை வேண்டிக் கொள்கிறுன். அவனுடைய உரையைக் கேட்ட சீதை சினந்து அவனைப் பலபட ஏசுகிறுள்; பேசுகிறுள்; சீறுகிறுள்; சினக்கிறுள்; கடிகிறுள்.

தாதை வேண்டத் தான் இசைவாள் போன்ம்

இதன் காரணமாகச் சினம் கொண்ட இராவணன் சீதையினிடம் விரைந்து செல்ல, மகோதரன்.

.........'ஈன்ற
மொய் கழல் தாதை வேண்ட, இசையும்; நீ முனியல்'
என்றுன்.

இவ்வாறு கூறி சீதையை இராவணன் எதுவும் செய்யாதவாறு தடுத்துவிடுகிறுன்.

பொய்யோன் கூறிய உய்திறம்

அவ்வேளையில், 'ஆவி பொன்றினன் ஆகும்' என்னத் தரையிடைக் கிடந்த பொய்யோன் ஆய மருத்தன் (மாயா சனகன்) சீதையிடத்து இராவணனுடைய இச்சைக்கு இணங்கி, தன்னைத் தன் குலத்தினேடும் காத்து, அவளையும் இன்பத்துள் உய்யுமாறு வேண்டிக் கொண்டு அவள் தன் பொன் அடி மருங்கு வீழ்கிறுன்.

வந்தான் இவன் ஆகும் ஓர் வஞ்ச மகன்

அவன் சொன்னதைக் கேட்ட சீதை, செவிகளை அமையப் பொத்திக் கொள்கிருள். ஒரு தீர்க்கமான முடிவுக்கும் வந்துவிடுகிருள்.

அதுதான்.

'இவ்வுரை எந்தை கூருன், இன் உயிர் வாழக்கை பேணி;
செவ்வுரை அன்று இது'

என்பதே ஆகும்.

இவ்வாறு கூறி மாயா சனகனைச் சீதை கடிந்து கொள்கிருள்.

சீதையின் இக் கடுஞ் சொற்களைக் கேட்ட இராவணன் மாயா சனகனைக் கொல்வதற்காக வாளை உருவுகிருன்.

செவ்வியை அல்லை; செய்வாய் அல்லை

அதனைக் கண்ட சீதை இராவணனுல் ஒன்றும் செய்ய இயலாது என்று கூறியதோடு அல்லாமல்,

'என்னையும் கொல்லாய்! இன்னே இவனையும் கொல்லாய்; இன்னும்
உன்னையும் கொல்லாய்; மற்று, இவ் உலகையும் கொல்லாய்; யானே
இன் உயிர் நீங்கி, என்றும் கெடாப் புகழ் எய்துகின்றேன்;
பின்னையும், எம்கோன் அம்பின் கிளையொடும் பிழையாய்' என்ருள்.

(மாயா சனகப் படலம் 71)

அருகில் இருந்த மகோதரனே மாயா சனகனைக் கொல்லச் சென்ற இராவணனைத் தடுக்கிருன்.

கிளை முறிந்தது

இந்த நிலையில்தான் கும்பகருணன் போரில் இறந்த செய்தி இராவணனை எட்டுகிறது.

அவன் அழுது அரற்றுகிறான். அதனைக் கண்ட சீதை தொண்டைக் கனிவாய் துடிப்ப, மயிர் பொடிப்ப, உள்ளே கிளுகிளுத்தாள்.

இராவணன் "தேவரை வைப்பேன் சிறை" எனச் சீறினன்; மந்திரமார் தேற்ற, ஆற்ற, சிறிது ஆறினன்; அவ்விடத்தை விட்டு அகன்றான்.

மகோதரனும் "வேறு ஓர் சிறை இவனை வைம்மின் விரைந்து" என்று ஆணையிட்டு அவ்விடம் விட்டு அகல்கிறான்.

செவ்விய அமுதனாள் செப்பிய உண்மை

இந்தக் கட்டத்தில்தான் திரிசடை சீதைக்கு உண்மையை உணர்த்துகிறாள்.

> 'உந்தை என்று, உனக்கு எதிர் உருவம் மாற்றியே,
> வந்தவன், மருத்தன் என்று உளன் ஓர் மாயையான்;
> அந்தம் இல் கொடுந்தொழில் அரக்கன் ஆம்' என,
> சிந்தையின் உணர்த்தினள், அமுதின் செம்மையாள்.
>
> (மாயா சனகப் படலம் 94)

எனக் கம்பன் பாடுவான்.

திரிசடையின் இவ்வுரை அமையக் கேட்ட சீதை ஆகிய

> நங்கையும் அவள் உரை நாளும் தேறுவாள்,
> சங்கையும் இன்னலும் துயரும் தள்ளினள்;
>
> (மாயா சனகப் படலம் 95)

அடுத்துக் காண்பது

அடுத்து நாம் திரிசடை பேசக் கேட்பது "சீதை களங்காண் படலத்தில்" ஆகும்.

பொன்றினர் ஆம் எனப் புலம்பும் போர்ஏறு

இந்திரசித்து விடுத்த பிரம்மாத்திரத்தினுல் இலக்குவனும் பிறரும் பிணிக்கப்பட்டு வீழ்ந்து கிடக்கிருர்கள். அவ்வேளையில் இராமன் தெய்வப்படைக்கு வழிபாடு இயற்றச் சென்றிருந்தான். தன் வழிபாட்டை முடித்துக் கொண்டு போர்க்களம் புகுந்த இராமன் இப்படி வீழ்ந்து கிடந்த அனைவரையும் கண்டு வருந்துகிருன். இலக்குவனும் இறந்துவிட்டான் என்று எண்ணிப் பலபடப் புலம்புகிருன்.

என்று என்று ஏங்கும், விம்மும், உயிர்க்கும், இடை அஃகி,
சென்று ஒன்று ஒன்ருேடு இந்தியம் எல்லாம் சிதைவு எய்த,
பொன்றும் என்னுத் தம்பியை ஆர்வத்தொடு புல்லி,
ஒன்றும் பேசான்; தன்னை மறந்தான்; துயில்வுற்ருன்.
(பிரம்மாத்திரப் படலம் 220)

கறுத்த சிந்தையர் கருத்து

இதனைப் பார்த்த அரக்கர்கள் இலக்குவன் மற்றும் யாவரோடும் இராமனும் இறந்தான் என்று எண்ணி இராவணனிடம் சென்று சொல்கிருர்கள்.

வெற்றி விழாக் கொண்டாடக் கட்டளை இட்ட இராவணனும், மாய்ந்த அரக்கர்கள் உடல்களைக் கடலிடை வீழ்க்கப் பணித்து,

'தெய்வ மானத்திடை ஏற்றி
மனிசர்க்குற்ற செயல் எல்லாம்
தய்யல் காணக் காட்டு மின்கள்;
கண்டால் அன்றி, தனது உள்ளத்து

அய்யம் நீங்காள்' என்று உரைக்க,
அரக்கர் மகளிர் இரைத்து ஈண்டி,
உய்யும் உணர்வு நீத்தாளை
நெடும்போர்க் களத்தின் மிசை உய்த்தார்.
(சீதை களம் காண் படலம் 3)

நீர்ப் பெருக்கு அருத நீண்ட கண்ணினுள்

களம் சென்ற சீதையும், பிறரோடும் இராமனும் பெரும்பிறிது உற்றுன் என்று எண்ணித் துன்புற்று பலவாருக அரற்றுகிருள்.

அழுது அறற்றிய அவள்,

'மழுவாள் வரினும் பிளவா மனன் உண்டு
அழுவேன்; இனி, இன்று இடர் ஆறிட, யான்
விழுவேன், அவன் மேனியின் மீதில்' என
(சீதை களம் காண் படலம் 21)

எழுகின்ருள்.

உளங் கொளக் கூறிய வளவிய சொற்கள்

அப்படி எழுபவளைத் தடுத்து அவளுடைய மயக்கம் தீர, திரிசடை சில சொல்கிருள்.

அப்படிச் சொல்வனவற்றையும் 'பாவையைத் தழுவிக் கொண்டு, கூடினள் என்ன நின்று, செவியிடைக் குறுகிச் சொன்னுள்' என்பான் கம்பன்.

ஏன்?

தான் கூறுவனவற்றைக் கொடியன்னுளைக் களம் கொண்டு உய்த்தக் கொடியவர் கேட்கக்கூடாது என்பதனுலேயே.

இலக்குவனும் இராமனும் இறக்கவில்லை என்பதற்குத் திரிசடை பல காரணங்களைச் சீதையிடம் எடுத்துச் சொல்கிருள்.

எல்லாம் மாயை தானே

"மாயமான் விடுத்ததும், கனகனை வகுத்ததும், நாகபாசம் பிணித்ததும் மாயமே ஆதல் போல, இதுவும் ஆய மா மாயமே" என்று குறிப்பிடுகிறாள்.

ஆகாது அன்றால் அயர்த்தல்

அதுமட்டுமன்று.

தான் கண்டு கூறிய கனவையும், சீதை பெற்ற நன்னிமித்தங்களையும், சீதையின் கற்பையும், அரக்கர் பாவச்செய்கைளையும், தர்மம் தாங்கும் அண்டர் நாயகன் இராமன் வீரத் தன்மையையும் எடுத்துக்காட்டி அயர்த்தல் ஆகாது என்று அறிவுறுத்துகிறாள்.

"இப்புலையர்க்கு அல்லால் புண்டரீகற்கும் உண்டோ இறுதி?" என வினவுகிறாள்.

பொலி தரு முகத்தினான் பொன்றினனோ? அன்றே

"இராமன் மேல் ஓரம்பும் தைத்திலது என்பதனை நீ பார்க்கத் தவறி விட்டாய். இலக்குவன் வதனம் ஊழிநாள் சூரியன் போல் ஒளிர்கின்றது காண்க. எனவே உயிர்க்கு இன்னல் அவர்க்கு இல்லை. நீ மயங்கவேண்டா" என்று தெளிவுபடுத்துகிறாள்.

அதனுடன் அமையாது தன் கூற்றுக்கு வேறுபல ஆதாரங்களையும் காட்டுகிறாள்.

அழிந்தில

"இராமன் இறந்து பட்டான் எனில் உலகம் ஓர் ஏழும் ஏழும் தீய்ந்து போகும்; இரவி செயலற்றுப் போவான்; தெய்வங்கள் என்ன ஆகும்? பிரமனை முதலாகக் கொண்ட உயிரினங்கள் அனைத்தும் அழிந்து

போகும். அவை அழியாமல் இராமனும் உயிரோடு உள்ளான் என்பது உறுதி.

அறத்திற்கும் அழிவு இன்று அன்றோ?'' என்று கூறுகிறாள்.

எண்ணுறு அமரர் எண்ணம் பிழையுமோ?

மீட்டும் அவள் பேசவாள்: ''மாருதிக்கு நீ சாகா வரம் அளிக்கவில்லையா? அப்படியாயின் அவன் எப்படி இறப்பான்? உன் கற்பிற்குத்தான் அழிவு உண்டா? எனவே, நீ அஞ்சுமாறு எவையும் நிகழ்ந்தில, பிரம்மாத்திரத்தினுடைய செயல் இது. இப்பொழுது அதன் செய்கையும் பெயரும்; தேவர் எண்ணம் பிழைபட்டுப் போகாது அன்றோ?'' என்பாள்.

கண்டு, கூறுவ, கேட்டிசின்

''விண்புலத்திடை தேவர்கள் முகிழ்த்த கையராய் நிற்பதனை நான் என் கண்புலம் காணக் காண்கிறேன். அவர்களிடை ஆவலிப்பும், அஞ்சலியும் நிகழ்கின்றனவே அன்றி அவலமோ, கவலையோ, அயிர்ப்போ, இன்றே. நம்மினும் நன்கு அறிபவர் அல்லரோ அவர்'' என்கின்றாள்.

இதன் இயல் தெளிகமன் இன்னுயிரனையாய்

இவ்வாறு கூறியதனோடும் அமையாது, பிறிதொரு காரணத்தையும் எடுத்துக்காட்டுகிறாள்.

''சீதை! உன்னைச் சுமந்து செருக்களம் போந்த தெய்வ விமானம் மங்கல நாண் இழந்தாரையும் (விதவையர்) உயிர் நீங்கப் பெற்றமையால் பிணமாகிப் போனவரையும் தாங்குதல் ஆகிய குற்றம் உடையது அன்று. அத்தகைய சிறப்பு வாய்ந்த விமானம் உன்னைத் தாங்கி இங்கு

போந்தது என்ற ஒன்றே, உன் அரும்பெறல் கணவன் ஆவி நீங்கிலன் எனும் உண்மையை நிலை நிறுத்தும்'' இவ்வாறு சான்றுடன் நிறுவிய திரிசடை தான் கூறிய சான்றுகளின் அடிப்படையில், ''இங்கு இவை அளவை ஆக இடர்க்கடல் கடத்தி'' என்று வேண்டுகிறாள்.

சங்கையள் ஆய தையல் அவள் உரைத்த அவை அளவை ஆக சிறிது உயிர் தரிப்பது ஆனாள், என்பான் கம்பன்.

நெட்டுயிர்ப்போடு உடல் தாங்கினள்

அதுவுமின்றி இந்த நிலை அடைந்த சீதை,

'அன்னை! நீ உரைத்தது ஒன்றும் அழிந்திலது; ஆதலானே
உன்னையே தெய்வமாக் கொண்டு, இத்தனை காலம் உய்ந்தேன்;
இன்னம், இவ் இரவு முற்றும் இருக்கின்றேன்; இறத்தல் என்பால்
முன்னமே முடிந்தது அன்றே?' என்றனள்...

(சீதை களங் காண் படலம் 30)

காக்க அமைந்தாள்

இப்படி நாம் பார்க்கும் பொழுது இந்த நான்கு இடங்களில்தான் திரிசடை பேசுவதைக் காண்கிறோம். ஒவ்வொரு இடத்திலும் திரிசடை பேசுவது சீதையின் துயரைத் துடைப்பதாகவும், அவளுக்கு நம்பிக்கை ஊட்டுவதாகவும், அவள் உயிர் காப்பதாகவுமே அமைந்திருக்கிறது.

இதனை வெளிப்படையாக உணர்த்துமாப் போலவே கம்பனுடைய சொல்லாட்சியும் அமைந்திருக்கக் காண்கிறோம். மாயா சனகப்படலத்தில் சீதை எந் நிலையை அடைந்தாள் என்பதனை நாம் கண்டோம். எந்த ஒரு

பெண்ணுக்கும் தான் பிறந்த குலத்தின் பெருமை என்றும் மறக்க முடியாதது ஆகும்; அந்தப் பெருமையைப் பிறர் பழிக்கவும் பொருர். இங்கோ மாமன்னன் ஆகிய தன் தந்தை சனகன், மிக இழிந்த செயலில் இறங்கிய இராவணன் அடியில் வீழ்வதோடு, அந்த இழிந்த செயலுக்கு இணங்குமாறு மகள் ஆகிய தன் காலடியில் வீழ்ந்து வேண்டுகிருன்.

கற்புடைப் பெண் எவளாயினும் சகித்துக் கொள்ள முடியாத நிகழ்ச்சி இது. ஆகையால்தான் மாயா சனகனை இராவணன் கொல்லத் துணிந்தபோது "நீ அவனையும் கொல்லாய்; என்னையும் கொல்லாய்" என்று சொல்லி விட்டு "யானே இன் உயிர் நீங்கி என்றும் கெடாப் புகழ் எய்துகின்றேன்" என்றும் சொல்கிருள்.

சீதையின் இக் கூற்று ஒருபுறம் இருக்க, தன் முன் கொணர்ந்து நிறுத்தப் பெற்றவன் தன் தந்தையே என்று நம்பிய அவள் உள்ளம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதனைச் சொல்லால் விளக்க இயலாது; உள்ளத்தால்தான் உணர்ந்து கொள்ள முடியும்.

இந்நிலையில் உண்மையை சீதைக்கு உணர்த்தி அங்கு கொணரப் பெற்றவன் சனகன் அல்லன்; மருத்தன் என்னும் மாயையான் என்று சீதையிடம் திரிசடை சொல்வாளே ஆனுல், திரிசடை சீதையினுடைய உயிரைக் காப்பாற்றியவளே ஆவாள் அன்றோ.

எனவேதான் 'சிந்தையின் உணர்த்தினள் அமுதின் செம்மையாள்' என்பான் கம்பன்.

அமுதின் தன்மை உயிரினை நிலைநிறுத்துவதுதானே?

திரிசடை சீதைக்கு ஆறுதல், தேறுதல் மொழிகளைக் கூறும் பொழுதெல்லாம் இத்தகைய சொற்களாலேயே

திரிசடையையும், அவள் கூற்றினையும் கவிஞன் குறிப்பிடுவான்.

கொடிய அரக்கியரிடை அகப்பட்டுக் கொண்ட சீதைபால், திரிசடை என்ற துணைவி இன்றேல், அசோக வனத்திடை அவள் உயிர் தரித்திருப்பாளா என்பதே சந்தேகம்.

தந்தை அறிவு, மகள் அறிவு

மகா அறிஞனும், வேத வித்தகனுமான வீடணன் புதல்வி ஆன திரிசடை, அவனுடைய தர்மத்தின் வழி நின்றே, சீதைக்கு உற்ற துணைவி ஆக அமைந்துவிடுகின்றாள்.

இந்நான்கு இடங்களில் திரிசடையினுடைய பேச்சை நாம் கண்டபோதிலும், காப்பியத்தின் வேறு சில இடங்களிலும் அவள் குறிப்பிடப் பெறுகின்றாள்.

சுந்தர காண்டத்தில் அனுமன் பொழில் இறுத்த பிறகு, இந்திரசித்து விடுத்த பிரம்மாத்திரத்திற்குக் கட்டுப்பட்டு, அவனால் இழுத்துச் செல்லப்பட்ட செய்தியைச் சீதை இடத்து திரிசடைதான் கூறுகிறாள்.

இந்திரசித்து மாயா சீதையைக் கொன்றதைக் கண்ட அனுமன், சீதையை உண்மையிலேயே இந்திரசித்து கொன்று விட்டான் என்று நம்பி, இராமனிடத்து அழுது புலம்பியபோது "இது மாயம்" என்று கூறிய அளவொடு நில்லாது, வீடணன் வண்டுருக்கொண்டு அசோக வனத்திற்குச் சென்று சீதையைக் காண்கின்றான்.

உறுதுயர் உயிரொடும்போம்

அவ்விடை, "என் துன்பம் என் உயிரோடுதான் தீரும் போலும்" என்று புலம்பிய சீதை, திரிசடை கூறிய செஞ்

சொற்களால் தேறியவளானுள். தன் உயிர் மாய்க்கும் முடிவினையும் மாற்றிக் கொண்டாள். இதனை நன்கறிந்து மீண்ட வீடணன் வில்வலானைக் கண்டு, வணங்கி, செய்தி தெரிவித்தான். சிந்தையின் மறுக்கம் தீர்த்தான். இதனைக் கம்பன்,

'தீர்ப்பது துன்பம், யான் என் உயிரொடு' என்று
உணர்ந்த சிந்தை
பேர்ப்பன செஞ்சொலாள், அத்திரிசடை பேசப்
பேர்ந்தாள்

என்று குறிப்பிடுவான்.

இறுதியில் இராவணன் வதையுண்ட பிறகு மீட்சிப் படலத்தில் ஈரிடங்களில் திரிசடை குறிக்கப் பெறுகின்றுள்.

இராவணனுடைய மரணம் தெரிவிக்க வந்த அனுமன் சீதையிடத்து ஒரு வரம் வேண்டுவான்.

அதுதான் இதுகாறும் அவளைச் சுற்றி நெருக்கி, துன்புறுத்திய, வன்மருங்குல்வாள் அரக்கியரை வினையினில் சுட வேண்டும் என்பதே.

அன்னை அன்னவள் அவள் நீங்கலாக...

அப்படிக் கேட்கும்பொழுது "திரிசடையாள் மனவினில் சுடர் மாமுக மாட்சியாள்" தவிர மற்றைய அரக்கியரை மாய்க்க வரம் வேண்டுவான்.

பெற்றனர் விடை

இறுதியாக இராமன் முதலியோர் புட்பக விமானத்தில் ஏறி அயோத்தி செல்லும் இடத்து அனைவர்க்கும் விடை தருகிறுர்கள். அப்படி விடை தரப் பெற்றவர்களில் ஒருத்தி திரிசடை ஆவாள்.

இதனைக் கம்பன்,

வணங்கு நுண் இடைத் திரிசடை வணங்க,
வான்கற்பிற்கு
இணங்கர் இன்மையாள் நோக்கி, 'ஓர் இடர்
இன்றி இலங்கைக்கு
அணங்கு தான் என இருத்தி' என்று கூறினள்
(மீட்சிப் படலம் 146)

என்பான்.

இங்கே கம்பன் ஆளும் சொற்கள் கூர்ந்து நோக்கத் தக்கன. "ஓர் இடர் இன்றி இலங்கைக்கு அணங்கு தான் என இருத்தி" என்று சீதையின் வாக்கால், வாழ்த்தாகக் கம்பன் கூறுகிறான்.

அணங்கு என்ற சொல்லுக்குத் தெய்வம், தெய்வ மகள் என்ற பொருள்கள் உள்ளன. இங்கே கம்பன் ஆண்டிருக்கும் சொல்லமைப்பை நோக்குமிடத்து இலங் கைக்கே காவல் தெய்வமாகத் திரிசடையை இருக்குமாறு சீதை வேண்டுகிறாள் என்பது புலனாகும்.

'இலங்கைக்கு' என்ற சொல்லும் 'அணங்குதான் என' என்ற சொற்களும் இக் கருத்தையே வலியுறுத்து கின்றன.

அப்படியானால் திரிசடைக்கு எத்தகைய உயர்வை யும் சிறப்பையும் கம்பன் அளிக்கிறான் என்பது, எண்ணிப் பார்க்கத்தக்கது.

பெரிது இவள் பங்கு

இவ்வாறு பார்க்கும்பொழுது, திரிசடை மிகச் சிறிய பாத்திரம் ஆக இருந்தாலும், கதையின் வளர்ச்சி யில் அவள் பங்கு பெரிது எனலாம்.

அதுமாத்திரம் அன்று. சீதை எத்தகையள் என்பதனை நன்குணர்ந்து கொண்ட திரிசடை, "அன்னை" என்றே அவளைப் பன்முறை விளிப்பாள்.

தாயினும் சிறந்த தயாவான தையல் காண்

அதனைப் போலவே தன்னிடத்து அவள் காட்டிய அன்பினால், அவள் "தாயினும் இனியவள்" எனச் சீதை கொண்டதோடு அன்றி, அவளைத் தூயளாகவும், துணைவி யாகவும் இறுதிவரை கொண்டிருந்தாள்.

அவளுடைய பேச்சுகளை நாம் நோக்கும்பொழுது அவள் அன்பினள்; தூயள்; துணைவி; என்பதோடன்றி தந்தையினுடைய அறிவினுக்கு ஏற்ப அறிவு நிறைந்தவள், எனவும் காண்கிறோம்.

4. ஓர் அடி

அழகு ஒழுகும் பழகு தமிழ்ப்பாடல்

கம்பனுடைய பாடல் ஒவ்வொன்றிலும் எதுகை மோனைகளுக்காக அழகு சொட்டுவது ஒருபுறமிருக்க, பொருள் நயத்தினுலும் ஒவ்வொரு சொல்லும் ஓர் அழகு கொழித்துக் கொண்டிருப்பதை அவன் பாடல்களைக் கூர்ந்து நோக்குபவர்கள் உணர்ந்திருப்பார்கள்.

மிதிலைக்காட்சி

அகலிகையின் சாப விமோசனத்திற்குப் பிறகு, விசுவாமித்திரன் இராம— இலக்குவரை மிதிலைக்கு அழைத்துச் செல்கிருன். மிதிலை நகரில் பற்பல வீதிகளின் வழியாகச் செல்லும்பொழுது அவர்கள் கண்ட காட்சி களைக் கம்பன் அற்புதமாகப் பாடுவான்.

அன்னம் ஆடும் முன்துறை

வீதிகளைக் கடந்து அரண்மனையைச் சூழ்ந்துள்ள அகழியை அவர்கள் நெருங்குகிருர்கள். அப்பொழுது, சீதை பேரெழில் பொழிய, கன்னிமாடத்தில் அன்னம் ஆடும் முன் துறையை நோக்கி நிற்கிருள்.

நோக்கிய நோக்கு

அப்படி அவள் நிற்கும்பொழுது வீதியில் விசுவாமித் திரன், இராமன், இலக்குவன் ஆகிய மூவரும் நடந்து செல்கிருர்கள். அப்படிச் செல்லும்பொழுது இராமன் சீதையை நோக்குகிருன்; சீதையும் இராமனை நோக்கு கிருள். இதைத்தான் கம்பன்,

"எண்ண அரு நலத்தினள் இனையள் நின்றுழி,
கண்ணொடு கண் இணை கவ்வி, ஒன்றை ஒன்று
உண்ணவும், நிலைபெறாது உணர்வும் ஒன்றிட,
அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்."
(மிதிலைக் காட்சிப் படலம் 35)

என்று பாடுவான்.

மறையப் போயினான்

இப்படி ஒருவரையொருவர் நோக்கியதன் விளைவினை ஒப்புயர்வற்ற மூன்று பாடல்களில் பாடிவிட்டு, இராமன், சீதையின் பார்வையினின்றும் மறைந்து போனதைக் கம்பன்,

அந்தமில் அழகனை அணைகிலாமையால்,
பைந்தொடி, ஓவியப் பாவை போன்றனள்;
சிந்தையும், நிறையும், மெய்ந் நலனும், பின்செல,
மைந்தனும், முனியொடு மறையப் போயினான்.
(மிதிலைக் காட்சிப் படலம் 39)

என்று பாடுகிறான்.

உரை நலம் சான்ற உரையாசிரியர்

கம்பராமாயணம் முழுவதற்கும் உரை எழுதிய திரு. வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் தம்முடைய உரையின் நான்காம் பதிப்பு வரையில் இந்தப் பாடலின் பாடத்தை மேற்கண்டவாறே கொடுத்திருந் தார்கள். இப் பாடலுக்கு அவர்கள் கொடுத்திருக்கும் பதவுரையாவது:—

"எல்லையில்லாத அழகையுடைய இராமனை (அப் பொழுது உடனே) தழுவப் பெறாத மனவருத்தத்தால் பசும் பொன்னாலாகிய தொடி என்னும் வளையையுடைய பிராட்டி, (மூச்சுப் பேச்சற்ற) சித்திரப் பதுமை போல

அசைவற்று நின்ருள்; (அவளது) மனத்தின் நினைப்பும், மனவுறுதியும், உடம்பின் அழகும் (தன்) பின்னே வரும் படி, இராமபிரானும் விசுவாமித்திர முனிவன் பின்னே கண் மறையச் சென்ருன்''.

கம்பராமாயண சாரக் கருத்து

''கம்பராமாயண சார''த்தின் ஆசிரியராகிய திரு.வெ.ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களும் இந்தப் பாடலின் பாடத்தை இப்படித்தான் கொடுத்திருக்கிருர் கள். இப் பாடலின் கருத்தை அவர்கள் அடியிற் கண்ட வாறு எடுத்துக் காட்டுகிருர்கள்.

கொண்டு கூட்டு : அந்தம் இல் அழகனை அணைகிலா மையால் பைந்தொடி ஓவியப் பாவை போன்றனள். (அவளுடைய) சிந்தையும், நிறையும், மெய் (யின்) நலனும் (தனக்குப்) பின் செல்ல, மைந்தன் முனியோடு (கண்)மறையப் போனன்.

பொருள் : எல்லையில்லாதஅழகுடையாளுகிய இராமனை அடையாமையால் சீதை உயிரில்லாத சித்திரப் பாவையை ஒத்தாள்: அவளுடைய மனமும், கற்பும், தேக சௌந்தரியமும் தன்னைப் பின் தொடர இராமன் விசுவாமித்திர முனிவனுடன் கண் மறையச் சென்ருன்.

ஆழ்வார் திருநகரிப் பதிப்பின்படி

திரு. இராவ்சாகிப் மு. ராகவையங்கார் அவர்களால் பதிப்பிக்கப்பெற்று 1942-ல் வெளியிடப்பெற்ற ஆழ்வார் திருநகரி பதிப்பிலும் இப் பாடல் மேற்கண்டவாறே கொடுக்கப் பெற்றிருக்கிறது. அப்பொழுதும், அதற்கு முன்னும் வெளியான வேறு பல பதிப்புகளிலும் இப் பாடல் இவ்வாறே காணப்பெறுகிறது.

முதலடியின் பாடபேதம்

வழக்கம் போல, இப் பாடலின் நான்கு அடிகளுக்கும் பல பாட பேதங்கள் உண்டு. நாம் இங்கே காணப் போவது முதலடியின் பாட பேதங்களைத்தாம். பின் மூன்று அடிகளுக்கும் பொருள் காண்பதில் சிரமமில்லை. இரண்டாம் அடி சீதையைப் 'பைந்தொடி' என்று குறிப் பிட்டு, அவள் ஓவியப் பாவைபோல் ஆனாள் என்றுதான் கூறுகிறது.

போன்றாள்—நின்றாள்

இங்கும்கூட, 'போன்றனள்' என்ற சொல் அமையப் பெற்றிருப்பதால் திரு.வை.மு. கோபாலகிருஷ்ணமாச் சாரியார் அவர்கள் கூறுவது போல, 'சித்திரப் பதுமை போல அசைவற்று நின்றாள்' என்று கூறுவது அவ்வளவு சிறக்காது.

போன்றாள்—ஒத்தாள்

ஆனால், திரு.வெ.ப. சுப்பிரமணிய முதலியார் அவர் கள் கூறும் 'சீதை உயிரில்லாத சித்திரப் பாவையை ஒத்தாள்' என்பது ஒருவாறு பொருந்தும்.

என்றாலும், கவிஞன் எந்த நிலையைப் பாடுகின்றானோ அந்த நிலையில் சீதை சித்திரப்பாவை போன்று ஆனாள், என்று கூறுவதுதான் நலம் சிறக்கும்.

எந்த நிலை?

இதில் அடங்கியிருக்கும் பொருள் என்னவென்றால், இந்தப் பாடலில் சீதையினுடைய எந்த நிலையைக் கம்பன் பாடுகிறானோ, அந்த நிலைக்கு முன்னால் சீதை சித்திரப் பாவை போன்று இருக்கவில்லை; இப்பொழுதுதான்—

'சித்திரப்பாவை போன்றவள் ஆனுள்.' இதன்பொருத்தத்தை முதல் அடியை ஆராயும்பொழுது பார்ப்போம்.

தொடரப் போயினுன்

மூன்று, நான்காம் அடிகளின் பொருள் என்ன என்ருல், விசுவாமித்திர முனிவரோடு இராமனும், சீதையின் கண் பார்வையினின்றும் மறைந்து போனுன்; அப்படிப் போன இராமன் பின்னுல், சீதையினுடைய சிந்தையும், மன உறுதியும், உடலழகும் தொடர்ந்து சென்றன.

மதிஉடம்பட்ட மாக்கண் சீதை

'நிறை' என்ற சொல்லுக்கு, 'கற்பு' என்ற பொருளோடு, 'மனத்தைக் கற்பு வழியில் நிறுத்துகை' என்ற பொருளும் உண்டு. இங்கே இராமனும், சீதையும் ஒருவரையொருவர் நோக்கி, இருவர் இதயமும் மாறிப்புக்கு காதலில் கலந்துவிட்டார்கள். ஆகையால், இராமன் பின்னுல் சீதையின் சிந்தையும், மன உறுதியும், உடலழகும் தொடர்ந்து சென்றன.

மூன்ரும் அடியின் இறுதியிலுள்ள 'பின் செல' என்ற சொல்லாட்சியும், நான்காம் அடியின் இறுதியில் இடம் பெற்றிருக்கும் 'போயினுன்' என்ற சொல்லாட்சியும் அருமையானவை. இரண்டையும் சேர்த்து நோக்கினும், தனித்து ஆராய்ந்தாலும் சிறப்பு மிகவே செய்யும்.

நிறைகொடு போயினுன் நீளிய நெடுவழி

'போயினுன்' என்பதற்கும், 'போனுன்' என்பதற்கும் பொருளில் வேறுபாடு இல்லைதான். ஆனுல், 'போயினுன்' என்ற சொல்லிலேயே ஒரு 'நீட்டல்' இருக்கிறது; தொடர்ந்து நிகழும் நிகழ்ச்சியைக் குறிக்கின்ற ஓர் உணர்

வினை அச்சொல் உண்டாக்குகிறது; அதே சமயத்தில், அச் சொல் குறிக்கும் செயலினால், ஒரு வருத்தமும் உண்டா கிறது. சீர்குறித்து இச் சொல் ஆளப்பெற்றிருக்கிற தென்று கொள்ளினும், இச் சொல் காட்டும், இச்சிறப்பு களை மறப்பதற்கில்லை.

இனி, இப் பாடலின் முதலடியை நோக்குவோம்,

ஒன்ரு, இரண்டா, பாடபேதங்கள்

முதலடியின் தொடக்கத்தில் காணப் பெறும் சொற் களுக்கிருக்கும் பாட பேதங்களாவன:—

1. அந்தமில் நோக்கிமை
2. அந்தமில் நோக்கனை
3. அந்தமில் அழகனை

முதலடியின் பிற்பகுதிக்கு இருக்கும் பாட பேதங் களாவன:—

1. அணைகிலாமையால்
2. அணுகலாமையால்
3. அணுகிலாமையால்
4. அழகிலாமையால்

எது காண் சிறப்பு?

இவற்றில் எந்தப் பாடம் பொருந்தும், சிறக்கும் என்று தீர்மானிப்பதற்கு இங்கே இரண்டு உரைகற்கள் இருக்கின்றன. முதலாவது, இந்த முதலடி கொடுக்கும் பொருள்; இரண்டாவது, எந்தப் பாடத்தை எடுத்துக் கொண்டால் இரண்டாம், அடியோடு சிறப்பாகப் பொருந்தும் என்பது.

சிறந்த பாடம்— அந்தமில் நோக்கிமை

தம்முடைய நான்காம் பதிப்பில் திரு. வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் தம் பால காண்ட உரையின் இறுதியில், ஒரு பக்கத்தில் அடங்கிய ஓர் அநுபந்தத்தைச் சேர்த்திருக்கிறார்கள். அந்த அநுபந்தத்தின் தொடக்கத்தில் அவர்கள் அடியிற்கண்டவாறு கூறுகிறார்கள்:—

> ''மிதிலைக்காட்சிப் படலம் 39-ஆம் பாடலில் முதலடிக்குத்
> திருவாளர் பி. ஸ்ரீ. ஆசார்யர் அவர்கள்
> 'கம்பனும் பாட பேதங்களும்',
> என்ற கட்டுரையில் ஏட்டுப்பிரதியிற் கண்டதாக,
> ஒரு பாடம் குறித்திருக்கின்றனர்.
> அது மிகவும் பொருத்தமானதாகக் காணப்பட்டதால்,
> வாசகர்கள் படித்து மகிழ்வுற வேணுமென்றகருத்தினால்
> இங்குக் காட்டப்படுகின்றது.
> அது, 'அந்தமில் நோக்கிமை அணைகிலாமையால்,
> என்பது''

இவ்வாறு எழுதிவிட்டு இப் பாடம் ஏன் பொருத்தமாகக் காணப்பெறுகிறது என்பதற்குத் தாம் கருதிய காரணங்களையும் கொடுக்கிறார்கள்.

பலர் ஒப்பியவால் பயன் செறி பாடம்

1957-ல் வெளிவந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பும், *1958*-ல் வெளிவந்த மர்ரே எஸ். ராஜம் பதிப்பும் *1967*-ல் வெளிவந்த மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் நூல்நிலையப் பதிப்பும், *1976*-ல் வெளிவந்த, சென்னைக் கம்பன் கழகப் பதிப்பும் முதலடிக்கு இந்தப் பாடத்தையே கொடுக்கின்றன,

இனி, முதலடியின் இந்தப் பாடத்தின் பொருத்தத்தைப் பார்ப்போம்.

எப்படிப் பொருந்தும் இது?

இந்த முதலடியில் 'அந்தமில் அழகனை' என்பது பாடமாக இருப்பின், அடுத்து வரும், 'அணைகிலாமையால், என்ற சொற்றொடருக்கு, 'இராமனை சீதை உடனே தழுவ முடியாததால்' என்றுதான் பொருள் கொள்ளவேண்டும்.

இந்தப் பொருள் எப்படிப் பார்த்தாலும் சிறக்காது என்பது தெளிவு.

வீதியில் போகிறவனோ சக்கரவர்த்தித் திருமகன். கன்னிமாடத்தில் நிற்பவளோ அரசிளங்குமரி. அப்படி நின்று கொண்டிருக்கும் சீதையைச் சில அற்புதமான பாடல்களில் கம்பனே வருணிப்பான். அப்படி வருணிக்கும் பொழுது, அவளுடைய அழகை மாத்திரம் அவன் வருணிக்கவில்லை; அவளுடைய உயர்வையும், அந்தஸ்தையும் பலபடப்பாடுகிறான்.

மலர்மேல் நின்று இம் மங்கை இவ் வையத்திடை வைக,
பல காலும் தம் மெய் நனி வாடும்படி நோற்றார்
அலகு ஓவு இல்லா அந்தணரோ? நல் அறமேயோ?
உலகோ? வானோ? உம்பர்கொலோ? ஈது
உணரேமால்!

(மிதிலைக்_காட்சிப் படலம் 29)

என்றே பாடிவிடுகிறான்.

அதாவது, இவள் செந்தாமரை மலரின் மேலிடத்திலிருந்து, இப் பூவுலகத்தில் வைகும் பொருட்டு, பல காலமாய்த் தங்கள் உடம்பினை வாட்டித் தவமிருந்தவர்கள் அளவற்ற அந்தணரோ? நல் அறந்தானோ? இப்பூவுலகமேயோ? விண்ணுலகந்தானோ? எல்லா தேவர்களு

மேயோ? நாம் எப்படி உண்மையை அறிவோம்? என்பது கம்பனின் வாக்கு.

காமம் மிக்க கழிபடர் செயல் கொல்?

சீதையை இப்படிப் பாடியவன், வீதியில் நின்று கொண்டிருந்த இராமனைக் கண்ட மாத்திரத்தில், 'கண்டதும் காதல்' என்பது போல, காதல் உணர்வு பெற்றுவிட்ட போதிலும், அவனை உடனே தழுவிக் கொள்ள வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள், என்று பாடியிருப்பானா? கம்பன் அப்படிக் கூறியிருப்பானே யானால், அந்தப் பாத்திரத்தின் பவித்திரத்துக்கே பங்கம் விளைவித்தவன் ஆவான் அன்றோ?

மேலும், எப்படித்தான் சீதை அப்படி ஆசைப்பட்டிருக்க முடியும்? கன்னிமாடத்தின்மேல் நிற்கும் அவள் வீதியில் குதிக்க விரும்பினளா? அல்லது வீதியில் நடந்து போய்க் கொண்டிருக்கும் இராமன், கன்னிமாடத்தின் மேல் பாய்ந்து ஏறி வரவேண்டுமென்று எதிர்பார்த்தாளா? முனிவன் முன் செல, இளவல் பின் வர, இடையிலே நடந்து போய்க் கொண்டிருக்கும் இராமனால் அப்படிச் செய்யத்தான் முடியுமா? விரகதாபத்தால் சீதையும், இராமனும் பெருமளவு தனித்தனியாகத் தவித்ததைப் பின்னர்க் கம்பன் பாடுவான். ஆனால், அது வேறு விஷயம். அதற்கும் இராமனை உடனே தழுவிக்கொள்ள வேண்டும் என்று சீதை ஆசைப்பட்டாள் என்பதற்கும் சம்பந்தமில்லை.

அகப்பொருள் மரபு தழீஇய பகுதி

இன்னொன்றையும் பார்க்கவேண்டும். இராமனும் சீதையும் இப்படி ஒருவரையொருவர் பார்த்துக் கொண்ட நிகழ்ச்சி வான்மீகத்தில் இல்லை. தமிழரின் அகப்பொருள் இலக்கணத்திற்கேற்ப இதைக் கம்பன் தன் காப்பியத்திலே

புகுத்தினன் என்பர். அப்படிப் புகுத்தியவன், தன்னுடைய புதுமையால் காப்பியமும், காப்பியப் பாத்திரங்களும் மேலும் சிறக்க வேண்டுமென்பதில் கவனம் செலுத்தியே இருப்பான். இராமனை உடனே தழுவிக்கொள்ள வேண்டு மென்று சீதை விரும்பினள்; ஆனல் அது முடியாமற் போயிற்று என்று கம்பன் பாடியிருப்பானேயானல், கம்பனின் இந்த நோக்கம் நிறைவேருது. ஆகையால் 'அந்தமில் அழகனை' என்ற பாடம் இந்த முதலடிக்குப் பொருந்தாது.

இமையாக் கண்ணள்

இப்பொழுது, முதலடியை, 'அந்தம் இல் நோக்கு இமை அணைகிலாமையால்' என்று கொண்டு, அதன் பொருளைப் பார்ப்போம். 'அந்தம்' என்ற சொல்லுக்கு, 'முடிவு' என்றுதான் பொருள். 'நோக்கு' என்ற சொல்லுக்கு 'பார்வை' என்ற பொருளும் உண்டு; 'கண்' என்ற பொருளும் உண்டு. 'இமை' என்ற சொல் 'கண்ணிமை' யைத்தான் குறிக்கும். இப்பொழுது இந்த முதலடியின் பொருள், 'முடிவில்லாத கண்களின் இமைகள் ஒன்றையொன்று தழுவிக் கொள்ளாததால்' என்ருகும். அதாவது, 'கண்கள் திறந்தவை திறந்தபடி, இமைக்காமல் இருந்ததால், என்று பொருள்.

இந்தப் பொருள் இரண்டாமடியோடு அழகாகப் பொருந்துவதைப் பார்க்கிரோம். இரண்டாமடியில் சீதை 'ஓவியப்பாவை போன்றனள்' என்று கவிஞன் கூறுகிருன். முதலடி அதற்கான காரணத்தைக் கொடுக்கிறது. அதுதான், 'கண்கள் இமையாமை'.

ஓவியப் பாவை ஒத்த நிலையினள்

ஓவியப்பாவையினுடைய சிறப்புப் பண்பு என்ன வென்ருல், அசைவற்றிருத்தல். ஓவியப் பாவையின்

கண்கள் விழித்தபடியே இருக்கும். இங்கே, இராமனைக் கண்ட சீதை கண் இமைகளை மூடாமல், அவனைப் பார்த்துக் கொண்டே நின்றாள்; அதன் காரணமாகவே அவள் ஓவியப் பாவை போலானாள்.

அந்தமில் நோக்கு

இங்கே கவனிக்க வேண்டியது இன்னும் ஒன்றே ஒன்று தான். கண்களை 'முடிவற்ற கண்கள்' என்று சொல்வது பொருந்துமா என்பதுதான் அது'

நீண்ட, காதளவு அளவெனும் மதர்விழி

பெண்களின் கண்களை நீண்ட பெரும் கண்கள் என்று குறிப்பிடுவது தமிழ் இலக்கிய வழக்கு. உண்மையில், சீதையின் அழகினை இராவணனிடத்தில் வருணிக்கப் போந்த சூர்ப்பணகை, சீதையினுடைய கண்களை, 'கடலினும் பெரிய கண்கள்', என்று வியந்து குறிப்பிடுவாள். கண்கள் கடலினும் பெரிதாக இருப்பின், அந்தக் கண்களை 'அந்தமில் கண்கள்' என்று சொல்வது தவறாகாது.

'நோக்கு' என்ற சொல்லுக்குப் 'பார்வை' என்ற பொருளும் உண்டு என்பதைக் கண்டோம். அந்தப் பொருளில் இம் முதலடியை ஆராய்ந்தால், ஓர் அற்புதமான நாடகக் காட்சியைக் காணலாம். ஒரு சொல்லைக் கொண்டே ஒரு நாடகக் காட்சியை படைத்துவிடக் கூடியவனல்லவா கம்பன்?

('இமை' என்பதற்கே 'கண்ணிமை' என்று பொருள் இருப்பதால் 'நோக்கு' என்பதற்குப் 'பார்வை' என்ற பொருளைக் கொள்ளும்பொழுது, 'நோக்கு' என்ற சொல்லுக்கும் 'இமை' என்ற சொல்லுக்கும் இடையே

'கண்' என்ற சொல்லை வருவித்துக் கொள்ள வேண்டிய அவசியமும் இல்லாமற் போய்விடுகிறது.)

இப்பொழுது, அந்தக் காட்சியைக் காண்போம். கன்னிமாடத்தின் மேல் சீதை நிற்கிருள். கீழே வீதியின் ஒரு புறத்திலிருந்து விசுவாமித்திரன், இராமன், இலக்குவன் ஆகிய மூவரும் வெளிப்பட்டுக் கன்னிமாடத்தைக் கடந்து வீதியின் மறுபுறத்துக்கப்பால் போய்விடுகிருர்கள். மேலே நின்று கொண்டிருந்த சீதை அவர்கள் வீதிக்குள் நுழைந்த உடனேயே அவர்களைப் பார்த்து விட்டாளா? அல்லது அவர்கள் கன்னிமாடத்தின் பக்கத்தில் போகும் பொழுதுதான் அவர்களைப் பார்த்தாளா? அவர்கள் கன்னிமாடத்தின் பக்கத்தில் போகும்பொழுது அவர்களை அவள் பார்த்தாள், அதிலிருந்து இராமன் வீதியின் மறுபக்கம் சென்று கண் பார்வையிலிருந்து மறையும் வரையில் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள், என்பது தெளிவு. அதற்கு முன்னலேயே அவர்களை அவள் பார்த்துவிட்டாளா என்பதுதான் கேள்வி.

நோக்கல் நோக்கம்

பொழுதுபோக்காகவும், வேடிக்கை பார்ப்பதற்காகவும் மாடியில் நின்று கொண்டு தெருவினைப் பார்க்கும் ஆண்களும், பெண்களும் நமக்குப் பழக்கமானவர்களே. அவர்கள் தெருவின் இருபுறத்தையும் பார்த்துக்கொண்டிருப்பது இயற்கை; ஏனெனில், அதற்காகவே அவர்கள் அங்கே நிற்கிருர்கள்.

மாடத்தும்பர் மானின் விழியாள்

சீதை கன்னிமாடத்தின்மேல் அப்படி நிற்கவில்லை, அவள் நின்றதை,

"பொன்னின் சோதி, போதினின் நாற்றம், பொலிவேபோல்
தென் உண் தேனின் தீம் சுவை, செஞ் சொற் கவி
இன்பம்-
கன்னிம் மாடத்து உம்பரின் மாடே, களி பேடோடு
அன்னம் ஆடும் முன்துறை கண்டு, அங்கு, அயல்
நின்ருர்"
(மிதிலைக் காட்சிப் படலம் 23)

என்று கம்பன் பாடுகிருன்.

அதாவது, கன்னிமாடத்து உம்பரில், முன்துறையில் அன்னம், ஆணும் பெண்ணுமாக, மகிழ்ச்சியோடு ஆடிக் கொண்டிருப்பதைக் கண்டு, அவள் அங்கே அருகில் நின்ருள்.

ஆகையால், வீதியின் இருபுறத்திலும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய தேவை அவளுக்கில்லை. எனவே, விசுவாமித்திரர், இராம—இலக்குவர் தூரத்திலிருந்து வீதிக்குள் நுழைவதை அவள் கண்டிருக்க முடியாது.

ஆனுல் அவர்கள் மூவரும் வீதியில் கன்னிமாடத்தின் அருகில் நடந்து சென்றபொழுது இராமனும் அவளை நோக்கினுன்; அவளும் இராமனை நோக்கினுள். அப்பொழுது அவள் கண்ணில் அகப்பட்ட இராமன், வீதிக்கு அப்பாற் சென்று அவள் கண்பார்வையினின்று மறையும் வரையில் சீதை கண்ணிமைக்கவில்லை; இராமனும் அவள் கண்களைவிட்டு அகலவில்லை. இப்படியாக, இராமனைப் பின் தொடர்ந்து சீதையினுடைய பார்வை எல்லையில்லாமற் போய்க் கொண்டிருக்கிறது. கண்கள் இமைக்காமலேயே நின்றுவிடுகின்றன. கண்பார்வையினின்றும் இராமன் அகல்கின்றவரையில் இப்படியாகச் சீதையின் நிலை ஓவியப் பாவையின் நிலையாக ஆயிற்று. 'மறையப் போயினுன்' என்ற நான்காம் அடியின் சொல்லாட்சியும் இதனை வலியுறுத்தும்.

நோக்கு நல்கும் நாடகக் காட்சி

இப்படிப் பார்க்கும்பொழுது, 'அந்தமில் நோக்கு' என்ற சொற்றொடரிலுள்ள 'நோக்கு' என்ற சொல்லுக்குப் 'பார்வை' என்று பொருளைக் கொடுத்து, ஒரு நாடகக் காட்சியையே கண்டுவிடுகிறோம். வீதி வழியே சென்று கொண்டிருந்த இராமனை, அவன் வீதியைக் கடந்து சென்ற பிறகும் கூட விழித்த கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டு நின்று கொண்டிருக்கும் சீதையாகிய ஓவியப் பாவையை நாமும் பார்த்துக் கொண்டு நின்று விடுகிறோம்.

சீதையினுடைய இந்தச் செயல் இராமனுக்குப் பொருந்தாது. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டது என்பதென்னவோ உண்மை. ஆனால் இராமனையே பார்த்துக் கொண்டிருக்க, சீதையால் முடிந்தது; சீதையையே பார்த்துக் கொண்டிருக்க இராமனால் முடியாது. காரணம், சீதை ஒரே இடத்தில் நின்று கொண்டிருக்கிறாள்; இராமனோ அவளுடைய பார்வையினின்றும் விலகிப் போய்க் கொண்டிருக்கிறான். ஆனால், வீதியின் வழியே நடந்து போய்க்கொண்டிருக்கும் இராமனுக்கு தன் முகத்தைத் திருப்பித் திருப்பி சீதையைப் பார்த்துக் கொண்டு போவது பொருந்தவும் பொருந்தாது; முடியவும் முடியாது. அவனுடைய பாத்திரத்தின் தன்மை இதற்குப் பொருத்தத்தைக் கொடுக்காது. முன்னால் செல்பவன் முனிவன், பின்னால் வருபவன் இளவல். இடையிலே வரும் இராமன் கன்னிமாடத்தின் மேல் நின்று கொண்டிருக்கும் பெண்ணைத் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டு போக முடியாது.

'நோக்கு' என்ற சொல்லுக்குப் 'பார்வை' என்ற பொருளைக் கொடுத்து ஒரு பரந்த கருத்தையே கண்டு

விடவும் முடியும்; ஏனெனில், எல்லா பார்வையுமே முடிவற்ற பார்வைதாம்.

விரிந்தவான்; விரிந்த நோக்கு

ஆகாயத்தை அண்ணாந்து பார்க்கிறோம்; அந்தப் பார்வைக்கு எல்லையோ, முடிவோ உண்டா? ஆகாயம் அந்தப் பார்வைக்குக் குறுக்கே வரும்பொழுது அந்தப் பார்வையைத் தடுத்துவிடுகிறதே தவிர, பார்வைக்கு எல்லையில்லை. உண்மையில், ஆகாயம் என்பதே எல்லையற்ற வெளிதான்.

ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது விமானம் ஒன்று பறந்து செல்லுமாயின் அந்த ஒரு குறிப்பிட்ட இடத்தில் அந்த விமானம் பார்வைக்கும் ஆகாயத்திற்கும் இடையே செல்லுமே தவிர, பார்வைக்கு எல்லை வகுத்துவிடாது. அந்த இடத்தைக் கடந்து விமானம் சென்ற பிறகு. ஆகாயத்தில் அது மறைத்த பகுதியை நாம் மீண்டும் காண முடியும்.

தொடு வானம்

அதுபோலவே, கடற்கரையில் நின்று கொண்டு கடலைப் பார்க்கும்பொழுது வெகு தூரத்தில் கடலை ஆகாயம் தொடுவதைப் போன்ற ஒன்றைக் காண்கிறோம். அதுவும் பார்வைக்கு ஒரு குறுக்கீடாகுமேயன்றி பார்வையின் எல்லையோ, முடிவோ ஆகாது. விமானத்தைப் பற்றிக் கூறியது, கடலிலே செல்லும் கப்பலுக்கும் பொருந்தும். இந்த நோக்கில் எந்தப் பார்வையுமே எல்லையற்றதுதான். சீதையின் பார்வையையும் இந்தக் கருத்தில் தான் கம்பன், ‘அந்தமில் நோக்கு’ என்று குறிப்பிட்டான் என்று கொள்வதும் பொருத்தமேயாகும்.

இப்பொழுது, ‘நோக்கு’ என்ற சொல்லுக்கு, ‘கண்’ என்ற பொருளைக் கொடுத்தும், ‘பார்வை’ என்ற பொருளைக் கொடுத்தும், இந்தப் பார்வையை, விடாமல் இராமனைத் தொடர்ந்து சென்றதின் காரணமாக, ‘அந்தமில் நோக்கு’ என்று கம்பன் கூறினன் என கருத்து கொண்டும், பார்வைக்கு என்றுமே முடிவில்லை என்ற பரந்த கருத்தில் ‘அந்தமில் நோக்கு’ என்ற சொற்களைக் கம்பன் ஆண்டிருக்கக் கூடும் என்ற கருத்து கொண்டும் பாடலை மீண்டும் படித்து ஆனந்தமும், மகிழ்ச்சியும் அடைவோமாக:

அந்தமில் நோக்கு இமை அணைகிலாமையால்,
பைந்தொடி, ஓவியப் பாவை போன்றனள்;
சிந்தையும், நிறையும், மெய்ந் நலனும், பின் செல,
மைந்தனும், முனியொடு மறையப் போயினன்.

(மிதிலைக் காட்சிப் படலம் 39)

கலைமகள்—தீபாவளிமலர் 1983ல் வெளியானது

5. சான்ருேர் வாக்கு

1

இதிகாச, புராணங்களின் சிறப்பிடம்

நம் நாட்டில் ஆயிரமாயிரமாண்டுகளாக நிலைபெற்று, நம் வாழ்க்கையோடு ஒன்றிவிட்ட பழம்பெரும் புராணங்களும், இதிகாசங்களும் வெறும் கதைசொல்வ தற்காக மாத்திரம் தோன்றியவையல்ல; கதையின் மூலமாகத் தர்மத்தையும், அறநெறியையும் வலியுறுத்து வதற்காகத் தோன்றியவையேயாகும். சூத்திரம் போலத் தர்மத்தையும், அறநெறியையும் எடுத்துக்காட்டின், அவை படிப்பவர்களுடைய உள்ளங்களிலும், கேட்பவர் களுடைய உள்ளங்களிலும் எளிதிற் படியா.

கதாபாத்திரங்களைப் படைத்து, அவர்களின் உணர்ச்சிகளுக்கு உருக்கொடுத்து, அவர்களின் வாழ்க்கை யில் நிகழும் சம்பவங்கள் மூலமாக இந்தத் தர்மம் உணர்த்த பெறும்பொழுது, அது எளிதில் பிறர் மனத்தில் இடம் பெறுவதோடு, ஆழமாகவும் ஊன்றி விடுகிறது. காரணம், கதையைப் படிக்கும்பொழுதும் நாடகத்தைப் பார்க்கும்பொழுதும், அவை திறமையுடன் அமையுமானுல், படிப்பவர்களும், பார்ப்பவர்களும், அந்தப் பாத்திரங்களோடும், அவர்களின் உணர்ச்சி யோடும் ஒன்றி ரசிக்கத் தொடங்கிவிடுகிருர்கள். இதன் காரணமாகவே, இத்தகைய புராணங்களும், இதிகாசங் களும் நம்முடைய நாட்டில் தோன்றி நிலைபெற்றுன.

அறந்தலை நிறுத்தும் அண்ணல் காதை:

கம்பன் இராம—காதையைப் படைத்தது இராமனுடைய கதையைச் சொல்ல வேண்டும் என்பதற்காக மாத்திரமன்று. அந்தக் கதை நமக்குப் புகட்டும் அறத்தையும், நீதியையும் வலியுறுத்த வேண்டும் என்பதற்காகத் தான். இதனைப் பிறகாப்பியக் கர்த்தாக்களைப் போலக் கம்பனும் பலவிதங்களில் செய்கிறான். சில சமயங்களில் பாத்திரங்களின் செயலே தர்மத்தை நமக்கு உணர்த்துகிறது; வேறு சில சமயங்களில் பாத்திரங்களின் வாயிலாக நீதி புலப்படுத்தப்படுகிறது. இன்னும் சில சமயங்களில் கவிக் கூற்றாக இவை எடுத்துக்காட்டப் பெறுகின்றன. கம்பனுடைய காப்பியத்திலிருந்து இத்தகைய ஒன்றிரண்டை இப்பொழுது காணலாம்.

தந்தை, தன்னுடைய சிற்றன்னைக்குக் கொடுத்த வரத்தை நிறைவேற்றுவதற்காக, இராமன் சீதையுடனும், இலக்குவனுடனும், காட்டுக்குச் செல்கிறான். அயோத்தியை விட்டுப் புறப்படும்பொழுது சுமந்திரன் ஓட்டிக் கொண்டு செல்லும் தேரில்தான் இவர்கள் புறப்படுகிறார்கள். இரவு வந்ததும், இராமனோடு தொடர்ந்துவந்த அயோத்தி மக்கள் அனைவரும் ஆழ்ந்து உறங்கிய பிறகு, தேரைத் திருப்பிக் கொண்டு அயோத்தி நகருக்குச் செல்லவேண்டுமென்று சுமந்திரனுக்கு இராமன் கூறுகிறான். சுமந்திரனோ, இராமனை வனத்தில் விட்டுத் திரும்பிப் போக மனமில்லாமல் பலபடப் புலம்புகிறான். அந்நிலையில் சுமந்திரனை அணைத்துக்கொண்டு இராமன் அறிவுரை கூறுகிறான். அப்பொழுது பல அறங்களை எடுத்துக்காட்டுவான். அவன் கூறியதாகக் கம்பன் பாடும் பாடல்களில் ஒன்று:—

'பிறத்தல் ஒன்று உற்றபின் பெறுவ யாவையும்
திறத்துளி உணர்வது ஓர் செம்மை உள்ளத்தாய்!
புறத்துறு பெரும் பழி பொது இன்று எய்தலும்,
அறத்தினை மறத்தியோ, அவலம் உண்டு என?'

(தைலம் ஆட்டுப் படலம் 27)

என்பதாம்.

இந்தப் பாடலில், 'முறையாக ஆராய்ந்து உணரக் கூடிய செம்மை உள்ளத்தாய்' என்று சுமந்திரனை விளித்து, இராமன்அ வனிடம், 'பிறவி என்னும் ஒன்றைப் பொருந்திய பிறகு, அப் பிறவியில் அடைகின்ற இன்பம், துன்பம் ஆகிய அனைத்தையும் ஏற்றுக்கொள்ளவே வேண்டும். நான் வனம் புகுவதால் துன்பம் ஒன்று உண்டு என்றெண்ணி, நான் வனம் புகாமல் இருந்தால், அதன் காரணமாகத் தந்தையினுடைய சொல்லை நிறைவேற்றாதவன் என்ற பெரும்பழி வந்து என்னை அடைய, அறத்தை நீ மறந்திடலாமா?' என்று கேட்பான்.

இந்த பாடலின் மூலமாக அறிவுறுத்தப்பெறுவது: இவ்வுலகிலே பிறந்த அனைவரும், தமக்கு நேரும் அனைத்தையும், அவை இன்பம் படைப்பனவோ, அன்றி துன்பம் படைப்பனவோ, அனுபவித்தேயாக வேண்டும்; துன்பப் படைப்பது என்பதற்காக ஒன்றை ஒதுக்குதலோ, இன்பம் படைப்பது என்பதற்காக ஒன்றை வரவேற்றலோ ஆகாது; ஒன்று அறத்துக்கு ஒத்திருந்தால் அது துன்பம் பயப்பதாக இருப்பினும் அதைச் செய்தேயாக வேண்டும்; ஒன்று அறத்துக்கு ஒவ்வாதது என்றாகிவிட்டால், அதனைச் செய்வதனால் இன்பம் உண்டாவதாயினும், அதை ஒதுக்கவே வேண்டும்; உண்மையில் பார்க்கப்போனால், அறத்தின் வழியே நடப்பதில்தான் இன்பமேயிருக்கிறது. இந்த அறநெறியைத்தான் இந்தப் பாடலின் மூலம் கம்பன் அறிவுறுத்துகிறான்.

2

செம்மை சேர் பேரறம் மும்மையும் நல்குமால்:

சுமந்திரனிடத்து இராமன் அற நெறியை வலியுறுத்து வதைக் கம்பன்,

'முன்பு நின்று இசை நிறீஇ, முடிவு முற்றிய
பின்பும் நின்று, உறுதியைப் பயக்கும் பேரறம்,
இன்பம் வந்து உறும்எனின் இனிது: ஆயிடைத்
துன்பம் வந்து உறும் எனின், துறக்கல் ஆகுமோ?'
(தைலம் ஆட்டு படலம் 28)

என்று பாடுவான்.

இந்தப் பாடலில் உயர்ந்த அறத்தினுடைய அழகை யும், அமைப்பையும் அற்புதமாகக் கவிஞன் எடுத்துக் காட்டுகிறான். 'பேரறம் என்ற சிறந்த அறமானது, நல்லது என்று உலகம் போற்றும் அனைத்துக்கும் முதன்மையாக நின்று, இசையினை நிலைநிறுத்தக் கூடியது. அம்மட்டோ? இவ்வாழ்வு முடிந்த பிறகும் கூட, அது நன்மையைத் தரக்கூடியது. பேரறத்தினுடைய தன்மை இப்படியிருக்கும் பொழுது, 'இன்பம் வந்தவிடத்து, அந்தப் பேரறம் நல்லது என்று வரவேற்றுவிட்டு, துன்பம் வருமிடத்து அந்தப் பேரத்தைக் கைவிடுதல் தகுமோ?' என்று இராமன் சுமந்திரனைக் கேட்கிறான்.

பேசுவது பேரறம்; இடை பேணுவது தன்னலம்
கூசுவது துன்பம் எனில், நன்று நம இயல்பே

இந்தக் கேள்வியினுடைய அருமையைச் சற்று சிந்தித்துப் பார்போமானல், நாம், வாழ்க்கையின் அனுபவத்தை நன்கு உணர்ந்து கொள்ள முடியும். நம்

எல்லோருக்குமே இந்தப் பலவீனம் உண்டு. தர்மம் என்றும், சத்தியம் என்றும், உண்மை என்றும், அறம் என்றும் கூறிக்கொண்டிருப்போம்; ஆனல், இவற்றின்படி நடப்பதின் மூலம் இன்பம் உண்டாகின்ற வரையில்தான் இவற்றினிடம் நமக்குள்ள பற்று நிலைபெற்றிருக்கும். இவற்றின்படி நடப்பதின் மூலம் ஏதாவது நஷ்டமோ, துயரமோ, துன்பமோ ஏற்படக்கூடும் என்ற நிலை வந்து விடுமானல், நாம் அதனை அறவே கைவிட்டுவிடுவோம். இதுதான் இவ்வுலகில் வாழும் நம்மில் பெரும்பாலோர் செய்வது. 'இப்படி நீங்கள் செய்யலாமா?' என்று கம்பன் கேட்கிருன். தன்னுடைய கேள்விக்குக் காரணமும் காட்டுகிருன். 'இந்தப் பேரறமானது உங்களுக்கு இவ் வுலகில் மாத்திரம் இசை அல்லது புகழைத் தருவதோடு நின்றுவிடுவதன்றே? உங்களுடைய இவ்வுலக வாழ்வு முடிந்த பிறகும் கூட அது நின்று உறுதியை உங்களுக்குப் பயக்கிறதே!' என்பான்.

'பேரறத்தின் தன்மை இப்படியிருக்க, அதன்படி நடப்பதனல் துன்பம் வருகிறது என்பதற்காக அதை விட்டுவிடுவது நல்லதா?' என்றும் கம்பன் கேட்கிருன். அப்படிக் கேட்கும் பொழுது வேருெரு உண்மையையும் வெளிப்படுத்தவே செய்கிருன்.

பேரறம் என்பதை நாம் முழுமையாக விட்டுவிட்டதாகச் சொல்வதுமில்லை; அதன்படி நடப்பதாகவே சொல்லிக்கொண்டிருக்கிருேம். ஆனல், அதன்படி நடப்பதன் மூலம் இன்பம் வருமானல் அதை வரவேற்கிருேம்; துன்பம் வருமானல் அதனைக் கைவிட்டுவிடுகிருேம். இது சராசரி மனிதனுடைய பலவீனம். இந்தப் பலவீனமே அவனை வேஷதாரியாக்கி அவனுடைய வாழ்க்கையில், சொல் வேறு, செயல் வேறு என்று பிரித்து விடுகிறது.

இந்தப் பலவீனத்தை நன்கு புரிந்து கொண்டிருந்தவன் கம்பன். எனவேதான், அவன் இப்படிப் பேசுகிருன். கதைத் தொடர்ச்சியின்படி, அவன் அப்படிப் பேசுவது சுமந்திரனிடத்தில்தான் என்ருலும், அவன் நம்முடனேதான் பேசுகிருன். அவன் கேள்வி கேட்பதும் நம்மைத்தான்.

பெரு நன்மைத்தே அறம். பேணுதிர் உள்ளத்தால்

தன்னுடைய கருத்தை அழுத்தந்திருத்தமாக பேரறம் என்ற ஒன்று இருக்கும் பொழுது அது இன்பம் பயப்பதாயினும், துன்பம் பயப்பதாயினும், அதன்படி ஒழுகியே ஆகவேண்டும் என்று கூறுகிருன். இப்படி அவன் சொல்லும்பொழுது, அந்தப் பேரறத்தினுடைய பெரும் பயனேயும் எடுத்துக்காட்டி அந்தப் பயனுக்காகவாயினும் அதன்படி ஒழுகியாகவேண்டும் என்பதை உணர்த்துகிருன்.

இப்படிக் கம்பன் பாடுவதற்கு ஆதாரமாக அமைந்திருப்பது,

"நன்று ஆம்கால் நல்லவா காண்பவர் அன்று ஆம்கால்
அல்லல் படுவது எவன்?"

(379)

என்ற வள்ளுவனுடைய குறளேயாகும். இந்தக் குறளில் மிகமிகச் சிறிய சொற்களால் மாபெரும் உண்மையை வள்ளுவன் உணர்த்திவிடுவதைக் காண்கிருேம். நன்மை விளேயுங்காலத்தில் மகிழ்ச்சி காண்கிற மக்கள், நன்மை அல்லாதது உண்டாகும்பொழுது, துன்பப்படுவது எப்படி? என்று வள்ளுவன் கேட்கிருன். இந்த ஆணித்தரமான கேள்வியை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் கம்பன் இந்தப் பாடலேப் பாடியிருக்கிருன். முன்னிரண்டு அடிகளால் அறத்திஞல்

விளையும் பயனை அழுத்தமாக எடுத்துக்காட்டி, பின்னிரண்டு அடிகளில் அத்தகைய அறத்தினை எக்காலத்திலும் மேற்கொண்டே நடக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறான்.

3

அனைத்தும் இழப்பினும் அறம் கைவிடாமை அன்றோ பேராண்மை

இராமன் சுமந்திரனிடத்துக் கூறுவதாக அமைந்துள்ள கம்பனுடைய பாடல்களில் ஒன்று,

'நிறப் பெரும் படைக்கலம் நிறத்தின் நேர் உற,
மறப் பயன் விளக்குறும் வன்மை அன்றுஅரோ;
இறப்பினும், திரு எலாம் இழப்ப எய்தினும்,
துறப்பிலர் அறம் எனில் சூரர் ஆவதே,'
(தைலம் ஆட்டுபடலம் 29)

என்பதாகும்.

இப்பாடலிலும் கம்பன் ஓர்அற்புதமான கருத்தை விளக்கவே செய்கிறான். நம்மிடையே சூரர்கள் பலர் இருக்கிறார்கள். அப்படிச் சூரர்களாக இருப்பவர்கள் தங்களுடைய சூரத்தன்மைக்காகப் பெருமைப் படுவார்கள்; பிறர் தங்களைப் புகழ வேண்டுமென்றும் எதிர் பார்ப்பார்கள். ஆனால், உண்மையில் யார் சூரர் என்பதைக் கம்பன் நமக்கு உணர்த்தத் தொடங்குகிறான். மிகவும் வலிபொருந்திய படையானது தன்னுடைய மார்புக்கு நேராக வரும்பொழுது, அதைக் கண்டு அஞ்சி விடாமல் வீரச் செயலை மேன்மேலும் செய்துகொண்டு போகிற ஒருவனுடைய வலிமை சூரத்தன்மையாகாது என்கிறான். அப்படியானால், 'எதுதான் சூரத்தன்மை?' என்று கேட்டு, அவனே அதற்கு விடையும் அளிக்கிறான்,

இறப்பதாயினும், 'திரு எலாம் இழப்ப எய்தினும்,' அதாவது, தம்முடைய செல்வம் அனைத்தையுமே இழப்பதாக இருந்தாலும், அறத்தைக் கைவிடாமல் யார் இருக்கிறார்களோ அவர்கள்தாம் சூரர் என்று கூறுவான்.

இங்கு கம்பன் 'சூரர்' என்ற சொல்லைப் பயின்றிருப்பது மிக மிகப் போற்றத்தக்கது. ஏனெனில், 'சூரர்' என்ற சொல்லுக்கு நாம் ஒருவிதமான பொருளை மனத்திலே கொண்டிருக்கிறோம். பெரும்பாலும் உடல் வலிமையையோ, மனவலிமையையோ காட்டி, கடுமையான எதிர்ப்பு வந்த பொழுதிலும், புறமுதுகு காட்டி ஓடாமல் எதிர் நின்று வீர சாகசம் புரிபவரைத் தான் நாம் 'சூரர்' என்று எண்ணுகிறோம்; சொல்கிறோம். நாம் 'அவன் என்ன மகா சூரனோ?' அல்லது 'அதன் என்ன பெரிய சூரனோ?' என்று சர்வசாதாரணமாகக் கேட்கிறோம். இப்படிக் கேட்கும் போது, பெரும்பாலும் உடல்வலிமையையே மனத்திற்கொள்கிறோம். 'அவன் என்ன சூரப்புலியோ?' என்று கேட்கும்போது, நிச்சயமாக உடல்வலிமையைத்தான் மனத்தில் கொள்கிறோம். வேறு சில சமயங்களில் எந்தவிதமான திறமையையுமே சூரத்தனத்தில் அடக்கிக் கொள்கிறோம். உண்மையில் சூடாமணி நிகண்டு 'சூரம்' என்ற சொல்லுக்கு 'வீரம்' என்றே பொருள் கொடுக்கும். அப்படியென்றால், 'வீரம்' என்ற சொல்லுக்கு என்ன பொருள் என்ற கேள்வி பிறக்கவே செய்யும்.

பொருள் சிறந்தன்றே உலகில். அதனினும்,
உயிர் சிறந்தன்றே யாவர்க்கும். அதனினும்,
நனிசிறந்தன்றே நல்லறம் வையத்தீர்!

ஆனால், இந்தச் சூரத்தன்மைக்கே கம்பன் புதிய இலக்கணம் வகுக்கிறான். அந்த சூரத்தன்மை எது

என்றால், என்ன நேர்ந்தாலும் அறத்தைக் கைவிடாமல் நிற்பதுதான் சூரத்தன்மை என்று கூறுவான். இவ்வுலக மக்கள் மிகுதியாக விரும்புவது இரண்டு: ஒன்று தங்களுடைய உயிர்; மற்றொன்று தங்களுடைய செல்வம். இந்த இரண்டுக்கும் எங்காயினும் ஆபத்து வந்துவிடுமென்றால் நம்மில் பெரும்பாலோர் நம்முடைய கடமைகளை மறந்துவிடுகிறோம்; நம்முடைய அறத்தை மறந்துவிடுகிறோம். அதற்கு மாறாக, இவ்விரண்டுக்கும் ஆபத்து வராமல் இருப்பதற்கு என்னென்னவெல்லாம் செய்ய வேண்டுமோ, அவற்றையெல்லாம் செய்ய முற்படுவோம். இவ்விரண்டையுமே குறிப்பாக எடுத்துக் காட்டிக் கம்பன் பேசுகிறான். யார் ஒருவன் தன்னுடைய உயிரே போவதாக இருந்தாலும் சரி, தன்னுடைய செல்வம் அனைத்தும் அழிவதாக இருந்தாலும் சரி, எதையும் பொருட்படுத்தாமல், அறத்தைக் கைவிடாமல் இருக்கிறானோ அவனைத்தான் சூரன் என்று சொல்வான். இப்படிச் சொல்வதன் மூலம் அறமே உயிரையும், செல்வத்தையும்விடச் சிறந்தது என்று கம்பன் கூறுகிறான். இங்கும் ஒன்றைக் காணவேண்டும். பொதுவாக, மக்களுக்கு உயிரும், செல்வமும் சிறந்தவையாக இருப்பினும், சிற்சில சந்தர்ப்பங்களில், உயிரைப் பெரிதாகக் கருதுவதா, செல்வத்தைப் பெரிதாகக் கருதுவதா? என்ற கடுமையான சோதனை உண்டாவதுமுண்டு. செல்வத்தைப் பெரிதாகக் கொள்பவர்கள் சில சமயங்களில் அதைத் தேடும் வழியைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். அதே சமயத்தில், அதன் பயன் நல்ல வழிகளில் செலவழிப்பதேயாகும் என்பதை உணரவும் மாட்டார்கள். வேறு சிலரோ, செல்வத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தாம் வாழும் முறைக்கே முக்கியத்துவம் கொடுப்பார்கள். மானத்தோடு வாழ வழியில்லை என்றால், உயிரையும்

பெரிதாக மதிக்க மாட்டார்கள். இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டுதான் கவிஞன், உயிர், செல்வம் என்ற இரண்டையும் உரைகல்லாக எடுத்துக்கொள்கிறுன். இங்கும் கூட, 'செல்வத்தை இழப்பினும்' என்று சொல்லி விடாமல், 'திருவெலாம் இழப்பினும்' என்று அனைத்துச் செல்வத்தையுமே குறிப்பிடுகிறுன்.

இப்படியாகச் சுமந்திரனுக்கு இராமன் கூறுவதாகப் பாடுவதன் மூலம் கம்பன் சூரத்தன்மைக்கு மாத்திரமன்று அறத்திற்கும் ஓர் புதிய இலக்கணத்தை வகுத்துவிடுகிறுன்.

1982-ஜனவரி - 17, 18, 19 ஆகிய தினங்களில் சென்னை வானொலி நிலையத்திலிருந்தும் ஒலிபரப்பப் பெற்றது.

6. தெறித்த முத்துகள்

ஒரு மாபெருங் கலைஞனுடைய படைப்பிலே, அவனுடைய திறமை வெளிப்படாத இடமே இல்லை என்று சொல்வதற்கு யாரும் அஞ்ச வேண்டியதில்லை.

அது கதைத் தொடர்ச்சியாக இருக்கட்டும், ஒரு பாத்திரத்தின் பண்பு நலனாக இருக்கட்டும், அப் பாத்திரம் அநுபவிக்கும் அறப்போராட்டமாகவே இருக்கட்டும், இயற்கை வருணனையாக இருக்கட்டும், ஒரு பாத்திரத்தின் மனச் சிந்தனையாக இருக்கட்டும், எதிலும் அவனுடைய கற்பனையும் கவிதா விலாசமும் பிரகாசிக்கவே செய்யும்.

கதையைச் சொல்லிக்கொண்டு போகிறபோக்கில், வெகு சில இடங்களில் மாத்திரம் காப்பிய கர்த்தா கதையின் தொடர்ச்சியைப் படிப்பவர்க்கு உணர்த்துவதற்காக, கவிக் கூற்றாகச் சில செய்திகளைக் கூறுவான். மற்றபடி பாத்திரங்களைப் பேசவும், செயல்படவும் விட்டு தான் மட்டும் எப்பொழுதும் பின்னாலேயேதான் நின்று கொண்டிருப்பான்.

பாரகாவியம் ஒன்றைப் படைக்கும் மாபெருங் கவிஞன் ஒருவனுடைய படைப்பிலே உள்ள, ஒவ்வொரு பாடலும், ஒரு காப்பியமாகவே அமையும். சொல்லப் போனால், ஒரு பாடலில் இடம் பெற்றுள்ள ஒரு சொல் கூட மங்காத ஒளியை என்றும் வீசிக் கொண்டு இருக்கும் காப்பியப் படைப்பாக ஆகும்.

கம்பனோ கற்பனைத் திறத்திலும், கவிதா விலாசத்திலும், சொல்லாட்சியிலும், பொருட்செறிவிலும், நுண்ணிய

உணர்வுகளை வெளிப்படுத்துவதிலும், உணர்ச்சிகளுக்கு இடையே உண்டாகும் போராட்டத்தை விவரிப்பதிலும் ஈடும் இணையும் அற்றவன்.

அத்தகைய கவிஞனுடைய படைப்பினை ரசிப்பதற்கு எந்தப் பாடலை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். இந்தப் பாடல் சிறந்தது, அந்தப் பாடல் சிறந்தது அன்று என்று யாரும் சொல்லிவிடமுடியாது. அந்த அளவிற்கு அவனுடை மேதாவிலாசம் பரந்து நிற்கிறது.

சாதாரணமாகவே நமக்கும் ஒரு கவிஞனுக்கும் என்ன வேறுபாடு என்ற கேள்வியை நம்மை நாமே கேட்டுக்கொள்வோமேயானால் சிந்தனைக்கு இடம் கொடுக்குமிடத்து, நுட்பம் நிறைந்த பல விடைகள் கிடைக்கும்.

அன்றாட நிகழ்ச்சிகள் என்று பலவற்றை நாம் கூர்ந்து கவனிக்காமல் விட்டுவிடுகிறோம். கவிஞனோ எதனையும் கூர்ந்து கவனிக்காமல் இருப்பதில்லை. எனவே தான் ஒரு கவிஞனுடைய பெருமைக்கு முதல் தேவையாக இருப்பது நுண்ணியநோக்கு.

இதனைத்தான் ஆங்கிலத்தில் Keen Observation என்பர்.

இந்த நுண்ணிய நோக்கு மட்டும் இருந்து விட்டால் போதாது. இந்த நுண்ணிய நோக்குக் காரணமாக, கவிஞன் தான் காண்பதை பிறர்க்கு உணர்த்த விரும்பும் பொழுது அதற்கு அவன் ஓர் அழுத்தத்தையும், ஆழத்தையும் கொடுத்துவிடுகிறான்.

இதனைத்தான் ஆங்கிலத்தில் Exaggeration என்பர். உயர்வு நவிற்சி என்பதூஉம் இது.

ஒருவன் நாடக அரங்கேறி ஒரு பாத்திரத்தின் பங்கு ஏற்று நடிப்பானேயானல், அந்த நடிப்பில் சற்று மிகை இருக்கத்தான் வேண்டும்; இருக்கவே செய்யும். அப்படி அமையாவிடில் அது நடிப்பே ஆகாது. காரணம், நாடகத்தைப் பார்க்க வந்தவர்கள், யார் எந்தப் பாத்திரம் ஏற்று நடிக்கிருர் என்று நன்கு அறிவர். அவர்கள் அந்த நடிகரது இயல்பை மறந்து, அவன் ஏற்றிருக்கும் பாத்திரத்தின் இயல்பையே அனுபவிக்க வேண்டுமானல் அந்த நடிப்பில் சற்று மிகை இருக்கத்தான் வேண்டும்.

இவை இரண்டுமல்லாமல் ஒரு பெருங் கவிஞனுக்கு இன்னெரு திறமையும் வேண்டும். அதுதான் கற்பனே.

இந்தக் கற்பனைதான், இல்லாததை இருப்பதாக நம்பச் செய்துவிடுகிறது. இந்தக் கற்பனேத் திறனுடைய பெருமை எந்த அளவிற்குப் போகிறது என்ருல், அவன் இல்லாத ஒன்றை இருப்பதாகச் சொல்லும்பொழுது, அப்படி ஒன்று இல்லேயே என்று நாம் எண்ணிக்கூடப் பாராத நிலேயில் நம்மை வைத்துவிடுகிருன். இந்தக் கற்பனேத் திறனேத்தான் ஆங்கிலத்தில் imagination என்பர்.

இந்தக் கற்பனேத் திறனேப் பகுதியாகக் கொள்ளினும் சரி, இன்று எனினும் சரி, தான் சொல்ல வந்ததைத் தெளிவாகவும், உள்ளத்தில் உறுத்தும்படியும் செய்வதற்குக் கவிஞன் கையாளும் உத்திகளில் ஒன்று உவமையாகும். உவமையின் மூலமாக நமக்கு, முன்னர் நமக்குத் தெரிந்திராத ஒன்றைத் தெளிவுபடுத்த முடியும்; அன்றி நமக்கு ஏற்கனவே தெரிந்த ஒன்றுக்கும், இப்போது காண்கின்ற ஒன்றுக்கும் இடையே உள்ள ஒற்றுமையையும் இணைப்பையும் எடுத்துக் காட்ட முடியும்.

பற்பல சந்தர்ப்பங்களில் கவிஞனுடைய உவமையை நோக்கும்பொழுது, "அடடா! நாமும் பார்த்ததுதானே!

நாம் நினைவில் கொள்ளவில்லையே! அவன் இப்பொழுது நினைவில் வைத்துக்கொண்டு, இரண்டுக்கும் இடையே உள்ள ஒற்றுமையை எடுத்துக் காட்டுகின்றானே'' என்று நம்மை அறியாமலேயே நம் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றும்.

இதனை உணர்ந்து கொள்வதற்கு ஒரு திருக்குறளை விடச் சிறந்தது ஒன்றைக் காணமுடியாது.

"களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று"

(திருக்குறள்929)

இந்த குறட்பாவின் திரண்ட கருத்தாவது:

''கள் உண்டு மயங்கியவனைக் காரணம் காட்டித் தெளிவித்தல், நீரின் கீழ் மூழ்கின ஒருவனைத் தீ விளக்கு (தீப்பந்தம்) கொண்டு தேடினாற் போன்றது.''

இது சுருங்கிய, திரண்ட பொருள் ஆயினும், இக் குறட்பாவில் இடம் பெற்றிருக்கும் நயமோ மிக அருமை யானது.

இக் குறட்பாவில் வள்ளுவர் இரண்டு கருத்துகளை எடுத்துக் கொண்டு ஒன்றுக்கு, மற்றதை உவமையாகக் காட்டுகிறார்.

களித்தானைக் காரணம் காட்டுதல் என்பதுதான், அவர் எடுத்துக் கொண்ட பொருள். அதாவது நன்றாகக் குடித்துவிட்டு தன் சுய நினைவு அற்று வீழ்ந்து கிடக்கிற ஒருவனுக்கு அவன் குடிப்பது தவறு என்று அந்த நிலையில் எடுத்துக் காட்டுவது முடியுமா? சரியா, தவறா, என்பதைப் பாகுபடுத்தித் தெரிந்து கொள்வதற்கு ஒருவன் சுய உணர் வோடு இருக்க வேண்டும். எதைச் செய்யக் கூடாதோ,

அதைச்செய்து, தன் உணர்வை முற்றும் இழந்து விட்ட ஒருவனிடம், அப்படி அவன் சுய உணர்வை இழந்திருக்கிற நிலையில், ''நீ குடிப்பது தவறு'' என்று, எப்படி அறிவுறுத்த முடியும்? உணர்த்தத்தான் முடியும்? நிச்சயமாக அது முடியாது.

அப்படி முயல்வது எது போன்றது என்றால், தண்ணீருக்குள் மூழ்கிக் கிடப்பவனைத் தீப்பந்தம் கைக் கொண்டு, நீருக்குள் தானும் முழுகித் தேட முயல்வது போல்வது.

காரணம் என்ன எனில், தீப்பந்தம் எடுத்துக் கொண்டு, நீரில் மூழ்கிய உடனேயே, பந்தம் அவிந்து போகும். எனவே, ஏற்கனவே மூழ்கியவனைத் தேடுவதற்கு அந்தத் தீப்பந்தத்தின் ஒளியை நாம் பெற மாட்டோம்.

(இன்றைய விஞ்ஞான உலகில் நீர்க்குள், செறி இருளில், மூழ்கித் தேடுவதற்குப் பயன் படுத்தக் கூடிய விளக்குகள் இருப்பதுபோல வள்ளுவர் காலத்து இல.)

சற்று சிந்தித்துப் பார்த்தால்தான் இவ்வுவமையின் சிறப்பு நன்கு விளங்கும். எப்பொழுது ஒருவன் நன்கு குடித்துவிட்டுச் சுய நினைவை இழந்து விடுகிறானோ, அப்பொழுதே, அவன் எந்த அறிவுரையையும் கேட்கின்ற நிலையில் இரான். அவனுடைய உள்ளம் தாழிடப்பட்டுக் கிடக்கும்.

அந்த அறிவுரை, அவனிடம் சேர்வது இல்லை. எது போல என்றால், தீப்பந்தத்தின் உதவி கொண்டு ஏற்கனவே நீரில் மூழ்கி இருக்கின்ற ஒருவனைத் தேட தானும் நீருக்குள் முழுகும் பொழுது, கைக்கொண்ட தீப்பந்தம் அந்த நீரில் அணைந்துவிடுவது போல.

இந்தப் பின்னணியில் கம்பன் பாடல் ஒன்றின் அழகினைப் பார்க்கலாம்.

பாலகாண்டத்தில் ஆற்றுப் படலத்தில் ஆற்று நீர் பெருகி ஓடும் போக்கைப் பல பாடல்களில் கம்பன் விளக்குகிறான்.

ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு புதிய உவமையைப் புகுத்துகிறான். சில உவமைகள் மிக எளியன. இவை நம் வாழ்வில் நிகழும் நிகழ்ச்சிகளாகவும் அமையும்.

வேறு சில உவமைகள் வேதாந்த சித்தாந்த ஞானப் பிழிவாகவும் அமையும்.

அத்தகைய பாடல்களில் ஒன்று:

ஈக்கள் வண்டொடு மொய்ப்ப, வரம்பு இகந்து,
ஊக்கமே மிகுந்து, உள் தெளிவு இன்றியே,
தேக்கு எறிந்து வருதலின்—தீம்புனல்—
வாக்கு தேன்நுகர் மாக்களை மானுமே.

(ஆற்றுப் படலம் 10)

இந்தப் பாடலின் திரண்ட பொருள்:

''ஈக்களும், வண்டுகளும் மொய்க்க, எல்லை கடந்து, ஊக்கம் மிகுந்து, உள் தெளிவு இன்றி, தேக்கு எறிந்து வருதலால், இனிய நீர்ப் பெருக்கு, வார்க்கப்படுகின்ற கள்ளைக் குடிக்கின்ற மாந்தரை ஒத்தது'' என்பதாம்.

ஆற்றில் வெள்ளம் பெருகும் பொழுது அது கரையைக் கடந்து ஓடுகிறது. அந்த வெள்ளத்தின் வேகத்தினாலேயே, அதன் வழியில் தென்படும் தேக்கு மரங்களை முறித்துக்கொண்டு வருகிறது.

இங்கு தேக்கு மரத்தை மட்டுமே குறிப்பாகக் கூறிய போதிலும், பல்வகை மலர்களை, பல்வகை மரங்களை அது அடித்துக் கொண்டு வரத்தான் செய்கிறது.

"அகில் சுமந்து, ஆரம் முழுமுதல் உருட்டி, வேரல் பூவுடை அலங்கு சினை புலம்ப, வேர் கீண்டு, தண் கமழ் அலர் இருல் சிதைய, நன் பல ஆசினி முது சுளை கலாவ, நாக நறுமலர் உதிர, வாழை முழு முதல் துமிய, தாழை இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கி, கறிக் கொடிக் கருந்துணர் சாய, சேண் நின்று இழும் என இழி தரும் அருவி" என்பார் நக்கீரர்.

(திருமுருகாற்றுப்படை 297-316)

பெருகி வரும் நீர்ப்பரப்பு, பல்வகை மலர்களையும் பெற்று விளங்கும்; செம்மண் கரைத்த நிறத்ததாக அமையும் என்பர். இதனை இலக்கியங்கள் 'கலுழி' என்னும்.

"பெய்த குன்றத்துப் பூநாறு தண் கலுழ்
மீமிசைத் தாஅய வீஇ சுமந்து வந்து
இழிதரும்..."

(குறுந்தொகை 200)

"சிலம்பு புல்லென வாழை தரும்
தீய கலுழி"

(குறுந்தொகை 327)

"குரவமும், வகுளமும், கோங்கமும், வேங்கையும்
....
புனல் யாறு அன்று; இது பூம்புனல் யாறு"

(சிலம்பு 2 : 13, 151-174)

என்று குறிப்பிட்டது போல பல்வகை மலர்கள் விராய் வருதலால் ஆற்று நீர்ப்பரப்பை, ஈக்கள், வண்டொடு மொய்த்தன என்பர்.

அந்த மலர்களில் உள்ள தேனை உண்பதற்காக, வண்டுகளும், ஈக்களும் மொய்க்கின்றன.

வரும் வழியில் வனம் அழித்து, மரம் முறித்து, கரை கடந்து, பெருகும் ஆற்று நீர் தெளிவின்றித்தான் இருக்கும்.

"நீடிய மரத்துக் டுகோதோய் மலிர்நிறை"
(குறுந்தொகை 79)

என்ற தொடர் ஆற்றுப் போக்கைச் சுட்டுவதே.

எல்லை கடந்து, வேகமாக வரும் என்பதனைக் குறிக்க "ஊக்கமே மிகுந்து" என்ற சொற்களைக் கவிஞன் ஆள்கிறான்.

(ஊக்கு— முன் நோக்கி உந்துதல்.)

(ஊக்கம்—களி மயக்கம், வேகம்.)

இந்த நிலையில் வருகின்ற வெள்ள நீரைக் குறிப்பிடும் பொழுது கவிஞன் நினைவிற்கு வருவது ஒன்று உண்டு.

அதுதான் வார்க்கின்ற கள்ளை மட்டறக் குடித்து, விழி சிவந்து, மொழி குழறி, நடை தள்ளாடும் மனிதர்கள்.

பெருகு புனல் பற்றிக் குறிப்பிட்ட ஒவ்வொன்றுக்கும், பெருங்குடியர்க்கும் உள்ள பொருத்தத்தைக் காணலாம். இப் பாடல் இரட்டுற மொழிதல் ஆகும்.

கரை கடந்து, வேகமாகப் பாய்ந்து ஓடும் ஆற்று நீர்க்கு, நெறி கடந்து குடியில் மூழ்கித் தள்ளாடுகின்ற மனிதர்கள் உவமை.

(வரம்பு - கரை, முறைமை)

(இகத்தல் - தவறுதல், கடத்தல்)

'வரம்பு இகந்து' என்ற சொற்கள் ஆற்றைக் குறிப் பிடும் போது, 'இரு கரைகளையும் உடைத்துக் கொண்டு' என்ற பொருள் தரும்.

அதே சொற்கள் கள்ளுண் மாக்களைக் குறிப்பிடும் பொழுது, நெறி கடந்து, ஒழுக்கம் பிறழ்ந்து என்று பொருள் தரும்.

'ஊக்கம்' என்ற சொல்லின் பொருளை முன்னரே பார்த்தோம். வெள்ளம் பெருகி வருவதனால், ஆற்று நீர் உந்தப் பெற்று வேகமாகப் பாய்கிறது. எனவேதான் 'ஊக்கமே மிகுந்து' என்று புலவர் குறிக்கிறார்.

'உந்தி' என்ற சொல் ஆறு என்ற பொருளில் பயிலப் பெறுவதும் இதனால்தான் போலும்.

''கலங்கல்அம் புனல்...வலஞ்சுழி உந்திய''

(பரிபாடல் 16 : 7)

கள் குடிப்பவனோ, குடிக்கும் ஆசையால் உந்தப்பட்டு, மட்டற மட்டு அருந்தி, மயங்கி, தள்ளாடிச் செல்கிறான். (ஊக்கம்—கள் உண்டதனாலாய களிமயக்கம்.)

'உள் தெளிவின்றி' என்ற தொடர் ஆற்றினைக் குறிக்கும்போது, கரைத்த செம்மண் நிறத்ததாகிப் பாயும் செம்புனல் என்ற பொருள் தரும்.

கட்குடியனைக் குறிக்கும்போது, அவன் உணர்வும், தெளிவும், அறவே இழந்தவனாக இருக்கும் நிலையை உணர்த்தும்.

ஆற்று நீரில் தொடைஇழி இருலின் தேனும், அடித்து வரும் மரம், செடி, கொடிகளில் உள்ள மலர்களின் தேனும், ஆனைமதமும், கலந்திருப்பதால், நுகர்தற் பொருட்டு, நீர்ப்பரப்பினை ஈக்களும் வண்டுகளும் மொய்க்கும்.

கள்ளுண்டவர் முகத்தும், உடம்பும், கடைவாயிலும் கள் வழிந்து கிடக்கக் கண்டு, வண்டொடு ஈக்கள் வந்து ஈண்டும்; மொய்க்கும்.

ஆற்றுநீர்ப் பெருக்கில் அடித்து வரப்படுவனவற்றுள் தேக்கும் ஒன்று என்று முன்னர்க் கண்டோம். 'தேக்கு

எறிந்து' என்ற தொடர், தேக்க மரங்களை வேரோடு கெல்லி எறிந்து, கரையில் ஒதுக்கும் என்று பொருள் படும்.

''நறையும், நரந்தமும், அகிலும், ஆரமும்
துறை துறைதோறும், பொறை உயிர்த்து ஒழுகி
நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பு அகம் புகும்''
(பொருநராற்றுப்படை 238-240)

என்பர்.

'தேக்கு' என்ற சொல் கட்குடியர்க்குப் பொருத்து மிடத்து ஏப்பம் என்ற பொருள் தந்து நிற்கும்.

[தேக்கு - ஏப்பம் (புளித்த ஏப்பம்), தேக்கமரம்]

'மருந்து என வேண்டாவாம்'* என்ற குறட்பா விற்கு உரை வரைந்த பரிமேலழகர், 'அருந்தியது அற்றது' என அறிவது எவ்வாறு என்று குறிப்பிட ''யாக்கை நொய்ம்மை, தேக்கின் தூய்மை, கரணங்கள் தொழிற் குரிய ஆதல், பசி மிகுதல்''என்று அமைப்பார்.

தேக்கின் தூய்மை—வழக்கிடை பசி ஏப்பம் எனப்படு கிறது.

*(திருக்குறள் 942)

குடி எவ்வளவு கொடியது என்பதனை வலியுறுத்துவ தோடன்றி மனிதப் பண்புக்கு ஏற்றதும் அன்று என்பதனையும் குறிப்பாகக் காட்டும் வகையில், அப்படிக் குடிப்பவர்களைக் கம்பன் மாக்கள் (விலங்கு அனையர்) என்றே குறிப்பிட்டுவிடுகிறான்.

''முடலை யாக்கை முழுவலி மாக்கள்
வண்டு மூசு தேறல் மாந்தி, மகிழ் சிறந்து
துவலைத் தண்துளி பேணார், பகல் இறந்து,
இரு கோட்டு அறுவையர் வேண்டு வயின் திரிதர—''
(நெடுநல்வாடை 32 - 35)

என்ற இடத்தும்,

'மட்டு உண் வாழ்க்கை வேண்டுதிர் ஆயின்,
கட்டு உண் மாக்கள்! கடம் தரும்' என ஆங்கு.

(சிலம்பு 2:12;18, 19)

என்ற இடத்தும்,

மட்டு உண் மாந்தர் மாக்கள் என்றே குறிப்பிடப்பட்டமை காணலாம்.

இவற்றை எல்லாம் மனத்திற் கொண்டு பார்க்கும் பொழுதுதான், ஆற்றுப் படலத்தில் இடம் பெற்றுள்ள இப்பாடல், மிகச்சாதாரணமானது என்றாலும் கம்பனுடைய கவித்திறனை எந்த அளவிற்கு வெளிப்படுத்துகிறது என்பது தெளிவாகும்.

இப் பாடலில் பெரிதும் ஈடுபட்ட வியாக்யான கர்த்தா பெரியவாச்சான் பிள்ளை அவர்கள், தாம் உரை கூறப் போந்த,

மஞ்சு உலாம் சோலை வண்டுஅறை மாநீர்
　　மங்கையர் வான்கலி கன்றி
செஞ்சொலால் எடுத்த தெய்வ நன்மாலை
　　இவைகொண்டு சிக்கெனத் தொண்டீர்
துஞ்சும்போ தழைமின்; துயர் வரில் நினைமின்;
　　துயரிலீர் சொல்லிலும் நன்றாம்;
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
　　நாராய ணாஎன்னும் நாமம்.

(1 : 1 : 10)

என்னும் பெரிய திருமொழிப் பாசுரத்தின்வியாக்கியானக் குறிப்பில் இப் பாடலைப்பற்றிக் குறிப்பிடுவார்.

"வண்டு அறை என்கிறது சோலைக்கு விசேஷணமாகவும் ஆம்; மாநீர்க்கு விசேஷணமாகவும் ஆம். ஜலத்தினுடைய ரஸ்யதையாலே 'ஈக்கள் வண்டொடு

மொய்ப்ப' என்று ஆற்று வரவுகளிலே சொல்லுவார்கள் ஆயிற்றுத் தமிழர்'' என்பார்.

இவ்வியாக்கியானத்தைத் தமிழாக்கம் செய்த டாக்டர் தெ. ஞான சுந்தரம் அவர்கள்,

'வண்டு அறை' என்ற தொடரைக் குறிப்பிட்டு, ''இதனைச் சோலைக்கு அடைமொழி ஆகவோ, மாநீர்க்கு அடைமொழி ஆகவோ கொள்ளலாம். நீரின் சுவை மிகுதியால், 'ஈக்கள் வண்டொடு மொய்ப்ப' (கம்ப ராமாயணம் - ஆற்றுப் படலம் 10)ஆறு வருவதாக ஆற்று வரவு கூறும் பாடல்களில் சொல்லுவார்கள் தமிழ்ப்புலவர் கள்'' என்பார்.*

* * *

இனி நாட்டுப் படலத்தில் காணப்பெறும் ஒரு பாடலையும் நோக்கலாம்.

முறை அறிந்து, அவாவை நீக்கி,
முனிவுழி முனிந்து, வெஃகும்
இறை அறிந்து, உயிர்க்கு நல்கும்.
இசை கெழு வேந்தன் காக்கப்
பொறை தவிர்ந்து உயிர்க்கும் தெய்வப்
பூதலம் தன்னில், பொன்னின்
நிறைபரம் சொரிந்து, வங்கம்
நெடுமுதுகு ஆற்றும் நெய்தல்.

(நாட்டுப்படலம் 19)

என்பதுதான் அந்தப் பாடல்.

இந்த பாடலினுடைய தெளிந்த பொருள் என்ன வென்றால்,

---

* பெரிய திருமொழி - உரையும், தமிழாக்கமும் - தமிழாக்கம். டாக்டர் தெ ஞானசுந்தரம், தமிழ்ப் பல்கலைக் கழகம். தஞ்சாவூர்

“அரசநீதியை நன்கு ஆராய்ந்து அறிந்து, தகாத ஆசைகளை நீக்கி, கோபம் கொள்ள வேண்டிய இடத்தில் கோபம் கொண்டு, (மக்கள்) விரும்பிக் கொடுக்கத்தக்க வரிப் பொருளை முறை அறிந்து பெற்று, தன் கீழ் வாழும் குடிகட்கே அவற்றைக் கொடுக்கின்ற, புகழ்மிக்க வேந்தன் காப்பதால், பாரம் நீங்கி, பெருமூச்சு எறிந்து, இளைப்பாறுகின்ற தெய்வத்தன்மை பொருந்திய பூமியைப் போல, கடற்கரையில் வங்கங்கள் தம்முடைய நிறைந்த பாரத்தை இறக்கி, அவற்றைச் சுமந்து வந்த தம்முடைய நீண்ட முதுகிற்கு ஆறுதல் அளிக்கும்”.

இப்பாடலில் பல சிறப்புகள் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

ஒன்று: அரசன் தன் ஆட்சியை எப்படி நடத்த வேண்டும் என்பது.

இரண்டு: அப்படி நடத்தினால் அவன் ஆளும் நாடு எப்படி இருக்கும் என்பது.

ஓரரசன் தன் நாட்டை எப்படி ஆள வேண்டும் என்பதற்குப் பல வரையறைகளை இந்தப் பாடல் கொடுக்கிறது. முதன் முதலாக ஆளும் முறை அறிதல்: அதாவது தான் ஏற்றுக் கொண்ட பொறுப்பினை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்ற நெறியினைத் தெரிந்து கொள்ளுதல் ஆகும்.

இந்த முறை அறிதல் என்று சொல்லி விட்டாலே, அதற்குள் ஆட்சிப் பண்புகள் அனைத்தும் அடங்கிவிடும். எனினும், கவிஞனுடைய மனமோ, முறை அறிதல் என்று கூறியதோடு நிறைவு பெற்று விடவில்லை. அந்த முறை அறிதலுள் முக்கிய அங்கங்களாக, வேறு சிலவற்றையும்

அவன் எடுத்துக் கூறிவிடுகிருன். அவற்றில் ஒன்று "அவாவை நீக்குதல்."

'அவா' என்ற சொல்லே வேண்டத்தகாத ஆசையைத் தான் குறிப்பிடும். பார்க்கப் போனுல், திருக்குறள் 37ஆம் அதிகாரத்தலைப்பு "அவா அறுத்தல்" என்பதாம். இந்த அதிகாரத்தின் முன்னுரையில் பரிமேலழகர், "அவா ஆவது பொருள்களைப் பெறவேண்டும் என்று மேன்மேல் நிகழும் ஆசை" என்பார்.

"மெய் உணர்தல்" என்ற இதன் முன் அதிகார ஈற்றுக் குறட்பா:

காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றின்
நாமம் கெட, கெடும் நோய்.

(திருக்குறள் 360)

"அநாதி ஆய அவிச்சையும், அது பற்றி யான் என மதிக்கும் அகங்காரமும், அது பற்றி எனக்கு இது வேண்டும் என்னும் அவாவும், அது பற்றி அப் பொருள் கண்செல்லும் ஆசையும், அது பற்றி அதன் மறுதலைக்கண் செல்லும் கோபமும் என வடநூலார் குற்றம் ஐந்து என்முர்.

இவர், அவற்றுள் அகங்காரம் அவிச்சைக் கண்ணும், அவாவுதல் ஆசைக் கண்ணும் அடங்குதலான் மூன்று என்முர்."

(பரிமேலழகர் உரை)

அது போலவே "அவா அறுத்தல்" என்ற அதிகாரத்தின் முதற் குறள்,

அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅ பிறப்பு ஈனும் வித்து

(திருக்குறள் 361)

என்பதாகும்.

இப்பாவின் தெளி பொருள்,

"எல்லா உயிர்களுக்கும், எக்காலத்திலும் ஒழியாமல் வருகின்ற பிறவித் துன்பத்தை உண்டாக்கும் வித்து அவா என்று கூறுவர்" என்பதாம்.

எல்லா உயிர்களுக்குமே, அவாவின் நிலை இதுவாகு மாளுல், தன் குடிமக்கள்மீது ஆட்சி செலுத்தும் அரசனுக்கு இத்தகைய அவா எத்துணைத் தீமையை விளைவிக்கும் என்பதனைத் தனித்து விரிக்கத் தேவை இல்லை.

என்றும் மனிதன் செல்வத்தைத் தேடுவதற்கு அவா உள்ளவனுகவே இருக்கிறுன். இங்கு வள்ளுவர் எடுத்துக் காட்டுவது என்ன என்ருல், அந்த அவா இன்மையே விழுச் செல்வம் ஆகும்; அது அன்றியும், அதைப் போன்ற சிறந்த செல்வம் வேறு எதுவும், எங்கும் இல்லை என்பதாகும்.

சாதாரணமாகப் பேராசையையே நாம் அவா என்று கூறுகிருேம். அந்தப் பேராசையின் காரணமாகக் கிடைப்பது விழுமிய செல்வம் ஆகாது.

அதற்கு மாருக அவாவினை நீக்குதலே விழுமிய செல்வம் ஆகும். குறிப்பாக, ஓர் அரசன் இந்த அவாவின் காரணம் ஆகப் பெருஞ்செல்வம் ஈட்டுவானே ஆளுல், அந்த அளவிற்கு அவன் ஆட்சியின் கீழ்வாழும் குடிமக்கள் செல்வத்தில் தாழ்ந்தவர்களாக ஆவார்கள்.

இந்நிலை இரண்டு விளைவுகளை உண்டாக்கக்கூடும். ஒன்று, அரசனிடத்திலிருக்கும் பெருஞ்செல்வம் காரண மாக, அவன் ஆட்சியில் வாழும் குடிமக்கள் அவனையே எதற்கும் எதிர்பார்த்துக் கையேந்தும் நிலை. மற்ருென்று, பெருஞ்செல்வம் அரசனிடத்து மாத்திரமே, குவிந்து கிடப்பதால், அவனிடத்துப் பொருமையும், வெறுப்பும்

கொண்டு, அவன்பால் அன்பு கொள்ளாமல், அவனை எதிர்த்து, கிளர்ந்து எழவேண்டும் என்ற எண்ணம் மக்களிடையே தழைத்துப் பெருகுவது.

இவை காரணமாக நாடே நலம் கெட்டுப் போகும்.

இவ்விரு கேடுகள் இலவாக வேண்டும் எனின் அரசன் அவாவை அறவே நீக்க வேண்டும்.

இன்றைய வாழ்விலும்கூட (அரசனில்லாத) ஜன நாயக ஆட்சியிலும்கூட, பேராசையினால் சமுதாயத்தில் ஒரு சிறு பகுதியினர் அறவழி வழீஇ பெருஞ்செல்வம் திரட்டி அதன் பலனை ஆடம்பரமாக அநுபவித்து வர, சமுதாயத்தில் பெரும்பான்மையினர் அதனால் ஏழைகள் ஆக, அச்செல்வர்பால் பகைமையும் வெறுப்பும் வளர்த்துக் கொண்டு, பெரும் புரட்சிக்கே அடிகோலுவர். இவ்வாறாய புரட்சிகள் உலகின் எல்லாப் பகுதிகளிலும் நடப்பதனை நாம் நன்கு அறிவோம்.

இஃதன்றியும் வள்ளுவர்,

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை
ஆண்டும் அஃதொப்பது இல்.

(திருக்குறள் 363)

என்று கூறுவார்.

இக் குறட்பாவிற்கு,

"ஒரு பொருளையும் அவாவாமையை ஒக்கும் விழுமிய செல்வம் காணப்படுகின்ற இவ்வுலகின்கண் இல்லை. இனி அவ்வளவே அன்று; கேட்கப்படுகின்ற துறக்கத்தின்கண்ணும் அதனை ஒப்பது இல்லை" என்று பரிமேலழகர் உரை வரைவார்.

இத்தகைய அவாவை மன்னன் நீக்கவேண்டும்.

அடுத்தது 'முனிவுழி முனிந்து' என்று கம்பன் பாடுகிறுன். அதாவது 'சினம் கொள்ள வேண்டிய இடத்தில் சினம் கொண்டு' என்பது இதன் பொருள்.

ஓர் அரசனுக்குச் சினம் எழும் கட்டங்கள் பலவித மாக வரலாம். தன் குடிமக்களுள் ஒருவன் குற்றமிழைப் பான் ஆயின், சமூக நலன்கருதி அவனைத் தண்டிக்க வேண்டியது அரசன் கடமை ஆகும்.

நீ மெய்கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி, அத்தக ஒறுத்தி.

(புறநானூறு 10)

கொலையிற் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்.

(திருக்குறள் 550)

என்பன இலக்கிய வழக்காறுகள்

(ஒறுத்தி—தண்டிக்க; பைங்கூழ்—பயிர்; கட்டல்—நீக்கல்)

அது போலவே வேறு ஒரு அரசன் தன் நாட்டின் மீது படை எடுத்து வருவான் ஆயின், அவனைப் போரில் முறியடிக்க வேண்டியது அவனுடைய கடமை ஆகும்.

எனவே அவாவை நீக்குதல் என்ற ஒரு பண்பு அவசியப்படுகின்ற காரணத்தால் அவன் எந்தக் காலத் திலும் சினம் கொள்ளக் கூடாது என்று ஆகிவிடாது.

உண்மையில் பார்க்கப் போனுல், இப் பாடலின் முதல் வரியில் காணப்படும் 'முறை அறிந்து' என்ற தொடரும், 'முனிவுழி முனிந்து' என்ற தொடரும் திருவள்ளுவரு டைய கருத்தைக் கம்பன் ஏற்றுக் கொண்டு அவரைப் பின்பற்றிப் பாடுகிறுன் என்பதற்குச் சான்றுகவே அமையும்.

இறை மாட்சி என்ற அதிகாரத்தில்,

முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்

(திருக்குறள் 388)

என்று வள்ளுவர் பாடுவார்.

இதன் பொருள்,

"தான் முறை செய்து, பிறர் நலியாமல் காத்தலைச் செய்யும் அரசன், பிறப்பால் மகனே ஆயினும், செயலால் மக்கட்குக் கடவுள் என்று வேறு வைக்கப்படும்.

'முறை'- அறநூலும் நீதிநூலும் சொல்லும் நெறி; வேறு வைத்தல்- மக்களில் பிரித்து உயர்த்து வைத்தல்" என்பார் பரிமேலழகர்.

இக்கருத்து,

'அறனொடு புணர்ந்த திறன்அறி செங்கோல்'

(பொருநராற்றுப்படை 230)

'அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்'

(பெரும்பாணாற்றுப்படை 36)

(புணர்ந்த—சேர்ந்த; அல்லது—அறம்அல்லாதது; புரி—விரும்பு)

'முறை வேண்டுநர்க்கும் குறை வேண்டுநர்க்கும்,
வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கு அருளி,
இடை தெரிந்து உணரும் இருள்தீர் காட்சி'

(பெரும்பாணாற்றுப்படை 443—45)

(இடை—நடுவுநிலைமை; இருள்—மயக்கம்; காட்சி—அறிவு)

'அரசியல் பிழையாது, அறநெறி காட்டி,
பெரியோர் சொன்ன அடிவழிப் பிழையாது'

(மதுரைக் காஞ்சி 191, 192)

(அடிவழி—அடிப்பாட்டின் வழி)

'கோலின் செம்மையும் குடையின் தண்மையும்
வேலின் கொற்றமும், விளங்கிய கொள்கையும்'

(சிலம்பு 2: 15; 3, 4)

என்று அமைந்துள்ள இலக்கியக் கருத்துகளின் அடிப்படையில் அமைந்ததே.

'முனிவுழி முனிந்து' என்ற தொடரும் செங் கோன்மை என்ற அதிகாரத்தில் அமைந்துள்ள,

ஓர்ந்துகண் ஓடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை

(திருக்குறள் 541)

என்ற குறட்பாவின் அடிப்படையில் பிறந்ததே.

இக் குறட்பா,

''தன் கீழ் வாழ்வார் குற்றம் செய்தால் அக் குற்றத்தை நாடி, யாவர் மாட்டும் கண் ஓடாது, நடுவு நிலைமையைப் பொருந்தி, அக் குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோரோடும் ஆராய்ந்து, அவ்வளவிற்று ஆக, செய்வதே முறை ஆம்.'' என்று பரிமேலழகரால் விளக்கம் பெறும்.

தீமை கண்டால் ஒப்பநாடி அத்தக ஒறுத்தல் வேண்டும், என்று புறநானூறு புகலும்.

'வெஃகும் இறை அறிந்து' என்ற தொடர்க்கு, 'மக்களே விரும்பிக் கொடுக்கும் வரிப்பணத்தை அறிந்து பெற்று' என்பது பொருளாகும்.

இக் கருத்து எதிர்மறைக் குறிப்பிலும் விளக்கம் பெறுகிறது.

'கொடுங்கோன்மை' அதிகாரத்தில் இடம் பெற்றிருக்கும்,

வேலொடு நின்ருன் 'இடு' என்றதுபோலும்
கோலொடு நின்ருன் இரவு

(திருக்குறள் 552)

என்ற குறட்பாக் கருத்தை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

"ஆட்சிக்கு உரிய கோலே ஏந்தி நின்ற அரசன் குடிகளேப் பொருள் கேட்டல், போகும் வழியில் தனியே வேல் ஏந்தி நின்ற கள்வன் கொடு என்று கேட்பதைப் போன்றது" என்பது இக்குறட்பாவின் திரண்ட கருத்து.

இப் பாடலின் கருத்து விளக்கமாகப் பரிமேலழகர் கூறுவன காணலாம்.

"வேலொடு நின்ருன் என்பதனுல் பிறரொடு நில்லாமையும், 'இரவு' என்பதனுல் இறைப் பொருள் அன்மையும் பெற்ரும். 'தாராக்கால் ஒறுப்பல்' என்னுங் குறிப்பினன் ஆகலின், இரவால் கோடலும் கொடுங் கோன்மை ஆயிற்று" என்பார் அவர்.

இக்குறட்பாவில் நாம் காணும் ஓர் அருமை என்ன வென்ருல் திடீரென்று வேலக் கையில் கொண்டவனுய் வழிமறிக்கும் கொள்ளேயன் முன், அவ்வழி தனித்து ஏகும் ஒருவன், அக் கொள்ளேயனே எதிர்க்கும் சக்தி அற்றவனுக எவ்வாறு இருக்கிருனே, அவ்வாறே, ஆட்சிப் பொறு புடைய அரசன் முன், அவன் விதிக்கும் வரி சம்பந்தப் பட்டவரையில் அவன் நாட்டு மக்கள் இருக்கிருர்கள்.

மிகு மனத்துணிவு உருக்கொண்டால் அன்றி, பாமர மக்கள் அரசு விதிக்கும் அநியாய வரியைக் கொடுக்க மறுக்கும் சக்தி அற்றவர்களாகிவிடுகிருர்கள்.

"வெஃகும் இறை அறிதல்" என்பது அரசர்கள் கைக் கொளத்தக்க இன்றியமையாத பண்பு ஆகும்.

"அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே
கோடியாத்து நாடு பெரிது நந்தும்"

(புறநானூறு 184)

(கோடி - பல்வகை நலன்கள்; யாத்து - ஈட்டி; நந்தும் - தழைக்கும்)

என்று குறிப்பிடும் பிசிர் ஆந்தையார், ''வெஃகும் இறை'' அறியா வேந்தன்,

''மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்
வரிசை அறியாக் கல் என் சுற்றமொடு
பரிவு தப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணுன் உலகமும் கெடுமே"

(புறநானூறு 184)

என்பார்.

(மெல்லியன்—அறிவினன்; கல்என் சுற்றம்—பரிசனர்; பரிவு—அன்பு; தப—கெட; பிண்டம்—பொருள்)

''இறை பெறு முறை'' அறியாத நாடாள் வேந்தன்,

''கொள்ளும் பொருளிலர் ஆயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்து உயிர் வௌவும்,
அற்றம் பார்த்து அல்கும் கடுங்கண் மறவன்

எனத்தக்கான்.

(வம்பலர் — வழிப்போக்கர்; அற்றம் — ஏற்றகாலம் மறவன்—ஆறலைகள்ளன்).

''அலவுற்று குடிகூவ ஆறின்றி பொருள் வெஃகிக்
கொலை அஞ்சா வினைவரால் கோல் கோடியவன் நிழல்
உலகுபோல் உலறிய உயர்மர வெஞ்சுரம்"

(பாலைக்கலி 9)

என்று கொடுங்கோல் வேந்தன் இயல்பைக் கூறுகிறது. (ஆறு—பொருள் செயல்வகை; வினைவர்—பரிசனர்; சுரம் - பாலைவழி).

குடிமக்களிடமிருந்து பெறத்தகு இறை ஆறில் ஒரு கூறு என்பர். 'ஆறில் ஒன்று அறன் அறிந்து கோடியால்' என்ற இலக்கியத் தொடர் இது சுட்டுவதே. அதனை வசூலிப்பவர் தண்டல் நாயகர் ஆவார். இத்தகையவர்தாம் 'பரிசனர்' என்று சேக்கிழாரால் குறிக்கப் பெறுகின்றனர்.

இத்தகைய பரிசனர் நெறி மாறி கூறுவனவும் கேட்டு ஓரோவழி அரசன், அவர்கள் வழி நடக்கவும் கூடும், இதனைக்குறிப்பது 'வரிசை அறியாக் கல் என் சுற்றம், என்ற புறநானூற்றுத் தொடர்.

நெறி அறியாத, பொருள் ஈட்டலே பெரிது என்று கருதும் தண்டல் நாயகர், அமைச்சர் போல்வாரும் அக்காலத்து இருந்தனர் போலும். இக்கருத்தைத் தருவது "வருத்தம் உற்று குடிமக்கள் கூக்குரல் எழுப்பும்படி, கொலைத் தொழிலுக்கு அஞ்சா அமைச்சராலே, நெறியின்றி பொருளை வாங்கிக் கொண்டு செங்கோல் வளைந்த அரசன்" என்ற தொடர். (பாலைக்கலி 9)

(ஆற்காடு) நவாபிடமிருந்து வரி வசூலிக்கும் (கும்பினியார்) உரிமை பெற்ற ஆங்கிலேயர், வரி வசூலிப்பதில் காட்டிய அக்கிரமமான செயல்களால் நாடு அல்லல் அடைந்ததை, வரலாற்று நூல்கள் கூறும்.

எனவே தான் அரசன் என்பான் தன் மாட்டுக் குடிமக்கள் கொண்டுள்ள அன்பும், மதிப்பும் கெடும் வகையில் வரிப் பொருளை ஈட்டுவதில் நடந்து கொள்ளல் ஆகாது என்று புலவர்கள் அறிவுரை கூறுவார்கள்.

குடிமக்களை மிகவும் வருத்தி இறைவாங்குவதில் பாண்டியன் அறிவுடை நம்பி பெரிதும் விருப்புடையன் ஆக இருந்தான்.

குற்றம் அரசனது இறைவாங்கும் திறத்திலும், அதற்குத் துணை செய்யும் அரசியல் சுற்றத்தார் (பரிசனர்)

திறத்திலும் இருப்பது கண்டு வருந்தி பிசிர் ஆந்தையார் அவனுக்குச் செவி அறிவுறூஉ ஆகப் பாடிய பாடலே புறநானூற்றுப் (184) பாடல்

மன் உயிர் காக்கும் காவலன், மக்கட்கு எழும் ஆன பயம் ஐந்தும் தீர்க்க வேண்டியவன் ஆவான் என்பார் சேக்கிழார்.

தன்னல், தன் பரிசனத்தால், பகைவரால், கள்வரால், உயிர்கள் (காட்டு விலங்குகள்) தம்மால், குடிமக்கள் துன்புறாத வகை அரசன் ஆட்சி செலுத்த வேண்டும் என்பார். (பெரிய புராணம் 3 : 36)

குடிமக்கட்குப் பிழை நேரின் அதற்குப் பெரிதும் அஞ்சினர் நாடாள் வேந்தர்.

மழைவளம் கரப்பின், வான்பேர் அச்சம்.
பிழை உயிர் எய்தில், பெரும்பேர் அச்சம்.
குடி புரவுண்டும், கொடுங்கோலஞ்சி,
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்,
துன்பம் அல்லது தொழு தகவுஇல்.

(சிலம்பு 3;25:100—104)

(கரப்பு - இல்லையாதல்; புரவு - காப்பாற்று)

என்று செங்குட்டுவன் வாயிலாக இளங்கோ அடிகள் கூறுவார்.

முறை அறிதல், அவா நீக்கல், முனிவுழி முனிதல், வெஃகும் இறை அறிதல், உயிர்க்கு நல்கல், ஆகிய இச் செயல்களில் தலைப்படும் அரசன் குடிமக்களால் பெரிதும் வாழ்த்தப் பெறுவான்; வணங்கப் பெறுவான்.

இத்தகைய செங்கோல் வேந்தர் காக்கும் நாட்டில்,

"கோள்வல் உளியமும் கொடும்புற்று அகழா.
வாள்வரி வேங்கையும் மான்கணம் மறலா.
அரவும், சூரும், இரைதேர் முதலையும்,
உருமும் சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா.
(சிலம்பு 2:13:5—9)

(உளியம் - கரடி; மறலல் - கொல்லுதல்; அரவு - பாம்பு; சூர்—அணங்கு; உருமு - இடி)

என்று குடிமக்கள் பெரிதும் நம்பினர்.

"கைப் பொருள் வெளவும் களவுஏர் வாழ்க்கை,
கொடியோர் இன்று, அவன் கடியுடை வியன்புலம்;
உருமும் உரருது; அரவும் தப்பா;
காட்டு மாவும் உறுகண் செய்யா."
(பெரும்பாணாற்றுப்படை 40—43)

(கடி - காவல்; உரறல் - அழித்தல்; காட்டுமா - காட்டு விலங்குகள்.

என்று ஓர் அரசன் நாட்டியல் கூறுகிறுர் என்ருல், அரசாட்சியின்மீது மக்கள் கொண்ட நம்பிக்கை எத்துணைப் பெரியது என்று எண்ணி எண்ணி வியக்கலாம்.

நாட்டு மக்களால், நலன் அறி புலவர்களால், இத்தகைய செங்கோல் வேந்தர் இசை கெழு வேந்தர் ஆகின்றனர். தான் வாழும் காலத்தேயே பிறரால் போற்றப்படும் நிலையை 'இசை' எனவும், மாய்ந்த பின்னர் புகழப்படுவது 'புகழ்' என்றும் குறிப்பர். இது பற்றிப் பின்னரும் காணலாம்.

,உயிர்க்கு நல்கும்இசை கெழு வேந்தன்', 'தன் நிழல் வாழ்நர்', 'பதி எழு அறியா' வகையில் வாழ வேண்டும் என்றே விரும்புவான்.

(இசை—புகழ்; பதி எழு அறியா—வாழ்தல் பொருட்டு வேறிடம் செல்லாத)

'இன்னது செய்யேன் ஆகில்' 'இன்னது செய்தேன் ஆகுக' என்று வஞ்சினம் மொழியும் காலத்துப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்,

"ஒருங்கு அகப்படேஎன் ஆயின், பொருந்திய
என்நிழல் வாழ்நர், செல்நிழல் காணாது.
'கொடியன் எம் இறை' எனக் கண்ணீர் பரப்பி
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக.
....
புலவர் பாடாது வரைக என்நில வரை." (புறநானூறு 72)
(அகப்படல் - கைக்கொள்ளல்; நிலவரை - நில எல்லை)

என்று குறிப்பிடுகிறான்.

அரசர்கள் சிறப்பாகக் குறிப்பிடப்பெறுவது,

ஏரோர்க்கு நிழன்ற கோலினர்;
தேரோர்க்கு அழன்ற வேலினர்;

(நிழன்ற - நன்மை விளைத்த; அழன்ற - தீமை விளைத்த)

என்னும் தொடர்களால்.

'பொருள் செயல் வகை' என்ற அதிகாரத்து,
அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறன் அறிந்து
தீது இன்றி வந்த பொருள் (திருக்குறள் 754)

என்ற குறட்பாவும்,

உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். (திருக்குறள் 756)

என்ற குறட்பாவும்,

இங்கு நாம் சேர்த்துப் பார்க்கத் தக்கன.

'வெஃகும் இறை அறிந்து' ஈட்டிய பொருள் மக்கள் நலனுக்கே செலவிடப் பெறல் வேண்டும் என்ற கருத்தினுல், 'உயிர்க்கு நல்கி' என்ற தொடரை இடைப் பெய்து அவ்வாறு நல்குவதனுல் 'இசை கெழு' வேந்தன் ஆவான் என்று குறிப்பிடுகிருன்.

''சேர்க்கும் திறம் அறிந்து, தீமை ஒன்றும் இல்லாமல், சேர்க்கப்பட்டு வந்த பொருள் ஒருவனுக்கு அறத்தையும் கொடுக்கும், இன்பத்தையும் கொடுக்கும்'' என்பதும், ''இறையாக (வரி) வந்து சேரும் பொருளும், சுங்கமாகக் கொள்ளும் பொருளும், தன் பகைவரை வென்று திறையாகக் கொள்ளும் பொருளும், அரசனுடைய பொருள்களாகும்'' என்பதுவும், இவ் விரு குறட்பாக்களின் திரண்ட கருத்தாகும்.

''நெறி அறிந்து, ஈட்டிய பொருளால் அரசன் செங் கோலன் என்று புகழப்படுவான், கடவுட்பூசை தானங் களால் பயன் எய்துவான். இதனைக் குறிப்பது 'அறன் ஈனும்' என்னும் தொடர். நெடுங்காலம் நின்று துய்க்கப் படுதலான் 'இன்பமும் ஈனும்' என்று கூறினுர்'' என்பார் பரிமேலழகர்.

அடுத்த குறட்பாவிற்கு, 'உடையாரின்மையால் தானே வந்துற்ற பொருளும், சுங்கமாகிய பொருளும், தன்பகைவரைவென்று திறையாகக்கொள்ளும் பொருளும், அரசனுக்குஉரிய பொருள்'' என்று உரை கூறி அமைவார்.

இங்கு குறிப்பிடப் பெறும் 'உல்கு' என்பது சுங்கப் பொருள் என்பர். சுங்கமாவது கலத்தினும், காலினும்

வரும் பண்டங்கட்கு இறையாயது. இதனை ஆங்கிலத்தில் Excise Duty என்பர்.

நெடுங்காலந்தொட்டு நீணில வேந்தர் வருவாயில் பேரிடம் பெறுவது இது.

"......மிரியல்
பிணர்ப் பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்து
அணர் செவி கழுதை சாத்தொடு வழங்கும்
உல்குடைப் பெரு வழி'' (பெரும்பாண் 78—81)

(மிரியல் - மிளகு; பொறை - மூட்டை, சாத்து - வாணிகக் கூட்டம்)

இது காலின் வரும் பண்டம் குறித்தது. (கால்—வண்டி)

"வைகல் தோறும் அசைவு இன்றி
உல்கு செயக் குறைபடாது
....
....
நீரினின்று நிலத் தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பல பண்டம்
வரம் பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பு'' (பட்டினப்பாலை 124—133)

(அசைவு-மடிவு; அருங்கடி-பெரியகாவல்; பெருங்காப்பு-பண்டககாலை)

இது கலத்தின்வந்தது; (கலம்—மரக்கலம்)

இவ்வாறு 'கலத்தினும் காலினும் தருவனர் ஈட்டக் குலத்திற் குன்றுக் கொழுங்குடிச் செல்வர்' மலிந்த நாடு ஆகலின், உல்கு பொருள் பேரளவில் அரசின் வருவாய் ஆயிற்று என்பர்.

"தாளின் ஊக்குபு எழும் சாத்து" (சிந்தாமணி 1775) உல்கு பொருள் அரசற்குச் செலுத்திற்று என அறிகிறோம்.

(தாள் - எருது முதலியன காலாலே முயன்று; சாத்து வணிகர்திரள்)

"சுங்கம் என்பது வாணிகத்தின் பொருட்டு வெளி நாடுகளிலிருந்து கடல் வழியாக, மரக்கலங்களிலும், உள்நாடுகளிலிருந்து, பெருவழிகளின் (Highways) மூலமாக வண்டிகளிலும் வரும் பண்டங்களுக்கு வாங்கிய வரிப் பொருள் என்பது தேற்றம். கப்பலில் ஏற்றப்படுவனவும், அதிலிருந்து இறக்கப்படுவனவும் ஆகிய பண்டங்களுக்கு அக் காலத்தில் அரசாங்கம் வாங்கி வந்த வரியைச் சுங்கம் என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் தம் பட்டினப் பாலை உரையில் கூறி இருப்பது அறியற்பாலதாம். எனவே சுங்கத்தினாலும் அந்நாளில் அரசாங்கத்திற்குப் பெரும் பொருள் கிடைத்தது என்பது திண்ணம்."*

அடுத்து, உயிர்க்கு நல்குதலைக் குறிப்பான் கம்பன். இங்கே உயிர் என்பது அந்த அரசனுடைய ஆட்சியின் கீழ் வாழும் குடிமக்களைக் குறிக்கும்.

மக்கள்தாம் உயிர்; மன்னன் தான் உடல், என்ற தன் புரட்சிக் கருத்துதனை நாட்டுப் படலத்திலேயே கம்பன் நாட்டிவிடுகிறான்.

'நல்குதல்' என்ற சொல்லுக்கு விரும்பிக் கொடுத்தல் என்பது பொருள். இங்கே, அவன் இரண்டாம் அடியில்

* பிற்காலச் சோழர் வரலாறு' சதாசிவப்பண்டாரத்தார் பக்கம் 525.

ஆண்டிருக்கும் 'வெஃகும்' என்ற சொல்லோடு இதனை இணைத்துக் காணும்பொழுது கவிஞனுடைய மாபெரும் ஆற்றலைக் கண்டு விடுகிறோம்.

'வெஃகும்' என்பதற்கு விரும்பி என்று முன்னரே பொருள் கண்டிருக்கிறோம். அதற்கு ஏற்ப அது மக்களிடமிருந்து அரசன் பெறும் வரியினைக் குறிக்குமிடத்து ஆளப்பெற்றது.

அரசன் அவாவை நீக்கிவிட்டதன் காரணமாக, மக்கள் அரசனுக்குக் கொடுக்கும் வரியை விருப்பத்தோடு கொடுக்கிறார்கள். அதற்கு ஏற்பவே மக்களுக்கு அரசனும் விருப்பத்தோடு கொடுக்கிறான்.

எதனைக் கொடுக்கிறான் என்பதனை நாம் இப்பொழுது காணவேண்டும்.

'வெஃகும் முறை அறிந்து உயிர்க்கு நல்கும்' என்ற தொடர் மூலமாக, ஓர் அரசாங்கத்தின் ஆட்சி முறையையே கவிஞன் காட்டி விடுகிறான். மக்களிடமிருந்து அரசன் வரி வசூலிக்கிறான். அந்த வரி எதற்காகப் பெறப்படுகிறது? தன்னுடைய ஆட்சியின் கீழ் வாழ்கின்ற குடிமக்கள் அனைவருடைய பொது நன்மைக்காகச் செலவிடவே வசூலிக்கப் பெறுகிறது.

எனவே மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரிப் பணமானது, அந்த மக்களின் நன்மைக்காகவே செலவிடப் படுகிறது. இப்படி வசூலித்துச் செலவழிக்கும் அரசனோ, அரசாங்கமோ, இப்படிச் செயல்படுவதற்கு ஒரு கருவியாக அமைகிறது.

இப்படிச் செயல்படுவது மக்களால் வரவேற்கத் தக்கதாக இருக்க வேண்டும். எப்பொழுது மக்கள் வர

வேற்பார்கள் என்ருல், அரசன் அவாவை நீக்கி, மக்க ளிடத்திலிருந்து அவர்கள் விருப்பத்தோடு கொடுக்கின்ற வரியை வசூலித்து, அதனை அவர்களுடைய பொது நன்மைக்காக விருப்பத்தோடும், கடமை உணர்வோடும் செலவழிக்கும் பொழுதுதான். இந்தக் கருத்தினுடைய பொதுத் தன்மையை உணரும்பொழுதுதான் கவிஞனுடைய தொலை நோக்கினை அறிந்து வியப்பில் மூழ்குகிருேம்.

இப்படியாகக் கம்பன் கூறும் ஓர் அரசு முறை அவன் காலத்துக்கு மட்டுமன்றி எல்லாக் காலங்கட்கும் பொருந்துவதாகும்.

பரம்பரையாக வரும் அரசன் என்று ஒருவன் இருந்தாலும் சரி, ஜனநாயக முறைப்படி தேர்ந்து எடுக்கப்பட்டு (அவ்வப்பொழுது) ஆட்சி பீடத்தில் அமர்த்தப் பெறும் ஆளவந்தார்களாக இருப்பினும் சரி, இப் பொதுக் கருத்து இவ்விரு சாரர்க்கும் பொருந்துவதே ஆகும்.

இக் கருத்தினை ஓர் அழகிய உவமையின் மூலமாக வும் விளக்கலாம். கடலினுடைய நீர் சூரிய வெப்பத்தினுல் நீராவியாக மாறி, உயர்ந்து கருமேகம் ஆகி, திரண்டு, விண் அளக்க நிமிர் நெடுமுடி மலைகளால் தடுக்கப்பெற்று, மழையாகப் பொழிந்து, ஓடி, தான் பாயும் ஆற்றுப் பரப்பின் இரு கரைகளிலும் இருக்கும் மக்கட்கு நன்மை புரிந்து, இறுதியாகக் கடலிலேயே கலக்கிறது.

கடலிலிருந்து கிளம்பும்பொழுது, நீராவியாகக் கிளம்புகிறது. திரும்பக் கடல் சென்று அடையும் பொழுது நீராகவே அடைகிறது.

அதைப் போலவே மக்களிடத்திலிருந்து அரசன் வசூலிக்கும் வரி (இறைப் பொருள்) ஆனது பொன்

ஞகவோ, பொருள் ஆகவோ, வந்து சேர்கிறது. அவை மக்களுக்காகச் செலவிடப் பெறும் பொழுது, மக்களுக்கு அளிக்கும், உயிர், உடைமைப் பாதுகாப்பு ஆகவோ அவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கு உதவும் கல்விக் கூடங்களாகவோ, அவர்களுடைய பசியை அகற்றும் உணவுக் கூடங்களாகவோ, அவர்கள் நோயை நிவர்த்திக்கும் மருத்துவ மனைகளாகவோ, அமையப் பெற்று மக்களையே சேர்கிறது.

எப்படித் தரையில் ஆருக ஓடும் நீர் தன் இரு கரைகளிலும் வாழும் மக்களுக்கு நன்மை செய்கிறதோ, அதுபோலவே இப்படி அரசனுல் வசூலிக்கப்படும் வரியின் ஒரு பகுதியும், இத்தகைய பணிகளை நிறைவேற்றுவதற்கு என நியமிக்கப்படும் அரசு அதிகாரிகளின் ஊதியமாகவும் உதவுகிறது.

இந்தக் கருத்து காளிதாசனின் ரகுவம்சத்திலும் காணப்பெறுகிறது (*1:18*).

"அரசன் மக்களிடமிருந்து வரிகளைப் பெறுவது நாட்டின் செல்வத்தை வளர்க்கவே. மக்களுக்கு ஊறு இழைக்காமல் அவர்களிடமிருந்து வரி திரட்டுகிறுன். வரி கிடைக்கும் இடம் பலவகைப்பட்டது; எனினும், அவ் வருவாயால் நாடு செழிக்கும். உயர்வு தாழ்வின்றி அனைவரும் பயன் பெறுவர்.

சூரியன் தன் ஆயிரம் கிரணங்களால் பல வகையான இடங்களிலிருந்து நீரை எடுத்துக் கொள்கிறுன். நீரை எடுக்கும்பொழுது நீர் நிலைக்கு ஊறு செய்வதில்லை. எடுத்த நீரை, நல்ல நீராக, தூய மழையாக, வாழ உலகினில் பெய்கிறுன். நாடு செழித்து வளம் பெறுகிறது.

பெற்ற வரிகளிலிருந்து அரசனே, எடுத்த நீரினின்று சூரியனே, தனக்கு என எள்ளளவும் உபயோகிப்பதில்லை.

வரி கொண்ட இடமும், நீர் மொண்ட இடமும், மட்டும் அன்றி எல்லா மக்களுமே ஒருசேரப் பயன் துய்க்கின்றனர்.*

இவ்வாறு தொழிற்படும் மன்னன் 'இசை கெழு வேந்தன்' எனக் கம்பனால் குறிக்கப் பெறுகிறான். கவிச் சக்கரவர்த்தி இதில் ஆளும் மூன்று சொற்களும் நன்கு சிந்திக்கத் தக்கன.

பெரும்பாலும், இசை, புகழ் என்ற இரு சொற்களையும் வேறுபாடின்றி ஒன்றைக் குறிப்பதற்காகவே நாம் பயின்று வருகிறோம். எனினும் இவை இரண்டனுக்கும் இடையே வேறுபாடு உண்டு என்று நூலோர் கூறுவர். ஒருவன் தன் வாழ் நாளிலேயே தன் செயலினாலும், பண்பினாலும், பிறரால் பாராட்டப் பெறுவது இசை என்பர்.

தகைசால் தோன்றல் ஒருவன் மாய்ந்த பின்றை அவனுடைய நற்செயலுக்காகவும், சிறந்த பண்புகளுக்காகவும், பாராட்டப்படுவது புகழ் என்றும் வேறுபடுத்திக் காண்பர்.

இங்கோ ஓர் அரசன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற நியதியைக் கம்பன் முதலில் குறிப்பிட்டு விடுகிறான். அந் நியதிப்படி நடக்கும் மன்னன்பால் அவன் வாழ்நாளிலேயே இசை வந்து சேர்கிறது.

இத்தகைய இசை அவனை வந்து சேர்வதையும் 'கெழு' என்ற சொல்லால் குறிக்கிறான் கம்பன். 'கெழு' என்ற

---

* காளிதாசன் உவமைகள்—தொகுப்பு நா.வரதராஜுலு நாயுடு—சாந்தி டிரஸ்ட்' வெளியீடு.

சொல் நிறைவு, வளமை என்ற பொருள்கள் உடையது.

இவ்விரு பொருள்களும் இடையறவு படாது தொடர்ந்து நடைபெறும் வளர்ச்சி நிலையையே குறிக்கும். எனவே கவிஞன் வகுத்த நெறிப்படி செயற்படும் மன்னனுக்கு இசை நிறைந்து கொண்டே போகிறது.

எய்யா நல்லிசை (திருமுருகாற்றுப் படை 61)

இசை மேந்தோன்றல் (பதிற்றுப் பத்து 64)

தொலையா நல்லிசை (மலை படு கடாம் 70)

செல்லா நல்லிசை (மலை படு கடாம் 388)

என்னும் இலக்கிய வழக்காறுகள் காணலாம்.

நம்முடைய அநுபவத்தில் ஒரு மனிதனுடைய வாழ்வில் ஏற்றம், இறக்கம் என்பன மாறி மாறி வருவதனைக் கண்டிருக்கிறோம். இந்நிலை பெரும் பாலும் அவர்களது செல்வ வளமை குறிக்கும்.

ஆயின், இசையில் (புகழ்) ஒரு காலத்தில் உயர்ந்தும், மற்றொரு காலத்தில் தாழ்ந்தும் அநுபவிக்கும் மனிதர் களைக் காண்பது அபூர்வம்.

காரணம் இசை என்பதே, நற்குணத்தின் அடிப்படை யில் அமைவது. நற்குணம் சான்ற ஒருவன் நிலை பெயர் வான் என்று பொதுவாகச் சொல்வதற்கு இல்லை. சில சமயங்களில் எதிர்பாராத அந்தஸ்தோ, அதிகாரமோ, பதவியோ வந்து அமைவதன் காரணமாக, தன் முனைப்பு பெருகி, 'யான்' எனும் செருக்கு மிக்கு, நற்குணம் குன்ற வாய்ப்பு உண்டு. அப்படி ஒருவனுடைய நிலை மாறுமாயின்

முன்னர் ஈட்டிய இசை முற்றும் அற்று, இல்லாதொழியுமே அன்றி, ஒரு குறிப்பிட்ட நிலையில் தேங்கி நின்றுவிட்டது என்று சொல்ல முடியாது.

இங்கு கவிஞன் குறிப்பிடும் மன்னனே, அவன் முறைப் படுத்திய நெறிகளின்படி நடந்து, மக்களைத் தன்னுடைய உயிராகவே கருதுபவன். அத்தகையவனுக்கு 'இசை' தொடர்ந்து பெருகிக்கொண்டே போகுமே தவிர தட்டுப்பட்டு நின்றுவிடாது.

எனவேதான் மன்னனைக் குறிப்பிட, பொறுக்கி எடுத்த சொற்களால் 'இசை கெழு வேந்தன்' என்று குறிப்பிடுகிறான்.

இப்படியே 'வேந்தன்' என்ற சொல்லும் கூர்ந்து நோக்கத்தக்கது. வேந்தன் என்ற சொல் இந்திரனையே குறிக்கும். அவன் தேவர்களுக்குத் தலைவனாக, அரசனாக இருப்பவன். அவனைக் குறிக்கும் பெயரையே மக்கட்கு அரசனாக இருப்பவனைக் குறிக்கக் கவிஞன் பயிலும் பொழுதுதான் முன்னர் ஆண்ட 'இசை கெழு' என்ற இரு சொற்களையும் நிறைவுத் தொடர்களாகவே கவிஞன் ஆண்டுவிடுகிறான்.

இத்தகைய நெறிகளின்படி மன்னன் என்ன செய்கிறான் என்றால், பூதலம் தன்னைக் காக்கிறான்.

'காத்தல்' என்பது இறைவனுடைய பண்புகளில் ஒன்று அச் சொல்லைத்தான் இங்கே அரசனோடு சேர்த்து, கவிஞன் ஆளுகிறான்.

இந்நாட்டு மரபுப்படி மன்னன் தெய்வத்தின் பிரதிநிதி. எனவே இறைவன் தன் படைப்புகளினிடத்து பாரபட்சம் காட்டாமல் அன்பையும், கருணையையும், அருளையும் பொழிந்து அவற்றை நற் செயல்களில் ஊக்கு

விப்பதனுல், அவற்றுக்கு மறு உலகில் நற்பலன்களை யும் அளிக்கிறுன். அதே சமயத்தில், அவை தீச் செயலில் ஈடுபடுமே ஆயின் அவைகட்குத் தண்டனையும் விதிக் கிறுன்.

அதுபோலவே அரசனும் செய்யவேண்டி இருப்ப தனுல், இறைவனின் பிரதிநிதி என்று கருதப்படுவ தோடன்றி, இறைவனுடைய முத்தொழில்களில் ஒன்று கிய காத்தல் தொழிலையும் கொள்கிறுன் என்றுகிறது.

இது இந்நாட்டில் தொன்று தொட்டு கருதப்பட்டு வருகின்ற மரபு.

"மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்"
(திருக்குறள் 388)

"உலக பாலர் உருவாய் நின்று உலகம்
உலகம் காத்தலின் இறை என்ருர்."
(பரிமேலழகர் உரை)

என்பன இலக்கிய வழக்காறுகளில் சில.

அதற்கு ஏற்பவே இங்கு கம்பன், அவன் குறிக்கும் மன்னன் பூதலம் தன்னைக் காக்கிறுன் என்று குறிப் பிட்டமைவான்.

இப்பாடலின் ஈற்று இரு அடிகளில் ஓர் அருமையான உவமையைக் கவிஞன் குறிப்பிடுகிறுன். நாட்டுப் படலம் குறிப்பிடும் நிலம் நெய்தல் நிலம் ஆகும்.

இந்நாட்டிலிருந்து ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே, இந்நாட்டின் அரும் பெரும் பொருள்களை வங்கம் நிறைத்து, பிறநாடுகட்குக் கொண்டு சென்று, அங்கே அவற்றை இறக்கிவிட்டு, அவற்றிற்கு மாற்ருக

அந்நாட்டிலிருந்து பொன்னையும் பொருளையும் ஏற்றிக் கொண்டு திரும்பி வந்து, தாயகக் கடல் துறையில் இறக்கிவிட்டு, மீண்டும் பொருள்களை ஏற்றிக்கொண்டு செல்லும்வரையில், அவை சற்று ஒய்வு எடுத்துக்கொள் கின்றன என்று நூலோர் குறிப்பர்.

'சினமிகு தானை வானவன் குடகடல்
பொலன் தரு நாவாய் ஓட்டிய அவ்வழி'

(புறநானூறு 126)

(பொலன்-பொன்)

'இரங்கு நீர்ப் பரப்பின் கானலம் பெருந்துறை
தனம் தரும் நன்கலம்'

(அகநானூறு 152)

(தனம்-செல்வம்)

"சிதைவின்றிச் சென்றுழிச் சிறப்பெய்தி
வினை வாய்த்து
துறைய கலம் வாய்சூழும்............"

(கலித்தொகை 132)

(வினைவாய்த்தல்-செல்வம் திரட்டல்)

'யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளம் கெழு......" (அகநானூறு 149)

(கறி - மிளகு)

கடற் குட்டம் போழ்ந்து, கலம் செலுத்தி, பொலம் குவை திரட்டிய நாடு இது.

இவ்வாறு பொன்னின் நிறைபரம் சொரிந்த வங்கம் நெடுமுதுகு ஆற்றும் என்று குறிப்பிடும் கவிஞன் இவ் வங்கங்களை மூன்றும் அடியில் குறிப்பிட்ட பூதலத்துக்கு உவமை ஆக்குகிறான் (இன்—ஐந்தன் உருபு). பொறை

தவிர்ந்து உயிர்க்கும் தெய்வப் பூதலம்; அவ்வாறே நிறை பரம் சொரிந்த வங்கம் நெடு முதுகு ஆற்றி உயிர்க்கும் என்று காணவேண்டும்.

பூதலம், தெய்வப் பூதலம் என்று கவிஞரால் குறிப் பிடப்பெறுகிறது. இதற்கு யாது காரணம்? அந்தப்பூதலம் தன்னை ஆளும் மன்னன், முன்னர்க் குறிப்பிட்ட முறை யின்படி ஆள்வானேயானால், அவன் காக்கும் அந்தப் பூதலம் தெய்வப் பூதலம் ஆக இருப்பதற்கு என்ன தடை இருக்க முடியும்?

நாம் இங்கு அநுபவித்துக் கொண்டிருப்பது இந்தப் பூதலத்திற்கும், வங்கத்துக்கும் இடையே கம்பன் படைத் துக் காட்டும் உவமைப் பொருத்தம்.

'உயிர்க்கும்' என்ற சொல்லுக்கு, 'பெருமூச்சு எறிந்து இளைப்பாறுதல் என்பது பொருள்.

ஏன் இந்தப் பூதலம் உயிர்க்கிறது? தான் கொண்ட பொறை தவிர்ந்தமையால்தான் இப் பூதலம் உயிர்க்கிறது.

'பொறை' என்ற சொல்லுக்கு பாரம் என்பது பொருள்.இந்தப் பாரம் தவிர்ந்தமையால் தெய்வப் பூதலம் உயிர்க்கிறது.

பூதலத்தின் பாரம் எப்படித் தவிர்ந்தது? மன்னன் ஒருவன் எப்பொழுது முறை அறிந்து, அவாவை நீக்கி, முனிவுழி முனிந்து, வெஃகும் இறை அறிந்து, உயிர்க்கு நல்குகிறானோ, பூதலத்தைக் காக்கிறானோ, அப்பொழுது அந்தப் பூதலத்தில் பாவம் இராது. பாவம் என்ற பொறை (சுமை) மன்னன் ஆட்சித் திறத்தால் தவிர்ந்து போக, தெய்வப் பூதலம் உயிர்க்கிறது.

இம்மட்டில் உவமை நின்று விடுமாயின் அது அத்துணைச் சிறக்காது. வெளி நாடுகட்குப் பொருள் களை ஏற்றிச் சென்ற வங்கங்கள் அவற்றை அவ்வந்நாடு களில் இறக்கிவிட்டு அவற்றுக்கு விலையாகப் பொன்னும் பிறபொருள்களும் நம் நாட்டிற்குக் கொண்டு வந்து இறக்கி விட்டு (பொறை தவிர்தல்) இளைப்பாறுதல் தற்காலிகமானதே.

காரணம் என்ன என்றால், அவ் வங்கங்கள் தம்பணி மீட்டும் தொடரத்தான் செய்யும்.

இதனால் இந்த உவமை முழுமையாக அமைகிறதா என்ற கேள்வி இயற்கையாகவே தோன்றத்தான் செய்யும்.

ஒரு கோணத்திலிருந்து பார்க்கும்பொழுது இது ஒரு முழுமையான உவமையே ஆகும். 'பாவம்' என்ற சுமை நீங்க, பூதலம் உயிர்க்கிறது. ஆனால் அந்த இளைப்பாறுதல் இன்னொருவிதத்தில் மாறுதல் அடைந்துவிடுகிறது. பாவம் போகிறதே தவிர பூதலத்தின் பாரம் போகவில்லை. ஏனெனில், நம் நாட்டிலிருந்து பொருளை ஏற்றிக்கொண்டு செல்லும் அதே வங்கங்கள் திரும்ப வரும்பொழுது பொன்னையும் பொருளையும் கொண்டுவந்து இறக்கு கின்றன. அந்த அளவில் பாவம் என்ற சுமை போக, செல்வம் என்ற சுமை நிறைகிறது.

இவை அனைத்தையும் கருத்தில்கொண்டு கம்பன் பாடலை அணுகுவோமேயானால், அவனுடைய ஒப்பு உயர்வு அற்ற கற்பனைத் திறனையும், கவிதா விலாசத்தையும் சொல் அலங்காரத்தையும், பொருட் செறிவையும் எண்ணிப் பார்த்து மீண்டும் மீண்டும் அநுபவித்து மகிழ முடியும்.

* * *

கவிஞர்கள், தாம் சொல்லுகின்ற எதனையும் நயம் படச் சொல்வதற்காக, உத்திகள் பலவற்றைக் கையாள் வார்கள். இந்த உத்திகள் ஒவ்வொரு கவிஞனுக்கும் அவனுடைய கற்பனைக்கும்,திறமைக்கும் ஏற்ப வெவ்வேறாக அமையும்.

சிற்சில சமயங்களில் ஒரு கவிஞன் ஆளுகின்ற உத்தி, சொல் அமைப்பினாலும், பொருள் சிறப்பினாலும், தலை சிறந்து விளங்க, அந்த உத்தியின் தாக்கத்திலிருந்து தப்ப முடியாமல் அவன் பின்னர் வந்த கவிஞர்களும் அதே உத்தியைக் கையாண்டிருப்பதைக் காண்கிறோம்.

கம்பன் தன்னுடைய காப்பியத்தில் கையாண்டிருக் கும் உத்திகள் எண்ணிறந்தவை. அவை ஒவ்வொன்றுமே பின்னர் வந்த கவிஞர்களுடைய அறிவையும், உணர்வை யும் ஒருங்கே ஈர்த்தன. இதன் காரணமாக அவர்களும் அந்தஉத்தியை, மகிழ்ச்சியுடன் கையாண்டிருப்பதோடல் லாமல், அதற்கு மேலும் மெருகு சேர்க்க முடியுமா என்று முயன்று பார்த்திருக்கிறார்கள்.

அத்தகைய உத்தியோடு அமைந்த கம்பன் பாடல் ஒன்றை இப்போது காணலாம்:

வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்;
திண்மை இல்லை, ஓர் செறுநர் இன்மையால்;
உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்;
வெண்மை இல்லை, பல்கேள்வி மேவலால்.

(நகரப்படலம் 53)

இப்பாடலின் நான்கு அடிகளிலும் முதலில் ஒரு செய்தி சொல்லப்படுகிறது.

வண்மை, திண்மை, உண்மை, போல்வன அந் நாட்டில் இல, என்று அமங்கலமாகக் குறிப்பதுபோல்

உள்ளதே என்ற மயக்கம் தோன்றுகிறது. இம்மட்டில் நின்றிருந்தால், இப் பாடல் ஒரு நாட்டின் சிறப்பை விளக்குவதற்கு அமைந்த பாடலாக ஆகாது.

ஆனல் கவிஞனே, தான் முன் சொன்ன எதிர்மறைக் கருத்துகட்கு என்ன காரணம் எனக் காட்டும்பொழுது, அந்த மயக்கம் தீர்வதோடு, படிப்பவர் விழிகளை வியப் பினல் மலர்த்திவிடுகிருன்.

இந்தப் பாடலின் முதலடியில் 'வண்மை இல்லை' என்ற தொடர் இடம்பெற்றுள்ளது. 'வண்மை' என்ற சொல் 'கொடைச்சிறப்பு' என்று பொருள்படும். 'வள்' என்ற சொல்லடியாகப் பிறந்தது. வள் என்பதூஉம் வளமைச் சுட்டே. இதிலிருந்து, வண்மை, வளமை, வள்ளியோர், வள்ளல், வளவு, வளம் போல்வன பிறக்கின்றன.

இங்கோ, பாடல் தொடக்கத்தில் கவிஞன், அவன் பாடப் புகுந்த நாட்டில் 'வண்மை' அதாவது கொடைச் சிறப்பு இல்லை என்று சொல்லிவிடுகிருன்.

ஆகையால், அந்நாட்டு மக்கள் அனைவரும் ஈகைக் குணம் இல்லாதவர்; இவறன்மை (கஞ்சத்தனம்) கொண்டு ஒழுகும் இயலினர், என்று ஆகிவிடும். ஆனல் கவிஞனே அதற்குநேர் மாருன நாட்டினைப் பற்றிப் பாடு கிருன். அந்நாட்டினர் தம்மை உள்ளி வருநர்க்கு உள்ளி, உள்ள எல்லாம் உவந்து ஈயும் தன்மையர். அப்படிப் பார்க் கும்பொழுது, வண்மை இல்லை என்று அவன் சொல்லும் பொழுது அதில் ஏதோ ஓர் உத்தியைக் கையாள்கிருன் என்பதனை நாம் யூகித்துக் கொள்கிறேம்.

அந்த முதலடியிலேயே அவன், தான் பாடவந்த நாட்டில் கொடைச் சிறப்பு இல்லாமல் போனதற்கு யாது காரணம் என்று எடுத்துக்காட்டும் பொழுது கவித்துவம்

உடைய சொற்களை ஆளும் திறத்தை உணர்ந்து மகிழ்ச்சியில் மூழ்குகிறோம்.

அந்த நாட்டில் கொடைச்சிறப்பு இல்லைதான். ஆனால், அதற்குக் காரணம் அந்நாட்டு மக்கள் ஈகைக்குணம் அற்றவர்களாகவோ, பெற்றவர்களாகவோ இருப்பது அன்று. அதற்கு மாறாக அந்நாட்டில் வறியவர் எவரும் இலர். எனவே கொடையைப் பெற்றுக் கொள்பவர் இன்மையால், அக் கொடையை ஈபவரும் இலர் ஆயினர். இக் கருத்தையே பின்னரும்,

''எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே,
இல்லாரும் இல்லை......''

(நகரப்படலம் 74)

என்பான்.

இந்த உத்தியையே பின்வரும் மூன்று அடிகளிலும் கவிஞன் கையாள்கிறான்.

திண்மை இல்லை - வீரத்தின் வெளிப்பாடு இல்லை. அதற்கான வாய்ப்பும் இல்லை. காரணம் யாது? எதிர்த்துப் போரிடப் பகைவர் இன்மையே.

அந்நாட்டு வீரர்கள் யாரொடும் பகைகொள்ளலர் ஆகலின் போர் ஒடுங்கிற்று; புகழ் ஒடுங்கிலர்.

அவ்வாறே உண்மை இல்லை. காரணம், பொய்பேசுபவர் இன்மையே. பொய் உண்மையின் மறுதலை. இவ்வாறு மாறுபட்ட பிறிதொன்று இருந்தால்தான் அதனின்றும் பிரித்துக் காட்டிப் பேச வாய்ப்பு உண்டு. ஒன்று பிறிதொன்றிலும் உயர்ந்தது என்று காட்டும் வாய்ப்பு அதன் மறுதலையான பிறிதொன்று இருந்தால்தான் இயலும்.

வெளிச்சம் என்ற ஒன்று இருந்தால்தான் இருள் என்ற ஒன்று இருக்க முடியும். ஒளியைத் தடைப்படுத்தும் பொருள் இருந்தால்தான் இருள் தோன்றும். வெயில் இருந்தால்தான், அது ஊடுருவிப் புகாத்தடை ஒன்று இருப்பின், நிழல் தோன்றும். ஒன்று இல்லா இடத்து அதன் மறுதலையும் இன்ரும். இதனைத்தான் கவிஞன் இங்கே எடுத்துக்காட்டுகிருன்.

அது போன்றே நான்காம் அடியில் ஒண்மை இல்லை - அதாவது அறிவுடைமை இல்லை என்கிருன். காரணம், எல்லோரும் கல்வி கேள்விகளில் ஒரு நிலையாகச் சிறந்து விளங்குவதே.

இப் பாடலைக் கூர்ந்து நோக்கும்பொழுது சொல்லாட்சியின் காரணமாக ஒன்றைப் பழிப்பதுபோலப் புகழ்வதைக் காண்கிருேம்.

கம்பனின் இப் பாடலோடு புறநானூற்றுப் பாடல் ஒன்றை ஒப்பிட்டுப் பார்ப்பது பயனுடையதாகும்.

"...வென்றி எல்லாம் பயின்று அகத்து அடக்கிய
தண்டா ஈகை தகை மாண் குடுமி!
தண்கதிர் மதியம் போலவும், தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய பெரும! நீ! நிலமிசையானே"

(புறநானூறு 6)

என்று காரிகிழார், பாண்டியன் பல்யாகசாலை 'முதுகுடுமிப்பெரு வழுதியை' வாழ்த்துகிருர்.

அதாவது,

''வென்று, விறல்மேம்பட்டு, பெற்ற வெற்றியால் தன்னை வியந்து தருக்காது, மனத்தே உட்கொண்டு விளங்குபவனே! தணியாத (எஞ்ஞான்றும் குறைவு

படாத) வண்மை உடைய, தகுதி மாட்சிமைப்பட்ட, முது குடுமிப் பெருவழுதி வேந்தே! நீ குளிர்ந்த சுடரை உடைய திங்களைப்போலவும், ஒளி பொருந்திய ஒள்ளிய கதிர் கால் ஞாயிறு ஒப்பவும் நின்று நிலைபெறுவாயாக! நின் புகழ் மண்டேய்த்த புகழ் ஆகுக!" என்று வாழ்த்து கிறார் என்பதாம்.

இப்படி வாழ்த்து நிறைபெறுமுன்னர், அவர் தம் 'வாழ்த்தியல்' பாடலில் அமைத்துள்ள பிற தொடர்கள் காண்பது நன்று.

பணீஇயர் அத்தை, நின் குடையே - முனிவர்
முக்கண் செல்வர் நகர்வலம் செயற்கே!
இறைஞ்சுக, பெரும! நின் சென்னி - சிறந்த
நான்மறை முனிவர் ஏந்து கை எதிரே
வாடுக, இறைவ! நின் கண்ணி - ஒன்னார்
நாடு சுடு கமழ் புகை எறித்தலானே!
செலியர் அத்தை, நின் வெகுளி - வாலிழை
மங்கையர் துனித்த வாண்முகத்து எதிரே!

(புறநானூறு 6:17-24)

என்று பாடுகிறார்.

(பணீஇயர் நின்குடை - நின் கொற்றக்குடை தாழ்க.
இறைஞ்சுக சென்னி - உன் தலை வணங்குவதாக.
வாடுக கண்ணி - நீ அணிந்த கண்ணி (தலைமாலை) வாடிச் சாம்புவதாக.

செலியர் நின் வெகுளி - நினது சினம் தணிவதாக)

இப் பாடலில் அவன் மாட்டு நிகழவேண்டுவ நான்கு எனக் குறிப்பிடுகிறார்.

இந் நான்கும் மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது, வாழ்த்துதலுக்கு உரிய அல்லாதனவாகக் காண்கிறோம்,

"தாழ்ந்த குடை, தளர்ந்த செங்கோல்" அரசின் வீழ்ச்சியைச் சுட்டுவது.

அரசர்களை 'வணங்கா முடியர்' என்று குறிப்பது மரபு. அத்தகைய 'முடி வணங்குவதாக' எனக் குறிப்பது வாழ்த்துதல் பாற்படாததாக அமைகிறது.

"நாள் மலர் புனைந்த நறுமலர்த்தார்" வேந்தன் கண்ணி வாடுக, என்று குறிப்பது அமங்கலக் குறிப்பாக அமைகிறது.

"எஞ்சலில் சினத்தொடு செறுவர் நோக்கிச் சிவந்த கண்கள், தன் சிறுவனைக் காணினும் சிவப்பு ஆறுவே" என்பார் ஔவையார்.

"மாறுமைந்தும், ஆறுச் சினமும்கொண்டு, விளங்கும் அரசனை உடற்றியோர் நாடு தாயில் தூவாக் குழவிபோல ஓவாது கூவும்" என்று கூறும் மரபும் உண்டு.

அரசற்கென அமைந்த சிறப்புகளில், குடைதாழாமை, கோல் தளராமை, தலைவணங்காமை, கண்ணி வாடாமை வெகுளி நீங்காமை போல்வன சில என்பர்.

அத்தகைய சிறப்பினை உடைய மன்னன் ஒருவன் கண்டு, வாழ்த்தியல் பெயரில் "உன் குடை தாழ்க, தலை வணங்குக, கண்ணி வாடுக, வெகுளி அகல்க" என்று அமைப்பது வாழ்த்துவது ஆகாது; சபிப்பதாகவோ, அவமதிப்பதாகவோ ஆகும்.

ஆனால், இந்நான்கையும் (தாழ்க, இறைஞ்சுக, வாடுக, அகல்க, எந்நிலையில் நிகழ வேண்டும் என்று எடுத்துக் காட்டும் இடத்து வசைமொழியாக அன்றி, அவன் உயர்வை, உயர்வற உயர்த்தி, இசைக்கும் நசைமொழியாக அமைக்கிறார். இப்படி அமைத்துப் பெருமைப்படுவது தொடர்களின் பின் பகுதிகளில் காணப்பெறும். இவ்வாறு

இயைத்துக் கண்டால் முன்னர்க் குறிப்பிட்ட வாழ்த்தியலுடன் பொருத்தம் பெற்று முழுமை அடையும்.

இருமை நலம் தெரிந்து, ஒருமை உள்ளத்தராய், அஞ்செழுத்து அடக்கிய ஆறு அறிமுனிவர், நாவியல் மருங்கில் நவிலப்பாடி முக்கட் பரமன் தொழுது நிற்பர். அத்தகைய முனிவராற் பரவப்படும் ''பிறவா யாக்கைப் பெம்மான், முக்கண் செல்வன் சிவபெருமானது கோயிலே நீ வலம் வரும் காலத்து நின் கொற்றக் குடை தாழ்வதாக'', என்று குறிப்பிடுகிறுர்.

இறைவன் திருமுன் எவரும் ஒத்த நிலேயினரே என்று குறிப்பது இத் தொடர்க் கருத்து ஆகிறது.

அடுத்து 'மன்னன் தலே எப்பொழுது தாழவேடும்?' என்பது.

''செற்றம் நீக்கிய மனத்தினராய், கற்றேரும் அறியா அறிவினராய், கற்றேர்க்குத் தாம் வரம்பாகிய தலேமையராய், காமமொடு கடுஞ்சினம் கடிந்த காட்சியராய்'' விளங்கும் முனிவர்கள் குடிதழீஇ, கோலோச்சும் கொற்றவனேக் காணக் குறுகுவர். வந்தடி வீழ்ந்த வயவாள் வேந்தனே உளம் கனிந்து வாழ்த்துவர். இருகை உயர்த்து 'ஜெய விஜயீ பவ' என்று வாழ்த்தி அமைவர்.

அவ்வாறு ''மிக்க நான்கு வேதத்தினேயுமுடைய அவர்கள் நின்னே 'நீடு வாழ்க' என வாழ்த்த எடுத்த கை முன்னர் 'நினது முடி வணங்குக' '' என்று குறிப்பிடுகிறுர் புலவர்.

இத் தொடர் அமைப்பு மன்னனது பண்புச் சிறப்பைப் புலப்படுத்துவதற்காக அமைந்ததே அன்றி, அவனே அவமதிப்பதற்காக அமைந்தது அன்று.

மூன்ருவதாக அவன் அணிந்திருக்கும் 'கண்ணி வாடுவதாக' என்பது.

அரசன் அணி கண்ணி, சாம்பிக் கருக வேண்டும் எனக் கவிஞன் விரும்புகிருன். எப்பொழுது?

''மாற்ருர் தேயம் மண்டு எரிகதுவ, பசும் பிசிர் ஒள் அழல் ஆடிய மருங்கில், போர் சுடு கமழ் புகை மாதிரம் மறைப்ப, அப்படி எழும் பலமணம் நாறும் புகை உறைத்தலான், வெம்மை தாக்கலான் உன் கண்ணி கருகிவிடுவதாக'' என்கிருர்.

இவ்விடத்தும் 'தெருளார் தெறூஉம்' அரசனது மேம்பாட்டை உயர்த்தியே கூறுகிருர்.

மன்னன் சினம் எப்பொழுது தணியவேண்டும் என்று புலவர் விரும்புகிருர் என்று காண்போம்.

வாலிழை மங்கையர் துனித்த வாள்முகத்து எதிரே
செலியர் அத்தை நின் வெகுளி

என்று குறிப்பிடுகிருர்.

(அத்தை-இடைச்சொல், முன்னிலே அசையாய் வருவது)

துனி என்ற சொல் புலவியின், ஊடலின், முதிர்நிலே என்ற பொருளது. எனவே துனித்த என்பது புலவியை வலிந்து மேற்கொண்ட என்ற பொருளுடையதாகிறது. காரணம் இன்றியேயும் கண்ண நீர் கலிழ்வது காரிகையர் இயல்பு. அரசனது உரிமை மகளிர் ஏதோ காரணம் பற்றி அவன் மாட்டு ஊடல் கொண்டனர்.

இவ்வாறு,

ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று (திருக்குறள் 1304)

என்பான் வள்ளுவன்,

வாலிழை, வாண்முகம் என்ற தொடர்கள், அவர்கள் அரசனது உரிமை மகளிர் என்று குறிக்கும். மறுவில் கற்பின், மாசுதீர் மகளிர் என்பதும் பெற்றும்.

எனவே அத்தகையார் முகத்தெதிரே அரசன் சினம் நில்லாது ஒழிய வேண்டும். ஏன் எனில்,

"மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்" (திருக்குறள் 1289)

அன்றோ?

முரணியோர் முரண் முற்றும் முருக்கலும், முன்னியது முடித்தலும், அரிமா அன்ன அணங்குடைத் துப்பினர் ஆதலும் உடைய அரசர்கள் தம் பொற்றொடிப் புதல்வர் மாட்டும், முற்றிழை மகளிர் மாட்டும் அகலா அன்பினர் ஆவர். எனவே அத்தகையார் மாட்டு மறந்தும் சினம் எழாது அமைக, என்று குறிப்பிடுகிறார்.

இவ்வாறாக முதலில் பார்க்கும்பொழுது பழிச்சல் போலத் தோன்றினும், பின் தொடர் இணைப்பால் புகழாரமாக இவை தெரிகின்றன.

இங்கு எடுத்துக் காட்டப்பட்ட உத்தியைக் கம்பனுக்குப் பின் வந்த புலவர்கள் பின்பற்றினர் என்று குறிப்பிட்டோம்.

அவற்றுள் ஒரு சில காண்போம்.

முஸ்லிம் தமிழ்ப்புலவர்களில் உமறுப்புலவருக்கும் அவர் யாத்த சீறாப்புராணத்திற்கும் தமிழறிந்த நல்லிதயங் களில் தனித்த இடம் உண்டு.

அவர் தன்னுடைய சீறாப்புராணத்தில்,

நினைக்கும் பொன் பொருளே நிந்தனை, மற்றோர்
　　　　நிந்தனை சிந்தனை இலேயே;
இன கரும் சுரும்பு மது துளி அருந்து
　　　　இவை அலால் மது பிறிது இலேயே;
சினகரி முனே கோட்டு இளமுலே புலவி
　　　　திருத்து பொய் அலது பொய் இலேயே;
வன கனி கறுத்த குலே களவு அலது
　　　　மறுத்து ஒரு கொலே களவு இலேயே.

(நாட்டுப் படலம் 56)

(நிந்தனை - பழிப்பு; சுரும்பு - வண்டு; மது - தேன்;
சினகரி - கோபம் மிக்க யானை; கோடு - தந்தம்;
புலவி - ஊடல்; வனம் - காடு; குலே - கொத்து
கறுத்த - கருமை நிறம் உடைய;
களவு - களா. களவு - திருட்டு.
கொலே - உயிர்க் கொலே.
புறு - புற, புறவு, புறவம்;
நறு - நற, நறவு, நறவம் என்று அமைவது போல்,
களா - கள, களவு, என்று அமையும்)

இப் பாடலேப் படிக்கும்பொழுது, அவர் பாட வந்த நாட்டில் (பாட்டின் முதலடிப்படி) நிந்தனை இருந்ததாகவும், இரண்டாம் அடிப்படி மது அருந்துதல் இருந்ததாகவும், மற்றிரு அடிகளின்படி பொய் இருந்ததாகவும், களவு இருந்ததாகவும் நமக்குப் புலப்படுகிறது.

இவற்றைக் குறிப்பிடுவதன் சிறப்பு, என்ன என்ருல், சீருப்புராணம், இஸ்லாத்தின் திருத்தூதர் ஆகிய முகம்மது நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை பற்றிக் குறிப்பிடும் நூல். இஸ்லாம் குடி (மது அருந்துதல்) யை மிக வன்மையாகக் கண்டிக்கிறது. அது போலவே, பொய்யும், களவும் நிந்தனை மொழியும் கண்டிக்கப்படுகின்றன. இத்தகைய

சிறப்புடைய இஸ்லாம் மார்க்கம் வலியுறுத்து நூலில் இவை இருப்பதாகக் குறிக்கப் பெறுவது விந்தையாகத் தோன்றும்.

இஸ்லாம் பற்றிக் குறிப்பிட்டுக் காட்டுவதன் மூலம் வேறு சமயங்களோ, மதத் தலைவர்களோ, இவற்றைக் கண்டிக்கவில்லை என்பது பொருள் அன்று.

இவற்றை ஒதுக்குவதற்கு இஸ்லாம் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டவும், அப் பின்னணியில் இப் பாடலின் நயத்தை வலியுறுத்தவுமே இவை குறிப்பிடப் பெற்றன.

முதலடியின்படி புலவர் பாடும் நாட்டில் நிந்தனை இருக்கவே செய்கிறது. அந்த நிந்தனை பொன்னையும் பொருளையும் நினைத்துக் கொண்டிருப்பதனை நிந்திப்பதைத் தவிர பிறிதொரு நிந்தனை சிந்தனையிலும் இல்லை என்பதாம்.

அறவழி நடக்கும் அந் நாட்டவரிடத்து செல்வம், ஒன்று ஆயிரம் ஆகக் கிளைக்கிறது. இவ்வாறு வரு நிதி பிறர்க்கு ஆர்த்திய பின்னரும் குறையாமை கண்டு அப் பொன்பால், பொருள்பால், வெறுக்கைபால் (செல்வம்) வெறுக்கை மேவுவர். இத்தகைய சிந்தனையால் பொன் பொருள் நிந்தனை அவர் உள்ளத்தில் எழுகிறது.

இரண்டாம் அடியில் குறிப்பிடப்பெறும் மது, மலர் களில் உள்ள தேனைக் குறிக்கும். வண்டுகள் அருந்துகின்ற தேன்துளி ஆகிய மதுவே அன்றி வேறு எம் மதுவும் அங்கு இல்லை.

மூன்றும் அடியில் இருப்பதாகக் கூறப்படும் பொய், கணவனோடு ஊடல் கொண்டிருக்கும், மனைவியை அமைதிப்படுத்த அவள் தலைவன் கூறுவது. உணர்ப்பு

வயின் வாரா ஊடல் கொண்டாரை அமைதிப்படுத்த பொய்ம்மொழி புகலலாம் என்பது தமிழ் நூலோர் தந்த விதி விலக்கு.

கடைசியாகப் புலவர் குறிப்பிடுவது களவு. இக் களவு பற்றிச்சிறிது காண்போம். காட்டுப் புறத்தில் தன்னிச்சை யாக வளரக் கூடிய செடி. குலே, குலேயாகக் காய்த்துக் கிடப்பது; கருநிறக் கனி; அழகிய கண்கவர் நிறத்தது. இக் கனியின் நிறத்தில் ஈடுபட்ட ஒரு புலவர்,

''விளங்காய் (ஐ பந்து வடிவில்) திரட்டினுர் இல்லே; களங்கனியைக் கார் (கருமை) எனச் செய்தாரும் இல்'' என்று குறிப்பிடுகிருர்.

''களங்கனி மாறு ஏய்க்கும் மிடறு'' என்று சிவன் பற்றிக் குறிப்பிடும் தொடரும் உண்டு. ''நாளேக்குக் கிடைக்கும் பலாப்பழத்தைவிட, இன்றைக்குக் கிடைக்கும் களாப்பழம் மேல் என்ற பழமொழி ஒன்று உண்டு.

களவு என்ற சொல் இவ்வடியில் முதலில் பொருட் பெயரிலும் (கனியின் பெயர்), அடுத்து தொழிற்பெயரி லும் (கள்+அ+வு) பயிலப் பெற்று இரட்டுற மொழிதல் பயன் தந்து நிற்கிறது.

இப் பாடலில் இடம் பெற்றிருக்கும் 'குலேக்களவு' என்பதில் காணப்பெறும் 'களவு' என்ற சொல் திருட்டு என்று பொருள்படும், என்றே இதற்கு முன் பேசியும் எழுதியும் வந்திருக்கிறேன்.

சிந்தித்துப் பார்க்கும்பொழுது அது தவறு என்று தோன்றுகிறது. வனங்களில் காணப்பெறும் மரங்களில் இருந்து காய்களேப் பறிக்கும் களவும் களவுதான். களவில் சிறியது, பெரியது என்றில்லே.

ஆக ஒரு இலட்சிய நாட்டைப் பற்றிப் பாடவந்த புலவர் இந்த ஒரு சிறிய களவைத் தவிர வேறு எந்த களவும் இல்லை என்று பாடியிருக்க மாட்டார்.

ஆகவே களவு என்ற சொல்லுக்கு இங்கே எடுத்துக் காட்டி இருக்கும் களாக்கனி என்ற பொருள்தான் பொருந்தும் எனத்தோன்றுகிறது.

ஐவகைய தீவினைகளில் இப் பாடலில் நான்கு குறிப்பிட்டு அமைகிருர். கொலை, களவு என்று இணையாகவே வழங்கும் மரபுண்மை பற்றி இணைத்துக் கூறியுள்ளார்.

''கள்வனைக் கோறல் கடுங்கோலன்று'' என்பது இந் நாட்டின் பண்டைய விதி.ஒரு லட்சிய நாடு இவை நீங்கியதாக அமையவேண்டும் என்ற ஆர்வத்தினர் ஆகலின், இவ்வாறு பாடல் அமைத்தார் என்று கொள்வது தவருகாது.

உமறுப் புலவரின் இந்தச் சொல் ஆட்சியைப் பின் பற்றி நாகூர் குலாம் காதிரு நாவலர் அவர்கள் தம்முடைய ஆரிபு நாயகம் நூலில் நாட்டுப் படலத்தில்,

களவது செடி அல களவு இலை கொலையாய்
உளவது பொறிவழி உறுபகை படிறு ஆம்
அளவது மடவியர் அணிஇடை கவடு ஆம்
தளம் அது பலவகை தரு தரு இனமே.

(நாட்டுப் படலம் 49)

என்று பாடுவார்.

இப் பாடலின் முதல் அடியில், உமறுப் புலவர் பாடலின் ஈற்றடிச் சொற்கள் அப்படியே ஆளப்பட்டிருப்பது காண்கிருேம்.

அடுத்து 'கொலையாய் உள அது பொறி* வழி உறு பகை' என்பது.

---

* (பொறி - ஐமபொறி; சிறப்பாக, கண்கள்)

'குவளை அல்ல; கொடு நெடுவேற்கண்' என்ற தொடர் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

அடுத்து அமைவது 'படிறு ஆம் அளவது மடவியர் அணி இடை' என்பது.

(அதாவது அந்நாட்டில் பொய் எனக் குறிப்பது மகளிர் இடையையே)

படிறு என்ற சொல் வஞ்சகம், பொய் எனும் பல் பொருளதேனும் ஈண்டு பொய் எனும் பொருளதே.

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
அஞ்சும் அகத்தே நகும். (திருக்குறள் 271)

"வஞ்சமனம் உடையவனது பொய் ஒழுக்கத்தை அவனுடைய உடம்பில் கலந்து நிற்கும் ஐந்து பூதங்களும் கண்டு தமக்குள் சிரிக்கும்" என்பது காண்க.*

கம்பன் கூறும் 'பொய்யோ எனும் இடையாள்' எனும் தொடர் இங்கு பொருத்திக் காண்பது நன்று.

நாவலர் ஈற்றில் நவில்வது, 'கவடு ஆம் தளம் அது பல வகை தரு தரு இனம்' என்பதாம்.

கவடு—(கபடு)—வஞ்சகம், மரத்தின் கிளை, சிறுகளை, களவு, கொலை, படிறு (பொய்) என்ற சொற்களை ஆண்டதற்கு ஏற்ப இந்த இரு பொருள் தரும், கவடு என்ற சொல்லையும் நாவலர் ஆள்கிறார்.

இங்கு இரு முறை ஆளப்பெற்றிருக்கும் தரு என்ற சொற்களில் முதலாவது தரு. வினைப்பகுதியாகவும்

---

* டாக்டர்.மு.வரதராசனார் உரை.

அடுத்தது மரம் என்ற பொருளிலும் அமைந்துள்ளது பலவகை தரு தரு இனம் என்ற தொடர் பழ வகைகளைத் தருகின்ற மரங்களின் தொகுதி என்ற பொருள் தரும்.

இப்படிப் பார்க்கும் பொழுது கவிதையின் நயம் மிகுவதைக் காண்கிறோம்.

காரொடும் தொடர் கவட்டு எழில் மராமரக்குவடு
(சந்திர சயிலப் படலம் 2)

கவட்டிலை ஆர் (முதற்போர்புரிப் படலம் 115)

கவடு புய்த்து எறிந்த களிமத யானை (தனிப்பாடல்)

என்பன இலக்கிய வழக்காறுகள்.

முன்னர் நாம் காட்டிய பாடற் பாணியில் பயின்ற பிறிதொரு பாடலையும் இந் நூலிலேயே காணலாம்.

தேய்வது மடவியர் திகழ் இடை; வெறியில்
சாய்வது கருமையில், தளர் குழல்; நெறிபோய்ப்
பாய்வது நதி வரு படர்புனல்; அறிவான்
ஆய்வது கலைகளின் அகலு பரவையே.
(ஆரிபு நாயகம்—நாட்டுப்படலம் 47)

நாம் பலவிடங்களில் கண்டு வந்திருப்பதுபோல, இங்கும் புலவர் ஆண்டிருக்கும் 'தேய்வு', 'சாய்வு', 'பாய்வு' ஆய்வு' என்ற சொற்கள் நாட்டு வளத்தை விளக்கப் பொருத்தமானவை அல்ல.

தேய்வது எது? மடவியர் இடை; சாய்வது எது? மகளிர் குழற் கற்றை; பாய்வது எது? பெருகி வரும் நீர்; ஆய்வது எது? கலை நூல்கள்.

இவ்வாறு புலவர் கொள்ளும் சிறப்புத் தொடர்கள் நாட்டின் சிறப்பையே விதந்து ஓதும்.

தேய்வது - இடுகு இடை. மகளிர் இடை, பிடி இடை, துடி இடை என்றெல்லாம் கூறப்பெறும். இதுபற்றிப் பின்னர் விரிவாகப் பார்க்கலாம்.

சாய்வது—குழற் கற்றை. சொருகு கொந்தளகம் சுமை மிகையால் சொருக்கு அவிழ்ந்து, புறம் தாழ்ந்து கை மேல் அலேயும் என்பர்.

வெறி—மணப் பொருள்களேப் புகைத்துக் கூந்தற்கு ஊட்டிய மணம், அகிலும், சாந்தமும் புகைபொருள் ஆகும். இத்தகைய கூந்தல் 'மதுகரம் வாய் மடுக்கும் குழற்காடு' எனவும் கூறப் பெறும்.

காரினேக் கழித்துக் கட்டி,
கள்ளினெடு ஆவி காட்டி,
பேரிருள் பிழம்பு தோய்த்து,
நெறி உறீஇ, பிறங்கு கற்றை
சோர் குழல் தொகுதி என்று
சும்மை செய்து அனேயது அம்மா!—
நேர்மையைப் பருமை செய்த
நிறை நறுங்கூந்தல் நீத்தம்!

(கம்பராமாயணம் - நாடவிட்ட படலம் 59)

என்பான் கம்பன்.

இப் பெருந்தொகைக் குழற்கற்றையைக் குறிப்பிட்டுக் குறுந்தொகை, 'செறி எயிற்று அரிவை கூந்தலின் நறியவும் உளவோ.........?' என்று வினவும். கம்பனும், 'வெறியவும் அவர் மென்மலர்க் கூந்தலே', என்பான்.

அடுத்தது;

'நெறி (மாறி) போய்ப் பாய்வது நதி வரு படர் புனல்' என்ற தொடர்.

'நெறி கடந்து பரந்தன நீத்தமே' (நாட்டுப் படலம் 40)
என்பான் கம்பன்.

அடுத்த தொடர் 'ஆய்வது கலைகளின் அகலும் பரவையே' என்பது.

(பரவை - கடல்)

இதனோடு,

....................எண்இல் நுண்நூல்
ஆய்ந்தே கடந்தான், அறிவு எனும் அளக்கர்;
(அரசியல் படலம் 5)

என்ற கம்பன் தொடர் ஒப்பிடற்குரியது.

(அளக்கர் கடல்)

உமறுப்புலவரின் பாணியைப் பின்பற்றிப் பாட முனைந்த முஸ்லிம் தமிழ்ப் புலவர்களில் குறிப்பிடத்தக்க பெருமையும், புகழும் வாய்ந்தவர் வண்ணக் களஞ்சியப் புலவர் ஆவார்.

அவர் படைத்த காப்பியங்களுள் ஒன்று 'இராஜ நாயகம்'.

முகம்மது நபி (ஸல்) அவர்கட்கு முன்னுல் பல இறைத்தூதர்கள் தோன்றி இருக்கிறுர்கள், என்பது இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கை.

அப்படித் தோன்றியவரில் இருவர் தாவூது நபி, அவர் திருக்குமாரர் ஆன சுலைமான் நபி ஆவார்கள். இவ்விருவரையும் தான் கிறித்தவர்கள் விவிலியத்தில் தாவீது, சாலமோன் என்று குறிப்பிடுவார்கள்.

சுலைமான் நபி அவர்களைப் பற்றி வண்ணக் களஞ்சியப் புலவர் பாடிய இராஜ நாயகக் காப்பியம் தமிழ் இலக்கிய மரபுப்படி பாடப் பெற்றுள்ளது.

இம் மரபுப்படியே இக்காப்பியத்துள், கடவுள் வாழ்த்து, நாட்டுப் படலம், நகரப் படலம் என்ற படலங்கள் உள்ளன.

இராஜநாயகக் காப்பியத்தின் நாட்டுப் படலத்தினுடைய இறுதிப் பாடலாக அமைந்துள்ள பாடலைக் காண்போம்:

தானம் ஏற்பவர்கள் இலை என சலிக்கும்
சலிப்பு அன்றி மறு சலிப்பு இலையே.
மான வேல் விழியார் மருங்கு நூல் எனஆம்
குறைவு அன்றி மறு குறைவு இலையே.
ஆனதாம் கொடை மங்கல வெற்றிக் கொடியர்
அன்றியே கொடியர் வேறு இலையே.
ஈன வெம்பவ நிந்தனை இன்றி இகழ்வாய்
இயற்று நிந்தனை பிறிது இலையே.

(நாட்டுப் படலம் 40)

இப் பாடலின் படியும் வண்ணக் களஞ்சியப் புலவர் பாட வந்த நாட்டில் ஒரு சலிப்பு இருக்கிறது; ஒரு குறை(வு) இருக்கிறது; கொடியர் உள்ளனர்; ஒரு நிந்தனை இருக்கிறது.

முன்னர் நாம் எடுத்துக் காட்டியது போல ஒரு இறைத்தூதர் பிறந்த நாட்டைப்பற்றிப் பாட வந்த எந்தப் புலவனும் விரும்பத்தகாத இவை (சலிப்பு, குறை, கொடியர், நிந்தனை) அந்த நாட்டில் இருந்தன என்று சொல்லமாட்டான்.

பார்க்கப்போனால், அந்த நாட்டிற்குப் பெருமை சேர்ப்பதற்காக, உயர்வு நவிற்சியிலோ, புகழ்ச்சியிலோ இறங்கி, இருக்கும் நல்லனவற்றைப் பெரிது படுத்துவான்; அல்லது இல்லாததை இருப்பதாகச் சொல்லவே செய்வான்.

அப்படி இருக்கும்பொழுது அந்த நாட்டில் சலிப்பு, குறைவு, நிந்தனை இருந்தன; கொடியர் இருந்

தனர் என்று ஒரு புலவன் சொல்கிருனே என்று மயக்கம் தோன்றும்.

ஆனுல் அந்த நாட்டின் பெருமையைத் துலக்கிக் காட்டுவதற்காகக் கவிஞன் கையாளும் உத்தி இது என்பதனை உணரும்பொழுது, கவிதை நயத்தை அநுபவிக்கத் தொடங்குகிருேம்.

"ஐயம் இட்டு உண்"
"ஆர்க்கும் இடுமின்; அவர் இவர் என்னன்மின்"
"பாத்தூண் மருவுக"
"பகடு நடந்த கூழ் பல்லாரோடும் உண்க"
"தானமது விரும்பு"
"இட்டார் பெரியோர்"
"கற்று தரல் போல் கரவாது அளித்திர்"
"சோறிடும்; தண்ணீரும் வாரும்"

என்று வரூஉம் தொடர்கள், தமிழ் நீதி நூல்கள் ஆணையிற் கிளந்த அருமை சான்றவை.

உலகின் எல்லாச் சமயங்களும் தானத்தையும், கொடையையும் மக்களது அன்ருடக் கடமையாக ஆக்குகின்றன. அப்படி இருக்கும்பொழுது, தன் கடமை நிறைவேற்ற விழையும் ஒருவனுக்கு தன்னிடமிருந்து, பொருளோ, உதவியோ பெற எவரும் இலர் எனின் பெருத்த வருத்தத்திற்கு ஆளாவான் அன்ருே? இவ்வாறு தங்கட்கு விதிக்கப் பெற்ற கடமையை நிறைவேற்று வதற்கு வழியும், வாய்ப்பும் இல்லையே என்று அந்த நாட்டு மக்கள் சலிக்கத்தானே செய்வார்கள். இதனைத் தான் பாடலின் முதலடி குறிக்கிறது.

இப்படிக் குறிப்பதன் மூலம் செல்வர், வறிஞர் என்ற பேதம் இன்றி அந்நாட்டு மக்கள் அனைவருமே, உயர்

நிலைச் செல்வராக இருந்தனர் என்பதனைக் காட்டி விடுகிறார்.

இரண்டாம் அடியில் 'சாம்' நகரத்துப் பெண்களின் அழகைக் குறிப்பிடுகிறார். ஒரு பெண்ணின் இடையானது மெல்லியதாக இருக்கவேண்டும் என்பது இந்நாட்டு மக்கள் வகுத்த அங்க லட்சணங்களில் ஒன்று.

''அகல் அல்குல், தோள், கண் என மூவழி பெருகி
நுதல், அடி, நுசுப்பு என மூவழி சிறுகி''

(கலித்தொகை 108)

காரிகையர் அழகு பெற்று விளங்குவர், என்பார்கள்.

இட்டிடை, நொவ்விடை, ஈக்காற்றுக்கு ஆற்றுஇடை' இழை ஒன்று இரண்டு வகிர் செய்தாலன்ன நுண்ணிடை, என்றெல்லாம் புலவர்கள் விதந்து கூறுவர்.

கவிச்சக்கரவர்த்தி கம்பனோ இதனை எந்த அளவிற்கு எடுத்துக் கூறுகிறான் என்றால்,

''ஐய நுண்ணிடையார்'' (மிதிலைக் காட்சிப் படலம் 8)

'இல்லை', 'உண்டு' என்ன நின்ற இடை

(கோலங்காண் படலம் 12)

''பொய்யோ எனும் இடை" (கங்கைப்படலம் 1)

என்று குறிப்பிடும் அளவிற்கு.

ஆடக அரங்கில், நடனம் பயிலும் ஆடுகள மகளிர் ''ஐய நுண்ணிடையார்'' என்பான், அவர்கட்கு இடை இருக்கிறதா, இல்லையா என்று ஐயப்படும் அளவிற்கு அவர் இடை மெலிந்திருந்தது என்று கூறுவான்.

கோலங்காண் படலத்தில் இதனையும்விட ஒரு படி மேலே சென்று,

“பல் இயல் நெறியின் பார்க்கும் பரம்பொருள்
என்ன, யார்க்கும்,

‘இல்லை’, ‘உண்டு’, என்ன நின்ற இடையினுக்கு
இடுக்கண் செய்தார்.
(கோலங்காண் படலம் 12)

என்று கம்பன் குறிப்பிடுவான்.

‘ஐயம்’ என்று முன்னர்க் குறிப்பிட்டதை விளக்குவது போல் இங்கு விரித்துச் சொல்லிவிடுகிறான்.

இப்படிக் கூறுவதிலும் மன நிறைவு பெறாத கம்பன்,

“பொய்யோ எனும் இடையாளொடும்,
இளையானொடும் போனான்”
(கங்கைப் படலம் 1)

என்று சீதையைக் குறிப்பிடுகிறான்.

ஆக படிப்படியாகப் பார்க்கும்பொழுது,

ஐய நுண்ணிடை,
இல்லை, உண்டு என்ன நின்ற இடை
பொய்யோ எனும் இடை

என்று பெண்களின் இடையினுடைய மென்மையை உணர்த்த முற்படுகிறான்.

அவ்வடிப்படையிலேயே வண்ணக் களஞ்சியப் புலவரும் இங்கே குறிப்பிடுகிறார்.

“பெருமை பொருந்திய வேல் போன்ற விழிகளை உடைய பெண்களது மருங்குல் (இடை) நூலினும் மெல்லிது என்ற குறை தவிர பிற எக்குறைகளும் அந் நாட்டில் இல” என்பது அவர் கூற வந்த கருத்து.

மூன்றும் அடியில் அந்நாட்டு மறவர்களின் வெலற்கரு திறனையும், வெற்றி மேம்பாட்டையும் குறிப்பிடுகிறார்.

"ஏந்து கை (வெற்றிக்) கொடியர் அன்றி, இயல் பினில் கொடியார் அந்நாட்டில் எவரும் இலர்" என்பது மூன்றும் அடித் தொடர்ப் பொருள்.

'மங்கல வெற்றிக் கொடியர்' என்ற தொடரில் அமைந்துள்ள 'கொடியர்' என்ற சொல், உயர்த்திய கொடி ஏந்தி வரும் உரவோர் குறித்து நிற்கிறது. அடுத்து வரும் கொடியர் என்பது கொடுமை என்ற பண்பிற்குக் கொள்கலம் ஆன தீயவர்க் குறித்து நிற்கிறது.

எப்படி உமறுப் புலவர் 'களவு' என்ற சொல்லைத் தம் பாடலில் ஒரே அடியில் இரு பொருள்படப் பயின்றாரோ அவ்வாறே இவரும் இப் பாடலில் 'கொடியர்' என்ற சொல்லை இரு வேறு பொருள்படப் பயின்றுள்ளார்.

இத் தொடரில் அமைந்துள்ள இரட்டுறமொழிதல் பாராட்டத்தக்கது.

பாடலின் ஈற்றடி அந் நாட்டு மக்களின் முறை திறம் பாப்பண்பையும், பணிவையும், அற நெறிச் சார்வினையும் எடுத்து விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

அவர்கள் நிந்திப்பது பாவங்களை அன்றி வேறு இல்லை என்பதாம். பிறரை எள்ளல் கருதி, இகழ்வாய்ப் பழி மொழி கூறி நிந்தித்தல் சிந்தனையிலும் கருதாதவர் அந் நாட்டவர் என்பது தெளிவு.

இது அந்நாட்டு மக்கள் உயர்நெறிய தனி வாழ்வைக் கூறுவதாக அமைகிறது.

"செய்கு அப்தில் காதிர் நயினார் லெப்பை ஆலிம்" புலவர் என்பவர் மற்றொரு புகழ் வாய்ந்த முஸ்லிம் தமிழ்ப்

புலவர் ஆவார். அவரைச் 'சேகனுப் புலவர்' என்றும், 'புலவர் நாயகம்' என்றும் குறிப்பிடுவார்கள்.

அவர் படைத்த காப்பியங்களுள் ஒன்று 'குத்பு நாயகம்' எனப்படும் 'முகியித்தீன் புராணம்.'

அவர் நம் காப்பியத்தின் நகரப் படலத்தில் இந்த உத்தியைக் கையாண்டு இரு பாடல்கள் யாத்துள் ளார். அவை சற்று மாறுபாடுள்ள வகையில் அமைந்துள்ளன.

அவற்றைக் காணலாம்.

பொற்பினில் சிறியவர் சுடர்கள் போல்பவர்
அற்பினில் சிறியவர் ஆவி ஈபவர்
வற்பினில் சிறியவர் மகத்து மேன்மையர்
கற்பினில் சிறியவர் காரும் தாழ்பவர்

(நகரப் படலம் 47)

அறிவினில் சிறியவர் அனைத்தும் தேர்பவர்
நெறியினில் சிறியவர் நினைத்தது ஈகுவர்
குறியினில் சிறியவர் திசைகொள் கீர்த்தியர்
பொறியினில் சிறியவர் எவையும் போற்றுவார்

(நகரப்படலம் 48)

[பொற்பு—பொலிவு, அழகு, ஒளி; சுடர்கள்—தண்மதியம், வெண்சுடர்; அற்பு—அன்பு; வற்பு—வன்பு, வன்மை; கார்—மேகம்; நெறி—ஒழுக்கநெறி, ஈகைநெறியுமாம்; குறி—குறிக்கோள், திசைகொள் கீர்த்தி — இசையால் திசை போயவர்; (அதாவது) உலகம் பரவிய உயர் புகழாளர்; பொறி—அறிவு, மனம்.]

முதற் பாடலில் பொற்பினில் சிறியவர், அற்பினில் சிறியவர், வற்பினில் சிறியவர், கற்பினில் சிறியவர் என்று சிறியவர் இயல்பைக் கூறும் முறையிலேயே அவர்களைப் பெருமைக்குரியவர் ஆக்கிவிடுகிறார்.

"திங்களும் கரிது என வெண்மை தீற்றிய
சங்க வெண் சுதை உடை தவள மாளிகை

(கம்பராமாயணம், நகரப் படலம் 27)

என்று கம்பன் அமைத்துள்ள தொடர் இங்கு ஒப்பு நோக்கிடத் தக்கது.

சங்க வெண் சுதையோடு ஒப்பிடும்பொழுது திங்கள் கரிது எனத் தக்கது என்பது இதன் பொருள்.

அந்நாட்டில் (புலவர் நாயகம் குறிப்பிடும் நாட்டில்) சுடர்கள் போல்பவரே பொற்பினில் சிறியவர் ஆவார் என்று தொடர் மாற்றிப் பொருள் காண வேண்டும்.

பொற்பு என்ற சொல்லுக்கு ஒளி, பொலிவு, அழகு என்பன பொருள்கள். சுடர் என்பது தண்மதியம், வெண்சுடர் குறிப்பிடும். மிக்க அழகுடையவரைக் குறிப்பிடும்போது,

"சேண் இகந்து விளங்கும் செயிர்தீர் மேனி"

(திருமுருகாற்றுப்படை 19)

என்பர்.

"நெடுந்தொலைவிலும் சென்று விளங்குகின்ற ஒளி மிக்க குற்றம் சிறிதும் இல்லாத அழகினை உடையவர்" என்பது இதன் கருத்து.

ஒளி படைத்த கண்ணினரைச் "சுட்டும் சுடர் விழி தாம் சூரிய சந்திரரோ" என்று வியக்கும் மரபும் உண்டு.

அவ்வாறே சுடர்கள்போல் ஒளி வீசப் பெறும், குற்றம் தீர்ந்த பொலிவு உடையவர் அந்நாட்டு மக்களில் சிறியார் (கடைநிலையர்), எனில் பெரியார் எந்நிலையர் ஆவார் என்பதனை நம் யூகத்திற்கே விட்டுவிடுகிறார்.

இவ்வாறே தொடர்களை அவ்வவ் அடிகளில் கொண்டு கூட்டிப் பொருள் காண்டல் முறை.

அந்நாட்டவருள் அன்பினில் சிறியவர் (தாழ்நிலையர்) எவர் தெரியுமா? தன் அன்பிற்குரியார்க்காக ஆவி ஈபவர் என்கிறார்.

பிறர் நலம் கருதி உடைமையும், பிறவும் அளிக்க, இழக்க உடம்படுவார் பலர். எனினும் ஆவி ஈகுபவர் எவர்? இவ்வாறு உயர் அன்பிற்காக உயிரும் ஈபவர் உயர்ந்தவர் அன்றோ? அத்தகையாரைச் சிறியார் என்று குறிப்பிட்டது நயமுணர்த்தி, பெருமைப்படுத்தவே.

மூன்றும் அடியில் வலிமையில் சிறியவர் பெருமையில் உயர்ந்தவர் என்றால் வலிமையில் பெரியர் எந்நிலையர்? சொல்லில் அடங்காத அளவிற்கு தவப்பெரியர் என்பது குறிப்பு.

வற்பு என்ற சொல் உறுதி, வலிமை, வன்மை, அருமை என்ற பொருள்கள் உடையது.

மகத்து என்பது பெரியது, பெரியவர், விசாலம் என்ற பொருள்கள் உடையது.

ஆக அந்நாட்டில் வலிமை குறைந்தவர் யாவர் எனின், பெருமை மிகுந்தவர் எவர்களோ அவர்கள்தாம் என்பார்.

நான்காம் அடியின்படி கற்பினில் சிறியவர் எவர் எனின், மழைமேகங்களும் வணங்கத்தக்க சிறப்பினை உடையவர் எவர்களோ அவர்கள்தாம் என்பார்.

இக் கருத்து, திருக்குறளில் உள்ள,

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்
பெய் எனப் பெய்யும் மழை" (திருக்குறள் 55)

என்ற குறட்பாவுடன் பொருத்திக் காணின் நலம் பயக்கும்.

புலவர் குறிப்பிடும் அடுத்த பாடலைக் காண்போம்.

எல்லாவற்றிலும் தேர்ந்தவர்களாக உள்ளவர்கள் எவர்களோ, அவர்களே அந்நாட்டில் அறிவினில் சிறியவர் எனில், அறிவினில் பெரியார் நிலை எண்ணியும் பார்க்க முடியாததாகிறது.

பெறல் வேண்டும் என்ற நசையால், தன்னை நாடி வருபவர்க்கு, அவர் நினைத்தது யாதோ அதனைத்தருபவரே அந்நாட்டில் நெறியினில் சிறியவர் என்கிறது இரண்டாம் அடி.

மூன்றும் அடியோ, எல்லாத் திசைகளிலும் பரவிய கீர்த்தியர் எவரோ, அவர்கள் குறிக்கோளில் சிறியவர் ஆவார் என்று குறிப்பிடுகிறது.

நான்காம் அடியோ எவையும் போற்றுபவர் பொறியினில் சிறியவர் என்று குறிப்பிடுகிறது.

பொறி என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. மனம் என்பதும் அவற்றுள் ஒன்று. எதனையும் வெருது போற்றுவதற்குப் பரந்த விசாலமான மனம் வேண்டும்.

இந்த நான்காம் அடிப்படி எதையும் போற்றுபவரே பொறியினில் (மனத்தால்) சிறியவர் ஆவார் எனில், பொறியினில் பெரியவர் மனம், எத்துணைப் பெரியதாக, விசாலமானதாக இருக்கவேண்டும் என்பதனை, நம் உய்த்துணர்வுக்கே விட்டுவிடுகிருர்.

'முக்கூடற் பள்ளு' திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சீவலப்பேரி (ஸ்ரீவல்லபன் பேரேரி) என வழங்கும் முக்கூடலில் கோயில் கொண்டுள்ள அழகரது புகழைப் பேசுகிறது.

இதனை இயற்றியவர் என்னயினுப் புலவர் என்று கருதப்படுகிருர்.

இந்நூலும் நாட்டுவளம், நகர் வளம் என்று மாறி மாறிப் பேசுகிறது.

நாட்டு வளம் என்ற தலைப்பில் உள்ள இரு பாடல்களை இங்கு நாம் நோக்கலாம்.

கறைபட்டுள்ளது வெண்கலைத் திங்கள்;
 கடம்பட்டுள்ளது கம்பத்து வேழம்;
சிறைபட்டுள்ளது விண் எழும் புள்ளு;
 திரிபட்டுள்ளது நெய் படும் தீபம்;
குறை பட்டுள்ளது கம்மியர் அம்மி;
 குழைபட்டுள்ளது வல்லி அம்கொம்பு;
மறைபட்டுள்ளது அரும்பொருட் செய்யுள்;
 வளமை ஆசூர் வடகரை நாடே.

(முக்கூடற் பள்ளு 21)

காயக் கண்டது சூரிய காந்தி;
 கலங்கக் கண்டது வெண் தயிர்க் கண்டம்;
மாயக் கண்டது நாழிகை வாரம்;
 மறுகக் கண்டது வான் சுழி வெள்ளம்;
சாயக் கண்டது காய்குலைச் செந்நெல்;
 தனிப்பக் கண்டது தாபதர் உள்ளம்;
தேயக் கண்டது உரைத்திடும் சந்தனம்;
 சீவலமங்கைத் தென்கரை நாடே.

(முக்கூடற் பள்ளு 22)

[படுதல் - பொருந்துதல்; கடம் - கடன், மதநீர்; சிறகு - குற்றவாளிகளை அடைத்துவைக்கும் இடம்; 'சிறகு; திரி - திரி(வு), மனமாறுபாடு; திரி - விளக்கில் இடப்படும் நூல் திரி; குறை - குறைபாடு; குழை - குழைவு, தளர்ச்சி; குழை - இளந்தளிர். மறை - ஒளிவு, மறைபொருள்.]

அடுத்த பாடலில் அனைத்துத் தொடர்களிலும் காணப்பெறும் 'கண்டது' என்பது துணை வினை எனப் படும்.

'பேசிப்பார்,' 'கேட்டுப்பார்' என்னுமிடத்து 'பார்' என்பது துணைவினை என்பர். காய்வது, கலங்குவது, மாய்வது, மறுகுவது சாய்வது, தணிவது, தேய்வது என்று காண வேண்டும்.

[காய்தல் - வெயிலிற் காய்தல், சினத்தல்; கலங்கல் - நிலை திரிதல், வருந்துதல்; மாய்தல் - அழிதல், மிகவும் துன்புறல்; மறுகல் - கலங்குதல், மயங்குதல்; சாய்தல் - நிலைசாய்தல், நிலைகெடல்; தணிதல் - அடங்குதல், நிலைதாழ் தல்; தேய்தல் - தேய்ந்து போதல், நிலைகுலைதல்.]

இவ்விரு பாடல்களிலும், நாம் இதுவரை கண்டு வந்த உத்தியே கையாளப் பெற்றிருப்பதனைக் காண்கிறோம்.

நாட்டு வளம் பற்றிப் பேசவந்த பாடலில் கறையும், கடமும், சிறையும், திரிவும், குறையும், குழைவும், மறை யும், என்ற சொற்கள் இடம் பெற்றிருப்பதனைக் காண் கிறோம்.

இவ்வாறு கறை கொண்ட, கடம்பட்ட, சிறை உடைய; திரி(வு) பெற்ற, குறை உடைய, குழை(வு) பட்ட, மறை(வு) உடைய, ஆசூர் வடகரை நாடு என்று குறிப்பிடுவது வளம் நவில்வதாகாது.

ஆனால் ஆரூர் வடகரை நாட்டில்,
கறைபட்டது எது? கடம்பட்டது எது?
சிறைபட்டது எது? திரிபட்டது எது?
குறைபட்டது எது? குழைபட்டது எது?

மறை(வு) பட்டது எது? என்று பார்த்தால் நாடோ, நாட்டவரோ அன்று, அல்லர். திங்களும் பிறவுமே என்று ஆகிறது.

(தன் கண் உள்ள) கறை இருள் நீக்கக் கருதாது உலகின் நிறை இருள் நீக்கும் கலை வெண்டிங்களே கறை பட்டது என்று முதலடி குறிக்கிறது.

அடுத்து அமைவது கடம் படுவது. வழக்கிடை கடன், கடம் என்பன வேறுபாடின்றி வழங்குவன.

கடம்பட்டார் நெஞ்சம் போலக்
கலங்கினான் இலங்கை வேந்தன்

என்ற பாடல் தொடர் உண்டு.

[கடன் - கடம் ஈற்றுப் போலி என்பர். கடம் - மதநீர்; யானையிடத்துப் பெருகும்.]

'வெங்கடாசலம்' என்பது கொடிய, மதநீர் பெருகும் மலைபோன்ற யானை என்ற பொருளது.

கம்பத்தில் கட்டப்பட்டு விளங்கும் களிறு என்ற பொருளது இரண்டாம் அடி.

கம்பத்து வேழம்
கந்தில் பிணிப்பார் களிறு
வெளில் இளக்கும் களிறு

என்ற தொடர்கள் கம்பத்தில் களிறு பிணிக்கப்படுவது குறிக்கும்.

'கடம்' என்ற சொல் பல பொருள் உடையது. அவற்றுள் இரண்டைத்தாம் இத் தொடரில் வெளிப்படையாக, குறிப்பாக அமைத்துள்ளார்.

கடம் - கடன் (Debt), மதநீர்.

கடம் பட்டது (நாடு) எனில், அந்நாட்டின் வளம் பற்றிப் பேச இடமே இல்லே. அப்படியிருக்க வளமை ஆசூர் வடகரை நாடு என்று குறிப்பாரா?

எனவே, இதன் பின் தொடர், 'கம்பத்து வேழம்' என்ற தொடரால் தெளிகிறோம், கடம் என்பது மத நீரையே குறிக்கிறது என.

அடுத்து அமைவது சிறை. குற்றம் மல்கிய நாட்டில் சிறை (ச் சாலேகள்) பல்கி இருப்பது இயல்பே.

சிறைப்படு நாடு எனில், அந்நாட்டில் குற்றம் புரியாத மக்களே இல்லே என்று ஆகும்.

கவிஞர் இங்கு ஆளும் 'விண் எழும் புள்(ளு)' என்ற தொடரால் சிறை என்பது, சிறகர்ப் பொருளது என்பது தெளிவாகிறது. இருபாலும் கிளேத்த சிறையிடைப்புள் கிடக்கிறதுஎன்பது கருத்து.இவ்வாறு சிறைப்படுவதுதான் அது விண் எழுவதற்கும், இயங்குவதற்கும் உதவுகிறது என்று குறிப்பது 'விண் எழும்' என்ற, தொடர்.

இங்கும் 'சிறை' என்பது இரட்டுற மொழிதலாகும்.

திரி(வு) படுதல் என்பது நன்மையைக் குறிப்பது ஆகாது. ஐயமும், திரிபும் அகல் தக்கன அன்ருே? 'நிலேயில் திரியாது அடங்கல் வேண்டும்' என்பர்.

திரி என்ற சொல், கெடு, அலே, சுழல், மாறுபடு என்று பல பொருள் தரும். இவை வினேச்சொற்கள். ஆனல்

பாடலில் அமைந்துள்ள திரி என்பது முதல் நிலைத் தொழிற்பெயர். இவ்வாறு பெயர்ச்சொல் ஆக, விளக்குத் திரியைக் குறிக்கும்.

இப்படிப் பார்க்கும்பொழுது புலவரின் கூற்று 'நெய்படும் தீபம் திரிபட்டுள்ளது' என்று ஆகிறது.

திரி, நெய்யின் துணைபெற்று எரிந்து ஒளி தருகிறது.

எரி அழல் காணில் இகழ்ப; விளக்கின்
திரி அழல் காணில் தொழுப.

என்பர் நூலோர்.

அடுத்த தொடர் காணலாம். அது 'குறைபட்டுள்ளது கம்மியர் அம்மி' என்பது.

கம்மியர் என்ற சொல்லுக்குத் தொழிலாளி என்ற பொதுப் பொருளோடு நெசவாளி, கொல்லன் என்று பல பொருள்களும் உண்டு. அடுத்து அம்மி என்ற சொல் வந்திருப்பதனுல் கம்மியர் என்ற சொல், அம்மி கொத்துபவர், அம்மி பொளிபவர், என்ற பொருளைத் தரும்.

அம்மி-அரைகல்; இது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. சமையலறைகளில் இடம் பெறும். சமையலுக்குத் தேவையான சில பொருள்களை இதன்மீது குழவிகொண்டு அரைப்பது வழக்கம். குழவியின் நடுப்பக்கம் ஒரே மட்டமாக, மேடு பள்ளம் இல்லாததாக இருக்கும். இரு முனைகளும் கைகளால் இறுகப் பற்றத் தக்க வகையில் புள்ளிகள் பொதுக்கப் பெற்று விளங்கும். அவ்வாறே அம்மியின் மேல் மட்டமும் மேடு பள்ளமற்று இருக்கலாமா? அம்மிகளின் அமைப்பை, பொறிகள் கொண்டு அரவை காணும் நாம் மறந்திருக்கக்கூடும். குழவி, மேடு பள்ளம் அற்று ஒரே மட்டமாக, அம்மியும்

அவ்வாறே மேடுபள்ளமற்று ஒரே மட்டமாக இருப்பின், அரைபடத்தக்க பொருள்கள் நன்கு நசுக்கப் பெறு, பொடிக்கப் பெறு. பயனும் இல்லையாம்.

ஆக, அம்மியின் மேற்பரப்பில் சிறு சிறு குழிகள் அமை வகையில் கல்லுளி கொண்டு பொதுத்தல் இயல்பு. இச் செயல் செய்பவர் 'அம்மி கொத்துவார்' 'அம்மி பொளிவார்' .என்று வழங்கப் பெறுவர். குழவியின் அசைவால் இச் சிறுபள்ளங்களில் விழுபடும் பொருள் துணுக்குகள் அரைக்கப்பெற்று பொடிபடும்.

பொளிக்கப்பட்ட, (சிறு சிறு குழிகள் கொண்ட) அம்மி குறைபட்டது ஆகிறது. இவ்வாறு இது குறை பட்டால்தான் இதனுல் பெறும் பயன் நிறைவுபடும்.

அடுத்துக் காண்பது குழைபடுதல். 'குழைபட்டுள்ளது வல்லியங் கொம்பு' என்பார். பூங்கொம்பு, வல்லியங் கொம்பு எனப்படுகிறது. குழைபடுதல், தளிர் அரும்பு கொண்டு விளங்குதல் என்ற பொருள் தரும்.

இவ்வாறு குழைபடுவது வல்லியங் கொம்பே அன்றி, தங்கள் வன்மை நிலைமாறி வருத்தம் மிகுங்கால் குழைந்து (தளர்ந்து) போவது அந்நாட்டவர்பால் இலை என்பது குறிப்பு.

'மறைபட்டுள்ளது அரும் பொருட் செய்யுள்' என்பது அடுத்த தொடர்.

மறைவு என்பது, ஒளிவு மறைவு என்ற பொருளதாயின், ஒரு நாடு மறைபட்டது எனின், அந்நாட்டினர் கரந்த நெஞ்சினர், வஞ்சகர் என்று ஆகும். இவ்வாறு குறிப்பது அந்நாட்டு மக்களின் ஒழுக்கத்துக்குச் சிறப்பு தருவது ஆகாது.

அடுத்து வரும் 'அரும் பொருள் செய்யுள்' என்ற தொடர்ச் சிறப்பால் இம் 'மறை' என்ற சொல் 'வேதக் கருத்துகள்' என்ற பொருள் தரும்.

'வேத விழுப்பொருள்' விளக்கும் நூற்செய்யுள்களில், பொருள் வெளிப்படையாக அமையப் பெறு. படிப்பார் உய்த்துணர்வால் உணரத்தக்க வகையில், சொற்களைப் பெய்து வைத்திருப்பர்.

வாழ் நெறி அறிந்து, உய்தற்கு உரிய மனிதர்க்காக, செய்யுளில் செம்பொருள் வெளிப்படையாக அமையா வாறு மறைவுபடக் கோக்கப் பெற்றிருக்கும்.

இப்படிப் பொருள் கொள்ளும் பொழுது தான் ஈற்றடியில் உள்ள வளமை ஆசூர் வடகரை நாடு என்பதில் அமைந்துள்ள அடைமொழி பொருள் பொதிந்தது ஆகும்.

இங்கும் கூட வளமை என்ற சொல் பலவகை வளங்களைக் குறிக்கும். நீர் வளம், நில வளம், மாந்தர் மனவளம், எனப் பலவாக அமையும். 'நாடே' என்ற சொல்லில் ஏறிய 'ஏ', தேற்ற ஏகாரமாகவும், பிரிநிலை ஏகாரமாகவும் அமைந்து ஆசூர் நாட்டிற்கே இத்தகைய வளங்கள் உண்டு என்று பொருள் கொடுக்கும்.

அடுத்து வரும் செய்யுளில் இடம் பெறும் முதல் அடி,

'காயக் கண்டது,' என்பது.

இங்கு காய்தல் என்பது கனன்று எழு சினத்தால் பிறரை வருத்துதல், பிணங்கல், என்ற பொருள்களில் பயிலப் பெறவில்லை.

'எவ்வழி ஆடவர் நல்லர், அவ்வழி நல்லை; வாழிய நிலனே' என்று ஔவையார் வாழ்த்தி அமைந்தார்.

நாட்டில், மனவளம் நிறைந்த பெரியார் பலர் வாழ்ந்து வளம் சேர்ப்பதால், காய்தல் என்ற சொல்லுக்கு இப்பொருள் (சினத்தல்) ஏற்றல் முறை அன்று.

சூரிய காந்தி மலர் பற்றிச் சில காண்போம். இம் மலர், மலர்நிலை பெற்ற பின்னர் ஞாயிறு எவ்வழிச் சாய்ந்து செல்லினும் அவ்வழி அதனை நோக்கியவாறு விளங்கும் என்பர். மற்ற மலர்கட்கு இல்லாத தனிச் சிறப்பு இதற்கு உண்டு.

''ஆங்கிலத்தில் SUN FLOWER என்றும், மர நூலாரால் (Botonists) ஃஎலியாந்தஸ் அன்னுஸஸ் (HELIANTHUS ANNUSES) என்றும் கூறப்படும் இனத்தைச் சேர்ந்த சூரிய காந்தி வகைகள் சூரியனை நோக்கித் திரும்புவது முக்காலும் உண்மை.

இதற்கு 'ஞாயிறு திரும்பி', 'பொழுது திரும்பி' 'பொழுது வணங்கி' என்னும் பெயர்களும் உண்டு.

காயும் கதிரவன் மேனியை நோக்கி - உன்
கண்களும் கூசிக் கலங்காவோ?
செங்கதிர் செல்லும் திசையது நோக்கி - உன்
செல்வ முகமும் திரும்புவதேன்?
உன் பெயர் சூரிய காந்தி என்றார் - அதன்
உண்மையும் இன்றே அறிந்து கொண்டேன்.

என்று கவி மணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் தம் 'மலரும் மாலையும்' என்ற நூலில் பாடி உள்ளார்.*

வெயிலிற் கிடந்து, வெயில் முகம் நோக்குவதால் மிக்க பொலிவு பெறுவது இம்மலர்.

நெருஞ்சியும் இத்தகைய இயல்புடையது என்பர். காய் கதிர் முகம் நோக்கி, அது செல் திசை எலாம் தானும் முகம் திரும்பும் என்பர்.

---

* தமிழ்ப் பல்கலைக் கழகச் செய்தி மலர்—மலர் 1 இதழ் 6

"ஞாயிறு அனையன்—தோழி!—
நெருஞ்சி அனைய என் பெரும்பணைத் தோளே"
(குறுந்தொகை 315)

என்ற தொடர் இது விளக்கும்.

'காய்ந்து சிவந்தது சூரிய காந்தி'

என்ற படிக்காசுப் புலவர் பாடலும் இப் பொருளதே. (காய்ந்து என்பது, காய என்பதன் எச்சத்திரிபு. காயும் காரணத்தால் சிவந்தது என்பது பொருள்.)

கதிர் ஒளி பெறலால், வாடுதலின்றி, தானும் கண் கவர் பொலிவு பெறுவது சூரிய காந்தி, என்பது இத் தொடர்ப் பொருள்.

'கலங்கக் கண்டது வெண் தயிர்க் கண்டம்'

என்பது அடுத்த தொடர்.

கலங்கல் என்றாலே மனக்கலக்கம் என்ற பொருள் தான் முதலில் நமக்குத் தோன்றும். அப்படியானல் அமைதி இன்மையை அது உணர்த்தும். முதலில் கலக்கமுற்று பின், தெளிந்த நிலையில் இருக்கும் திரவம் ஒன்றைக் குலுக்கி, தெளிவை மாற்றி, மீட்டும் கலக்கி வைப்பதையும் குறிக்கும்.

அந்நாட்டில் கலக்கம் என்பதைத் தயிர் கடையும் காலத்து மட்டுமே காணலாம். கெட்டியான தன் நிலை மாறி, சுழலும் மத்தினல் உடைந்து, கலங்கி, தயிர், மோர் ஆகும் பொழுது காணலாம் என்பர்.

வெண்டயிர்க் கண்டம்—இதுகாலை நாம் காணுத ஒன்று. நீர்ப்படுத்திய தயிரைத் தானே காண்கிறோம்.

ஆனல் காலம் காலமாக நாட்டுப் படலம் பாடும் புலவர்கள் தம் நூலில் பயில்வது இத்தொடர்.

"செந்தயிர்க்கண்டம், கண்டம், இடை, இடை செறிந்த சோறு"
(கம்பராமாயணம், நாட்டுப் படலம் 22)

"தோயும் வெண் தயிர்' (நாட்டுப் படலம் 2௪)

"முளி தயிர்ப் பிசைந்த" (குறுந்தொகை 167)

"பாறையிட்ட வெண்டயிர்"
(இராஜ நாயகம் நாட்டுப்படலம்13)

வெட்டி எடுக்கலாம் என்னும் வகையில் தோய்ந்து உறைந்து கிடக்கும் இக் கண்டத் தயிரைத் தாழியில் இட்டு, சிறிது நீர் பெய்து, ஆழ மத்திட்டுக் கடைவர்.

இவ்வாறு கடையும் காலத்து எழும் ஒலி, புலி முழக்கம் போலிருக்கும் என்பர்.

'கடையலம் குரல வாள்வரி உழுவை'
(அகநானூறு 277)

'கடை தயிர் குரல வேங்கை'
(சீவக சிந்தாமணி 2717)

'புலிக் குரல் மத்தம்'
(பெரும்பாணுற்றுப்படை 156)

என்பன காண்க.

"விளம் பழம் கமழும் கமஞ்சூல் குழிசி
பாசம் தின்ற தேய்கால் மத்தம்
நெய் தெரி இயக்கம் வெளில் முதல் முழங்கும்"
(நற்றிணை 12)

என்பர்.

மத்து ஒலி துள்ள, கயிறு மாறு பற்றிய இருகை வளை வாய்விட்டு அரற்ற, நுண் இடை வருந்த, ஆயர் மங்கையர் தயிர் கடைவதால் அங்கை வருந்துவார்.

குழிசியில் பெய்த தயிர்க் கண்டம் இவ்வாறு மத்தின் சுழற்சியால் உடைபட்டுக் கலங்கி, திரிந்து மோர்ப் பெயர் மருவும்.

மத்தால் இவ்வாறு தயிர் கலங்குவது மறவன் களத்திடைக்காட்டும் வீரத்திற்கு உவமையாக வருவ துண்டு.

''தயிர் உறு மத்தின்" (மிதிலைக்காட்சிப் படலம் 13)

''தயிர் உடைக்கும் மத்து என்ன, உலகை நலி சம்பரன்"
(சடாயு காண் படலம் 23)

ஆழிப் பொருபடை நிருதப் பெருவலி
அடலோர், ஆய்மகள் அடுபேழ்வாய்த்
தாழிப் படு தயிர் ஒத்தார்; மாருதி,
தனிமத்து என்பது ஓர் தகை ஆனான்;
(அக்க குமாரன் வதைப்படலம் 30)

மனம் கலங்கு நிலைக்கும் இவ்வுவமம் பயிலும்

''மத்து உறும் தயிர் என...தத்துறும் உயிர்"
(சூடாமணிப் படலம் 69)

என்ற கம்பனது ஆட்சித் தொடர்களைக் காணலாம்.

அவ்வாறே அடுத்து வரும் 'மாயக்கண்டது' என்ற தொடரும் காணலாம்.

மாய்தல் என்ற சொல்லுக்கு, மனம் அழிதல், என்பது பொருள். இங்கு மீட்டும் பெற இயலா வகை அழிந்து போவதனைக் குறிக்கும். ஆகவே தான், 'மாயக் கண்டது நாழிகை வாரம்' என்கிறார்.

''நாள் என ஒன்றுபோல் காட்டி உயிர் ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின். (திருக்குறள் 334)

என்ற குறட்பாவும் மீட்டுபெறல் மேவா, காலக் கழிவைக் குறிப்பது.

"சென்றன சென்றன நாட்கள் விரைந்து
வந்தது வந்தது கூற்று"

என்ற தொடரும் காணத்தக்கதே.

அடுத்து வரும் 'மறுகுதல்' என்ற சொல், ஒன்றைப் பற்றி நீடு நினைந்து, நினைவு அலைகள் அதனைப் பற்றியே சுழல, நிதானம் இன்றி வருந்தி நிற்றல், என்ற பொருள் தரும்,

"அரக்கர் என் கடலிடை ஆழ்கின்றூர், ஓர்
மரக்கலம் பெற்றெனை, மறுக்கம் நீங்கினூர்
(அகத்தியப் படலம் 6)

(மறுகு - மறுக்கம் என தொழிற்பெயர் ஆகும்.)

"தேடிய தவமே என்னத் திரிசடை மறுக்கம் தீர்ப்பாள்
(சீதை களங்காண் படலம் 22)

என்ற கம்பன் தொடர்கள் இதனை உணர்த்தும்.

இங்கு புலவர் கூறும் மறுக்கமோ, வான் சுழி வெள்ளத்தில் எழுவது. அஃதன்றி மக்கள் வாழ்வில் நேர்வது அன்று.

ஆற்றிடை, பெருகு புனலிடை, இத்தகைய சுழல்கள் ஏற்படும் இடங்கள் இவை எனப் பரிசலோட்டிகள் நன்கு அறிவர். அவற்றின் நீங்க, மென்மேல் இயலி, எதிர்க்கரை சேர்வர். எதிர்பாரா வகையில் நீர்ப்பெருக்கால், அச் சுழலிடைப் பரிசல் சிக்கிக் கொள்வதும் உண்டு. தவிர இயலாவகை அதில் ஆழ்ந்து, அழிவதும் உண்டு.

இத்தகைய சுழல்களையே மறுக்கம் என்று குறிப்பிடுகிறூர்.

அடுத்து அமைவது சாய்தல். சாய்தலும், ஒய்தலும் பெருமைக்கு உரியன அல்ல. தலை சாய்த்தல் என்ற கவிழ் நிலை காட்டுவது.

"தலை சுமந்து இருகை நாற்றி" நிற்றல் அவமானப் பட்டார் இயல்.

"ஒயுதல் செய்யோம்; தலை சாயுதல் செய்யோம்" என்று பாரதி முழக்கியது நாம் நன்கு அறிந்ததே.

சீவல மங்கைத் தென் ஆரிய நாட்டில் சாயக் காண்பது காய் குலைச்செந்நெல்லே என்பார்.

நாடு வளம் மிக்கது என்று குறிப்பிட இத் தொடரே போதுமானது.

கல்வி சேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே
(சீவக சிந்தாமணி 53)

பிணங்கு கதிர் அலமரும் கழனி
(புறநானூறு 285)

வரம்பு தலை சாய்த்த வளவிய நெற்கதிர்
(தனிப்பாடல்)

என்பன இலக்கிய வழக்காறுகள்.

'இறங்கு பொறை' என்ற தொடர், 'நெல்மணிச் சுமையால் தாழ்ந்து நிலம் படிந்த நெற்பயிர்' என்ற பொருளில் வழங்கப்பட்டது.

அடுத்து 'தணிப்பக் கண்டது' காண்போம். தணிதல் என்றாலே குளிர்தல், நிறைவு பெறுதல், அடக்கமுறல் என்று பொருள்.

இப் பாடலில் தாபதர் உள்ளம் தணிப்பக் கண்டது என்று அமைந்துள்ளது.

'தாபதர்கள் சிலை எடுத்துத் திரியுமிது'
(சூர்ப்பணகைப் படலம் 101)

இருவர் மானிடர்; தாபதர்
(கரன் வதைப்படலம் 4)

தாபதன் அம்புக்கு ஆற்ரு
(கும்பகருணன் வதைப் படலம் 23)

என்பன கம்பன் ஆட்சிகள்.

உற்ற நோய் நோன்று, உயிர்க்கு உறுகண் செய்யாது, விளங்கும் இவர்கள் பொறி புலன் அடக்கியவர், புலக் குறும்பு அழித்தவர். இவ்வாறு அமைந்தால் அன்றி, அவர்கள் மேற்கொண்ட தாங்கருந்தவம் நிறைவேருது. தணிந்த உள்ளத்துத் தகையாளர் ஆதலின் இவர் கொள் தவம் பயன் அளிக்கும் என்பது கருத்து.

அடுத்து வருவது 'தேய்வு'. ''தேயக் கண்டது உரைத் திடும் சந்தனம்'' என்பார்.

தேய்தல் என்பதற்கு கொஞ்சம் கொஞ்சமாக உருவம் குறைவு பட்டு (மெலிந்து) இல்லாகிப் போதல்.

இக் கருத்தில்தான் நிலவின் இரு நிலேகளே வளர்பிறை, தேய்பிறை என்கிருேம்.

''தேய்தல் உண்மையும், பெருகல் உண்மையும்
....காட்டி
திங்கள் புத்தேள் திரிதரும்" (புறநானூறு 27)

சந்தனக் கட்டை எடுத்து, சந்தனக் கல்லிடைப்படுத்து, நீர் சிறிது தெளித்து, உரைப்பர். திரள் சந்தனத்தை மெய் குளிரப் பூசிமகிழ்வர். இவ்வாருய பூச்சு உற்சாகத்தின் அடையாளமாகவும், மகிழ்ச்சியின் அறிகுறியாகவும் விளங்கும்.

இவ்வாறு சந்தனக் கட்டையைக் (நறுங்குறடு) கல்லில் தேய்த்துப் பெறுவது சந்தனம் (தேய்வை) எனப்படும்.

சந்தனக்கல் திருப்பதி மலேப்பகுதியில் கிடைப்பது; சந்தனக் கட்டை பொதிய மலேயிலிருந்து கொள்வது.

"...........................திண்காழ்
நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை"
(திருமுருகாற்றுப்படை 33)

"வடவர் தந்த வான்கேழ் வட்டம்
தென்புல மருங்கில் சாந்தொடு..."
(நெடுநல் வாடை 51, 52)

"தண் கமழும் சாந்து நீவினன்"
(புறநானூறு 239)

என்றமைந்துள்ள தொடர்கள், சந்தனத்தின் பயன்பாடு நன்கு கொண்டவர் நாம் எனக் குறிக்கும்.

குற்றாலக் குறவஞ்சியைப் பாடியவர் மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர். அவர்; பத்துக்கு மேற்பட்ட பிரபந்தங்களின் ஆசிரியர்.

பல்வகைப் பாக்களும் விரவி யாக்கப்பட்ட நாடகத் தமிழ் நூல் இது.

இந்நூலில் அமைந்துள்ள இரு பாடல்கள் நாம் ஆய்ந்து கொண்டிருக்கும் பாடல் அமைப்பு முறைக்குப் பொருத்தம் ஆனவை. அவை,

நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்;
நெருங்கக் காண்பது கன்னலில் செந்நெல்;
தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து;
சுழலக் காண்பது தீந்தயிர் மத்து;
வீங்கக் காண்பது மங்கையர் கொங்கை;
வெடிக்கக் காண்பது கொல்லையின் முல்லை;
ஏங்கக் காண்பது மங்கல பேரிகை;
ஈசர் ஆரிய நாடு எங்கள் நாடே.
(திருக்குற்றாலக் குறவஞ்சி 81)

ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்;
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்;
வாடக் காண்பது மின்னார் மருங்குல்;
வருந்தக் காண்பது சூல் உளைச்சங்கு;
போடக் காண்பது பூமியில் வித்து;
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து;
தேடக் காண்பது நல் அறம் கீர்த்தி;
திருக்குற்றாலர் தென் ஆரிய நாடே.
(திருக்குற்றாலக் குறவஞ்சி 82)

என்பன. எளிய நடையில், இனிய மொழியில் அமைந்துள்ள இப்பாடல்கள் விளக்கம் தேவை அற்றவை எனினும், நாம் ஆய்ந்து கொண்டிருக்கும் செய்யுள் அமைப்பு முறைக்கு ஏற்ப உள்ளமை காணலாம்.

நீங்குதல், நெருங்குதல், தூங்கல், சுழலல், வீங்கல், வெடித்தல், ஏங்கல் என்றுள்ள சொற்கள் அமைப்பு அருமைப்பாடு உடையன.

வாழ்தல் வேண்டி, தம் பழம்பதி நீங்கி, வேறுபுலம் செல்கிலர் அந்நாட்டவர். நெருக்கடி என்பது என்றும் அறியார். இவ்வாறே பிறவும் கொள்க.

முக்கூடற்பள்ளு 'கலங்கக் கண்டது வெண்டயிர்க் கண்டம்' என்று கூற இப் பாடல் 'சுழலக் காண்பது தீந்தயிர் மத்து' என்று கூறும்.

வெடிக்கக் காண்பது கொல்லையின் முல்லை என்ற தொடர் காணலாம்.

திருக்குற்றாலம் குறித்து எழுந்த தேவாரப் பாடல் களில் ஒன்றில்,

"கொல்லை முல்லை மெல்லரும்பீனும் குற்றாலம்" என்று அமைந்துள்ள தொடர் காணலாம்.

மலர்தலை வெடித்தல் என்பர். மலர்ந்தது, என்பதற்குப் பதிலாகவெடித்தல் என்ற சொல் ஆட்சிபயில்கிறார். முல்லை மலர்கள் ஒரு சேர மலர்ந்த உடன் குபீரென்று மணம் பரவும். வெடித்த பொருள் சிதறுவது போல், மலர்ந்த மலரின் மணம் யாண்டும் பரவும். திடீரென்று கிளம்பும் மணம் என்று குறிக்கவே 'வெடித்த' என்று பயில்கிறார்.

ஏங்கக் காண்பது மங்கல பேரிகை என்கிறார். ஏங்குதல், ஏக்கம் என்ற சொற்களை மனம் வருந்துதல் என்ற பொருளில் ஆள்கிறோம். இப் பாடலில் இவ்விடத்தில் அப்பொருள் கொள்வது ஒவ்வாததோடல்லாமல், தொடர்ந்து வரும் மங்கல பேரிகை என்ற சொல்லுக்கு மாறானதாகவும் அமையும்.

ஏங்குதல், என்ற சொல்லுக்கு, ஒலித்தல், இளைத்தல், வாடுதல், அழுதல், அஞ்சுதல் எனப் பல பொருள்கள் உண்டு. இங்கு நாட்டு வளம் பற்றிய பாடலில் இச் சொல் இடம் பெற்றிருப்பதாலும், மங்கல பேரிகை என்ற தொடர் அடுத்து வருவதாலும், ஏங்கக் காண்பது என்பதற்கு தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருப்பது என்ற பொருளே ஏற்றது.

'தழங்கு பேரி' (கம்பராமாயணம் மிகைப்பாடல் 107)

என்பான் கம்பன்.

ஒலி முழக்கு அருஅ உயர்பெரும்பேரி (தனிப்பாடல்)

என்பது காணலாம்.

முரசியம்பல், முருடு அதிர்தல், பணிலம் முறையில் எழுதல், பல்லியம் துவைத்தல், மங்கல நிகழ்ச்சிகளில் விளங்கும்.

'விழவு அறு வியலாங்கண்', ஈசர் ஆரிய நாடு ஆகலின் மங்கல பேரிகை ஒலி ஓவாதாயிற்று.

இது நாட்டுவளம் குறித்தவாறும்.

அடுத்து வரும் 'ஓடக் காண்பது' என்பதனோடு, 'முக் கூடற்பள்ளு' குறிப்பிடும் 'மறுகக் கண்டது' என்ற தொடர் இயையும்.

அடுத்து வரும் இரு தொடர்களும், முக் கூடற் பள்ளுத் தொடர்களில் சிறிது மாற்றம் பெற்றவை.

அதன் பின் வருவது 'வருத்தம்' கொள்ளும் வால் வெண் சங்கம்.

'வால் வெண்சங்கம் கடுஞ் சூல் உளைந்து, முத்து உயிர்த்து பின் பொறை தவிரும்' என்று குறிப்பது இலக்கிய மரபு.

''பொறை உயிர்த்த நித்திலம்'' என்ற தொடரும் இப் பொருளதே.

'கத்தும் தரங்கம் எடுத்து எறிய
கடுஞ்சூல் உளைந்து வலம் புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்தில்
கான்ற மணிக்கு விலையுண்டு!
(திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் 41)

'விளைந்து முதிர் விழுமுத்து'
(மதுரைக் காஞ்சி 135)

என்பன காணலாம்.

ஆனால், உண்மையில் சங்கு சூலுற்றதா? தன் கருவில் தோன்றி முதிர்ந்ததனைத்தான் முத்து எனும் பெயரில் கரையில் உயிர்த்ததா? எனில், அன்று.

முத்தினைத் திரட்சி என்று கூறும் வழக்கும் உண்டு.

"முத்துச் சிப்பியின் உள் புகுந்த மணல் துகள் உறுத்தல் பொறுது, அப்பூச்சி நெளிய அதன் உடலிலிருந்து கசிந்த ஒருவகை நீர் அத்துகள் மூட, நாளடைவில் அக்கசிவு நீர் இறுகி முத்துருப் பெறும்" என்பர்.

முத்து கண் கவர் வெண்ணிற ஒளி உடைய உருண்டையான பொருள். நவ மணிகளில், நீர்ப்படு மணிகள் இரண்டனுள் ஒன்று.

முத்து பிறக்கும் இடங்கள் என 'இரத்தினச் சுருக்கம்' என்ற நூல் கூறுவதாவது:

'தந்தி வராக மருப்பு, இப்பி, பூகம், தனிக்கதலி
நந்து, சலஞ்சலம், மீன்தலை, கொக்கு, நளினம், மின்னார்
கந்தரம், சாலி, கழை, கன்னல் ஆவின் பல், கண்செவி, கார்
இந்து, உடும்பு, கரா, முத்தம் ஈனும் இருபதுமே. (35)

(தந்தி - யானை; வராகம் - பன்றி; மருப்பு - கொம்பு; பூகம் - பாக்கு; கதலி - வாழை; நளினம்-தாமரை; மின்னார்கந்தரம்-மகளிர் கழுத்து; ஆ-பசு; கண்செவி - நாகம்; கார் - மேகம்; இந்து - சந்திரன்; கரா - முதலை; இப்பி, நந்து, சலஞ்சலம், மீன்-நீர்வாழ்வன)

அடுத்து அமைவது 'போடக் காண்பது பூமியில் வித்து' என்பது. இதன் பொருள் பொருநராற்றுப்படை கூறுவது போல,

"(ஒன்று) ஆயிரம் விளையுட்டு ஆக" விளைந்து பயன் தருவது என்பதாம்.

புலம்பல்—ஒரே இசையில் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருத்தல் என்பதாம்.

புலம்பு என்ற சொல் தனிமை, பிரிவு, கலக்கம், வெறுப்பு, ஒலி எனப்பல பொருள்படும். கிண்கிணி

அமைப்பை நாம் நன்கு அறிவோம். பெயர் அமைப்பே இதன் 'ஒலி' இயல்பைக் குறிப்பது.

கிண்கிணி, குழந்தைகள் காலில் கட்டப் பெறுவது. அதன் அசைவால் குழந்தைகள் அவ்வொலி கேட்டு கை கொட்டி மகிழும்.

'கிண்கிணி களைந்த கால்' (புறநானூறு 77)

''மணி மருள் அவ்வாய் கிண்கிணிப் புதல்வர்''
(புறநானூறு 198)

இக் கிண்கிணி ஒரே வகை ஒலியே எழுப்பும்.

பேரிகை, யாழ், குழல், முதலான கையாள்வார், ஏந்தும் குணிலால், நெருடும் விரலால், துளை மாறி மாறிப் பொத்தும் விரல்களால் ஒலி எழுப்புவன.

அச்செய்கையால் அவற்றிலிருந்து பல்வேறு ஸ்வரங்கள் எழும். ஆனல் கிண்கிணி அசைவால் எழும் ஒலியோ ஒரே படித்தாய் அமையும்.

எனவேதான் 'புலம்புதல்' என்ற சொல்லால் இது குறித்தார்.

அந் நாட்டவர் நாளும் நாடுவ நல்லறமும், அதனல் பெறு கீர்த்தியும் எனக் கூறுவதால் திருக் குற்ருலர் தென் ஆரிய நாடு வழங்கத் தவாஅ வளம் படைத்தது என்று அறிகிறோம்.

* * *

கம்பனுடைய 'ஆற்றுப்படல' முதற் பாடல் எல்லோரும் அறிந்தது.

ஆசலம் புரி ஐம்பொறி வாளியும்,
காசு அலம்பு முலையவர் கண் எனும்

பூசல் அம்பும், நெறியின் புறம் செலாக்
கோசலம் புனே ஆற்று அணி கூறுவாம்;
(ஆற்றுப்படலம் 1)

என்பதே அப் பாடல்.

இந்தப் பாடலுக்கு அநேகமாக, ஒரே மாதிரியாகவே, உரை ஆசிரியர்கள் விளக்கம் கொடுத்துள்ளனர்.

□ திரு வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள்,

"மிகவும் குற்றத்தைச் செய்கின்ற, (ஆடவர்களுடைய) பஞ்சேந்திரியங்களாகும் பாணங்களும் இரத்தின வாரங்கள் (ஒன்ருெடொன்று தாக்குண்டு) ஒலித்தற்கு இடஞன தனங்களே உடைய மகளிரின் கண்ணென்கிற போர்த் தொழில் அமைந்த அம்பும் சன்மார்க்கத்திற்குப் புறம்பே (துன்மார்க்கத்தில்) செல்லாத கோசல நாட்டை அலங்கரிக்கின்ற சரயூ நதியின் வர்ணனேயைக் கூறுவாம்."

என்று இப் பாடற்குப் பொருள் கூறுவார்கள்.

இதனேடு அமையாமல் அடியிற் கண்டவாறு விளக்கமும் தருவார்:

"தமக்கு தோன்றிய இடங்களில் எல்லாம் சென்று தீ வினையை விளேத்துக் கொள்ளும் தன்மைய ஆதலால் 'ஆசலம் புரி ஐம்பொறி' என்ருர். குறித்த இலக்கிற் செல்லும் தன்மையவாதலால், 'ஐம்பொறி' வாளியாக உருவகிக்கப்பட்டன. மேல் 'முலேயவர் கண் எனும் பூசல் அம்பும்' என வருதலால் ஐம்பொறி ஆடவருடையன என்பது பெறப்படும்.

'ஆடவரின் ஐம்பொறிகள் நெறியின் புறஞ் செலாத கோசலம்' என்றது தன்னிடத்து வாழும்

ஆடவரும், மகளிரும் அக்கினி சாட்சியாக மணந்த தத்தமது மனைவி, கணவன்மாரிடத்தே தாம், அன்பு செலுத்தி, இன்பம் அனுபவிப்பதன்றி, பிறர்மனை நயத்தல், பிறஆடவரைச் சேர்தல், என்ற தீயச்செயலில் செல்லா திருக்குமாறு செய்யும் தன்மையது, அந்நாடு என்றவாறு.

நிலத்தின் தன்மை நல்லொழுக்கத்திற்கும், தீயொழுக் கத்திற்கும் காரணமாம் என்ற நூற்கொள்கை இங்கு அறியத்தக்கது.''

□□ அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பின்படி இப்பாடல் பொருள்:

''குற்றத்தையும், துன்பத்தையும் விளைக்கின்ற (ஆடவருடைய) ஐம்பொறிகள் ஆகிய அம்பும், பொற் காசு மாலைகள் கிடந்து ஒலிக்கின்ற தனங்களை உடைய மகளிரின் கண்கள் என்று சொல்லப்படுகிற போர் வாளியும், தீ நெறிக்கட் செல்லாத, கோசல நாட்டை அழகுறுத்தும் (சரயுவாகிய) ஆற்றின் பெருமையைப் பேசுவோம்'' என்று அமையும். குறிப்புரையாக,

'' 'ஆசு அலம்புரி— ஐம்பொறி' என்றது, ஐம்பொறி களின் இயல்பு கூறியவாறு. அம்பு போலக் குறித்த இலக்கிற் பாய்தலால், 'பொறி வாளி', 'கண் எனும் பூசல் அம்பு' என உருவக வாய்ப்பாட்டாற் கூறினர். நோய் விளைக்க வல்லதும், பிற உறுப்புக்களினும் சிறந்ததும் கண் ஆதலின் அப்பொறி ஒன்றே கொண்டு கூறினர்.

'காசலம்பு முலையவர் கண் எனும், பூசலம்பு' என்று பின்னே கூறினமையால், முன்னே கூறிய ஐம்பொறி வாளி, ஆடவரது என்பது பெறப்பட்டது.

நெறியின் புறம்—தீ நெறி.

'கோசலம் புனை ஆற்றணி, என்பதற்குக் 'கோசல நாடணிந்த (மாலை போல்வதாகிய சரயு என்னும்) ஆற்றின் பெருமை, என்று பொருள் கூறலும் ஆம்.

இதனால் கோசல நாட்டு ஆடவர், இல்லற நெறி யினின்று, தத்தம் மனைவியர்பால், ஐம்புலவின்பமும் ஆரத் துய்க்கும் பெரு மாண்பினர் என்பதும், அந்நாட்டு மகளிர், தத்தம் நாயகரே அன்றி வேறு ஆடவரை நோக்காத கற்பிற் சிறந்த, காரிகையர் என்பதும் கூறி, அது கொண்டு, இக் காவிய நாயகனான இராமபிரானுடைய, பிறன் மனை நோக்காத பேராண்மையினையும், இக் காவிய நாயகி ஆன பிராட்டியின், 'கொண்டானை அல்லால் அறியாத' நிறையின் நீர்மையினையும் புலப் படுத்தி, அதுவே இக்காவியம் நுவல் பொருள்களுள் தலையாயது என்பதும் பெறவைத்தவாறு காண்க.

அன்றியும் மேற் கூறிய 'ஆடவர் மாண்பும்,' 'மகளிர் கற்பும்' நிலநலத்தாலும், நீர் நலத்தாலும், பிறவியிலேயே இயல்பாய் விளைந்தன என நாடும், யாறும், ஆகியவற்றின் பெருமையும் ஒருங்கு புலப்பட வைத்தவாறும் நோக்கத் தகும் என்று அமையும்."

□□□ மகாமகோபாத்யாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடு,

—இப்பாடலுக்குக் கொடுத்திருக்கும் உரையாவது:

"குற்றங்களை மிகுதியாகச் செய்கின்ற (ஆடவருடைய) ஐந்து இந்திரியங்களாகிய அம்புகளும், அணிந்துள்ள (காசுமாலையின்) பொற்காசுகள் அலைகின்ற தனங்களை உடைய பெண்களின் கண்களாகிய போர் செய்யும் அம்புகளும், நல்ல நெறி தவறிச் செல்லாமைக்குக் காரணம் ஆன, உத்தர கோசல நாட்டை அழகு

செய்கின்ற சரயு என்னும் நதியின் பெருமைகளைச் சொல்லுவோம்.''

மேலும் அதில் காணப்படும் விளக்கமாவது:

''ஆசு அலம்—'குற்றத்தின் பூர்த்தி' என்பது ஸ்ரீ ஐயரவர்களின் கைக்குறிப்பு. 'ஆசலம்'—இடும்பை; அற்பமாகிய குற்றமுமாம் (பழைய உரை). பெண்களின் கண்களாகிய அம்பு எனப் பின்னர்க் கூறிய அதனுல், முதலிற் கூறிய ஐம்பொறி வாளிகள், ஆடவருடையன எனப்பட்டன. ஆடவர் பெண்களை விரும்பி, தம் ஐம்பொறிகளாலும் தவருன வழிகளில், செல்லுதல் இயல்பு; பெண்கள், தம் கண்களாலேயே ஆடவர் மனத்தைக் கவர்வர் என்பது விளக்கப் பெற்றது.

இத்தகைய தீங்குகள் நேராதவாறு கோசல நாட்டில் இரு பாலாரும் நேர்மை உடையர் என்பதனை இவ்வாறு கூறினுர். மக்களின் ஒழுக்கச் சிறப்புக்கும் நாடு காரணமாகின்றது...

ஒரு நாடு வளம் பெறுவதற்கும், உயிர்கள் நல்வாழ்வுறுதற்கும் காரணமானநீரைத் தந்து, நாட்டுக்கு அழகும் செய்வது ஆறேயாகலின், அத்தகைய ஆற்றின் சிறப்புக்களை முதலிற் கூறலானுர். வான்மீகத்திலும் சரயுவின் பெருமை முதலில் புகழப் பெற்றுள்ளமை காண்க. 'ஆறில்லாவூருக்கு அழகு பாழ்' அன்ருே? கோசலம் புனை ஆறு—கோசல நாடு (மாலையாக) அணிந்து அழகுறுவதற்கு இடமான ஆறு எனவும் கூறலாம்.

கோசல நாட்டு ஆடவரும், மகளிரும் காம விகாரங்களுக்கு ஆளாகித் தவறு செய்யாத நேர்மை உடையவர் எனக் கூறுமுகத்தான் இக் காவியத் தலைவனுகிய இராம பிரானும், தலைவியாகிய சீதா பிராட்டியும் முறையே

ஏகபத்னி விரதமும், 'கொண்டானை அல்லால் வேறு அறியாத' (குலமகட்குரிய) பெருஞ் சிறப்பும் உடையவர் என இக் காவியத்தின் உறு பொருளைக் குறிப்பிக்கின்றமை காண்க."

மேற் கூறிய மூன்று உரைகளும் பன் முறை படித்தும் எனக்கு அவை மன நிறைவு தரவில்லை.

பல்லாண்டுகளாகக் கம்பன் காப்பியத்தைப் படித்து வந்ததன் காரணமாக, அதனை ஆய்ந்து கற்ற அறிஞர்கள் பலரோடும் இதனைப் பற்றிவிவாதிக்கும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. அவர்களாலும் நான் தெளிவு பெற வில்லை.

அதற்கு உரிய காரணத்தை இப்பொழுது காணலாம்.

பாடலின் முதலடி 'ஆடவர்' மட்டும் குறிக்கிறது என்பதற்கு எந்த விதமான ஆதாரமும் நேரிடையான தாகவோ உய்த்துணரக் கூடியதாகவோ இல்லை.

உரை ஆசிரியர்கள் அனைவரும் இவ்வாறு முதலடி ஆடவரையே குறிக்கிறது என்பதற்கு, எடுத்துக் காட்டும் காரணம் இரண்டாம் அடியில் மகளிரைக் குறிக்க ஆளப் பெற்றிருக்கும் 'காசலம் புமுலையவர்' என்ற தொடர்தான்.

இவர்களுடைய கருத்து சரியானது என்று கொண்டாலும் ஓர் இடுக்கண் இருக்கத்தான் செய்கிறது. அதுதான் ஆடவரைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது பாடல் தொடர் "ஐம்பொறி வாளிகள்" என்று குறிக்க, மகளிரைக் குறிப்பிடும் இரண்டாம் அடியோ அவ்வைம் பொறிகளுள் ஒன்றாகிய கண்ணினை மட்டும் குறிக்கிறது.

அப்படியானால் இவ்வுரைகளின்படி ஆடவரின் ஐம் பொறிகள் நெறியின் புறம் செலா; மகளிரின் கண்கள் நெறியின் புறஞ்செலா என்று ஆகிறது.

அதாவது மகளிரின் கண்கள் தவிர்ந்த பிற நான்கும் நெறியின் புறம் செலலாம் என்று ஆகிவிடும்.

அதுவன்றியும், கற்பு என்பது தம் மனைவிமாரிடத்துக் கணவன்மார் எதிர் பார்க்க வேண்டியதே தவிர, தன் கணவன்மாரிடத்து மனைவிமார் எதிர்பார்க்க வேண்டா என்றும் ஆகும்.

உண்மையில் கற்பு இரு பாலார்க்கும் பொதுவானது.

அவ்வாறாயின் இப் பாடலை எப்படித்தான் பொருள் கொள்ள வேண்டும் என்ற கேள்வி பிறக்கிறது.

'ஆசலம் புரி ஐம்பொறி வாளி' என்ற முதலடி, ஆடவர் மகளிர் என்ற இரு பாலார்க்கும் பொருந்துவதே என்றும், மகளிர் கண்களை மட்டும் அடுத்த அடியில் குறிப்பிடும் பொழுது அதன் விசேஷத் தன்மை பற்றித் தனித்துக் குறிப்பிடப்பெற்றது என்றும், கொள்வது பொருத்த மாகும்.

ஐம்பொறிகள், மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன ஆம். இவற்றுள் மெய், வாய் ஆய இரண்டு பொறி களும் புலன் அநுபவம் பெற மற்றொன்றனோடு, வளியிடை போழப் படாஅ நெருக்கம் பெற்றே ஆக வேண்டும்.

பிற மூன்றும் அத்தகைய நெருக்கம் பெறத் தேவை இல்லை. ஏனென்றால் இருந்த இடத்தில் இருந்தே, தொலை வில் இருந்து வருகின்ற மணத்தை நாசி மோக்கக் கூடும். அதுபோலவே தொலைவிலிருந்து எழும் ஒலியைச் செவி கேட்க முடியும். அப்படியே தொலைவில் காணப்படும் பொருளையும் கண் பார்க்க முடியும்.

கண்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது மாதவச் சிவஞான முனிவர் அவர்கள் 'சென்று பற்றும் பொறி' என்பார்.

இதிலும்கூட கண்ணுக்கும் மற்ற இரண்டனுக்கும் இடையே ஒரு வேறுபாடு உண்டு.

ஒரு குறிப்பிட்ட தொலைவில் இருந்து புறப்படும் ஒலியைத்தான், காது கேட்க முடியும்; ஒரு குறிப்பிட்ட தொலைவில் இருந்து எழுகின்ற மணத்தைத்தான் நாசி நுகர முடியும்.

கண்ணோ எத்துணைத் தொலைவில் இருப்பதையும் காணமுடியும்.

வெகு தூரத்தில் இருக்கும் பொருள் கண்பார்வையில் சிறியதாய் தெளிவின்றி இருக்கக் கூடும், என்பது தவிர கண்பார்வைக்கு எல்லையே இல்லை.

இப்படி நோக்கும் பொழுது ஐம்பொறிகளில் கண்ணைத் தனியாகப் பிரித்து விசேஷித்துக் குறிப்பிடுவதற்குக் காரணம் இருக்கிறது.

நாம் வழியில் நடந்து கொண்டு போகிறபோது, பொதுவாகப் பார்ப்பது நம்முடைய பாதையும், அதன் சூழலுமே. ஆனால் அப்படிப் போகும்பொழுது அங்கே இருக்கும் ஏதாவது ஒன்றைப் பார்க்கும்பொழுது, அதனால் நம் மனம் ஈர்க்கப் படுமானால் அதனைக் குறிப்பாக நோக்குகிறோம்.

சிற்சில சமயங்களில் இது மாதிரியான அநுபவம் மூக்குக்கும், காதுக்கும் நேரலாம். 'ஏதோ ஒரு வாசனை ஒன்று வருகிறதே' என்று அது வருவதாகத் தோன்றும் திசை நோக்கி, மூக்கைத் திருப்பியோ, அல்லது இடம் மாறியோ அது எங்கிருந்து வருகிறது என்று காணமுயல்கிறோம்.

அதுபோலவே ஓசை என்று கேட்குமானுல், அது எந்தத் திசையிலிருந்து வருகிறது என்று காதைத் திருப்பித் தெரிந்து கொள்ள முயல்கிறேம்.

ஆக இவை இரண்டிலும், புலனறிவு முந்திக் கொள்ள அதனுடைய பிறப்பிடம் (ஒலிதோன்றுமிடம், மணம் எழுமிடம்) பற்றிப் பின்னர் தெரிந்து கொள்கிறேம்.

ஆனுல் கண் சம்பந்தப்பட்டவரையில் இரண்டும் ஒன்ருகவே, ஒரே சமயத்தில் தோன்றுவதை உணர்கிறேம்.

ஆக இப்படிப் பார்க்கும்பொழுதும், கண்ணுக்கும், மூக்குக்கும் வாய்க்கும், உள்ள வேறுபாடு உறுதிப் படுகிறது

அப்படியானுல் மகளிரின் கண்களை மட்டும் ஏன் இப்படித் தனித்துக் கூற வேண்டும்? ஆடவர் கண்களையும் சேர்த்துக் குறிப்பிட்டிருக்கக் கூடாதா? என்ற கேள்வி பிறக்கவே செய்யும்.

கண்ணினுடைய நோக்கே, உள்ளத்தின் தன்மையை வெளிப்படுத்தி விடுகிறது என்பது பிரசித்தம்.

கண்ணுக்கே உரிய இந்தத் தன்மை பிற பொறிகளுக் குப் பொருந்தாது.

தமிழ் இலக்கியத்தில் அங்க லட்சண அமைப்புகளின் படி பெண்கள் கண்களைப் பெரிய கண்கள் என்று சொல்வது மரபு.

பெருந்தடங்கண் பிறை நுதலார்

(நாட்டுப் படலம் 36)

படை நெடுங்கண்ணர் ஆடும் பண்ணை

(மிதிலைக்காட்சிப் படலம் 17)

வெள்ளப் பாற்கடல்போல் மிளிர் கண்ணிஞள்

(மிதிலைக் காட்சிப் படலம் 141)

மைதீர் கஞ்சத்தின் அளவிற்றேனும்
கடலினும் பெரிய கண்கள்
(சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் 70)

பெரிய ஆய், பரவை ஒவ்வா...கண்கள்
(நாடவிட்ட படலம் 54)

பெரியவாள் தடங்கண்ணியர்
(படைத்தலைவர் வதைப் படலம் 63)

என்பன கம்பன் தொடர்கள்.

இதன் காரணம் ஆகவே உவமான சங்கிரகம் கண்ணுக்கு எவ்வெவை, உவமையாகக் கூறப்பட்டுள்ளன என்று எடுத்துக்காட்டும்:

வாள், கயல், சேல், வேல், வண்டு, நஞ்சு, அமுதம், மான்
வேள், கணை. யமன், கருவிளை, வலை, குவளை
கஞ்சனம், பங்கயம், கடல், மழை, மால், உகிர்
அஞ்சனம், மூவிலி (?) அனையவாம் விழிக்கே
(உவமான சங்கிரகம் பக்கம் 7)*

வேல், வாள், அமுதம், கருங்குவளை
வேலை, மாவின் வடு, வகிர், மான்
கோல், பங்கயம், சமர், குடங்கை
கூற்று, விடம், காக்கணம், வண்டு
சால்பின் உறு கஞ்சனம், கயல், சேல்
சகோரம், வழிபோய் குழை அடர்ந்து
மால், விதாதா, சிவன் உருவின்
வயங்கும் விழிக்கு ஒப்பு இவை ஆமே.
(உவமான சங்கிரகம் — பக்கம் 17)

...........விழிக்கு வண்டும், தாமரையும்
காவியும், கூற்று, அம்பும், கருவிளையும்—மாவடுவும்

---

* உவமான சங்கிரகம், டாக்டர் இ. சுந்தரமூர்த்திபதிப்பு—தமிழ்ப் புத்தகாலயம் சென்னை-5.

வேலும், கடலும், விடமும், அமுதும், வாளும்
சேலும், பிணையும், இணை செப்பு.

(உவமான சங்கிரகம்—பக்கம் 24)

'வாள் புரை விழியாய்!' *(வனம் புகு படலம் 17)*

'கயல் மகிழ் கண் இணை'

(அக்க குமாரன் வதைப் படலம் 48)

'சேல் உண்ட ஒண் கணார்' *(நாட்டுப் படலம் 13)*

'கொல்லும் வேலும், கூற்றமும் என்னும் இவை எல்லாம்
வெல்லும் வெல்லும் என்ன மதர்க்கும் விழி'

(மிதிலைக் காட்சிப் படலம் 32)

'விடன் ஒக்கும் நெடிய நோக்கு'

(உண்டாட்டுப் படலம் 10)

'வாள் - கணின் நிழலைக் கண்டாள்;
வண்டு என ஓச்சுகின்றாள்!'

(உண்டாட்டுப் படலம் 13)

'அமிழ்தொக்கும் அகல் நெடுங்கண்'

(தனிப்பாடல்)

'மானின் நோக்கியர்' *(நீர்விளையாட்டுப் படலம் 32)*

'குவளையின் எழிலும் வேலின் கொடுமையும்
குழைத்துக் கூட்டி,
திவளும் அஞ்சனம் என்று ஏய்ந்த
நஞ்சினைத் தெரியத் தீட்டி
தவள ஒண்மதியுள் வைத்த தன்மைசால்தடங்கண்'

(கைகேயி சூழ்வினைப்படலம் 74)

'கொழுங்கடை, மழைக்கண்'

(பொருநராற்றுப்படை 26)

'வடுவின், மாவகிர் இவை எனப்
பொலிந்த கண்' *(சித்திர கூடப் படலம் 30)*

'குடங்கையின் அடங்காத் தடங்கண் மாதர்'
(தனிப்பாடல்)

'கணைக் கருங் கண்ணினாளை
(எழுச்சிப் படலம் 32)

எனும் தொடர்களையும் நோக்கலாம்.

(பாற்கடலில் பள்ளி கொண்ட மால் என்று, கண்களைக் குறிப்பிடுவதும் உண்டு. வெண்மை இடைக் கிடக்கும் கண்ணின் கருமணி)

கண்கட்கு விதாதாவை (பிரமன்) உவமிக்கும் மரபு உண்டு போலும்.

இப்படி எல்லாம் வாட்கண், வேற்கண் என்று மகளிர் கண்கள் குறிப்பிடப்பெறுமே அன்றி, ஆடவர் கண்களுக்கு இத்துணை உவமை விளக்கம் இல்லை.

ஆயினும் 'அறுவகை இலக்கணம்' என்னும் நூற்பகுதி கூறுவ சில காணலாம்:

நெடுமால் அனையான் நெற்றி நிமிர் பிறை
விற்பொரு புருவமும், விதுவொடு கமலமும்
அன்ன மாமுகமும் அவன், அவள் பொதுவே,
காகமூக்கென்னக் கவின்தரு புருவமும்
போர்விடைக் கண்ணும் புருடர்க்கு உரியவே
(உவமான சங்கிரகம் பக்கம் 50)

இவ்வாறு ஆடவர்க்கு உரிய, இருபாலர்க்கும் பொது, என்று சில இலக்கண வரையறைகள் காண்லாம்.

மேலும் உவமான சங்கிரக நூல் கண்களின் இயல்பு பற்றி,

நெஞ்சு கறுத்த பேதைக்கு நிகழ்த்தும்
விழி செங்குமுதம் ஒப்பாம்
வஞ்சமுறு கோரமும், மிகுந்த மயலும்
பூட்டு மையலினால்

துஞ்சும் அதன்பி(ன்)ஞெடு கருமம் சூழ்ந்து
கூர்மை நனி உடைத்தாய்
விஞ்சை மதன ஆகம வழியை விளக்கும்
கடைக்கண் வேல் ஆமே (பக்கம் 18)

என்று கூறும்.

கண்களின் செயல்களாகப் புலவர்கள் குறிப்பிடுவன பற்றியும், ஒப்பு நோக்கத் தக்கன பற்றியும் பார்ப்போம். அமுத பார்வை, விடப் பார்வை கொண்டது:

இருநோக்கு இவள் உண்கண் உள்ளது ஒரு நோக்கு
நோய் நோக்கு ஒன்று அந்நோய் மருந்து
(திருக்குறள் 1091)

காதளாவும்:

காதளவு அளவு எனும் மதர்விழி
(கலிங்கத்துப் பரணி 2 : 1)

காதள வோடிய கலகப்பாதகக்கண்
(பட்டினத்தார் பாடல்)

பெரியவர் உள்ளம் கவர்ந்து மயல் ஊட்டல்:

கண்டார்க்கு அலவ நோய் செய்யும்
அணங்கிதுவோ காணீர்
(சிலம்பு 7 : 13)

இரு கயல் இணை விழியே—எனை இடர்
செய்தவையே (சிலம்பு 7 : 15)

.........................செங்கண்
குவளை அல்ல, கொடிய, கொடிய (சிலம்பு 7 : 20)

செங்கண் வெய்ய கூற்றம் (சிலம்பு 7 : 21)

இவ்வாறான கயல் நோக்கம் காணப் பெற்றார், பொறை அறிவு உடையரேனும் நிலைதளர்வர் என்பதும் பெற்றாம்.

கண்களில் செவ்வரிகள்:

செவ்வரி ஒழுகிய செழுங்கடை மழைக்கண்
வெண்முத்து உதிர்த்து (சிலம்பு 11 : 184, 185)

சேயரிக்கண்
செவ்வரிக்கண் என்றெல்லாம் அமைந்த சொல் ஆட்சிகள் உண்டு.

கண்களிலேயே, கனிவும், சினமும், காதலும், வெறுப்பும், அச்சமும், அவலமும் காட்டுவார் நடன மாதர்.

நெஞ்சத்தின் நுழைவாய், கண்கள் என்பாரும் உளர்.

இவற்றிலிருந்து மகளிர் கண்களுக்கு ஆடவர் கண்களுக்கு இல்லாத ஒரு தனிச்சிறப்பு உண்டு என்பது தெளிவாகிறது.

அதுவன்றியும், பிற பொறிகட்கு இல்லாத ஒரு தனித் தன்மையும் உண்டு. அதுதான் ஒரு குறிப்பிட்ட பொருளை ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு காண்பது.

கவிஞனே இப்படித்தான் கருதினன் என்பதற்கு அகச்சான்று நூலிடை இருப்பதாகவும் கொள்ள முடியும்.

அதுதான் ஐம்பொறிகளை வாளி என்று கூறி, கண்களை அம்பு என்று அவன் குறிப்பிடுவது.

பொதுவாக அம்பு, வாளி என்ற இரு சொற்களும் ஒரே பொருளையே கொடுப்பன என்று கொள்ளினும் இரண்டனுக்கும் வேறுபாடு உண்டு.

வாளி என்ற சொல், வாள் என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகக் கொள்ளலாம்.

வாள் என்ற சொல், ஒளி, விளக்கம், என்ற பொருள் களோடு, கூர்மை, கொல்லுகை, கொடுமை, பாணம் என்ற பொருள்களும் உடையது.

எனவே வாளி என்ற சொல் கூர்மையானது, கொல்வது, கொடுமை தரக்கூடியது, என்று பொருள்படும் என்று கொள்ளமுடியும்.

அம்பு என்ற சொல் குறித்த இடத்தில் உள்ள, குறித்த இலக்கை நோக்கிப் பாயும் பாணம் என்று பொருள்படும். அம்பு என்ற சொல்லுக்கு உரிய நீர், கடல், உலகம், மேகம் என்ற பொருள்களைப் பற்றி நாம் இங்கு ஆயத் தேவை இல்லை.

ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கிப் பாயும் பாணம் என்பதனைப் பற்றியே நாம் இப்பொழுது ஆய்ந்து கொண்டிருக்கிறோம்.

இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு காணும் பொழுது, இப்பாடலின் முதலடியில் இடம் பெற்றிருக்கும் 'ஐம்பொறி' என்பது ஆடவர், மகளிர் ஆகிய இரு பாலார்ப் பற்றியது என்றும், மகளிர் கண்ணுக்கே உரிய விசேஷத் தன்மை பற்றி இரண்டாம் அடியில் அது தனியாகக் குறிப்பிடப் பெற்றது என்றும் கொள்வதே பொருத்த மானதாகத் தோன்றுகிறது.

மகளிரின் கண்களுக்கு ஒரு மகத்தான சக்தியும் தன்மையும் இருக்கிறது என்று, கம்பன் கருதினன் என்பதை, அவனது பிறிதொரு பாடலின் வழி நாம் தெரிந்து கொள்ளலாம்.

அப்பாடலாவது.

விதியினை நகுவன, அயில் விழி; பிடியின்
கதியினை நகுவன, அவர் நடை; கமலப்
பொதியினை நகுவன புணர்முலை; கலைவாழ்
மதியினை நகுவன, வனிதையர் வதனம்.

(நாட்டுப்படலம் 44)

(விதி—பிரம்மா, உவமையாக விதிக்கப்பட்ட பொருள்கள், நியமம், விரதம், பிரம்மதேவன் விதித்த ஆயுள் வரையறை, விதிக்கப்பட்ட நீதி, விதிக்கப்பட்ட தொழில்; அயில்—கூர்மை, வேலும் ஆம்; கதி—நடை; பிடி—பெண் யானை; பொதி—அரும்பர்; புணர்—செறிவு; ஈர்க்கு இடை போகா அளவிற்குச் செறிந்தது. 'பூண் அகத்து ஒடுங்கிய ஆக வெம்முலை' என்பர்.

கலை—பதினாறு கலைகள்; மதி—சந்திரன்; வனிதையர்—பருவ மகளிர்; வதனம்—முகம்)

இப் பாடலில் மகளிரின் மூன்று உறுப்புகளும் ஒரு புடைபெயர்வும் (இயக்கம்) குறிப்பிட்டப் பெறுகின்றன.

'விழி', 'முலை', 'வதனம்' என்ற மூன்றும் உறுப்புகள். 'நடை' என்பது மெய்யின் இயக்கம்.

இந் நான்கிற்கும் உவமம் காட்டுவது கவி மரபு.

இந்தப் பாடலின் தனிச்சிறப்பு என்ன வென்றால், இந் நான்கும் அவற்றிற்கு உவமமாக எவை காட்டப் பெற்றனவோ அவற்றை, மிகைத்து விட்டதன் காரணமாக, அவற்றைப் பழித்தன என்று கம்பன் பாடுகிறான்.

நான்கு அடிகளிலும் நகுவன என்ற சொல் இடம் பெற்றிருக்கிறது.

நகுதல் என்ற சொல்லுக்கு, சிரித்தல், மகிழ்தல், மலர்தல், கட்டு அவிழ்தல், பிரகாசித்தல், இசைத்தல், அவமதித்தல், தாழ்த்துதல் என்று பல பொருள்கள் உண்டு.

நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற் சென்றிடித்தற் பொருட்டு (திருக்குறள் 784)

இக் குறட்பாவில் சிரித்தல் என்ற பொருளில் பயிலப் பட்டுள்ளது.

நகுதல், மகிழ்தல் பொருளில் அடியிற் கண்ட, குறட்பாவில் ஆளப்பெற்று உள்ளது.

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும் (திருக்குறள் 774)

ஆனல் கம்பனின் இப்பாடலில் (நாட்டுப் படலம் 44ல்) பயின்றுள்ள 'நகு' எனும் சொல்லுக்கு அவமதி, தாழ்த்து, பழி என்ற பொருள்களே பொருந்தும்.

நகுதல் பழித்தல் பொருளதாதலே,

வான் நக்கி[1] நின்று நுடங்கும்கொடி மாடமூதூர்
பால் நக்க[2] தீஞ்சொல் பவளம் புரை பாவை அன்ன
மான் நக்க[3]நோக்கின் மடவார் தொழ மைந்தர் ஏத்த
யானைக் குழாத்தின் இழிந்தார் அரிமாவேடு ஒப்பார்
(சீவக சிந்தாமணி 1866)

(நக்கி[1] - தீண்டி; நக்க[2],[3] - பழித்த)

என்ற பாடலில் காணலாம்.

உவமமாக, வழக்கமாகக் கூறப் பெறும் பொருள் களின் சிறப்பினை விஞ்சி, அதனைப் பழிப்பதாக, இப் பாடல் குறிப்பிடுவது காணலாம்.

முதலடி குறிப்பிடும் ஒண்டொடியார் உறுப்பு விழியாகும்.

அந்த விழிக்கு அடையாக அயில் எனும் சொல் பயில்கிறன்.

அயில் எனும் சொல் அழகு, கூர்மை, கைவேல் என்ற பொருள்கள் உடையது. அம் மூன்று பொருள்களுமே இங்குபொருந்தும்.

கருங்கடைக்கண் அயில் காமர் நெஞ்சினை உருங்குவ
(நகரப்படலம் 46)

'அயில் ஏய் விழியார்' (கார் காலப் படலம் 54)

'அயில் விழி குமுதச் செவ்வாய்'
(கிட்கிந்தைப் படலம் 77)

என்பன கம்பனின் சில வழக்காறுகள்.

கண்களுக்கு உவமையாக எவ்வெவை ஆளப்பெறுகின்றன என்பதனை முன்னரே பார்த்தோம். (பக்கம் 199)

இப்பாடலின் முதலடி சுட்டும் விதி என்ற சொல்லுக்கு உரியவாய்ப் பல பொருள்கள் உளவேனும், நாம் அவற்றுள் மூன்றனை எடுத்து ஆய்ந்து பார்க்கலாம்.

அவை, 1. பிரமன் 2. திருமால் 3. ஊழ் என்பன.

இம் மூன்று பொருள்களைமட்டும் எடுத்துக் கொள்வதற்குக் காரணம் இருக்கிறது.

பிரமன் : இவன் பல்லுயிரும் பல உலகும் படைப்பவன். மகளிரின் அயில் விழியைப் படைத்தவன்.

படைப்பவனையே பார்த்துப் பழிக்கின்ற அளவிற்குப் படைக்கப்பட்ட பொருள் சிறந்தும், உயர்ந்தும் விளங்குகிறது என்று கொள்ளலாம்.

திருமால் : இவன் நிறம் கரிது. இவன் நிறத்தினும் கரியதாக கண்கள் விளங்கலால், இவனைப்பழித்தாகக் கொள்ள வேண்டும்.

இப்பொழுது மூன்றுவதாகிய பொருளுக்கு வருவோம்.

□ மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமி நாதயர் நூல் நிலைய வெளியீடு,

"கண்கள் அவற்றைப் படைத்த பிரமனும், அவற்றின் வீச்சுக்கு உட்படுவான் என்று பிரமனையே பழிப்பன. மேலும் அவனால் படைக்கப்பட்ட யோகியரும், ஞானியரும்கூட இவர்கள் கண் பார்வையின் முன் தன் மனஉறுதியை இழப்பர்" என்றும்,

"அவர்களுடைய கண்கள் பிரம்மாவைப் பார்த்து 'எங்களைப் போலக் கண்ட உடனே புருஷர் மயங்கும்படி நீயுண்டாக்க மாட்டாய்' என்று இகழ்ச்சி பண்ணும். (பழைய உரை)" என்றும்,

"ஞானிகளை ஞானம் கெட மயக்கியும் தீர்க்காயுள் படைத்த பேரை மன விகாரம் பண்ணி வாட்டியும் செய்தியால் விதியினை நகுவன" (மற்றொரு பழைய உரை) என்றும் உரை விரிக்கும்.

** அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புரையாவது:

"விதி, எல்லாப் பொருளையும், கண்களாகிய தம்மையும் படைத்து விதிப்பவன் ஆயினும், அவனையும் தம் வழி நிறுத்தி, விதிக்கும் ஆற்றல் தமக்கு உண்டு என்பது தோன்ற, விதியைப் பழிப்பன ஆயின.

திலோத்தமையைப் படைத்த பிரமன் அவள் விழிக்குத் தானே கலங்கி நின்ற நிலையை உன்னுக.

இங்ஙனம் அன்றி, விதி என்றதற்கு நியதி எனப் பொருள் கொண்டு, முனிவர்கள் விரத நியமங்களை அழிப்பன என்று, மேனகையின் கண்களுக்கு விசுவாமித்திரனும் மாயையின் கண்களால் காசியபனும் விதி அழிந்ததை உட்கொண்டு கூறுவாரும், ஆயுள் நியமமாகிய

விதியைப் பழிப்பன எனப் பொருள் கொண்டு, நூறுண்டு வாழ்வாரும், எம் அயில் விழியில் அடிபட்டு, அற்ப ஆயுளர் ஆகின்றனர் எனக் கருத்துரைப்பாரும், சாத்திர விதிகளை நகுகின்றன எனப்பொருள் கூறுவாரும் பலர் ஆவர்.''

'வேளை வென்ற முகத்தியர்' (நாட்டுப் படலம் 24)
(வேள்—மன்மதன்)

என்பான் கம்பன்.

எப்படியாயினும் மகளிரின் கண்களுக்கு இருக்கும் சக்தியோ, அபாரமானது என்பதை மேலும் எடுத்துக் காட்டத் தேவை இல்லை.

இனி கம்பனுடைய இப்பாடலின் அமைப்பைத் தொடர்வோம்.

'விதியினை நகுவன அயில் விழி' என்று சொன்னதற்கு ஏற்ப, இரண்டாவதாக மகளிரினுடைய நடையைப் பற்றிக் குறிப்பிடுகிறுன்.

பெண்களின் நடைக்கு ஈருவமங்களே நூல்களில் பயிலப்பெறும்.

பாயல் பிடிவேழம் பைந்தூவி அன்ன நடை

அன்னமொடு, பெண்பிடி நடைக்குவமை
(உவமான சங்கிரகம் பக்கம் 27, 60)

என்னும் உவம நூல்கள்.

சேல் உண்ட ஒண்கணாரில் திரிகின்ற செங்கால் அன்னம்
(நாட்டுப் படலம் 13)

மடை பெயர் அனம் என மடநடை (நாட்டுப்படலம் 43)

தூவி அன்னம் தம் இனம் என்று நடை கண்டு தொடர,
(அகலிகைப் படலம் 9)

ஓதிமம் ஒதுங்க, கண்ட உத்தமன்,
உழையள் ஆகும்
சீதை தன் நடையை நோக்கி...
(சூர்ப்பணகைப் படலம் 5)

அன்னம் நன்னுதல்! மென்னடைக்கு அழிந்து,
நல்நீர்ப் பண்ணை நளிமலர்ச் செறியவும்
(சிலம்பு 1 : 2 : 55, 56)

என்பன இலக்கிய உவமங்கள்.

இப்பாடல் தொடரிடை 'பிடியின் கதியனை நகுவன அவர் நடை' என்ற இடத்து, கதி - செலவு, நடை என்றபொருளது. பிடி என்பது பெண் யானை குறிக்கும்.

மகளிரின் நடை 'பெண் யானை' யின் நடையைப் பழிப்பதாக இருந்தது என்பான்.

'பிடி மருள் நடையினர்தம் பெருங்கவின்'
(சீவக சிந்தாமணி 2719)

என்றதும் காண்க.

ஆடவர் நடைக்குக் களிறும், சீயமும், செங்கண் ஏறும் உவமமாகப் பயிலப் பெறும்.

மாக மடங்கலும், மால்விடையும், பொன்
நாகமும், நாகமும், நாண நடந்தான்.
(கார்முகப்படலம் 32)

[மாகமடங்கல் - மிக்க சிறப்புடைய சிங்கம்; மால்விடை— பெருமை பொருந்திய இடபம்; பொன்நாகம் - பொன் மலை (மேரு); நாகம் - யானை;]
என்பான் கம்பன்

அடுத்து அமைவது 'கமலப் பொதியினை நகுவன புணர்முலை' என்ற தொடர்.

குவிந்து மூடியுள்ள தாமரை அரும்பைப் பழித்தது என்பான்.

விரி காந்தள் மலர்களால், குவி கமலப் பொதி புடைத்து,
(தனிப்பாடல்)

தலைவி ஒருத்தி அழுது அரற்றியதாகக் கூறும் பாடல் ஒன்று உண்டு,

கோங்கின் அவிர் முகையும் குவிமுலைக்கு உவமமாகப் பயிலப் பெறும்.

இவ்வாறுய, இதன் குவி நிலை குலையாமைக்கும், படாமைக்கும், காரணம் கூறுவது போல் ஒரு புலவன் முகமாகிய சந்திரன் மலர்ந்தவாறே இருப்பதால், முகை நிலை தளரவில்லை என்பான்.

ஈற்றடியில் அமைந்துள்ள தொடர் 'மதியினை நகுவன வனிதையர் வதனம்' என்பது.

'முத்தார் முளரி, முழுமதியம் ஆம் திலகம்
வைத்து நகை காந்தி மருவுமுகம்'
(உவமான சங்கிரகம்—பக்கம் 33)

(முளரி - தாமரை; மதி - முழு நிலவு)

என்று இரத்தினச் சுருக்கம் இயம்பும்.

கம்பன் பிற இடங்களில் ஆள்வனவும் சில காண்டல் நலம்.

தருமத்தின் வதனம் என்னப் பொலிந்தது—
தனி வெண் திங்கள் (தைலம் ஆட்டு படலம் 49)

........................இவ்வழகன் வாள்முகம்,
பொதி அவிழ்த் தாமரை பூவை ஒப்பதோ?
(சூர்ப்பணகைப் படலம் 17)

....துப்பின்
கொம்பர்—குரும்பைக்குலம் கொண்டது, திங்கள் தாங்கி,
வெம்பும் தமியேன்முன், விளக்கு என,
தோன்றும் அன்றே!
(சூர்ப்பணகைச் சூழ்ச்சிப் படலம் 142)

சங்க நூல்,

....முள் எயிற்று
திலகம் தைஇய தேம் கமழ் திருநுதல்
எமதும் உண்டு ஓர் மதிநாள் திங்கள் (நற்றிணை 62)

என்று கூறும்.

இதனைத் தொடர்ந்து வரும் கம்பனின் இரு பாடல்களை நோக்குவதற்கு முன் சில பொதுச் செய்திகளைக் காணலாம்.

'உவமை' என்ற சொல்லுக்கு 'ஒப்பு' என்பது பொருள் என திவாகர நிகண்டு குறிப்பிடும். அதிலிருந்து பிறப்பது உவமை அணி. எனவே உவமை என்ற சொல் ஒத்திருக்கும் நிலையைக் குறிப்பது ஆகும்.

இந்த உவமையை அணியாகப் பயின்று கவிஞர்கள் தங்களுடைய படைப்புகளுக்கு அழகும், பொலிவும் சேர்ப்பது உண்டு.

நாம் முன்னர்க் குறிப்பிட்ட உவமான சங்கிரகம், பொதுவாக மகளிர் உறுப்புகளுக்குக் கூறும் உவமைப் பட்டியல் தொகுதி ஆகும்.

மகளிர் உறுப்புகளே அன்றி, எந்தப் பொருளுக்கும் எந்தக் கருத்துக்கும், எந்தச் செயலுக்கும், உவமை காண முடியும்; கூறவும் முடியும்.

கவிஞர்களோ, இந்த உவமை என்ற அணியிலிருந்து இன்னும் மேலே போவதுண்டு. ஓர் உறுப்புக்கோ, அங்கத்துக்கோ, பொருளுக்கோ இது அதனை ஒத்தது என்று கூறுவதற்குப் பதிலாக 'இது அதனை நிகர்த்தது' என்று கூறுவர்.

நிகர்த்தல் என்ற சொல்லுக்கு ஒத்தல் என்பது தான் பொருள்.

> கடுப்ப, ஏய்ப்ப, மருள, புரைய
> ஒட்ட, ஒடுங்க, ஓட, நிகர்ப்ப, என்று
> அப் பால் எட்டே—மெய்ப்பால் உவமம்.
>
> (தொல்காப்பியம் உவம இயல் 15)

இதே நிகர் என்ற சொல்லைப் பெயர்ச் சொல் ஆகப் பயிலும் பொழுது ஒப்பு என்பது தான் பொருள்.

கவிஞர்கள் ஒன்றை வருணிக்கத் தொடங்கும் பொழுது அதற்கு ஒப்புமையான உவமையைக் கூறுவ தோடு அமையாமல், அந்த உவமைப் பொருளை மிகைப் பதற்காக முயலுகிறது என்றும் கூறுவர்.

இப்படி அப் பொருள் செய்யும் முயற்சியை 'இகலுதல்' என்றும் 'பொருதல்' என்றும் குறிப்பிடுதல் உண்டு.

இவ்வாறு குறிக்கப் பெறும் பொழுது 'இகலுதல்' என்ற சொல்லுக்குப் 'போட்டி இடுதல்' என்று பொருள். 'பொருதல்' என்ற சொல்லுக்குப் 'போரிடுதல்' என்பது பொருள்.

இவ்விரண்டு சொற்களும் ஒரே விதமான பலனை அளிப்பதற்கே பயிலப் பெறுகின்றன. 'போட்டி இடுதல்' என்று பொருள்படும் 'இகலுதல்' என்ற சொல்லைக் கவிஞர்கள் பயில்வார்களேயானால், தனக்கு ஒப்பாக இருக்கும் பொருளை அது விஞ்சுவதற்கு ஆன முயற்சிகளைக் குறிப்பதற்கே அப்படிப் பயில்வர்.

இந்த நிலையைக் குறிப்பதற்குக் கவிஞன், குறிக்க வந்த அங்கமோ, பொருளோ, கருத்தோ அதற்கு உவமையான வற்றை இகல்கிறது, பொருகிறது என்று குறிப் பிடுவான்.

இப்படி, இகலல், பொருதல் என்ற முயற்சியில் அது வெற்றி பெற்று விடுமாஞல், அப்படிப் பெற்ற வெற்றியை உணர்த்த, அப் பொருள் தன்னுடைய உவமையை நகுகிறது, இகழ்கிறது, பழிக்கிறது என்று கூறுவான்.

இங்கு நகுதல் என்ற சொல்லே ஆளும் பொழுதே 'வெற்றியின் களிப்பு' களி நடம் புரிவதைக் கண்டு கொள்கிருேம்.

நாம் இதுவரை பார்த்து வந்த 'விதியினே நகுவன, அயில் விழி...' என்று தொடங்கும் பாடல் இந்த வெற்றின் உச்ச நிலையைத்தான் குறிப்பிடுகிறது.

நாம் முன்னர் விளக்கிய வரிசை

ஒப்புமை

ஒப்புமையை விஞ்சுதல் (விஞ்சப் பொருதல்)

ஒப்புமையை வெற்றிகொள்ளல்

என்பதாகும்.

கம்பனே இவ்வரிசையை நேர் மாருக மாற்றிப் பாடுகிருன்.

'விதியினே நகுவன அயில் விழி' எனத் தொடங்கும் பாடல், நாட்டுப் படல, 44 ஆம் பாடலாகும். அடுத்து வரும் பாடல்களும் காணலாம். அவை:

பகலிெைடு இகலுவ, படர்மணி; மடவார்
நகிலிெைடு இகலுவ, நனிவளர் இளநீர்;
துகிலிெைடு இகலுவ, சுதை புரை நுரை; கார்
முகிலிெைடு இகலுவ, கடி மண முரசம்.

(நாட்டுப்படலம் 45)

காரொடு நிகர்வன, கடிபொழில்; கழனிப்
போரொடு நிகர்வன, புணர்மலை; அணைசூழ்
நீரொடு நிகர்வன, நிறை கடல்; நிதிசால்
ஊரொடு நிகர்வன, இமையவர் உலகம்.

(நாட்டுப்படலம் 46)

என்பனவாம்.

கம்பன் கூறும் பாடல் அமைப்பைப் பார்க்கும் பொழுது கீழ் இருந்து மேல் போகும் முறை மாறி, மேலிருந்து கீழ் வரு வரிசையைக் கையாள்கிறான் என்று அறிகிறோம்.

நாட்டுப்படலம் 45, 46, பாடல்களின் கருத்து:

'படர் மணி பகலினொடு இகலுவ'. அந்நாட்டில் எங்கும் பரவிக் கிடக்கின்ற மணிகள் பகலினொடு இகலுவ என்றாகும். பகல்—பகலவன் ஒளி என்று பொருள் தரும்

'பெரிய நாள் ஒளி கொள் நானாவித மணிப் பித்திப் பத்தி
சொரியும் மா நிழல்.........
(நிழல் - ஒளி) (ஊர்தேடு படலம் 102)

என்றும்,

வகைய பல்மகுடம் இளவெயில் எறிப்ப,
கங்குலும் பகல் பட......... (காட்சிப் படலம் 78)

என்றும்,

.........................மணியுடை அணியின்
விரிகதிர் இருள் எலாம் விழுங்க, (காட்சிப் படலம் 80)

என்றும், பகல் இகல் மணிகள் பண்பு கூறுவான் கம்பன்.

அடுத்து அமைவது,

'நகிலினொடு இகலுவ நனிவளர் இளநீர்' என்பது.

இவ்வுவமம் கம்பனும், பிறரும் பெரிதும் பயில்வதே.

செம்மாந்த தெங்கின் இளநீரை, ஓர் செம்மல் நோக்கி,
'அம்மா! இவை மங்கையர் கொங்கைகள் ஆகும்' என்ன,
(பூக்கொய் படலம் 17)

'செப்பு என்பென்; கலசம் என்பென்; செவ்
இளநீரும் தேர்வேன்;' (நாடவிட்ட படலம் 43)

என்பான் கம்பன் பிறவிடத்தும்.

மூன்றும் அடி,

'துகிலினொடு இகலுவ சுதை புரை நுரை' என்பது.

துகில் என்பது மெல்லிய ஆடை என்று பொருள் படும். இக் காலத்து Tissue Saree போல்வது.

'பட்டு நீக்கித் துகில் உடுத்தும்' (பட்டினப் பாலை 107)
என்ற தொடர் விளக்கமாக நச்சினார்க்கினியர், 'பட்டுடுத்தவற்றை நீக்கி புணர்ச்சிக் காலத்துக்கு நொய்ய ஆகிய வெள்ளியவற்றை உடுத்தும்' என்று கூறுவார்.

துகில் மிகவும் நொய்து. சிலம்பி (சிலந்தி) நூலும் இதற்கு உவமமாகப் பயிலப் பெறும்.

.........துகில் உடுத்தவைபோல்,
சிலம்பி வால் நூல் வலந்த மருங்கின்
(பெரும்பாணாற்றுப்படை 237)

....முழுமெய்யும்,
சிலம்பி வலந்ததுபோல் போர்வை போர்த்து
(சீவக சிந்தாமணி 340)

(போர்வை - துகில்)

சிலம்பி பொதி செங்காய், துகில்பொதி
பவளம் ஏய்க்கும் (யாப்பருங்கலக்காரிகை மேற்கோள்)
சிலம்பி கோலிய அலங்கல் போர்வையின்,
(பதிற்றுப் பத்து 39)

நுண்சிலம்பி வலந்தன நுண் துகில்,
(பாலகாண்டம் எழுச்சிப் படலம் 45)

என்பன இலக்கியம் உடுத்தவை.

தவிர துகிலுக்குப் பால் காய்ச்சும் போது எழும் நுரையும், ஆவியும், புகையும் உவமம் ஆம். காம்பின் சொலியும், அரவின் உரியும், துகிற்கு உவமம்ஆம் எனும் சங்க இலக்கியங்கள்.

புகை விரிந்தன்ன பொங்கு துகில் உடீஇ
(புறநானூறு 398)

ஆவி அன்ன பூந்துகில்,
பாலார் ஆவிப் பைந்துகில் (சீவக சிந்தாமணி 67, 1094)
ஆவி நுண்டுகில் (பெருங்கதை 1 : 36 : 64)
ஆவி அன்ன அவிர் நூல் கலிங்கம்
(பெரும்பாணாற்றுப்படை 469)
அரவு உரியன்ன அறுவை (பொருநராற்றுப்படை 83)
காம்பு சொலித்தன்ன அறுவை
(சிறுபாணாற்றுப்படை 236)

என்பனவும் காணலாம்.

நுரை முகந்தன்ன மென்பூஞ் சேக்கை என்ற தொடர் துகில் விரி (Bed Spread), பூ சொரி சேக்கை பற்றிக் கூறுகிறது.

தீம்பால் நுரைபோல் திகழ்வெண்பட்டு

என்ற தொடரும் காணலாம்.

ஈற்றடி,

'முகிலினெடு இகலுவ கடிமண முரசம்' ஆகும்.

முரசம்—தோற்கருவி. தாக்குறும் தோற்கருவிகளில் எழும் ஒலி இடிமுழக்கமாகப் புலவர்களால் குறிக்கப் பெறும்.

திருமழை தலைஇய இருள்நிற விசும்பின்
விண் அதிர் இமிழ் இசை கடுப்ப, பண் அமைத்து,
திண்வார் விசித்த முழவொடு...... (மலைபடுகடாம் 1 - 3)

என்னும் சங்க இலக்கியம்.

அடுத்த் பாடலில் நான்கு பொருள்களே அவ்வ வற்றுக்கு உரிய உவமைகளோடு, 'நிகர்வன' என்ற சொல் பயன்படுத்தி விளக்குகிருர்.

முதலடி,

'காரொடு பொருவன கடிபொழில்'

என்பதாம்.

மேகங்கள் அந்நாட்டில் உள்ள வளம் மிக்க சோலே களோடு ஒப்பன என்பார்.

இவ்வாறு பொழிலுக்கு மேகம் உவமிக்கப்படுதல் பண்டைய நெறித்தே.

தடங்கார் தரு பெருவான் பொழில் நீழல்...
(திருக்கோவையார் 31)

(தரு-உவம உருபு)

கார் என்பது மழை மேகம்; இது கருமை நிறம் பெற்றே விளங்கும்.

கார் என்பது கருமை நிறத்தை மட்டுமே குறிப்ப தாகக் கொள்ளினும், இவ்வுவமம் பொருந்துவதே.

பொழிலுக்கு இருள் உவமமாகவும் பயிலப் பெறும்.

இருள் திணிந்தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்
(குறுந்தொகை 123)

.........தூங்கிருள் வெய்யோற்கு ஒதுங்கி
புக்கிருந்தாலன்ன பொழில். (நளவெண்பா 1 : 11)

'இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து...'
(திருமுருகாற்றுப்படை 10)

'வெயில் நுழைபு அறியா குயில்நுழை பொதும்பர்'
(மணிமேகலே 4 : 5)

இவ்வாறு இருள் உவமம் காட்டுதல், 'மந்தியும் அறியா மரம் பயில் இறும்பு' எனக் குறித்தவாறும்.

(இறும்பு—சிறுகாடு, சோலை)

இரண்டாம் அடி,

....................கழனிப்
போரொடு பொருவன புணர்மலை என்பதாம்.

வெள்ளிடை நின்ற குன்று அன்று; பெருமலைத் தொடர் என்ற பொருளது புணர் மலை என்ற தொடர்.

அறையும், பொறையும் மணந்த தலைய

ஆய குன்றுகள், உவமம் ஆம்.

(அறை—பாறை; பொறை—சிறுகுவடு)

சென்னைக் கம்பன் கழகப் பதிப்பு 'புணர்மலை' என்று உவமம் கூறி, 'கூட்டமான மலை' என்று பொருள் தரும்.

டாக்டர். உவே. சாமிநாதய்யர் நூல் நிலையப் பதிப்பு 'புணர் மலை' என்பதற்குப் பதிலாக 'பொலன் வரை' என்று தந்து, 'பொன் மயமான மேரு மலை' என்று பொருள் கொடுத்து, 'புணர்மலை' என்பதைப் பாட பேதமாகக் காட்டும்.

இம் மலை உவமம், முந்தைய இலக்கியங்களில் ஆளப் பட்ட ஒன்றே.

அறுவடை முடிந்த பின்னர், வயல் வெளிகளில் எங்கு நோக்கினும் 'எறிதரும் அரியின் சும்மை எடுத்து வான் இட்ட போர்கள்' விளங்கும்.

விளைபதம் அறிந்த மள்ளர்கள்,

கூனி, குயத்தின் வாய்நெல் அரிந்து,
சூடு கோடு ஆகப் பிறக்கி, நாள்தொறும்,
குன்று எனக் குவைஇய குன்றுக் குப்பை
கடுந்தெற்று மூடையின் இடம் கெடக் கிடக்கும்.
(பொருநராற்றுப்படை 242 - 245)

பகடு ஊர்பு இழிந்த பின்றை, துகள் தப,
வையும், துரும்பும் நீக்கி, பைது அற
குடகாற்று எறிந்த குப்பை, வடபால்
செம்பொன் மலையின், சிறப்பத் தோன்றும்
தண் பணை தழீஇய தளரா இருக்கை,
(பெரும்பாணாற்றுப்படை 237-241)

குன்று கண்டு அன்ன நிலைபல் போர்பு
(புறநானூறு 353)

விலங்கல் அன்ன, போர்முதல் தொலைஇ,
(மலைபடு கடாம் 461)

என்று மருதச் சிறப்பு கூறப் பெறும்.

இத்தகைய நெற் போர்வில் (நெற் கதிர்ப் போர்) பொய்கை நாரையும் உறங்கும் என்பர்:

பொய்கை நாரை போர்வில் சேக்கும்
(புறநானூறு 209)

கயலார் நாரை போர்வில் சேக்கும்
(ஐங்குறுநூறு 9)

மூன்றும் அடி,

...................அணை சூழ்
நீரொடு நிகர்வன, நிறைகடல்...........

என்பதாம்.

அணையால் சூழப்பட்டுத் தேக்கம் கொண்ட நீர் நிலைகளோடு (ஏரிகள்), கடல்கள் ஒப்பாம் என்பது, இதன்

பொருள். ஏரிகள் சங்க காலத்து, குளங்கள் என்றும் குறிக்கப்பெற்றன.

எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளம் (புறநானூறு 118)
உரு கெழு திறல் உயர் கோட்டத்து,
முருகு அமர் பூ முரண் கிடக்கை
வரி அணி சுடர், வான் பொய்கை
இரு காமத்து இணை ஏரி,
(பட்டினப்பாலை 36—39)

வானில் திரிதரும் அவ் வண்மதியின் வெண்முறியே
தானிற்று வீழ்ந்ததுவோ தரணி மிசை? (தனிப்பாடல்)

என்பன ஏரி குறித்த இலக்கியத் தொடர்கள்.

கோடெல்லாம் மட அன்னம்
குளமெல்லாம் கடல் அன்ன
(பெரிய புராணம் 2 : 17)

என்று கம்பன் கருத்துக்கியைய சேக்கிழார் அமைத்துள்ளார்.

'ஏரி மாவட்டம்' என்று சிறப்பிக்கப் பெறுவது 'செங்கற்பட்டு மாவட்டம்'.

பருவ மழை பொய்யாதேல், இம் மாவட்டத்துச் செம்பரம்பாக்கத்து ஏரி, நிறை நீரால், கண்கவர் வனப்பினதாய்ப் பொலியும். கரை நின்று நோக்குவார் கண் தொடுவானம் வரை பாயினும், நீரே அன்றி வேறு எதுவும் காண்கிலார்.

வீராணம் ஏரி, மதுராந்தகம் ஏரி, காவிரிப் பாக்கம் ஏரி, வாழ்குடை ஏரி, போல்வன, நீர் நிரம்பப் பெறின், 'கடல்' போலவே காட்சி அளிக்கும்.

நீர் நிரம்பிய சுனைகள் வறண்டு, முற்றும் தோட்ட நுங்கென விளங்கின என்று சங்கப் புலவன் குறிப்பிடுவான்.

அது போல், இன்று இவ்வேரிகள் நிலை,

'இனி நினைந்து இரக்கமாகின்று'.

ஈற்றடி,

ஊரொடு நிகர்வன இமையவர் உலகம் என்பதாம்.

இதனோடு,

பூமி மாநகர் பொன்னுலகு ஒத்ததே (சீவகம் 135)

என்ற தொடர் ஒப்பிடல் நன்றாம்.

நாக[1] நீள் நகரொடு நாக[2] நாடு—அதனொடு
போகம், நீள் புகழ், மன்னும் புகார் நகரம்
(சிலம்பு 1:21, 22)

(புகார் நகரம், போகச் சிறப்பால் நாகர் நகரையும், புகழ்ச் சிறப்பால் நாக நாட்டையும் ஒத்தது என்பது கருத்து.

நாகர்[1]—பாதலத்தவர்; நாகர்[2]—தேவர்

துன்னு போகம் துய்த்தற்கு, 'தூமப் பணிகள்' உவமம் ஆம்.

'மெய்யுறு புணர்ச்சிக்கண், காமம் நுகரும் அழகுடைய பாம்புகள்' என்ற பொருளது, 'தூம்ப் பணிகள்' என்ற தொடர்.

இப் பாடலில் (46) நாம் காண வேண்டிய பிறிதொரு குறிப்பும் உண்டு.

அது என்ன வென்றால்,

முதலடியில், முதலில் உவமையைக் குறிப்பிட்டு உவமானத்தை அடுத்து வைத்துள்ளான். அடுத்த மூன்று அடிகளிலும் உவமானத்தை முதலிலும் உவமையைப் பின்னரும் வைத்திருக்கின்ருன் என்பதே.

பதினெட்டாம் நூற்ருண்டில் இந்நாட்டிற்கு வந்து தமிழ் கற்று தமிழ் நூல்கள் பல படைத்த வீரமாமுனிவர் தம்முடைய தேம்பாவணி நூலில் நாட்டுப் படலத்தில் கம்பனேயே பெரிதும் பின்பற்றிப் பாடுகிருர். நாம் முன்னர்க் குறிப்பிட்டது போன்று நகுவன, இகல்வன எனும் உவம உருபுகளே இடைப் பெய்து இரு பாடல்கள் அமைத்துள்ளார்.

தூத்துக்குடி தமிழ் இலக்கியக் கழகம் *1961*ல், வித்துவான் ரா.லே. ஆரோக்கியம் பிள்ளை எழுதிய விளக்கக் குறிப்புகள் முதலியவற்றுடன் கூடிய, வீரமாமுனிவர் அருளிச் செய்த தேம்பாவணி பதிப்பித்து வெளியிட்டுள்ளது.

அப்பதிப்பின்படியே, மேலே குறிப்பிட்ட இரு பாடல்கள் கீழே தரப்பெறுகின்றன.

பொறை இணே நகுவன, புயமலி பொருநர்;
உறை இணே நகுவன, உதவிய கொடையோர்;
துறை இணே நகுவன, துறுவிய கலேயோர்;
தறை இணே நகுவன தடமலி நகரே.

(நகரப்படலம் *57*)

(பொறை—சிறு குவடு; உறை—மழைத்துளி)

'வாள் போழ் விசும்பில் வள் உறை சிதறி'

(திருமுருகாற்றுப்படை *8*)

துறை—ஊர் உண் நீர்த்துறை

'நெடு நீர துறை கலங்க'

(பதிற்றுப்பத்து *33*)

துறு—செறிவு; துறுவிய—செறிந்த
துறு—துறுமு—துறுவு—துறுவிய
தறை—தரை

'தறைப்படும் அளவில் தத்தா! நமர்'

என்ற பெரிய புராணத் தொடர் காணலாம்.)

அலையினோடு இகல்வன, அரிது ஒலி நியமம்;
விலையினோடு இகல்வன, விரி அணி மணிகள்;
கலையினோடு இகல்வன கடையில நயம்; ஓர்
வலையினோடு இகல்வன, மலிதிரு நகரம்.

(நகரப்படலம் 58)

இப் பாடலில் (57ல்) நான்கு அடிகளிலும் பயிலப் பெறுவது இணை என்ற சொல். முதலடியில் வேண் டுமானால் இச் சொல் பொருந்தலாம். பிற அடிகளில் பொருத்தம் காண இயலாது, 'வீரர்களின் வன்மை மிக்க தோள்கள், பாறைகளை எள்ளி நகுவன போல் விளங்கும்', என்பது பொருள்.

பொருநர் மலி புயம், பொறை இணை, நகுவன என்று கொண்டு கூட்டவேண்டும்.

'போர் மறவன் குவவுத்தோள் இணை, சிறு குவடுகளை நகும்' என்பது இத்தொடர்க் கருத்து.

இவ்வாறு குவடு, குன்று, வரை, கல், முழவு, உலம் (திரண்ட கல்) போல்வன, போர் மறவன் தோளுக்கு உவமம் கூறப்பெறும். கம்பன் காப்பியத்தில் சில காணலாம்:

'குன்று என உயரிய குவவுத் தோள்'
'மொய் பெரு அதினவு உறு முழவுத் தோளினன்

(பாலகாண்டம்—அரசியல் படலம் 11, 12)

'உலம் தரு வயிரத் திண்தோள்'

(பூக்கொய் படலம் 10)

'கல் நகு திரள் புயக் கணவன்'

(திருவடி சூட்டு படலம் 87)

'வரைசேர் தோளிடை நாளும் வைகுவேன்'

(வாலி வதைப் படலம் 164)

இணை என்ற சொல் இசைவு, ஒப்பு, இரட்டை, துணை, எல்லை, போன்ற பொருள்களில் வழங்கப் பெறும்.

தோளிணை என்று சொல்வது மரபு. ஆனால் பிற அடிகளில் இவ்வாறு இரட்டைப் பொருளில் வழங்க வழி இல்லை.

ஆக இப்பாடல் பொறையினை, உறையினை, துறையினை, தறையினை, என்றே அமைதல் வேண்டும்.

அப்படியாயின் இன் - சாரியைப் பொருளிலும், ஐ - இரண்டன் உருபு ஆகவும் வந்ததாகக் கொள்ளலாம்.

இப் பாடலின் திரண்டபொருள், அந்நாட்டவர் தோள்வலியால் பாறைகளை வென்றவர்; கொடைத் தன்மையால் மழை மேகம் வென்றவர்; நிரம்பிய கல்வி அறிவு சான்றவர் கூடிய கலை தெரிகழகங்கள், உண்ணு நீர்த்துறையை வென்று மேம்படும். நகரங்கள் தம் பெருநிலப் பரப்பால் உலகத்தையே வெல்லும், என்று ஆகும்.

இன்றேல் இணை, என்ற சொல்லுக்கு ஒப்புமை என்ற பொருள் கொடுத்து, ஒப்புமை காட்டும் செயலையே பழிக்கிறது என்று பொருள் கொள்ள வேண்டும்.

இது வலிந்து மேற்கொள்வதாம்.

அடுத்த பாடல் (58)காண்போம். இப் பாடலில் பயின்றுள்ள நியமம் என்ற சொல் கடைத்தெரு என்ற பொருளது. ஒலி முழக்கு அருத கடைத் தெருவுக்கு அலே ஓவாக் கடல் உவமம் ஆம். அடுத்த அடி அந்நாட்டவர் அணி மணிகள் விலேயிடற்கரியன என்ற கருத்தது.

முடிவில்லாத இன்பம் துய்ப்பவர் அந்நாட்டவர். முடிவில்லாத இன்பம் தருவன கலேகள். தன் இடத்து வாழ்பவரைப் பிற இடத்துச் சேறல் ஒட்டாது பிடித்து வைத்திருப்பதனுல் அந்நகர் வலே போல்வதாம் என்பார்.

நாகூர் குலாம் காதிறு நாவலர் அவர்கள் தம் ‘ஆரிபு நாயக’ நூலில் தந்துள்ள பாடலே இங்கு காண்பதும் பொருத்தமானது:

விதியொடு பொருவது விறல் உளவினே; சூழ்
பதியொடு பொருவது பலபொழில்; நறைசேர்
ததியொடு பொருவது தளர்வறு வெளில்; ஆர்
மதியொடு பொருவது வளர்தரு பிரசம்.

(நாட்டுப் படலம் 45)

(விதி - ஊழ்; ததி - தயிர்

விறல் உள வினே - முயற்சியில் தளராமை

வெளில் - மத்து; பிரசம் - தேனடை)

முதலடிக் கருத்து. “ஊழையும் உப்பக்கம் காண்பர்” என்ற குறட்பாவோடு இயையும்.

அடுத்த அடி, அந்நாட்டில் உள்ள பல பொழில்கள், ஒவ்வொன்றும் தனி நகரம் எனத்தக்க அளவில் பரந்து கிடப்பன, என்று கூறும்.

மூன்றும் அடி, மத்து கொண்டு தயிர் கடைவது, அதனோடு பொருவது போன்றது என்னும்.

ஈற்றடி தேனடைகள் முழுவெண்டிங்களை பொருவன் என்னும்.

ஓங்கு வரை அடுக்கத்து, ஒண் சிறைய தும்பிகள், பெருந்தேன் இழைக்கும். அத்தகு தேனடைகட்கு, வட்டப்பரிதியும் (சூரியன்), வால் வெண் திங்களும் (முழு நிலவு), தோலும் (கேடகம்), உவமமாகப் பயிலப்பெறும்.

"விண் பொரு நெடு வரை பரிதியில் தொடுத்த
தண் கமழ் அலர் இறால்"

(திருமுருகாற்றுப்படை 299, 300)

வானூர் மதியம் வரைசேரின் அவ்வரை
தேனின் இறால் என ஏணி இழைத்து

(கலித்தொகை 39)

(இறால்-தேனடை)

'நிரை செலல் நுண் தோல் போல
பிரசம் தூங்கும் மலை......'

(குறுந்தொகை 292)

என்பன காண்க.

இப்பாடலில் பயின்றுள்ள பொருவு என்ற சொல் உவம உருபு அன்று.

ஆயினும் கம்பன் பாடல் அமைப்பை ஒத்திருப்பதனால் இங்கு இப்பாடல் எடுத்துக் காட்டப் பெற்றது.

* * *

Wrapper Printed at :
Eskay Art Printers, Madras-5.
Designed by : P. N. Anandan